விடுதலையான பின்னரும் சோர்ந்து விடவில்லை. இளைஞரணியை கட்டமைக்க துவங்கினார். திமுகவில் இளைஞர்கள் அதிகளவு சேரத் துவங்கினர். 1980ம் ஆண்டு திமுகவில் இளைஞரணி உருவாக்கப்பட்டது. இதில் ஒரு அமைப்பாளராக களம் கண்ட மு.க.ஸ்டாலின், நகரம், ஒன்றியம் என தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, பல்லாயிரக்கணக்கான இளைஞர் கூட்டத்தை இளைஞரணியில் சேர்த்தார். ஒரு கட்டுக்கோப்பான ராணுவம் போல அவர் உருவாக்கிய இளைஞரணியை பார்த்து கலைஞரே வியந்து போனார். அவருக்கு இளைஞரணி செயலாளர் பதவியை வழங்கினார். இவரது செயல்பாட்டுக்கு பரிசாக 1984ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில், சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கினார் கலைஞர். விளக்கு தொகுதி அவருக்கு ஒளி தரவில்லை. அதற்காக சோர்ந்து போகாமல், 1989, 1996, 2001, 2006 சட்டமன்ற தேர்தல்களிலும் அதே தொகுதியில் நின்று வெற்றி பெற்று எம்எல்ஏவானார்.

1996ல் நடந்த சென்னை மாநகராட்சி தேர்தலில் வெற்றி பெற்று மேயர் ஆனார். ஒரு அலங்கரிப்பு பதவியாக அதுவரை பார்க்கப்பட்ட மேயர் பதவியில் திறம்பட செயலாற்றினார். "சிங்கார சென்னை" என்ற பெயரில், தலைநகரில் எண்ணற்ற பாலங்களை கட்டினார். 2003ம் ஆண்டு திமுகவின் துணைப்பொதுச் செயலாளர் பொறுப்பு வகித்தார். 2006ல் நடந்த திமுக ஆட்சியில், உள்ளாட்சித்துறை அமைச்சர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது. இதில் அவரது சிறப்பான செயல்பாட்டிற்காக, 2009ம் ஆண்டு துணை முதல்வர் பொறுப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து செயல் தலைவர், தலைவர், சட்டப்பேரவையில் பொறுப்பான எதிர்க்கட்சி தலைவர் என தனக்கு தரப்பட்ட பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றியவர் மு.க.ஸ்டாலின்.

2016 சட்டமன்ற தேர்தல் பிரசாரத்தின்போது "நமக்கு நாமே திட்டம்" மூலம், வீதி வீதியாக, கிராமம், கிராமமாக சென்று மக்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்டறிந்தார். நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலிலும், மக்களை நேரடியாக சந்தித்து குறைகளை மனுக்களாக பெற்றது, மக்களோடு மக்களாக பிரசாரம் செய்தது பெரும் வரவேற்பை பெற்றது. சுட்டெரிக்கும் கோடை வெயிலிலும், காலையில் திண்டுக்கல், பகலில் மதுரை, இரவில் சென்னை என அவரது பிரசார வேகத்துக்கு யாராலும் ஈடு தர முடியவில்லை.

முதல்வர் பதவியேற்கும் முன்பே 1,212 நர்ஸ்களை பணி நிரந்தரம் செய்தது, தினந்தோறும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள், தமிழக வளர்ச்சித்திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை என அவரது ஓய்வறியா பணி தங்குதடையின்றி தொடரட்டும். வாழ்த்துக்கள்...!

அன்று அண்ணா... இன்று ஸ்டாலின்...!

சத்தீஷ்

காங்கிரஸுடனான உறவு துண்டிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய பிரதமர் இந்திரா காந்திக்கும் கருணாநிதி தலைமையிலான திமுக அரசுக்கும் சுமுகமான உறவு இல்லாமல் இருந்த நேரம். அந்த பரபரப்பான சூழலில் திமுக மாநில மாநாடு கோவை மாநகரில் கூடுகிறது. அந்த மாநாட்டில் பேசுகிறார் ஓர் இளைஞர். திமுக தலைவர் கருணாநிதியின் மகன் மு.க. ஸ்டாலின் இவர்தான் என்று பொதுமக்களுக்கு அடையாளம் தெரிந்தது அப்போதுதான்.

வேடிக்கை என்னவென்றால், கருணாநிதி தனது வாரிசாக அடையாளம் காட்ட நினைத்தது என்னவோ, இன்னொரு மகன் மு.க. முத்துவை. தாயில்லாப் பிள்ளை என்று செல்லமாக வளர்த்து, அவருக்கு எம்ஜிஆருக்கு நிகராக திரையுலக செல்வாக்கை ஏற்படுத்தி, தனது அரசியல் வாரிசாக்க நினைத்த கருணாநிதியின் கணக்கு பொய்த்துவிட்டது. மு.க. முத்து பெரிய நடிகரும் ஆகவில்லை; அரசியலுக்கும் வரவில்லை. அரசியலில் பரபரப்பாக அறிமுகமானது என்னவோ மு.க. ஸ்டாலின்தான்.

மு.க. ஸ்டாலின், ஏதோ அதிருஷ்டவசமாக அரசியலுக்கு வந்தவரும் அல்ல. 1953 மார்ச் 1-ஆம் தேதி கருணாநிதி - தயாளு அம்மையார் தம்பதியின் மூன்றாவது மகனாகப் பிறந்த மு.க. ஸ்டாலினின் அரசியல் பிரவேசம், 'கோபாலபுரம் இளைஞர் திமுக' என்கிற அமைப்பை அவரும் அவரது நண்பர்களும் ஏற்படுத்தியதில் இருந்து தொடங்கியது. ஆர்வமிகுதியால் தொடங்கிய அந்த அமைப்பு பின்னாளில் திமுக இளைஞர் அணியாக உருவெடுக்கும் என்று யாருமே கணிக்கவில்லை.

1967-இல் திமுக ஆட்சிக்கு வந்தது. 1969-இல் அண்ணாவின் மறைவைத் தொடர்ந்து கருணாநிதி முதல்வரானது போன்ற நிகழ்வுகள் தமிழக வரலாற்றில் மட்டுமல்ல, மு.க. ஸ்டாலினின் வாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின. 1973-இல் அவர் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, முதல்வரும் கட்சித் தலைவருமான மு. கருணாநிதியின் மகன் என்கிற பின்னணி மட்டுமே காரணமல்ல. திமுகவின் தேர்தல் வெற்றிக்காக பிரசாரத்தில் ஈடுபட்டும், நாடகங்கள் நடத்தியும் மு.க. ஸ்டாலின் பணியாற்றியது முக்கியக் காரணிகள்.

மு.க. ஸ்டாலினின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்த நிகழ்வு 'மிசா' சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டதுதான். திருமணமாகி ஐந்தே மாதங்கள் ஆகியிருந்த நிலையில், மதுராந்தகத்தில் பிரசார நாடகம் முடித்து திரும்பி இருந்த மு.க. ஸ்டாலின் கைது செய்யப்பட்டதும், அடுத்த ஓர் ஆண்டு சிறையில் கழித்ததும் அவரின் அரசியல் வாழ்க்கைக்கு அஸ்திவாரமிட்டது. அப்போதே அடுத்த வாரிசு இவர்தான் என்று தலைமை மட்டுமல்ல, கட்சித் தொண்டர்களே முடிவு செய்து விட்டனர்.

சிறையிலிருந்து வெளி வந்தது முதல், மு.க. ஸ்டாலின் முழுநேர அரசியலில் இறங்கிவிட்டார். இளைஞரணியின் தலைவராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு சூட்டப்பட்ட 'தளபதி' பட்டம், மேயர், அமைச்சர், துணை முதல்வர், துணைப் பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர், கட்சித் தலைவர் என்று பல பதவி ஏற்றங்களைக் கண்டு இப்போது 'முதல்வர்' என்கிற பதவி வரை வந்திருக்கிறது.

அரசியல் வாரிசு என்பது பலம் மட்டுமல்ல, பலவீனமும்கூட. மு.க. ஸ்டாலினைப் பொருத்தவரை அது பலமாக இருந்ததைவிட, பலவீனமாகத்தான் பெரும்பாலும் இருந்து வந்திருக்கிறது. என்ன வெல்லாமோ செய்ய வேண்டும், எப்படியெல்லாமோ கட்சியை வழிநடத்த வேண்டும் என்றெல்லாம் அவருக்குக் கனவுகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் வெளிப்படுத்தும் வாய்ப்பு அவருக்கு நீண்ட காலம் மறுக்கப்பட்டது அல்லது கிடைக்காமல் போனது.

அதற்கு முக்கியமான காரணம், கருணாநிதி என்கிற ஆலமரத்தின் நிழலில் வளர வேண்டிய நிர்பந்தம். தனிப்பெரும் ஆளுமையாக தந்தை கருணாநிதி இருக்கும்போது மு.க. ஸ்டாலினால் வளர முடியவில்லை என்றால், ஓர் அளவுக்கு மேல் மு.க. ஸ்டாலின் வளர்வதைக் கருணாநிதியும் விரும்பவில்லை என்றும் தோன்றுகிறது. குடும்ப அரசியல் செய்கிறார், தனது மகனை வாரிசாக வளர்க்கிறார் என்கிற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்கு பயந்து மு.க. ஸ்டாலினின் வளர்ச்சியையும் வேகத்தையும் கருணாநிதி கட்டுப்படுத்திவிட்டார் என்பது தான் உண்மை.

ஃபரூக் அப்துல்லா தனது மகன் ஒமர் அப்துல்லாவையும், பிரகாஷ் சிங் பாதல் தனது மகன் சுக்பீர் சிங் பாதலையும், முலாயம் சிங் யாதவ் தனது மகன் அகிலேஷ் யாதவையும், தேவெகௌடா தனது மகன் குமாரசாமியையும் முதல்வராக்கி அழகு பார்த்ததுபோல, திமுக தலைவர் கருணாநிதி அப்பட்டமான குடும்ப அரசியல் நடத்தத் தயங்கினார். தகுதியிருந்தும் அதற்கேற்ற வளர்ச்சி மு.க. ஸ்டாலினுக்கு ஏற்படாமல் போனதற்கு அதுதான் காரணம்.

1989-இல் ஆட்சிக்கு வந்தபோதும் சரி, 1996-இல் நான்காவது முறையாக முதல்வர் பதவி ஏற்றபோதும்சரி, துணிந்து மு.க. ஸ்டாலினைத் தனது அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளாதது, திமுக தலைவர் கருணாநிதி செய்த மிகப் பெரிய தவறு. ஆற்காடு வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், கே.என்.

> பழிவாங்கும் எண்ணம், நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் வஞ்சகம், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் இவையெல்லாம் இல்லாத அரசியல்வாதி ஒருவர் உண்டென்றால், அது முதல்வராக பதவி ஏற்கவிருக்கும் மு.க. ஸ்டாலினாகத்தான் இருக்கும். தன்னை மிகக் கடுமையாக விமர்சித்தவர்களைக்கூட, நடந்ததை மறந்துவிட்டு பாராட்டும் குணம் அவருக்கே உரித்தான தனித்துவம். இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

அன்று அண்ணா...
இன்று ஸ்டாலின்...!

நேரு, பொன்முடி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ஐ. பெரியசாமி உள்ளிட்ட திமுகவின் மூத்த தலைவர்கள் பலர் முதன்முறையாக அமைச்சர்களானது 1989–இல்தான். அப்போது ஆயிரம் விளக்குத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தும்கூட மு.க. ஸ்டாலின் அமைச்சரவையில் இடம்பெறாததற்குக் காரணம், முதல்வர் மு.கருணாநிதியின் தயக்கம்.

சரி, அவர்தான் தரவில்லை. இவராவது கேட்டுப் பெற்றாரா என்றால் இல்லை. மு.க. ஸ்டாலினுடைய அணுகுமுறையும், தந்தை கருணாநிதியை மீறி எதுவும் செய்துவிடக் கூடாது என்கிற அடக்கமும்தான் அதற்குக் காரணங்கள். மற்றவர்களைப்போல முண்டியடித்துக் கொண்டு முன்னால் போய் நிற்கும் ஆர்வமோ, சண்டைபோட்டுத் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்கிற வெறித்தனமோ அவரிடம் இருந்ததே இல்லை.

ஆலமரத்தில் அரசமரம் முளைப்பது போல உருவாகிஇருக்க வேண்டிய மு.க. ஸ்டாலின், கருணாநிதி என்கிற ஆலமரத்தின் விழுதுகளில் ஒன்றாக மகிழ்ச்சியுடன் இருந்துவிட்டார். அவரை 'இலவு காத்த கிளி' என்று பலர் வர்ணித்தபோது ஆத்திரப்படவில்லை. 'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு' என்பது போல, தனது வாய்ப்புக்காக சற்றும் மனம் தளராமல், பொறுமையுடன் அவர் காத்திருந்தார் என்பதை இப்போது நிரூபித்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தைப் பயன்படுத்தி அவர் ஆட்சியைக் கைப்பற்றுவார் என்றுதான் அவரது கட்சிக்காரர்கள் உள்பட பலரும் எதிர்பார்த்தார்கள். குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிப்பதில் அவர் அக்கறை காட்டாதது, அவரைச் சுற்றி இருந்தவர்களுக்கே எரிச்சலை ஏற்படுத்தியது. ஆனால், அவர் அதைப் பொருட்படுத்தாததற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்தது.

அப்படி ஒருவேளை ஆட்சியைக் கைப்பற்றி இருந்தால், தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பல சமரசங்களை செய்துகொள்ள வேண்டிவரும் என்று அவருக்குத் தெரிந்திருந்தது. பல்வேறு அழுத்தங்களுக்கும், பலர் இழுத்த இழுப்புகளுக்கும் ஆளாக நேர்ந்திருக்கும் என்று அவர் உணர்ந்திருந்தார். தனது தலைமையில் மக்களை சந்தித்து இப்போது பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்க இருக்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின், கட்சியையும் ஆட்சியையும் தனது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்திருக்கிறது. இதற்காகத்தான் அவர் இத்தனை காலமும் காத்திருந்தார் என்பது இப்போது புரிகிறது.

அண்ணாவைத் தவிர, தமிழக முதல்வர்களாக இருந்த அனைவரும் தேசிய அளவிலோ, மாநில அளவிலோ ஆளுங்கட்சியாக இருந்த கட்சிகளின் தயவில்தான் ஆட்சி அமைத்திருக்கிறார்கள். இதற்கு ராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம், மு. கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஜெயலலிதா, ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி கே.பழனிசாமி யாருமே விதிவிலக்கல்ல. மத்திய ஆளுங்கட்சியையும் மாநில ஆளுங்கட்சியையும் ஒருசேர எதிர்கொண்டு மக்கள் ஆதரவுடன் முதல்வர் பதவியில் அண்ணாவுக்குப் பிறகு அமரப் போவது மு.க. ஸ்டாலின்தான்!

மு.க. ஸ்டாலினுடன் நெருங்கிப் பழகிய சிலருக்கு தெரிந்த அவரைப் பற்றிய உண்மை – அவர் ஒளிவுமறைவே இல்லாத சுபாவத்துக்கு சொந்தக்காரர் என்பது. அவரது கோபம் என்பது அலை வீசுவது போல வந்த சுவடு தெரியாமல் அடுத்த நிமிஷமே மறைந்துவிடும். தனக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை, அவரது செயல்பாட்டில் அதிருப்தி இருக்கிறது என்றால் அதை மறைத்து வைத்துப் பேசும் பழக்கம் இருந்ததே இல்லை. முகத்திலேயே விருப்பு, வெறுப்பு வெளிப்பட்டுவிடும்.

பழிவாங்கும் எண்ணம், நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் வஞ்சகம், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் இவையெல்லாம் இல்லாத அரசியல்வாதி ஒருவர் உண்டென்றால், அது முதல்வராக பதவி ஏற்கவிருக்கும் மு.க. ஸ்டாலினாகத்தான் இருக்கும். தன்னை மிகக் கடுமையாக விமர்சித்தவர்களைக்கூட, நடந்ததை மறந்துவிட்டு பாராட்டும் குணம் அவருக்கே உரித்தான தனித்துவம். இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

1964–இல் ஜவாஹர்லால் நேரு மறையும் வரை, அவரது நிழலில் இருந்த இந்திரா காந்தி; லால்பகதூர் சாஸ்திரி அமைச்சரவையில் அமைச்சராக இருந்த இந்திரா காந்தி; 1965 முதல் 1969 வரை பிரதமராக இருந்தாலும்கூட, மூத்த காங்கிரஸ் தலைவர்களின் எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்த இந்திரா காந்தி – அவரே 1969 காங்கிரஸ் பிளவுக்குப் பிறகு விஸ்வரூபம் எடுத்ததை சற்று நினைத்துப் பாருங்கள். ஓர் அரசியல்வாதியின் திறமையை வெளிப்படுத்துவது, அவருக்குக் கிடைக்கும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும்தான்.

மக்கள் மன்றத்தின் பேராதரவுடன் தமிழக சட்டப்பேரவையில் பெரும்பான்மையுடன் முதல்வராகிறார் மு.க.ஸ்டாலின். நாளைய ஸ்டாலின் எப்படி விஸ்வரூபம் எடுப்பார் என்பதை அடுத்த மக்களவைத் தேர்தல் முடிவு செய்யும்..!

நீர்வளத்துறைக்கு தனி அமைச்சர்

விவசாயிகள் வரவேற்பு

அறந்தாங்கி, மே 8-

நீர்வளத்துறைக்கு தனி அமைச்சரை நியமித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை விவசாயிகள் பாராட்டியுள்ளனர்.

தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை நேற்று பதவியேற்றது. முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த அமைச்சரவையில் பல்வேறு மாற்றங்களை செய்துள்ளார். அதன்படி நீர்வளத்துறை என்று தனியாக ஒருதுறையை உருவாக்கி, அதற்கு அனுபவம் வாய்ந்த துரைமுருகனை நியமித்துள்ளார். இந்த துறை ஏற்கனவே பொதுப்பணித்துறையின் ஒரு அங்கமாக இருந்தது.

தமிழகத்துக்கு பாசனத்துக்காக வரும் நதிநீரை நாம் அண்டை மாநிலங்களுடன் போராடியே பெற வேண்டி உள்ளது. மேலும் நீர்ப்பாசன வாய்க்கால் பராமரிப்பு, அணைகள் பராமரிப்பு, ஏரிகள் சீரமைப்பு போன்றவை பொதுப்பணித்துறையின் கீழ் வந்ததால் நீர்பாசனம் தொடர்பான பணிகளை செம்மையாக செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் பல ஆண்டுகளாக நீர்ப்பாசன துறைக்கு தனியாக அமைச்சரை நியமிக்கவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

தமிழக விவசாயிகளின் நலனுக்காக, முதல்வராக பதவியேற்றுள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது அமைச்சரவையில் நீர்வளத்துறையை தனியாக உருவாக்கி அதற்கு அமைச்சராக மூத்த அமைச்சரும், அனுபவம் வாய்ந்தவருமான துரைமுருகனை நியமித்துள்ளார்.

இதன்மூலம் தமிழகத்தின் நீர்வள திட்டங்களை செம்மையாக நடத்தவும், அணைகள், ஏரிகள், ஆறுகள், பாசன வாய்க்கால்களை முறையாக பராமரிக்கவும், அண்டை மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய தண்ணீரை பெறுவதற்கும் வாய்ப்பாக அமையும்.

இதை டெல்டா விவசாயிகள் வரவேற்றுள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: தமிழகத்தின் வாழ்வாதாரமான விவசாயத்துக்கு முக்கிய தேவையாக உள்ள நீராதாரத்தை பெற நாம் அண்டை மாநிலங்களையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. விவசாயிகளின் நலன் கருதி நீர்வளத்துறையை உருவாக்கி அதற்கு துரைமுருகனை நியமித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நாங்கள் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறோம் என்றனர்.

தமிழ் முரசு

08-May-2021

தலைமை செயலகத்தில் கலைஞர், மு.க.ஸ்டாலின்

பேனர்களை அகற்ற சொன்ன முதல்வர்

பொதுமக்கள் பாராட்டு

சென்னை, மே 8-

தலைமை செயலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த கலைஞர், மு.க.ஸ்டாலின் பேனர்களை அகற்ற முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இந்த நடவடிக்கையை பொதுமக்கள் வரவேற்றுள்ளனர்.

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் நேற்று பதவியேற்றுக் கொண்டார். இதைத்தொடர்ந்து தலைமை செயலகம் வந்து பொறுப்பேற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் பெண்களுக்கு பேருந்தில் இலவச பயணம், கொரோனா நிவாரண நிதியாக ரூ.4 ஆயிரம், ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு உள்ளிட்ட 5 உத்தரவுகளை மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இது பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்று தலைமை செயலகம் வருவதையொட்டி, தலைமை செயலக வளாகத்தில் ஏற்கனவே முதல்வராக இருந்த ஜெயலலிதா படம் அகற்றப்பட்டு முன்னாள் முதல்வர் கலைஞர் மற்றும் தற்போது முதல்வராக பொறுப்பேற்றுள்ள மு.க.ஸ்டாலின் ஆகியோரது ஆளுயர கட்அவுட்கள் வைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், கலைஞர் மற்றும் மு.க.ஸ்டாலின் பேனர்கள் இன்று காலை அதிரடியாக அகற்றப்பட்டு இருந்தது. இது குறித்து விசாரித்தபோது, "முதல்வராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின் தலைமை செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களில் எங்கும் கலைஞர் மற்றும் தன்னுடைய பேனர் வைக்க கூடாது என்று உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்தனர். அரசு அலுவலகத்தில் மட்டும் சிறிய அளவில் புகைப்படம் வைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மற்றபடி தன்னை (மு.க.ஸ்டாலினை) விளம்பரப்படுத்துவது போன்று எந்த பேனர்களும் வைக்கக் கூடாது" என்று கூறியுள்ளார்.

நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அனைத்து மாவட்ட கலெக்டர்களுடன் நடந்த ஆலோசனை கூட்டத்தில் பேசிய போது, "அரசு அதிகாரிகள் பொய் சொல்ல வேண்டாம்... வீண் புகழ்ச்சி வேண்டாம்... உண்மையை சொல்லுங்கள்..." என்று அதிரடியாக கூறி அதிகாரிகளை அதிர வைத்தார். இன்று அரசு அலுவலக வளாகங்களில் தன்னுடைய பேனர்களை வைக்க கூடாது என்று கூறி அடுத்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இதுபோன்று, நேர்மையாக, வெளிப்படையாக நடந்து கொள்ளும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்களிடம் இருந்து பாராட்டு குவிந்து வருகிறது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
08-May-2021

மக்களுக்கு சுவாசிக்க காற்று கூட கிடைக்காத நிலையில்

மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தது நம்பிக்கையை தருகிறது

சிவகுமார், சூர்யா பாராட்டு

சென்னை, மே 8: தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள மு.க.ஸ்டாலினுக்கு நடிகர்கள் சிவகுமார், சூர்யா பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சிவகுமார் வெளியிட்ட வீடியோவில் கூறியிருப்பதாவது:

திமுக தலைவர் கருணாநிதி 19 ஆண்டுகள் தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தார். மீண்டும் திமுக தனிப்பெரும் கட்சியாக ஆட்சி அமைத்திருக்கிறது. இது ஸ்டாலினின் இமாலய சாதனை. அதேபோல உதயநிதி ஸ்டாலினும் முதல் தேர்தலிலேயே வெற்றி பெற்று தாத்தாவுக்கேற்ற பேரன் என்பதை நிரூபித்திருக்கிறார். இருவருக்கும் வாழ்த்துகள்.

ஆக்சிஜன், தடுப்பு மருந்து தட்டுப்பாட்டில் இருந்து மக்களை காப்பாற்ற வேண்டும். தமிழ்நாட்டில் படிக்கும் அனைவருக்கும் தமிழ் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும். தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். ஏரி, குளங்களை சீரமைத்து விவசாயம் செழிக்க உதவ வேண்டும். கருணாநிதி கொண்டு வந்த உழவர் சந்தைக்கு உயிர் கொடுக்க வேண்டும். தங்களின் ஆட்சிக் காலம் பொற்காலம் என்ற புகழைப்பெற வாழ்த்துகிறேன்.

நடிகர் சூர்யா தனது வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

முடித்தே தீர வேண்டிய பல காரியங்கள் வரிசைகட்டி முன்னிற்க சட்டசபை தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று மக்களின் முதல்வராக பொறுப்பேற்றுள்ள மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துகள். சுவாசிப்பதற்கு காற்றுகூட கிடைக்காமல் மக்கள் தவிக்கும் இந்த காலத்தில் நீங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருப்பது மிகுந்த நம்பிக்கை அளிக்கிறது.

தங்கள் ஆட்சியில் அனைத்து துறையிலும் தமிழகம் வளர்ச்சி அடையும் என்று நம்புகிறோம். ஆற்றலும், அனுபவமும் மிக்க அமைச்சர்களுக்கும் மனப்பூர்வமான வாழ்த்துகள்.

தமிழகத்தின் உரிமைகளை மீட்க தமிழர்களின் ஒருமித்த குரலாக உங்கள் குரல் ஒலிக்கட்டும்.

பாரதிய ஜனதா கட்சியின் பேச்சாளரும், நடிகருமான செந்தில் தனது வாழ்த்து செய்தியில், 'தமிழக முதல்வராக பொறுப்பேற்றிருக்கும் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் பணி சிறக்கட்டும், தமிழகம் முன்னேறட்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மு.க.ஸ்டாலினுக்கு இயக்குனர் ஷங்கர் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்து டிவிட் செய்துள்ளார்.

காதர்மொகிதீன் அறிக்கை

வரலாறு காணாத அற்புதங்களை படைத்திடும் இந்த நல்லாட்சி

சென்னை, மே 8: இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் கே.எம்.காதர் மொகிதீன் நேற்று வெளியிட்ட அறிக்கை:

ஆறாவது முறையாக திமுக. ஆட்சி மு.க.ஸ்டாலின் தலைமையில் தொடங்கியுள்ளது. இந்த நல்லாட்சி தொடர்ந்து இதுவரை வரலாறு காணாத அற்புதங்களை படைத்திட வாழ்த்துவோம். தமிழகத்தில் உள்ள எல்லா சமூகத்தின் பிரதிநிதிகளும் அமைச்சரவையில் இடம்பெற்றிருப்பது முதலமைச்சரின் சமூகப் பார்வை மிகவும் தெளிவானது என்பதை நிரூபித்திருக்கிறது. தமிழக அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதியே இல்லாமல் இருந்த காலமும் இருந்தது. கர்மவீரர் காமராஜர் காலத்தில்தான் முஸ்லிம் அமைச்சர் வரலாறு துவங்கியது. அதற்குப் பின்னர் பேரறிஞர் அண்ணா காலத்தில் இந்த வரலாறு சிறப்பாக தொடர்ந்தது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலத்தில் முஸ்லிம் இருவருக்கு அமைச்சர் பதவி தந்து புதிய வரலாற்றை உருவாக்கினார். தந்தையின் வழியில் தப்பாமல் செல்லும் தனயன் என்னும் பேர் பெற்றுள்ள தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரண்டு முஸ்லிம்களுக்கு தனது அமைச்சரவையில் இடமளித்துள்ளது தமிழக முஸ்லிம் சமுதாய மக்களின் ஒட்டுமொத்த வரவேற்புகளை பெற்றுள்ளது.

5 கோப்புகளில் முதல்வர் கையெழுத்து

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் நல்ல தொடக்கம்

இந்திய கம்யூ. மாநில செயலாளர் முத்தரசன் வரவேற்பு

சென்னை, மே 8: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்ட அறிக்கை:

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை பொறுப்பேற்றதும், அலுவலகம் சென்ற முதலமைச்சர் கொரோனா நோய்த் தொற்றின் இரண்டாம் அலை தீவிரமாக பரவி வரும் சூழலில், மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு உடனடியாக குடும்பத்திற்கு தலா ரூ.2000 ரொக்கப் பண உதவி செய்வது, ஆவின் பால் விற்பனை விலையை லிட்டருக்கு ₹3 குறைப்பது உள்ளிட்ட ஐந்து கோப்புகளில் முதல் நாளில் முதலமைச்சர் கையெழுத்திட்டிருப்பது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் நல்ல தொடக்கமாகும். நோய்த் தொற்று பரவும் சூழலில் பரிதவித்து நிற்கும் சாதாரண மக்களுக்கு நம்பிக்கையூட்டி ஆற்றுப்படுத்தும் முதலமைச்சரின் நடவடிக்கையை வரவேற்று, நன்றி பாராட்டுகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து

சென்னை, மே.8: தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். அதன் விவரம் வருமாறு:

டிடிவி.தினகரன் (அமமுக பொதுச்செயலாளர்): தமிழக முதலமைச்சராக பதவி ஏற்றுள்ள மு.க.ஸ்டாலினுக்கு இனிய வாழ்த்துகள். தங்களின் பதவியேற்பு விழாவிற்கு அழைத்தமைக்கு நன்றி. கொரோனா பேரிடர் நேரத்தில் பொறுப்பேற்கும் தங்களின் பணி, தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாத்திடும் வகையில் அமைந்திட வாழ்த்துகிறேன்.

ஜி.கே.வாசன் (தமாகா தலைவர்): தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழக மக்களுக்கு நல்லாட்சியை அளிக்க நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர்கள் அனைவருக்கும் நல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

ராமதாஸ் (பாமக நிறுவனர்): தமிழ்நாட்டின் 12வது முதலமைச்சராக பதவியேற்றுள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும், அவரது அமைச்சரவை சகாக்களுக்கும் எனது வாழ்த்துகள். விமர்சனம் செய்தல், ஆக்கப்பூர்வமான யோசனைகளைக் கூறுதல், புதிய திட்டங்களை உருவாக்கி அரசுக்கு அளித்தல் என்று வகுத்துக் கொண்ட இலக்கணங்களுக்கு ஏற்ப பாமக மக்கள் நலன் காக்கும் வகையில் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



அன்புமணி (பாமக இளைஞரணி தலைவர்): தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சராக பதவியேற்றுள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்கள் விரும்பும் ஆட்சியை அவர் வழங்க வேண்டும். அதற்கான ஆலோசனைகளை பாட்டாளி மக்கள் கட்சி எப்போதும் வழங்கும்.

அனிபா (தமுமுக நிறுவனர்): தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும் தீமைகளை தடுத்து மக்களுக்கு நன்மைகள் செய்திட வாழ்த்துகின்றேன்.

தொழிற்கல்வி ஆசிரியர் கழகம்: தமிழக சட்டப்பேரவையின் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு திராவிட முன்னேற்ற கழகம் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்று தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் கழகம் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் பொற்கால ஆட்சி தொடங்கி விட்டது

அனைவரின் எதிர்பார்ப்புகளையும் தாண்டி ஆட்சி புரிந்து புகழ் பெறுவார்

அரசின் 5 அறிவிப்புகளுக்கு வைகோ வரவேற்பு

சென்னை, மே 8: மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருக்கிற ஐந்து அறிவிப்புகளும், மக்களிடம் மாபெரும் வரவேற்பைப் பெற்று இருக்கிறது. பொற்கால ஆட்சி தொடங்கி விட்டது என்ற நம்பிக்கையை விதைத்து இருக்கிறது.

கொரோனா பாதிப்புகளை ஈடுகட்ட உதவியாக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ4000 தருவதாக உறுதிமொழி கூறியபடி, முதல் தவணையாக, இந்த மாதமே ரூ.2000 வழங்குவதாக அறிவித்து இருக்கிறார். ஆவின் பால் விலை, லிட்டருக்கு ரூ.3க்கு குறைத்து இருப்பது, குழந்தைகளின் வயிற்றில் பால் வார்த்து இருக்கிறது.

நாளை முதல், அனைத்து மகளிரும், சாதாரண கட்டணப் பேருந்துகளில் இலவசமாகப் பயணிக்கலாம். தனியார் மருத்துவமனைகளில் கொரோனா மருத்துவம் பெறுவோருக்கு ஆகின்ற செலவுகளை, முதல்வரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், தமிழக அரசே செலுத்தும்.

மக்கள் தெரிவிக்கின்ற குறைகளின் மீது உடனடி நடவடிக்கை எடுத்துச் சீர் செய்திட, 'உங்கள் தொகுதியில் முதல் அமைச்சர்' என்ற திட்டம் தொடங்கப்படுகின்றது; அதற்கு பொறுப்பாளராக ஒரு ஐஏஎஸ் அதிகாரி செயல்படுவார் என்ற ஐந்து அறிவிப்புகளின் மூலம், எடுத்த எடுப்பிலேயே நடுநிலையாளர்களின் மனதைக் கவர்ந்து கொண்டார். எதிரிகள் வட்டாரம் திடுக்கிட்டுப் போயிருக்கிறது.

தமிழகத்தில் ஐந்து என்பதற்கு ஒரு சிறப்பு உண்டு. நிலம், நீர், காற்று நெருப்பு, வெளி இவற்றையே இயற்கையின் அமைப்பாக வகுத்து இருக்கின்றனர். தமிழ் இலக்கியங்களில், ஐம்பெருங் காப்பியங்கள் தனிச்சிறப்பு பெற்றவை. அறிஞர் அண்ணா மறைந்தபிறகு, திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில், திமுகவின் அடிப்படைக் கொள்கைகள் என, ஐந்து முழக்கங்களைக் கலைஞர் எழுப்பினார். அந்த வரிசையில், இன்றைய ஐந்து அறிவிப்புகளும் இடம் பெறுகின்றன. இனி ஐந்து ஆண்டுகளும் பொற்கால ஆட்சியாக இருக்கும் என்பதற்கு அடையாளம் இது.

முதல்வர் மு.க.ஸ்டாலின், அனைவருடைய எதிர்பார்ப்புகளையும் விஞ்சி, ஆட்சி புரிந்து புகழ் பெறுவார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது நல்ல தொடக்கம்

முதல்வருக்கு கே.பாலகிருஷ்ணன் பாராட்டு

சென்னை, மே 8: தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது நல்ல தொடக்கம் என முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே. பாலகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்றவுடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4 ஆயிரம் நிவாரணம், ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3 குறைப்பு, பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் உள்ளிட்ட ஐந்து முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார்.

இது ஒரு நல்ல தொடக்கமாகும். இதனை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வரவேற்பதுடன், தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

அதிமுக, பாஜ ஆட்சிகளின் தவறான நடவடிக்கைகளின் விளைவாக கொரோனா நோய் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியில் தமிழகம் தத்தளிக்கிறது. கொரோனா தொற்று தீவிரமாகி மரணங்கள் அதிகரித்துக் கொண்டுள்ளன. போர்க்கால அடிப்படையில் கொரோனா தொற்றை எதிர்த்த போராட்டத்தை மக்கள் இயக்கமாக நடத்தி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தினத்தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்
08-May-2021

மு.க.ஸ்டாலினின் முதல் 5 அறிவிப்புகள்:

அரசியல் கட்சி தலைவர்கள் வரவேற்பு

சென்னை, மே.8-

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் முத்தான முதல் 5 அறிவிப்புகளுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

5 அறிவிப்புகளில் கையெழுத்து

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முதல்-அமைச்சர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட மு.க.ஸ்டாலின், ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3 குறைப்பு உள்பட முத்தான முதல் 5 அறிவிப்புகளை வெளியிட்டு கையெழுத்திட்டார். இதற்கு அரசியல் கட்சி தலைவர்கள் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக முதல்-அமைச்சராக பொறுப்பு ஏற்ற பிறகு மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கின்ற 5 அறிவிப்புகளும், மக்களிடம் மாபெரும் வரவேற்பை பெற்றிருக்கின்றன. பொற்கால ஆட்சி தொடங்கிவிட்டது என்ற நம்பிக்கையை விதைத்திருக்கின்றன.

பொற்கால ஆட்சியின் அடையாளம்

இந்த 5 அறிவிப்புகளின் மூலம் நடுநிலையாளர்களின் மனதை ஸ்டாலின் கவர்ந்து கொண்டார். அண்ணாவின் மறைவுக்கு பிறகு, திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் தி.மு.க.வின் அடிப்படைக் கொள்கைகள் என 5 முழக்கங்களை கருணாநிதி எழுப்பினார். அந்த வரிசையில் இந்த 5 அறிவிப்புகளும் இடம்பெறுகின்றன. இனி 5 ஆண்டுகளும் பொற்கால ஆட்சியாக இருக்கும் என்பதற்கு அடையாளம் இது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கி.வீரமணி

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

தமிழக முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலினின் 5 பெரும் அறிவிப்புகள் தித்திப்பானவை மட்டுமல்ல, நிலைகுத்தி நிற்கும் கொரோனா காலத்து தெம்பூட்டும் நம்பிக்கை ஒளிவீச்சுகளாகும். "சொன்னதைச் செய்வோம், செய்வதையே சொல்வோம்" என்பதை நடைமுறைப்படுத்தும் 'புதிய செயலி'யின் வேகத்தைக் கண்டு நாடே பாராட்டும் என்பது உறுதி.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை:-

முதல்-அமைச்சராக பொறுப்பு ஏற்றுக்கொண்ட மு.க.ஸ்டாலின் 5 கோப்புகளில் முதல் நாளில் கையெழுத்திட்டு இருப்பது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் நல்ல தொடக்கமாகும். நோய்த்தொற்று பரவும் சூழலில் பரிதவித்து நிற்கும் சாதாரண மக்களுக்கு நம்பிக்கை யூட்டி ஆற்றுப்படுத்தும் முதல்-அமைச்சரின் நடவடிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்று பாராட்டுகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை:-

முதல்-அமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவியேற்றவுடன், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்விதமாக கொரோனா அச்சுறுத்தல் தொடர்வதால் மக்களின் துன்பங்களை போக்குவதற்கு அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.2 ஆயிரம், ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3 குறைப்பு, சாதாரண கட்டண நகர பஸ்களில் பெண்களுக்கு கட்டணமில்லா சேவை, 'உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர்' என்ற புதிய துறை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களின் தனியார் ஆஸ்பத்திரி சிகிச்சை கட்டணத்தை தமிழக அரசே காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஏற்பது உள்ளிட்ட 5 முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார். இது ஒரு நல்ல தொடக்கமாகும். இதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு வரவேற்பதுடன், தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

தொல்.திருமாவளவன்

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வாக்குறுதிகள் தருவது வாக்குகளைப் பெறுவதற்காக மட்டுமல்ல; அவற்றை நிறைவேற்றிக் காட்டுவோம் என்று முதல்-அமைச்சர் நிரூபித்திருக்கிறார். முதல்-அமைச்சர் கையொப்பமிட்டுள்ள 5 கோப்புகளும், பிறப்பித்துள்ள 5 ஆணைகளும் தமிழகத்தில் நல்லாட்சி தொடங்கிவிட்டது என்கிற நம்பிக்கையை மக்களுக்கு அளித்துள்ளன.

மேலும் பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி இருண்டு கிடக்கும் தமிழகத்தில் ஒளிபரவச் செய்யவேண்டும் என முதல்-அமைச்சரை வாழ்த்துகிறோம். அதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி என்றென்றும் துணை நிற்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஆக்சிஜன் தட்டுப்பாடின்றி...

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வெளியிட்டுள்ள அறிக்கை:-

கொரோனா பேரிடர் காலத்தில் தமிழக முதல்-அமைச்சராக பொறுப்பேற்றுக்கும் மு.க.ஸ்டாலின் முதல் நாளிலேயே, மக்கள் வரவேற்கும் செயல்திட்டங்களில் கையெழுத்திட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதேசமயத்தில், இக்கட்டான கொரோனா பரவல் நேரத்தில், ஆக்சிஜன் தட்டுப்பாட்டால் இனி ஒரு உயிர்கூட தமிழகம் இழக்காத அளவுக்கு புதிதாக அமைந்துள்ள அரசு ஆக்சிஜன் தடையின்றி கிடைப்பதற்கும், ரெம்டெசிவிர் மருந்து கள்ளச்சந்தையில் விற்கப்படுவதை தடுப்பதற்கும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதேபோன்று, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் முதல் 5 அறிவிப்புகளுக்கு சமத்துவ மக்கள் கழகத்தின் நிறுவனத் தலைவர் எ.நாராயணன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா, இந்திய தேசிய லீக் மாநில தலைவர் முனிருத்தீன் ஷெரீப் ஆகியோரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
08-May-2021

சொன்னதை செய்தார், மு.க.ஸ்டாலின்!

முதல்-அமைச்சர் பொறுப்பேற்றுள்ள மு.க.ஸ்டாலின், தன் தேர்தல் பிரசார கூட்டங்களில் எல்லாம், "மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதே என் முதல் பணி. சொன்னதை செய்வான் இந்த ஸ்டாலின். செய்வதைத்தான் சொல்வான் இந்த ஸ்டாலின்" என்று உறுதிபடக் கூறிக்கொண்டிருந்தார். தான் சொன்னதை நேற்று பதவியேற்ற உடனேயே செய்தும் காட்டிவிட்டார்.

தேர்தல் அறிக்கையில் கூறியதில், 5 வாக்குறுதிகளை முத்தான முதல் கையெழுத்துகள் மூலம் நிறைவேற்றியிருக்கிறார். முதல் ஆணையாக, "அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் கொரோனா நிவாரண நிதியாக ரூ.4 ஆயிரம் வழங்கப்படும்" என்ற வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், "மே மாதமே ரூ.2 ஆயிரம், முதல் தவணையாக வழங்கப்படும்" என்று கையெழுத்திட்டுள்ளார். அடுத்து ஆவின் பால் விலையை லிட்டருக்கு ரூ.3 குறைக்க உத்தரவிட்டுள்ளார். இன்றுமுதல் அரசு போக்குவரத்து கழக கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகர பஸ்களில், அனைத்து பெண்களும் கட்டணமில்லாமல் பயணம் செய்ய உத்தரவிட்டுள்ளார். தேர்தல் பிரசாரத்தின்போது, மக்களிடம் பெற்ற மனுக்கள் மீது

100 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க, "உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர்" என்ற திட்டத்தை செயல்படுத்த ஒரு புதிய துறையை உருவாக்க உத்தரவிட்டுள்ளார். மிக கருணை திட்டமாக, கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அந்த மருத்துவமனை கட்டணத்தை தமிழக அரசே காப்பீடு திட்டத்தின்கீழ் ஏற்க உத்தரவிட்டுள்ளார்.

ஆக, நேற்று பதவியேற்று தலைமைச் செயலகத்திற்கு சென்றவுடன், முதல் வேலையாக இந்த அறிவிப்புகளில் கையெழுத்திட்டு, "சொன்னதைத்தான் செய்வார், இந்த ஸ்டாலின்" என்பதை நிரூபித்துவிட்டார். நேற்று பதவியேற்பு விழாவையும், அவர் பெருந்தொற்றின் நிலைமையை கருதி மிக வித்தியாசமாக நடத்தி முடித்துவிட்டார். காலத்தின் கட்டளையை ஏற்று, அமைச்சரவை பதவியேற்பு விழாவை மிக எளிமையாக நடத்தியது மு.க.ஸ்டாலினின் பொது வாழ்வு முதிர்ச்சியை காட்டுகிறது. இதுவொரு நல்ல முன்னுதாரணமும் கூட. "ஆடம்பரத்தைவிட எளிமைதான் அழகு. ஆபரணத்தைவிட பொட்டுதான் அழகு" என்பதை நடத்திக்காட்டிவிட்டார், மு.க.ஸ்டாலின். அவரது அமைச்சரவையும், மூப்புக்கு மூப்பான அமைச்சரவையாகவும், இளமைக்கு இளமையான அமைச்சரவையாகவும் அமைத்து, ஒரே கல்லில் 2 மாங்காயை அடித்திருக்கிறார், மு.க.ஸ்டாலின். மூத்தவர்கள் அனுபவத்தை கொடுப்பார்கள். இளைஞர்கள் துடிப்பாக செயல்படுவார்கள்.

"இதனை, இதனால், இவன்முடிக்கும், என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்" என்றார் திருவள்ளுவர். இந்த செயலை இந்த வழியால் இவன்தான் முடிக்க வல்லவன் என்று நன்கு ஆராய்ந்து மூன்றும் பொருந்திய திறமை கொண்ட ஒருவரிடம் அந்தப் பொறுப்பை வழங்குவதுதான் இதன் பொருள். சரியான பொறுப்புக்கு சரியானவர்களை தேர்ந்தெடுத்து வழங்கியது, அவரது திறமைக்கு மற்றொரு சான்றாகும்.

பொது வாழ்க்கையில் நீண்டநெடிய அனுபவம் வாய்ந்த மு.க.ஸ்டாலின் வழிகாட்ட, அமைச்சரவை சிறப்பாக செயல்படுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. திறமை, அனுபவம், அறிவு, தொலைநோக்கு பார்வை அனைத்தும் கலந்த கலவைதான் மு.க.ஸ்டாலினின் அமைச்சரவை என்றுதான் சமுதாயம் பாராட்டுகிறது, வாழ்த்துகிறது.

இதுதவிர, 10 துறைகளின் பெயர்களை, மக்களுடைய எதிர்பார்ப்பு, பணியாளர்களுடைய நலன், எதிர்கொள்ளும் சவால்கள், நிர்ணயிக்கப்படும் இலக்குகள், அரசின் லட்சியங்கள் ஆகியவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, தொலைநோக்கு பார்வையோடு மாற்றியமைத்துள்ளார்.

அமைச்சரவை பொறுப்பேற்ற நேற்றே, நந்தம்பாக்கம் கொரோனா சிகிச்சை மையத்தை பார்வையிட்டுவிட்டு, காணொலி காட்சி மூலம் அனைத்து மாவட்ட கலெக்டர்கள் கூட்டத்தையும் கூட்டி கொரோனா பரவலை தடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். "தனது சொல்லுக்கும், செயலுக்கும் இடைவெளி கிடையாது" என்பதை நேற்று மு.க.ஸ்டாலின் நிரூபித்திருக்கிறார்.

ஆங்கிலத்தில், "நல்ல தொடக்கம் பாதி வெற்றி" என்று கூறுவதுபோல, நல்ல தொடக்கத்தை தொடங்கியிருக்கும் மு.க.ஸ்டாலின் முழு அளவில் வெற்றிபெறவேண்டும். வெற்றி பெறுவார் என்று தமிழ்ச் சமுதாயம் உறுதியாக நம்புகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI

08-May-2021

முதல்-அமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்பு:

அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து

சென்னை, மே.8-

முதல்-அமைச்சராக பொறுப்பேற்று இருக்கும் மு.க.ஸ்டாலினுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஜி.கே.வாசன், அன்புமணி ராமதாஸ்

தமிழக முதல்-அமைச்சராக மு.க.ஸ்டாலின் நேற்று பொறுப்பேற்றுகொண்டார். அவருக்கு அரசியல் கட்சி தலைவர்கள், அமைப்புகள், தொழில் அதிபர்கள் வாழ்த்து தெரிவித்து இருக்கின்றனர். அதன் விவரம் வருமாறு:-

த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன்:-

தமிழ்நாட்டின் முதல்-அமைச்சராக பொறுப்பேற்ற தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழக மக்களுக்கு நல்லாட்சியை அளிக்க த.மா.கா. சார்பில் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், அவர்களை தொடர்ந்து பொறுப்பேற்கும் அமைச்சர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன்.

பா.ம.க. இளைஞரணி தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ்:-

தமிழ்நாட்டின் புதிய முதல்-அமைச்சராக பதவியேற்றுள்ள தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக மக்கள் விரும்பும் ஆட்சியை அவர் வழங்க வேண்டும். அதற்கான ஆலோசனைகளை பா.ம.க. எப்போதும் வழங்கும்.

ஈ.ஆர்.ஈஸ்வரன்

இதேபோல், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், அகில இந்திய காமராஜ் காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் ஆ.மணி அரசன், தமிழ்நாடு விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார், முஸ்லிம் உரிமை பாதுகாப்பு கழகத்தின் மாநில பொதுச்செயலாளர் இடிமுரசு இஸ்மாயில், லட்சிய ஜனநாயக கட்சி நிறுவனர் நெல்லை ஜீவா, முஸ்லிம் மக்கள் கழகத் தலைவர் ஏ.கே. தாஜுதீன் ஆகியோரும் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

மேலும், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா, இந்திய பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு மாநில ஒருங்கிணைப்பாளர் செ.மயில், வி.ஜி.பி. குழுமத்தின் தலைவரும், தொழில் அதிபருமான வி.ஜி.சந்தோசம், தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.பி.முரளி, தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச்சங்கத்தின் நிறுவனர் சு.ஆ.பொன்னுசாமி, தமிழ்நாடு ஆசிரியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.கே.இளமாறன், தமிழ்நாடு நெல் அரிசி உற்பத்தியாளர் சம்மேளனத்தின் நிர்வாக இயக்குனர் அமருதீன் ஷேக் தாவூத், தமிழ்நாடு மக்கள் நலப்பணியாளர்கள் சங்கத்தின் மாநில தலைவர் செல்லப்பாண்டியன் ஆகியோரும் வாழ்த்துகளை கூறியுள்ளனர்.

Stalin era begins

Among Tamil Nadu's 10 chief ministers from Rajaji to Edappadi K. Palaniswami there were giants like Kamaraj, Karunanidhi, MGR and Jayalalithaa who brought in welfare schemes to benefit a cross-section of people from students to the poor and disadvantaged. The burden of expectation on Muthuvel Karunanidhi Stalin is, perhaps, at an apogee, especially considering the circumstances rendered dire by a sweeping pandemic. The expectations may have been lower when Edappadi took over in 2017 but in terms of tackling the coronavirus health crisis he also set an example of a leader backing a proficient set of administrators.

To Stalin's credit he has started off on a good note, first acknowledging political elders before putting together his Cabinet thoughtfully. Having waited patiently for his turn when he also revealed a statesmanlike side to his personality in not trying to take advantage of the situation during Edappadi government's existential crisis, Stalin has swung into action, signing Covid-19 relief measures and women's welfare. In taking on the job with executive decisiveness straightaway, Stalin has shown himself to be a seasoned politician who also eschewed glitzy shows in triumphalism. He has also kept off introducing into his Cabinet his kin, including his son who was so prominent at the hustings.

Having worked for his party DMK for decades, Stalin must be well aware of collective responsibility and that is reflected in the quality of ministers he has chosen for key tasks. While keeping faith with elders who were among his father's loyalists, his choice is apt of former Mayor Ma Subramaniam as health minister at a time when the virus is throwing up record numbers and the state has to look into oxygen availability among preparatory measures. Tending to finance will be Palanivel Thiagarajan, with his rich experience as a former investment banker and there are other key ministers to look after education, etc. The mixture of the old and the new Cabinet is a promising enough sign as the Stalin era begins.

Stalin era begins with Covid, welfare schemes in focus

Divya Chandrababu
letters@hindustantimes.com

CHENNAI: MK Stalin took oath as chief minister of Tamil Nadu in a small ceremony in Chennai on Friday, announcing five key decisions on welfare, cash subsidies and health insurance to mark his first day in office.

Stalin, along with 33 ministers, took oath in the name of conscience, and not god, keeping in line with the rationalist tenets of the Dravidian movement. The 68-year-old leader, the son of former chief minister M Karunanidhi, led the Dravida Munnetra Kazhagam to victory after a decade in the recently concluded assembly elections.

As he took the oath, his wife Durga, and son and newly elected MLA Udhayanidhi broke down while party cadre cheered him on. The crowd was restricted due to Covid-19 curbs and Stalin had asked his followers to watch the event on television. "Congratulations to Thiru @mkstalin on being sworn-in as Tamil Nadu chief minister," Prime Minister Narendra Modi tweeted.

After reaching his office in the Secretariat at Fort St George, he signed five important orders, four of which were promised in DMK's election manifesto.

The decisions included financial relief of ₹4,000 to 20.7 million ration card holders to tide over hardships faced due to the Covid-19 pandemic. The first instalment of ₹2,000 will be distributed in May and the rest will be given later. This scheme will cost the state ₹4,153 crore.

The Chief Minister's Comprehensive Health Insurance Scheme will be extended to cover treatment for Covid-19 in private hospitals for existing beneficiaries of the scheme. Travel was made free for women in state-owned buses. This will roll out from Saturday and the state will sanction ₹1,200 crore towards this scheme.

Stalin also slashed the price of milk produced by state-run Aavin by ₹3 per litre. A new department will be formed to address people's grievances within the first 100 days of the new government. The department 'CM in your constituency' will be headed by an IAS officer, Shilpa Prabhakar. Stalin had collected these grievances during his campaign titled 'Stalin in your constituency'.

In the previous All India Anna Dravida Munnetra Kazhagam regime, the late J Jayalalithaa, who assumed office in May 2016, also signed five orders on her first day.

Stalin also held a Covid-19 review meeting with all district collectors via video conference. Tamil Nadu on Friday reported 26,445 new cases and 197 new deaths. "According to experts this will increase over the next two weeks," Stalin said in his video address. "So we have to increase bed and oxygen facilities and drugs on war footing." He also announced setting up a 800 bed facility with oxygen in Chennai out of which 300 will be opened from May 10.

M K Stalin

Experts said the five orders will be a huge burden on the exchequer. "He has made generous announcements which are also election promises but it will cost the exchequer at least ₹10,000 crore," says political analyst Maalan Narayanan.

Stalin's new team

V Irai Anbu was named the new chief secretary, replacing Rajeev Ranjan who took over in February. A seasoned IAS officer and writer, Anbu received the Si Pa Aditanar Literary Award for the year 2017 from Prime Minister Narendra Modi.

Four senior bureaucrats were also announced as private secretaries to Stalin.

மாலை முரசு

10-May-2021

சீராக நகரும் ஆட்சி எனும் தேர்!

தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவோடு மு.க.ஸ்டாலின் முதல் அமைச்சராக பொறுப்பேற்று இருக்கிறார். தேர்தலுக்கு முன்பாக அவர் அளித்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றும் வகையில் அதற்கான கோப்புகளில் முதல் அமைச்சர் இருக்கையில் அமர்ந்த உடன் கையெழுத்திட்டு இருக்கிறார். கொரோனா நிவாரண உதவியாக குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.4000 வழங்குவதற்கான முதல் உத்தரவை பிறப்பித்தார். கொரோனா நோய்க்கு ஆளாகி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவரின் மருத்துவ செலவை அரசே ஏற்கும் என்று அறிவித்தார்.

தேர்தலுக்கு முன் பெண்களுக்கு அளித்த முக்கிய வாக்குறுதிகளில் ஒன்று திமுக ஆட்சிக்கு வந்ததும் அரசு பேருந்துகளில் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யலாம் என்று அறிவித்திருந்தார். முதல் அமைச்சரானதும் அதனை உடனடியாக நிறைவேற்றினார். இந்த திட்டத்தின் பயனாக சாதாரண ஏழை எளிய நடுத்தர பெண்கள் மிகவும் பயன் அடைந்துள்ளனர். கட்டணம் இல்லாமல் பேருந்து பயணம் அனுமதிக்கப்பட்டு இருப்பதால் தங்கள் மாதச் செலவில் ஒரு சிறு தொகை மிச்சமாகி குடும்ப செலவுகளுக்கு அது உதவும் என்று பெண்கள், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை மனமார பாராட்டுகிறார்கள்.

பால் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அத்தியாவசிய தேவையாகும். காலையில் தூக்கத்தில் இருந்து எழுந்த உடன் குடும்ப பெண்களின் கைகள் பால் பாக்கெட்டை தான் தேடும். காலையில் தேநீர் அருந்தாமல் எந்த ஒரு இல்லத்திலும் பணிகள் நடப்பதில்லை. ஆகவே பால் லிட்டருக்கு ரூ.3 விலை குறைப்பு செய்து ஸ்டாலின் உத்தரவிட்டார். தேர்தல் பிரசாரத்தின் போது பொதுமக்களிடம் திரட்டிய மனுக்களை ஆட்சி ஏற்ற உடன் அவற்றை பரிசீலித்து 100 நாட்களில் அந்த பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று உறுதி கூறியிருந்தார். அதன்படி இந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஐ.ஏ.எஸ் அதிகாரி தலைமையில் ஒரு சிறப்பு அலுவலகத்தையும் அமைத்திருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

கொரோனா என்கிற கொடும் தொற்றின் கோரமுகத்தை இயற்கை வெளிக்காட்டியிருக்கும் நேரத்தில் ஸ்டாலின் முதல்வர் பொறுப்பை ஏற்று இருக்கிறார். இது கொண்டாடப்படும் நேரம் அல்ல திண்டாடுபவர்களுக்கு தோள் கொடுத்து காப்பாற்ற வேண்டிய நேரம் என்கிற காரணத்தால் பதவி ஏற்பை விழாவாக எடுக்காமல் ஒரு எளிய நிகழ்வாக நடத்தி காட்டினார் ஸ்டாலின். இந்த அரசு தமிழ்நாட்டைப் பராமரிப்பதோடு உழவர்களையும், பாதுகாத்துப் பராமரிக்கும் அரசாக திகழும் என்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்.

நேர்மையான, தூய்மையான, வெளிப்படையான நிர்வாகம் நடக்கும். ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக இந்த அரசு எப்போதும் பாடுபடும். மாற்றுக்கட்சி தோழர்களோடும் நட்புணர்வுடன் மக்கள் பிரச்சினைகளை அணுகி அவற்றுக்கு தீர்வு காணப்படும். எல்லா வகையிலும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தமிழகத்தை தலை சிறந்த மாநிலமாக மாற்றுவேன். சவால்களையும் நெருக்கடிகளையும் வலிமையுடன் எதிர்கொண்டு தமிழ்மக்கள் விரும்பும் நல்லாட்சியை வழங்கிடுவேன் என்றும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவாதம் அளித்திருக்கிறார். நல்லாட்சி எனும் தேர் சீராக நகரத் தொடங்கி இருக்கிறது. தொடர்ந்து 5 ஆண்டுகள் இந்த தேர் சீராக நகரும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்து தமிழ் திசை
10-May-2021

மாற்றத்துக்கான அச்சாரம்

தமிழகத்தின் முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்றுக்கொண்ட நிகழ்வு தமிழகத்தில் விடுபட்டுப்போயிருந்த ஜனநாயக மரபுகளுக்கு மீண்டும் உயிர் கொடுத்திருக்கிறது. பதவியேற்பு நிகழ்வில் முன்னாள் முதல்வரும் அதிமுகவின் ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் முதல் வரிசையில் அமர்ந்திருந்ததோடு, ஆளுநர் அளித்த விருந்திலும் முதல்வரோடு பங்கேற்ற படங்கள் சமூக ஊடகங்களில் மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டன. 2016-ல் முதல்வராக ஜெயலலிதா பதவியேற்கும் விழாவின்போது, எதிர்க்கட்சித் தலைவர்களில் முக்கியமானவராக இருந்த ஸ்டாலின் பின்வரிசையில் அவருடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவராக அமரவைக்கப்பட்டதை மக்கள் மறந்திடவில்லை. அரசியலர்கள் இடையே நட்பார்ந்த உறவையும், மாநிலத்தின் நலனுக்காக ஒருமித்த உழைப்பையுமே மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும் முதல்வர் ஸ்டாலின் சரியாகவே புரிந்துகொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது. எதிர்க்கட்சியினரோடு ஆக்கபூர்வமான உறவைப் பராமரித்திடுமாறு தன்னுடைய கட்சியினரை அவர் அறிவுறுத்தியிருப்பது நல்ல முன்னெடுப்பு.

தன்னுடைய அரசு எந்தப் பாதையில் செல்லும் என்பதையும் முதல்வராகப் பொறுப்பேற்ற அன்று ஸ்டாலின் கையெழுத்திட்ட கோப்புகளும், தன்னோடு இணைந்து செயலாற்ற அவர் தேர்ந்தெடுத்த செயலர்களின் பெயர்களும் தெரிவிப்பதாக இருந்தன. தலைமைச் செயலர் இறையன்பு, முதல்வரின் முதன்மைச் செயலர் உதயச்சந்திரன் இருவருமே துடிப்பான நிர்வாகிகள் என்று மக்களிடத்தில் பெயர் எடுத்தவர்கள். கொள்ளைநோயானது கூடவே ஊரடங்கையும் பொருளாதார நெருக்கடியையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கும் சூழலில், ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.4,000 நிதி வழங்கும் திட்டத்தில் முதல்வர் கையெழுத்திட்டது காலத்தினான உதவி. உள்ளூர் அரசுப் பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லா பயணம் என்ற அறிவிப்பு காலத்துக்கும் பேசப்படும்.

அமைச்சரவை அறிவிப்போடு, துறைகளின் பெயர்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றம் கவனத்துக்குரியது. நீர்வளத் துறையாகப் பாசனத் துறை மாறியிருப்பதும், வேளாண் துறையுடன் உழவர் நலம் சேர்ந்திருப்பதும், சுற்றுச்சூழல் துறையுடன் காலநிலை மாற்றம் சேர்ந்திருப்பதும் தொலைநோக்குப் பார்வை. அதே சமயம், இந்த மாற்றமானது பெயர்களோடு முடிந்திடாமல் செயல்பாட்டிலும் தொடர அந்தந்தத் துறைசார் வல்லுநர்களோடு அமைச்சர்களும் அதிகாரிகளும் இணைந்து செயலாற்றுவதற்கான வழிமுறைகளை அரசு உருவாக்க வேண்டும். ஒவ்வொரு துறையிலும் சர்வதேசப் போக்கு, அதில் தமிழகத்தின் இன்றைய நிலை, முன்னெடுக்க வேண்டிய மாற்றங்கள் இவையெல்லாம் வல்லுநர்களின் வழி அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கலந்தாலோசனைக் கூட்டங்கள் வழி கொண்டுசெல்லப்பட வேண்டும். அதேபோல மருத்துவம், பொருளாதாரம், தொழில் துறைகள் சார்ந்து தமிழ்நாடு பெரும் சவால்களைச் சந்தித்துவரும் இந்நாட்களில், இத்துறைசார் வல்லுநர்களை உள்ளடக்கிய ஒரு வழிகாட்டும் குழுவை உருவாக்குவது தொடர்பிலும் முதல்வர் யோசிக்கலாம்.

அமைச்சரவைத் தேர்வில் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தில் சமநிலையைப் பராமரிக்க முயன்றிருப்பதுபோலவே கட்சியில் மூத்தோருக்கும் இளையோருக்கும் இடையிலும் சமநிலையைப் பராமரிக்க முயன்றிருப்பது தெரிகிறது. ஆயினும், பல முக்கியமான துறைகள் அதிமுகவிலிருந்து திமுகவுக்கு வந்தவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பது கட்சிக்குள் முணுமுணுக்கப்படுவது கவனிக்கக்கூடியதாக இருக்கிறது. அதேபோல, காவிரிப் படுகைக்கு அமைச்சரவையில் போதிய பிரதிநிதித்துவம் இல்லாதது அந்தப் பிராந்தியத்தில் ஏமாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. இதைப் போக்க முதல்வர் தன்னை அந்தப் பிராந்தியத்தவராக அடையாளப்படுத்திக்கொள்வதானது தற்காலிகச் சமாதானமாக அமையலாமே அன்றி தீர்வாக அமையாது என்பதை உணர வேண்டும்.

ஆட்சிப் பொறுப்பேற்ற கையோடு கரோனா தடுப்பு நடவடிக்கைகளில் மும்முரமாகக் களம் இறங்கியிருக்கிறார் முதல்வர். அதிகாரிகளிடம் 'எல்லாப் பிரச்சினைகளிலும் உண்மை நிலையை எனக்குச் சொல்லுங்கள்' என்றதும், 'ஒரு உயிர்கூடப் பறிபோக அனுமதிக்கக் கூடாது' என்றதும் ஒரு நல்லாட்சியாளருக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்வுக்கான அடையாளங்கள். இரண்டு வார முழு ஊரடங்கை அறிவிப்பதற்கு முன்பே நிவாரணத் தொகை வழங்குவதற்கான ஏற்பாடுகள், புலம்பெயர் தொழிலாளர்கள் ஊர் திரும்புவதற்கான கூடுதல் பேருந்துகள், மக்கள் திட்டமிட்டு செயலாற்ற இரண்டு நாட்கள் அவகாசம் ஆகியவை முந்தைய ஊரடங்குகளின் துயரங்கள் மீண்டும் நிகழாமல் தடுத்திருக்கின்றன. புதிய அரசு எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் தமிழகம் நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் பார்த்துக்கொண்டிருக்கிறது. இதே அக்கறையுடன் பணி தொடரட்டும்!

Stalin gifts cycle to boy who sent savings to CM relief fund

Padmini.Sivarajah@timesgroup.com

Madurai: A seven-year-old boy, who sent his piggy bank collection to the chief minister's Covid relief fund, got a surprise gift on Sunday when a bicycle arrived from chief minister M K Stalin followed by a call from the man himself. Harishvarman, son of an electrician, had been saving the money to buy a bicycle.

Along with the money, the boy had also sent a handwritten note to the CM through his father. He urged him to help people who were suffering due to Covid. On Sunday evening, Harish was pleasantly surprised to see Madurai North MLA K Thalapathy and others at his doorstep with a brand new, blue-and-red bicycle.

Harish told **TOI** that he had been very saddened by the grim news on Covid unfolding on TV, and decided to do something about it. "The cycle is super," he said, adding that the CM also spoke to him.

"He asked me if I liked the cycle and in which standard I was studying. He also told me that I should be careful while going out and study well," he said. His father Ilango and mother Geetha are elated that their only child received a call from the chief minister himself.

DECCAN Chronicle

10-May-2021

An impressive start to Stalin's innings as CM



Chief Minister M.K. Stalin at his office in Fort St George

Having sat on his fore-ordained seat at Fort St George in the manner of a seasoned politician, MK Stalin soon faced the toughest decision as the chief minister of Tamil Nadu. The health care professionals would have told him that a total lockdown was the only credible tool to fight the rising second wave of the pandemic. To his credit, Stalin put lives before livelihood and a tough decision over image. The pain of a lockdown was required to stem the tide and he was prepared to do what was best for the people, however painful downing the shutters may be for the populace that had just voted his party in.

Stain's predecessor had set high standards in letting health and medical professionals guide the decision making right through the pandemic. Despite the myriad problems faced by the people, Tamil Nadu was one of the better prepared and performing States in mitigation and management efforts. Technical issues with oxygen were fatal in a few instances but preparedness meant oxygen was by and large available to the Covid-sick. Since the April 6 poll, there was little of the harsh decision making required, even in an interregnum. Indians will not listen meekly to entreaties to stay at home and follow covid-appropriate behaviour.

The decisions confirming some of the freebies promised were easier, so too transfer of key officials, which is all very routine at every change of regime. The tough call was the lockdown but made somewhat easier since Kerala and Karnataka had already decided to clamp down. The numbers having risen to unprecedented levels in new cases and fatalities and there being no alternative in sight, a stricter rules to curb people from moving around was the only way out. The results may not be seen for weeks yet but that does not rub out the evidence of damage caused by poll rallies which were super spreaders in five regions.

At a time when a hapless central government has abdicated many of its responsibilities because it is melting in the face of the covid catastrophe, the States have been left to decide for themselves.

Beyond the lockdown decision there was much that showed how well drilled Stalin has been in administration. His briefing of officials contained gems in terms of asking for action. "Spell it out" was the message he had for those in admin vested with the responsibility of fighting the pandemic with policies showing a clear direction. No time for plaudits or rosy pictures painted of the virus having been conquered.

This was no emperor dealing with his courtiers, just a CM asking his officers for honest appraisal of what the real situation is. The stress was on the coronavirus as the enemy and the need to beat it. The ability to look at problems as a decision maker rather than a king passing diktats and the willingness to listen to advice should set him apart at least from one of his strong predecessors in whose presence administrators would be so tongue-tied as to be unable to venture an opinion on the facts of the case.

Estimation of Stalin as CM is bound to have gone up after he read out lines to the effect that the truth be faced squarely now. Even earlier there had been signs that Stalin's rule is going to be different. His statesmanlike approach was itself a revelation. This came when the Edappadi government was scrambling for support through the legal crisis emanating from the trust vote. When the previous government was grappling with the possible fallout of court verdicts and was leaning on New Delhi to sort it out, Stalin refused to countenance any moves to add pressure to the situation.

Stalin was almost stoic in standing by a principle in awaiting his turn, telling those closest to him that he would much rather take the Fort St George seat on his own right after elections rather than try and force the issue and be seen as trying to sneak his way in. There were rumblings in his own party that he was being docile and comparisons were made to his father who they said would have exploited such a political opportunity. Stalin sought the people's vote, which had been given to Jaya five years ago. There too, the feeling was had his father projected him as the CM candidate, the party might have closed the one per cent gap in the popular vote. It is by right that he occupies the CM''s chair now.

(R. Mohan is the Resident Editor of the Chennai and Coimbatore editions of Deccan Chronicle)

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
11-May-2021

பெண்களிடம் பேராதரவு

கொரோனா பெருந்தொற்றால் அவதியடைந்து வந்த தமிழக மக்களுக்கு விடியலாய், ஆறுதலாய் வந்துள்ளது திமுக ஆட்சி. முதல்வர் பொறுப்பேற்றதும் மு.க.ஸ்டாலின் எந்தெந்த திட்டங்களில் கையெழுத்திடுவார் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே பரவலாக இருந்தது.

அரிசி ரேஷன்கார்டுதாரர்களுக்கு ரூ.4 ஆயிரம், ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு, நகர பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம், காப்பீடு திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனையில் கொரோனாவுக்கு சிகிச்சை, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்துக்கு புதிய துறை என 5 முக்கிய வாக்குறுதிகளுக்கான கோப்புகளில் கையெழுத்திட்டார்.

5 திட்டங்களும் அம்சமானவை என்றாலும், நகர பேருந்துகளில் கட்டணமில்லா பயணத்திட்டம் பெண்களிடம் பேராதரவை பெற்றுத் தந்துள்ளது. குறிப்பாக, மதுரை போன்ற பெருநகரங்களுக்கு சுற்றுவட்டார 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து பெண்கள் கூலி வேலைக்கு வந்து செல்கின்றனர். இவர்கள் தாங்கள் செல்லும் இடங்களுக்கு சுமார் ரூ.50 முதல் 100 வரை செலவிட வேண்டியிருக்கும். நாள்தோறும் உடல் வருத்த வேலை பார்க்கும் ஒரு பெண், தனது வருமானத்தில் பெரும் பங்கை பஸ் பயணத்துக்கே செலவிட வேண்டிய சூழல் ஏற்பட்டது.

100 நாள் வேலைத்திட்டம், விவசாயம் மற்றும் தொழிற்சாலைகளில் பணிக்கு செல்லும் பெண்களுக்கும் இதே நிலைதான். கணவரின் வருமானத்தோடு தானும் உழைத்தால்தான் 3 வேளை உண்ண முடியும் என்ற நிலை உள்ள ஒரு குடும்பத்திற்கு இந்த திட்டம் பாலை வார்த்துள்ளது.

ரேஷன் கடைகளில் கொரோனா நிவாரணத் தொகைக்கான டோக்கன்களை, தேதி, நேரம் குறிப்பிட்டு வீடு தேடி வந்து தரும் வகையிலான அறிவிப்பும் மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

அரசு எந்த திட்டம் அறிவித்தாலும், அதை எதிர்க்கும் கட்சிகள் மத்தியில், "அட... நல்லாயிருக்கே" என அவர்களே பாராட்டும் விதத்தில் ஆட்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பாக நகர்த்திச் செல்கிறார்.

கொடுந்தொற்று காலத்தில் பதவி ஏற்றாலும், மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையின் பணிகளும் அசர வைக்கின்றன. பதவியேற்கும் முன்பே மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனைகள், பிபிஇ கிட் அணிந்து கொரோனா நோயாளிகளை சந்தித்து சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் குறைகளை கேட்டறிந்தது, முழு ஊரடங்கு அறிவித்ததும் மக்களின் சிரமங்களை உணர்ந்து, சனி, ஞாயிறு சிறப்பு பேருந்துகளை இயக்கிய விதமும் மக்களிடையே "சபாஷ்" போட வைத்துள்ளது.

இறையன்பு, உதயசந்திரன், ககன்தீப்சிங் பேடி உள்ளிட்ட திறமையான, நேர்மையான அதிகாரிகளை உரிய இடத்தில் அமர்த்தியதும் வரவேற்பை பெற்றுள்ளது. மத்திய அரசின் மந்தமான செயல்பாடுகளால், இன்று இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் முழு ஊரடங்கு அமலில் உள்ளது. தமிழகத்திலும் நேற்று முதல் முழு ஊரடங்கு செயல்பாட்டுக்கு வந்துள்ளது. ஒரு சிரமமான காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். இதிலிருந்து நாம் விரைவில் மீண்டெழ வேண்டும். கொரோனாவை கண்காணிக்க அமைச்சர்கள், அதிகாரிகள் குழு தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஒரு முழு ஊரடங்குக்கு வாய்ப்பில்லாத சூழல் உருவாக வேண்டுமென முதல்வர் கருதுகிறார்.

அதை மனதில் ஏற்போம். அவசியமற்ற பயணங்களை தவிர்ப்போம். முகக்கவசம் அணிதல், சமூக விலகல் போன்ற கொரோனா விழிப்புணர்வை கடைப்பிடிப்போம். கொரோனா பரவலை கட்டுப்படுத்தி மாநில நலனை அரசுடன் இணைந்து மேம்படுத்துவோம். ஒன்றிணைவோம் அரசுடன்.

புதிய அரசு.. புதிய பாதை!

மக்களின் பேராதரவுடன் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்கும் எந்தவொரு அரசும், நிர்வாகத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளவும், தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும், எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்த புரிதலைப் பெறுவதற்கும் குறைந்தது ஆறு மாத காலமாவது ஆகும். ஆட்சியாளர்களின் தவறுகளை மென்மையாக சுட்டிக்காட்டி அவர்கள் அதைத் திருத்திக்கொள்ள வழிகோலுவதும், அவர்கள் எடுக்கும் நல்ல முடிவுகளைக் கைதட்டிப் பாராட்டி உற்சாகமூட்டுவதும், செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருப்பதும்தான் ஆக்கபூர்வ அணுகுமுறையாக இருக்கும்.

1967-இல் அண்ணாவின் தலைமையில் தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, காமராஜர் ஓர் அறிவிப்பை விடுத்தார். 'திமுகவுக்கும், அண்ணாதுரைக்கும் ஆட்சியும் நிர்வாகமும் புதிது. அதனால், அடுத்த ஆறு மாதங்களுக்கு நாம் இந்த அரசின் செயல்பாடுகளை விமர்சிப்பது நியாயமானதல்ல' என்று பெருந்தன்மையுடன் தெரிவித்தார்.

அரை நூற்றாண்டுக்கும் முன்பு அண்ணா தலைமையில் திமுக ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததைவிட, சவாலான ஒரு காலகட்டத்தில் இப்போது மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. அதனால், புதிய அரசுக்கு உறுதுணையாக இருந்து உற்சாகப்படுத்த வேண்டிய கடமை நமக்கு உண்டு.

நேர்மையான, தூய்மையான, வெளிப்படைத்தன்மையான நிர்வாகம் தனது தலைமையில் நடக்கும் என்று உறுதியளித்திருக்கிறார் முதல்வர் ஸ்டாலின். 'திமுக தலைவரான எனது தலைமையிலான அரசுதான் என்றாலும், திமுக என்கிற கட்சியின் அரசல்ல' என்கிற முதல்வர் ஸ்டாலினின் கூற்று சற்று வித்தியாசமான பார்வையாக இருக்கிறது. எந்தவித பேதமும் பாகுபாடும் இல்லாமல் அனைத்துப் பிரிவினரையும் அரவணைப்புடன் அழைத்துச் செல்லும் மக்களுக்கான அரசாகத் தனது அரசு செயல்படும் என்கிற அவரது பார்வையும், நோக்கமும் தொடருமானால், தமிழகம் கடந்த அரைநூற்றாண்டு கால தனிமனித வெறுப்பு அரசியலிலிருந்து விலகி, உண்மையான ஜனநாயகப் பாதையில் பயணிக்கும்.

ஸ்டாலின் முதல்வராகப் பதவி ஏற்றது முதல் சில நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. கடந்த வாரம் நடந்த அந்த நிகழ்வுகளின் மூலம், முந்தைய முதல்வர்களிலிருந்து விலகி, புதிய பாதையில் தான் பயணிக்க விரும்புவதை அவர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

பதவி ஏற்ற அடுத்த சில மணி நேரங்களில் மதுரவாயலில் சில கட்சித் தொண்டர்களால் 'அம்மா உணவகம்' அடித்து நொறுக்கப்பட்டது. நெகிழிப் பதாகைகள் கிழித்தெறியப்பட்டன. நடைமுறை அரசியல் இலக்கணப்படி, அந்தத் தொண்டர்கள் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள். அவர்களது தவறு கண்டிக்கப்பட்டிருக்காது. அதன் மூலம், தமிழகம் முழுவதும் கட்சித் தொண்டர்கள் அம்மா உணவகங்களை அடித்து நொறுக்க மறைமுக அனுமதி வழங்கப்பட்டிருக்கும்.

ஆனால், அந்தப் பிரச்னையை முதல்வர் மு.க. ஸ்டாலின் அணுகி இருக்கும் விதமே வித்தியாசமானது. அம்மா உணவகத்தில் அராஜகத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு, சட்டம் தனது கடமையைச் செய்திருக்கிறது. அதன் மூலம் இதுபோன்ற அடாவடி நடவடிக்கைகளுக்குத் தனது தலைமையிலான கட்சியில் அனுமதி இல்லை என்பதை தெள்ளத்தெளிவாக வலியுறுத்தியிருக்கிறார்.

'அம்மா உணவகம்' பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்பது மட்டுமல்ல, அதன் செயல்பாடுகள் பழையதுபோலவே தொடரும் என்கிற முதல்வரின் அறிவிப்பும் பாராட்டுக்குரியது. 'அம்மா உணவகம்' என்பதைக் 'கலைஞர் உணவகம்' என்றோ, 'முதல்வர் உணவகம்' என்றோ, 'அண்ணா உணவகம்' என்றோ அறிவிக்காமல் 'மக்கள் உணவகம்' என்று விரைவிலேயே அவர் பெயர் மாற்றம் செய்து அறிவிப்பதுதான் சரியாக இருக்கும்.

இன்னொரு நிகழ்வு. கடந்த பல ஆண்டுகளாக தலைமைச் செயலகத்தின் முகப்புப் பகுதியில் முதல்வராக இருப்பவரின் ஆளுயர அளவிலான படம் வைக்கப்பட்டு வந்தது. பதவிப் பொறுப்பேற்று தலைமைச் செயலகத்துக்கு முதன்முறையாக வந்த முதல்வர் ஸ்டாலின், தனது ஆளுயரப் படத்தைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டுவார் என்று நினைத்த தலைமைச் செயலக அதிகாரிகளுக்கு ஒரே அதிர்ச்சி. 'தலைவர்களின் படங்களை முகப்பில் வைக்க இது வெறும் அரசியல் கட்சி அலுவலகமல்ல, தலைமைச் செயலகம்' என்று கூறி அதை அகற்றச் சொன்னபோது, அந்த வித்தியாசமான பார்வையும் அணுகுமுறையும் முதல்வர் மு.க. ஸ்டாலினை நிமிர்ந்து பார்க்க வைத்திருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் இதுவரையில் இல்லாத இன்னொரு மாற்றத்துக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் வழிகோலியிருப்பதை பாராட்டி வரவேற்கத் தோன்றுகிறது. நேற்று முதல் வழங்கப்படும் 'கரோனா சிறப்பு நிவாரண நிதி' டோக்கன்களில் முதல்வரின் படம் இல்லாமல் இருப்பது, மிகப் பெரிய திருப்பம். தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாமலும், தனக்கு விளம்பரம் தேடிக் கொள்ளாமலும், 'நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம்; தொற்றில் இருந்து தமிழகத்தை மீட்போம்' என்கிற வாசகங்களுடன் வெளியிடப்பட்டிருக்கும் 'டோக்கன்', மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசின் மாறுபட்ட அணுகுமுறைக்கான அடையாளம்.

நோய்த்தொற்றின் பிடியிலிருந்து தமிழகம் காப்பாற்றப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுந்து வளர்ச்சிப் பாதையில் பயணித்தாக வேண்டும். இதுவரை எதிர்கொள்ளாத சவால்களை எல்லாம் சந்திக்க நேரிடும் இந்த வேளையில், வெறுப்பு அரசியலுக்கும், போட்டி அரசியலுக்கும் இடமளித்துவிடக் கூடாது. அந்தப் பொறுப்புணர்வுடன், இப்போது பயணிக்க முற்பட்டிருக்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அரசு தொடர்ந்து பயணிக்க வாழ்த்துகள்!

தினகரன்

11-May-2021

'முதல்வர் என்கிட்டே பேசுனது ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு...'

மு.க.ஸ்டாலினிடம் சைக்கிள் பெற்ற சிறுவன் உற்சாகம்

மதுரை, மே 11: முதல்வர் மு.க.ஸ்டாலின் தன்னிடம் பேசியது சந்தோஷத்தை தந்ததாக, அவரிடம் சைக்கிள் பெற்ற சிறுவன் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மதுரை ஆரப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் அமரேஸ் இளங்கோவன். மாநகராட்சி மின்பிரிவில் காண்டிராக்டராக பணியாற்றி வருகிறார். மனைவி தீபா. மகன் ஹரிஸ் வர்மன் (7). இரண்டாம் வகுப்பு மாணவர். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ஹரிஸ் வர்மன், தந்தையிடம் சைக்கிள் வாங்குவதற்கு பணம் சேர்க்க உண்டியல் வாங்கித் தருமாறு கேட்டார். அவரும் வாங்கித்தரவே அதில் தனக்கு கிடைத்த சிறு தொகையை சிறுவன் சேமித்து வந்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு எண்ணியபோது, உண்டியலில் ₹1,000 பணம் சேர்ந்திருந்தது. இதனை முதல்வரின் நிவாரண நிதிக்கு, கொரோனா தடுப்பு பணிக்காக கொடுக்க வேண்டுமென தனது எண்ணத்தை தந்தையிடம் கூறினார். அவரும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு டிடி எடுத்து, தனது கைப்பட எழுதிய கடிதம் ஒன்றையும் இணைத்து அனுப்பி வைத்தார். இதனையறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், மகிழ்ச்சியடைந்தார்.

இதனைத்தொடர்ந்து, மதுரை வடக்கு தொகுதி திமுக எம்எல்ஏ கோ.தளபதி, முதல்வரின் வேண்டுகோளின்பேரில், அச்சிறுவனின் வீட்டுக்கு நேரில் சென்று பாராட்டினார். அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில், சைக்கிள் ஒன்றை பரிசாக வழங்கினார்.

பின்னர் கோ.தளபதி எம்எல்ஏ அங்கிருந்து தனது செல்போனில் முதல்வர் மு.க.ஸ்டாலினை தொடர்பு கொண்டு அச்சிறுவனை பேச வைத்தார்.

அப்போது முதல்வர், அச்சிறுவனுக்கு பாராட்டு தெரிவித்ததுடன், "நல்லா இருக்கியா? உன் பெயர் என்ன? என்ன படிக்கிறாய்? அப்பா பெயர் என்ன? சைக்கிளை எடுத்துக்கிட்டு இப்போது வெளியே போகாதே. கொரோனா இருக்கு. கொரோனா முடிந்ததும் ஓட்டு. நல்லா படி" என்றார்.

அதற்கு அச்சிறுவன், முதல்வரிடம், ஹலோ தாத்தா, வாழ்த்துக்கள் தாத்தா, 2ம் வகுப்பு படிக்கிறேன். சைக்கிள் வாங்கி கொடுத்ததற்கு நன்றி எனக்கூறினார். பதிலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலினும் நன்றி தெரிவித்தார்.

இதுகுறித்து சிறுவன் ஹரிஸ்வர்மனிடம் கேட்டபோது, "சிஎம்மிடம் (முதல்வர்) பேசியது ரொம்ப, ரொம்ப சந்தோஷமாக இருந்துச்சு. கனவா? நனவான்னே தெரியலை. தாத்தா சிஎம் ஆனப்புறம் நல்லது செய்றாங்க. அவங்களே என்கிட்டே பேசுனதால, வீட்ல எல்லோரும் சந்தோஷமாக இருக்காங்க..." என்றார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாங்கித் தந்த சைக்கிளுடன் சிறுவன் ஹரிஸ்வர்மன்

முதல்வர் ட்விட்டர் பதிவு

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "ஹரிஸ்வர்மன் என்ற சிறுவன் தனக்கு மிதிவண்டி வாங்குவதற்காக வைத்திருந்த உண்டியல் தொகையை கோவிட்-19 தடுப்புக்காக முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அனுப்பிய செய்தி கேட்டு நெகிழ்ந்தேன். இத்தகைய உணர்வே தமிழகத்தின் வலிமை! சிறுவனுக்கு மிதிவண்டி வாங்கிக்கொடுத்து தொலைபேசியில் அழைத்து வாழ்த்தினேன்" என்று தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
11-May-2021

மு.க.ஸ்டாலின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிய பிரதமர்!

இந்தியாவில் கொரோனா பரவல் மிக வேகமாக தலையெடுத்து வருகிறது. தமிழ்நாட்டில் முதல் பரவலின் இறுதியில் நன்றாக குறைந்திருந்த கொரோனா பாதிப்பு, இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளது. ஒவ்வொருநாளும் கொத்து, கொத்தாய் பாதிப்பு அதிகரித்து கொண்டிருக்கிறது. இப்போது தினசரி பாதிப்பு 29 ஆயிரத்தை எட்டிவிட்டது. கடந்த ஏப்ரல் மாதம் 2-வது வாரத்தில் 100 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்தால், 8 பேருக்கு கொரோனா பாதிப்பு இருந்தது. இதே கடைசிவாரத்தில் 12.7 பேராக உயர்ந்து, இப்போது 100 பேரை பரிசோதனை செய்தால் 15 பேருக்கு மேலாக கொரோனா பாதிப்பிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவேகமாக உயருவதுபோல, உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் மிக அதிகமாக உயர்ந்துக் கொண்டே வருகிறது. அதேபோல், மருத்துவமனைகளில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆக்சிஜன் உதவியும் மிக அதிகமாக தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் பெருகிவரும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கைக்

கேற்ப மத்திய அரசாங்கம் ஆக்சிஜன் ஒதுக்கீடு செய்யவில்லை என்ற பெரிய குறைபாடிருந்தது. இவ்வளவுக்கும் தமிழ்நாட்டில் தினமும் 400 மெட்ரிக் டன் ஆக்சிஜன் உற்பத்தி செய்யப்படும்நிலையில், 220 மெட்ரிக் டன் மட்டுமே மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. ஆனால் நமது தேவை தற்போதையநிலையில், 450 மெட்ரிக் டன்னுக்கு மேலாக உயர்ந்து கொண்டே போகிறது. தமிழகஅரசு மாறி, மாறி விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் 280 மெட்ரிக் டன் ஆக்சிஜன்தான் வழங்கப்பட்டு வந்தது. கடந்தவாரத்தில், சென்னை ஐகோர்ட்டில் தமிழக மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், "எங்களிடம் இன்னும் ஒரு நாளைக்குத்தான் ஆக்சிஜன் இருக்கிறது" என்ற அபயக்குரல் தாக்கல் செய்யப்பட்டது.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும், பிரதமருக்கு கடிதம் எழுதியதோடு மட்டுமல்லாமல், கடந்த சனிக்கிழமை பிரதமர் நரேந்திரமோடி, மு.க.ஸ்டாலினுடன் டெலிபோனில் பேசும்போது, மிகமுக்கிய கோரிக்கையாக தமிழகத்துக்கு தேவையான ஆக்சிஜன் தொடர்பாக மாநிலத்துக்கான ஆக்சிஜன் ஒதுக்கீட்டை 500 மெட்ரிக் டன்னாக உயர்த்தி வழங்கவேண்டும் என்று மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார். இந்த கோரிக்கையை உடனடியாக பரிசீலிப்பதாக பிரதமரும் உறுதியளித்தார். மு.க.ஸ்டாலின் கோரிக்கைவிடுத்த சற்றுநேரத்தில், மத்திய அரசாங்கம் தமிழகத்துக்கு வழங்கப்படும் ஆக்சிஜன் அளவை உயர்த்தி வழங்க உத்தரவிட்டது. மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்துக்கு ஒதுக்கப்படும் ஆக்சிஜன் அளவை 419 மெட்ரிக் டன்னாக உயர்த்தி மத்திய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. தமிழகத்தின் நிலைமையை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மிகஅழுத்தமாக பிரதமரிடம் வலியுறுத்தியதும், அதற்கு பிரதமர் உடனடியாக பரிசீலிப்பதாக உறுதியளித்ததும், தொடர்ந்து சில மணித்துளிகளில் 419 மெட்ரிக் டன்னாக உயர்த்தி வழங்க மத்திய அரசாங்கம் முன்வந்ததும் மிக, மிக பாராட்டுக்குரியது. ஆனால் 419 மெட்ரிக் டன்னோடு மத்திய அரசாங்கம் நின்றுவிடக்கூடாது. தமிழகத்தின் தேவைக்கேற்ப அன்றாடம் ஆக்சிஜன் ஒதுக்கீட்டு அளவை உயர்த்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

இந்தநிலையில் சுப்ரீம் கோர்ட்டு, மாநிலங்களுக்கு ஆக்சிஜன் ஒதுக்கீட்டுக்காக தற்போது மத்திய அரசாங்கம் மேற்கொண்டுவரும் திட்டம், அதாவது மருத்துவமனைகளில் எவ்வளவு ஆக்சிஜன் வசதி கொண்ட படுக்கைகள் இருக்கிறதோ?, அதற்கேற்றாற்போலத்தான் ஆக்சிஜன் வழங்கும் திட்டம் என்பதை மாற்றி, அறிவியல்ரீதியாக, தேவைக்கேற்ப, மிகவும் வெளிப்படையான ஒதுக்கீட்டு முறையை பின்பற்ற என்ன வகையான திட்டங்களை மேற்கொள்ளலாம்? என்பதை ஆராய 12 நிபுணர்கள் கொண்ட தேசியஅளவிலான ஒரு பணிக்குழுவை நியமித்திருக்கிறது. இந்த பணிக்குழுவில் தமிழ்நாட்டில் உள்ள வேலூர் கிறிஸ்தவக்கல்லூரி பேராசிரியர் டாக்டர் ககன்தீப் காங், இயக்குனர் டாக்டர் ஜே.வி.பீட்டர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பணிக்குழு உடனடியாக தன் பணிகளை தொடங்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழக மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை இந்த பணிக்குழுவிடமும் நம்முடைய தேவைகளை எடுத்துக்கூற வேண்டும். மொத்தத்தில் ஒதுக்கீடு செய்வது மத்திய அரசாங்கம் என்பதால், பிரதமரும், மத்திய அரசாங்கமும் தமிழகத்தின் நிலைமையைக்கருதி ஆக்சிஜன் தட்டுப்பாடு இல்லாத அளவுக்கு ஒதுக்கீடுகளை தினசரி தேவை அடிப்படையில் வழங்கவேண்டும் என்பதே பொதுவான கோரிக்கையாக இருக்கிறது.

THE NEW INDIAN EXPRESS

11-May-2021

FREE TRAVEL FOR WOMEN HAILED

Experts believe the scheme will increase work participation rate of women, leading to economic growth in TN

C SHIVAKUMAR @ Chennai

THE free-bus-travel for women being implemented by Chief Minister M K Stallin in Tamil Nadu is drawing the attention of experts from across the country and beyond, with many saying that it will not only change the lives of millions of women but also boost the State's economy.

Hailing the government's move, Shreya Gadepalli, South Asia Programme Lead of Institute for Transportation and Development Policy (ITDP), said a study by ITDP India Programme in 2020 found that affordability and safety were the biggest concerns of Chennai's women bus commuters.

"They have lesser access to personal motor vehicles than men and are more dependent on public transport. Free-public transport can empower women, giving them greater access to jobs and education and making them more productive," she said.

Expanding bus services

Shreya said the State government should also consider expanding bus services. ITDP's People Near Transit study found that, in Chennai, four out of ten women did not have access to buses within walking distance.

The situation is worse in other cities of the State. "More buses will mean less waiting time and less crowded buses, making it safer for women. It should not be seen as an expense but as an investment for future," she added.

File photo of women in an MTC bus near Pallavan House in Chennai | EXPRESS

Tara Krishnaswamy, co-founder of Citizens for Bangalore, said the move will change the lives of women in the unorganised sector, who are often dissuaded from taking up employment as cost outweighed their salaries.

Cost on State

The free-travel facility given to women will cost the exchequer ₹1,200 crore of the annual revenue of the state transport corporations, source said.

According to official data, the annual revenue of the State's transport corporations from city buses (ordinary) is around ₹3,000 crore.

Working women and girls pursuing higher education is projected to account for around 40 per cent of Tamil Nadu (TN) bus passengers.

Many experts, however, believe the measure will help the economy grow in the long term. "It will increase the work participation of women," some said. According to the 2011 census, the work participation rate of women was only 31.8 per cent, whereas that of men was 59.3 per cent.

Combating pollution

Gopinath Menon, former chief for Transportation, Land Transport Authority in Singapore, said that getting more people to use public transport is one way to combat traffic congestion and air pollution. Making public transport free for a section of the population, should have a beneficial effect on the traffic situation. Menon added that other state governments should take a cue and invest in bus-based public transport, especially at a time when people need support for economic recovery.

‘ஓப்பனிங்’ நல்லா இருக்கு!

மு.கல்யாணசுந்தரம், கோவையிலிருந்து அனுப்பிய, ‘இ – மெயில்’ கடிதம்: கட்சிக்கும், ஆட்சிக்கும் எந்த ஒரு நிலையிலும் அவப்பெயர் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில், முதல்வர் ஸ்டாலின் கவனமாக செயல்படுகிறார் என்பது நன்றாகவே தெரிகிறது.

மதுரவாயலில், ‘அம்மா’ உணவகம், தி.மு.க.,வினரால் சேதப்படுத்தப்பட்டது. அடுத்த ஒரு மணி நேரத்தில், அது சரி செய்யப்பட்டது மட்டுமில்லாமல், கட்சியினர் மீதும் நடவடிக்கை எடுக்கவும், முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார்.

ஸ்டாலின் முதல்வராக பதவியேற்பதற்கு முன், தமிழகத்தின் மூத்த தலைவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

ஜெயலலிதா முதல்வராக இருந்த போது, அவரின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து எழுந்த பின் தான், அக்கட்சியினர், அமைச்சர் பதவி ஏற்றனர்.

ஆனால், முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்பு விழாவில், காலில் விழும் கொடுமை நடக்காதது, மக்களை வியப்படைய செய்தது.

தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற காலதாமதம் செய்யாமல், ஐந்து திட்டங்களுக்கு, முதல்வர் கையெழுத்திட்டு இருப்பதும் வரவேற்பை பெற்றுள்ளது.

அரசின் முக்கிய பொறுப்புகளுக்கு திறமையான ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளை நியமித்து இருப்பதும் பாராட்டுகளை பெற்றுள்ளது.

முதல்வர் ஸ்டாலின் முன் நிற்கும் மிகப் பெரிய பொறுப்பு, கொரோனா பரவலை தடுப்பது. அதற்கு அவர் கடுமை காட்ட வேண்டும்.

கட்சி விழாவின் போது, ஒரு தொகுதிக்கு 1,000 மரக்கன்றுகளை நட உத்தரவிட வேண்டும்.

தமிழகம் முழுதும் இரண்டு லட்சத்திற்கும் மேல் மரக்கன்று நட்டால், ஐந்து ஆண்டுகளில் அவை வளர்ந்து, கட்சிக்கும், ஆட்சிக்கும் நல்ல பெயர் பெற்று தரும்.

ஸ்டாலின், முதல்வர் பயணத்தை சிறப்பாகவே ஆரம்பித்து இருக்கிறார்.

THE NEW INDIAN EXPRESS

12-May-2021

Now it's a free ride to empowerment

KRITHIKA SRINIVASAN
@ Villupuram

SANGEETHA would spend nearly ₹100 for bus travel everyday to reach her nursing college. She had applied for a bus pass last year but was denied one. A member of the Irula tribe and a first generation graduate, her parents would set aside ₹100 everyday of their meagre salary to ensure her education. However, this changed for the better when Chief Minister MK Stalin announced free bus travel for women.

The nursing student's parents were rescued from bonded labour at a brick kiln in 2009 and the family had settled in Veeranamur village near Tindivanam. C Sangeetha is the first person from her settlement of 25 Irula families to have cleared the class XII board exam and pursue a nursing degree at Mundiyambakkam Government Medical College.

The 19-year-old had applied for a free bus pass stating her family background to the District Transport Authority in 2020. But she was denied one as the transport department said, "There is no provision." *TNIE* carried the story on March 11, 2020, and but no action was taken by the authorities.

"I can't express how happy I am because of the scheme. Last year, I was struggling to get a free bus pass which was denied to me over and over again. Now every girl like me has to wait for nobody. We have got our own freedom to go to college without having to make our families suffer over bus fare expenses when there is already poverty starving us. I can be a guilt-free first-generation graduate now, my father will save my bus fare for the family's expense," Sangeetha told *TNIE*.

Sangeetha's parents work multiple jobs to make ends meet including agricultural labour works, MNREGA work, and other daily wage labour works that they find in the village. "There had been days when we starved as the only money we earned would be spent for her bus fare. But we never compromised on it because her education came first before meals to us," said Chinnasamy, Sangeetha's father.

C Sangeetha | EXPRESS

The scheme has given a new freedom that was before denied to the family. The elated family is now making plans to explore. "A scheme that allows my daughters and my wife to go wherever they want and win the world is beyond explanation to me. That ₹100 can now go towards buying notebooks or stationery required for my children. We thank Chief Minister MK Stalin from the bottom of our hearts, for implementing a life-changing scheme, touching our lives," Chinnaswamy added.

THE NEW INDIAN EXPRESS

12-May-2021

STALIN STARTS OFF ON THE RIGHT FOOT

The new Chief Minister M K Stalin's recent advice to his DMK cadre that it was pointless to blame the previous regime for any lacuna and asking them to light a lamp to dispel darkness instead, came as a breath of fresh air in the otherwise polarised polity in Tamil Nadu. "Rather than criticising autumn, let us invite spring," he said in a letter to the cadre, indicating a statesman-like approach that showed both confidence and political maturity. Another indication of his no-nonsense approach was the expulsion of two party workers who vandalised an Amma canteen about a week ago, showing zero tolerance for hooliganism. By doing so, and directing the filing of police complaints against them, he avoided the possibility of copycat attacks on other Amma eateries and sent a stern message of political decency.

About a week before the votes were counted on May 2, Stalin had said neither the people of the state nor their livelihood are in a position to bear another lockdown, while advising bureaucrats to do their best to contain the pandemic. But a few days after occupying the hot seat, when he realised a short lockdown was inescapable to break the Covid chain, he had no hesitation in making the announcement, thus indicating administrative flexibility for the greater good.

His initial announcements that Covid treatment expenses in private hospitals would be paid by the government under the state's health insurance scheme and setting up a Covid war room for managing bed availability for both government and private hospitals, especially for critically ill patients, showed his thrust on welfare and efficiency. The intent to take the pandemic head on by putting the best human resources on the job was evident with the allocation of the health portfolio to Ma Subramanian, the dynamic former mayor of the Chennai Corporation. Also, the capital's Corporation got a new Commissioner in Gagandeep Singh Bedi, whose expertise in disaster management is well known. In sum, Stalin got off to a positive start, which surely is a good augury.

தினத் தந்தி
DAILY THANTHI

13-May-2021

வளரட்டும் இந்த அரசியல் நாகரிகம்!

அரசியல் கட்சி என்றாலே, மாற்று கட்சியை மாச்சரியத்தோடு பார்ப்பதுதான் நடைமுறை என்று இருந்த காலம் இப்போது மறையத்தொடங்கி இருப்பது, நல்லோர் மனதில் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காமராஜர், அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஆகியோர் பின்பற்றிய அரசியலில், கொள்கை வேறாக இருந்தாலும், பண்பாடு மேலோங்கி இருந்து, நல்ல அரசியல் நாகரிகம் தலைதூக்கி நின்று கொண்டிருந்தது.

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் காங்கிரசுக்கு எதிராக தனியாக கட்சி நடத்திய நேரத்திலும், சென்னையில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கும் "தினத்தந்தி" அலுவலகத்தை காமராஜரை கொண்டு குத்துவிளக்கு ஏற்றி திறந்துவைக்க செய்தார். 1967-ல் காங்கிரஸ் தோற்று, அண்ணா தலைமையில் தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றவுடன், அண்ணா தன் அமைச்சரவையோடு காமராஜர் வீட்டிற்கு சென்று ஆசிபெற்ற நேரத்தில், இந்தியாவே தமிழ்நாட்டின் அரசியல் நாகரிகத்தை கண்டு வியந்தது.

அதேபோல, மலை குலைந்தாலும் நிலை குலையாத காமராஜர், "புதிதாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள

தி.மு.க. குறித்து 6 மாதத்திற்கு எதுவும் பேசமாட்டேன்" என்று கூறியதுடன், காங்கிரஸ் கட்சிக்காரர்களும் எதுவும் பேசாமல் பாதுகாத்த கட்டுப்பாடு காமராஜரின் ஜனநாயக பண்பை வெளிப்படுத்தியது. மு.க.ஸ்டாலின் திருமணத்தன்று காமராஜர் உடல் நலக்குறைவாக இருந்த போதிலும், அவரது கார் மேடைக்கே வருவதற்கு வசதிகள் செய்துகொடுத்து, அவருடைய வாழ்த்துகளையும் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்தார் கருணாநிதி. இப்படிப்பட்ட அரசியல் நாகரிகத்தில் சற்று தொய்வு விழுந்துவிட்டது. இப்போது மீண்டும் துளிர்த்திருப்பது எல்லோருக்கும் பூரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத்தேர்தலில், தி.மு.க. வெற்றி பெற்றவுடன் பிரதமர் நரேந்திரமோடி, மு.க.ஸ்டாலினுக்கு அனுப்பிய வாழ்த்து செய்தியில், "தேசத்தின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், பிராந்திய மக்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதற்கும், கொரோனா பெருந்தொற்றை தோற்கடிப்பதற்கும் நாம் இணைந்து செயல்படுவோம்" என்று கூறியிருந்ததும், அதற்கு நன்றி தெரிவித்து மு.க.ஸ்டாலின் அனுப்பிய செய்தியில், "மாநில மக்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றுவதை எதிர்நோக்கி காத்திருக்கிறேன். கூட்டாட்சி ஒத்துழைப்பு மூலம் கொரோனாவை நாம் வென்றுவிடுவோம். தொற்றுநோய்க்கு பிந்தைய வளர்ச்சிப்பாதையை உருவாக்குவோம்" என்று கூறியதும், அரசியலில் ஒரு புதிய பரிமாணத்தை எடுத்துக்காட்டுகிறது.

இதுபோல, முதல்-அமைச்சராக பதவியேற்க இருந்த நேரத்தில், மு.க.ஸ்டாலினுக்கு எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்து தெரிவித்த அடுத்த நொடியே, "மிகச்சிறந்த தமிழகத்தை உருவாக்க தங்களது ஆலோசனையும், ஒத்துழைப்பும் தேவை. ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்ததே ஜனநாயகம். அத்தகைய ஜனநாயகத்தை காப்போம்" என்று மு.க.ஸ்டாலின் பதிலளித்த பாங்கும், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கு டெலிபோன் செய்து, அவரது வாழ்த்தை பெற்றதோடு மட்டுமல்லாமல், தனக்கு ஆலோசனை வழங்கும்படியும் கேட்டுக்கொண்டதும், "தமிழன் என்றோர் இனமுண்டு. தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்பதை நிரூபித்து காட்டிவிட்டது.

எளிமையாக கவர்னர் மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவை பதவியேற்பு விழாவில், ஓ.பன்னீர்செல்வம், மு.க.ஸ்டாலினுக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்ததும், ஓ.பன்னீர்செல்வத்துக்கு உரிய மரியாதை கொடுத்து வரவேற்றதும், கவர்னரோடு முதல்-அமைச்சர் தேனீர் அருந்த உட்கார்ந்திருந்த வட்ட மேஜையில் ஓ.பன்னீர்செல்வத்துக்கும் முக்கிய இடம் கொடுத்ததும், நாம் காண்பது கனவா?, நனவா? என்றநிலையை எல்லோருக்கும் ஏற்படுத்தியது.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக, முதல்-அமைச்சர் பதவியேற்றபின் தி.மு.க. தொண்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் எழுதிய முதல் கடிதத்தில், "தேர்தல் என்பது மக்களாட்சியின் மாண்புகளுள் ஒன்று. அது போர்க்களமல்ல. ஜனநாயகக் களத்தில் எதிரெதிர் அணிகளாக மோதிக்கொள்வது இயல்பு என்றாலும், நாம் எல்லோரும் ஒருதாய் மக்கள். எனவே, தி.மு.க.வை சார்ந்தவர்கள் மாற்றுக்கட்சி தோழர்களோடும் நட்புணர்வுடன் மக்கள் பிரச்சினைகளை அணுகி, அவற்றுக்கு தீர்வு காண முயலவேண்டும்" என்று கூறியதை பார்க்கும்போது, இதுதான் தமிழ்நாடு என்று ஒவ்வொரு தமிழனையும் நெஞ்சை நிமிர்த்த வைக்கிறது. இப்போது துளிர்த்துள்ள இந்த அரசியல் நாகரிகம் மேலும் செழித்து ஆலமரமாக வளரவேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் சமுதாயத்தின் விருப்பமாகும்.

அமெரிக்க தமிழ் சங்கம் முதல்வருக்கு பாராட்டு

சென்னை, மே 13–

தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும் எம்.எல்.ஏ., உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு, அமெரிக்க தமிழ் சங்கம் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து, நியூயார்க்கில் உள்ள அமெரிக்க தமிழ் சங்க தலைவர் முனைவர் பிரகாஷ் எம். சுவாமி வெளியிட்ட செய்தி குறிப்பு:

தமிழக சட்டசபை தேர்தலில், மாபெரும் வெற்றி பெற்ற ஸ்டாலின், எம்.எல்.ஏ., உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோருக்கு இதயப்பூர்வமான வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாவால் அடையாளம் காணப்பட்டு, கருணாநிதியால் மெருகேற்றப்பட்ட சிறந்த அரசியல்வாதி ஸ்டாலின். கடந்த 50 ஆண்டு கால அனுபவத்தில் முதல்வராக வரலாற்று சாதனை படைத்துள்ளார். அவருடைய அனுபவ அறிவும், தமிழகத்தை முன்னேற்ற வேண்டும் என்ற கனவும், நிச்சயமாக நமக்கெல்லாம் ஒரு பொற்கால ஆட்சி அமையும் என, நம்புகிறேன்.

வெளிநாட்டு வாழ் தமிழர்கள் நலனுக்காக ஒரு துறை ஏற்படுத்தி, ஒரு அமைச்சரை நியமித்தது, தமிழக வரலாற்றில் ஒரு சாதனை. ஸ்டாலின், நியூயார்க் நகருக்கு பலமுறை வந்து, தமிழர்களை சந்தித்துள்ளார். அவர் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை மனித உரிமைகள் மீறல் புகார் அளித்த போது, எமது சங்கம் உறுதுணையாக இருந்தது.

செம்மொழி மாநாட்டில் எங்கள் சங்க நிர்வாகிகளை அழைத்து பெருமை சேர்த்தவர் கருணாநிதி. உதயநிதி ஸ்டாலின், நல்ல அரசியல் தலைவராக உருவெடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. முன்னாள் அமெரிக்கவாசியான, பொருளாதார மேதை முனைவர் பழனிவேல் தியாகராஜன், தமிழக நிதித்துறை அமைச்சராக பொறுப்பேற்றது, எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை

முதல்வருக்கு மருத்துவர் சங்கங்கள் நன்றி

சென்னை

கரோனா தொற்றால் உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணமும், மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையும் அறிவிக்கப்பட்டதற்காக முதல்வர் ஸ்டாலினுக்கு மருத்துவர் சங்கங்கள் நன்றி தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை;

தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத் தலைவர் செந்தில்: கரோனா தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களுக்கு ரூ.30 ஆயிரமும், செவிலியர்களுக்கு ரூ.20 ஆயிரமும், மருத்துவப் பணியாளர்களுக்கு ரூ.15 ஆயிரமும், பட்ட மேற்படிப்பு மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கு ரூ.20 ஆயிரமும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

கரோனா காலத்தில் பணியாற்றி இன்னுயிர் நீத்த 43 மருத்துவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.25 லட்சம் நிவாரணம் வழங்கவும் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. அரசு மருத்துவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை பதவியேற்ற சில நாட்களிலேயே நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி.

அரசு மருத்துவர்களுக்கான சட்டப்போராட்டக் குழுத் தலைவர் மருத்துவர் பெருமாள் பிள்ளை: மருத்துவர்களுக்கு ஊக்கத் தொகையும், உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணமும் அறிவிக்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இருப்பினும் கரோனாவால் உயிரிழந்த அரசு மருத்துவர்களின் குடும்பங்களுக்கு முந்தைய ஆட்சியில் அறிவிக்கப்பட்ட ரூ.50 லட்சம் நிவாரணம் வழங்க ஆவன செய்ய வேண்டும்.

தமிழக மருத்துவ சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன், செயலாளர் ரவிக்குமார்: கரோனா தடுப்பு பணியின்போது தொற்று ஏற்பட்டு உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு ரூ.25 லட்சம் வழங்க உத்தரவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி. இதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் நன்றி.

முரசொலி

14-May-2021

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் செயல்பாடுகள்

முத்தமிழறிஞர் கலைஞரை நினைவிற்கு கொண்டு வருகிறது!

கயானா நாட்டு முன்னாள் பிரதமர் மோசஸ் வீ.நாகமுத்து புகழாரம்!

சென்னை, மே.14–

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நினைவுக்குக் கொண்டு வருகிறது என கயானா நாட்டு முன்னாள் பிரதமர் மோசஸ் வீ.நாகமுத்து புகழாரம் சூட்டியுள்ளார்.

'கூட்டணி அரசியலின் வெற்றி' என்ற தலைப்பில் கயானா நாட்டின் முன்னாள் பிரதமர் மோசஸ் வீ.நாகமுத்து எழுதியுள்ள கட்டுரை வருமாறு :-

தமிழக முதலமைச்சராக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டவுடன், தனியார் மருத்துவ மனைகளில் கொரோனாவுக்காக சிகிச்சை பெறுபவர்களின் கட்டணத்தை அரசே ஏற்கும் என்று மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அவரது இந்த நடவடிக்கை அவரது தந்தையும்; தமிழகத்தில் 5 முறை முதலமைச்சராகவும், சமூக நீதிக்காகவும், ஏழைகளின் நலன்களுக்காக கொள்கைகளை வகுத்து செயல்பட்டவருமான முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களை நினைவிற்கு கொண்டு வருகிறது.

புதிய தலைவராக மாறி முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ள மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு களுக்கு உரியவராகும். அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் அவர் மகத்தான வெற்றி பெற்றுள்ளார். இந்தத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 133 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. மறைந்த ஜெ.ஜெயலலிதாவின் கட்சியான அ.தி.மு.க. இத் தேர்தலில் 66 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

வலிமைமிக்க பிரதமர் மோடியின் பா.ஜ.க. அ.தி.மு.க.வுடன் இணைந்து கூட்டணி அமைத்து போட்டியிட்டது. ஆனால், வெறும் 4 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

தென்னிந்தியாவின் எல்லையோர மாநிலமான கேரளாவில் முதல்வர் பினராயி விஜயன் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி 140 தொகுதிகளில் 97 தொகுதிகள் வெற்றி பெற்றுள் ளது. இரண்டாவது முறையாக பினராயி விஜயன் முதலமைச்சராக வந்துள்ளார்.

தொற்று நோய்க்கு இணையாக வெறித் தனத் துடன் பா.ஜ.க.வை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்டதால், மோடியின் கட்சியான பா.ஜ.க. கேரளாவில் ஒரு தொகுதியிலும் வெற்றி பெற முடியவில்லை.

உடனடியாக பினராயி விஜயன் அவர்களும், தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்ற 'உயிர்களைக் காப்பாற்ற' என்ற இயக்கத்தை ஆரம்பித்து விட்டார்.

தமிழ்நாடு, கேரளா ஆகிய இரு மாநிலங் களுக்கும் இடதுசாரிகளுக்கும் மதச்சார்பற்ற சக்திகளுக்கும் கூட்டணி அரசியலுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரை, நேருக்கு நேர் தனிப்பட்ட முறையில் நடந்த போட்டியாகும். இந்தப் போட்டியில் பிரதமர் மோடி பதவியிலிருக்கும் மம்தா பானர்ஜியால் தோற்கடிக்கப்பட்டார்.

மேற்கு வங்கத்தின் கடும் நிலவரத்தின் காரண மாக எட்டு கட்டமாக தேர்தல் நடைபெற்றது. மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் 213 தொகுதி களில் வெற்றி பெற்றது. அங்கு பா.ஜ.க. 77 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

தற்போது அங்கு நிலவும் கடுமையான சூழலை கட்டுப்படுத்த அமைதிப் பேரணிக்கும் மேலான தர்ணாவை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது.

கடுமையான போராளியான மம்தா பானர்ஜி காலில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே பிரச்சாரம் செய்தார். தன் தொகுதியில் அவர் தோல்வி அடைந்தாலும், அரசியல் சட்டத்தின் விதிமுறைப்படி, மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். இன்னும் 6 மாதங்களுக்குள் அவர் ஏதாவது ஒரு தொகுதியில் நின்று வெற்றி பெற்றாக வேண்டும்.

தமிழகம், கேரளா மற்றும் மேற்கு வங்கத்தில் படுமோசமாகத் தோல்வி அடைந்த பா.ஜ.க. மிகச் சிறிய மாநிலமான அசாமிலும், யூனியன் பிரதேச மான புதுச்சேரியிலும் மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற்றது.

இவ்வாறு மோசஸ் வீ.நாகமுத்து தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI

15-May-2021

குறு, சிறு, நடுத்தர தொழில்களுக்கு சலுகைகள்!

தமிழக நிதி அமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், நிதித்துறையில் நல்ல நிபுணத்துவம் பெற்றவர். பொருளாதார வல்லுனரும்கூட. அவர் தமிழகத்தின் நிதி நிலைமையை பொதுமக்களும் தெரிந்துகொள்ளும் வகையில், விரைவில் ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிடுவேன் என்று கூறும்போது, "கொரோனா போன்ற பெருந்தொற்றால் ஏற்பட்ட இடர்பாடு நேரத்தில், எங்களது முதல் முன்னுரிமை மக்கள் கையில் பணப்புழக்கம் இருப்பதுதான். அப்போதுதான் பொருட்களின் தேவை அதிகரிக்கும். எனவே, அதையே முதல் கடமையாக கொண்டு செயல்படுவோம்" என்று கூறினார். அதை நோக்கி தமிழக அரசு செல்கிறது என்பது, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தற்போது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு அளித்துள்ள சலுகைகளில் இருந்தே தெரிகிறது.

தமிழ்நாட்டு பொருளாதாரத்தின் நிலைத்த வளர்ச்சிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெரிதும் பங்களிக்கின்றன. வேலைவாய்ப்புகளை உருவாக்கி, சமூக பொருளாதார

அதிகாரமாக்குதலையும் அளித்து, சமூக மேம்பாட்டு வளர்ச்சியில் பெரும் துணையாக நிற்கின்றன. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை, இந்த தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிதான். கடைசியாக எடுத்த ஆய்வுப்படி, தமிழ்நாட்டில் 20 லட்சத்து 13 ஆயிரம் பதிவு பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இயங்குகின்றன. இந்த நிறுவனங்களில், 12 கோடியே 89 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களின் உற்பத்திதான், நாட்டில் கனரக தொழில்களுக்கு பெருந்துணையாகவும், தேவையான மற்ற பொருட்களை தயாரிப்பவையாகவும் இருக்கிறது. இந்த நிறுவனங்களில் நேரடியாக மட்டுமல்லாமல், மறைமுகமாகவும் நிறைய பேர் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள்.

கொரோனாவின் முதல் அலையில், ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நேரத்தில், இந்த தொழில்கள் பெரும் பாதிப்படைந்தன. நிறையபேர் வேலையிழந்து வீதிக்கு வந்தனர். பல தொழில்கள் இன்னும் இயல்புநிலைக்கு திரும்பவில்லை. இப்போது, கொரோனாவின் 2-வது அலை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நிலையில், "கொரோனாவையும் ஒழிக்கவேண்டும். மக்களின் வாழ்வாதாரத்தையும் மீட்டெடுக்கவேண்டும்" என்ற உயரிய நோக்கத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு புத்துயிர் கொடுக்க முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மிக முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.

இந்த நிறுவனங்கள் மற்றும் ஆட்டோ ரிக்‌ஷா, கால் டாக்சி வாகனங்கள் வைத்திருப்போர், வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய, மாதாந்திர தவணைத்தொகையை கட்டுவதற்கு 6 மாதம் கால அவகாசம் வழங்கவேண்டும் என்று பிரதமர் நரேந்திரமோடிக்கும், ரிசர்வ் வங்கி கவர்னருக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார்.

இதுபோல, தொழிலாளர்களிடம் இருந்து மாதந்தோறும் வசூலிக்கப்படும், வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர் ஈட்டுறுதி தொகையையும் 6 மாதம் பிடித்தம் செய்யக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்துள்ளார். இது பிரதமரும், ரிசர்வ் வங்கியும் செய்ய வேண்டியது. தமிழக அரசு சார்பில் சுய முதலீட்டு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு உடனடியாக ரூ.168 கோடி முதலீட்டு மானியம் வழங்கப்படும், இந்த நிறுவனங்கள் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன் உதவி பெறும்போது முத்திரைத்தாள் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டியது இந்த ஆண்டு டிசம்பர் மாதம்வரை நீட்டிக்கப்படுகிறது. இதுபோல, 14 சலுகைகளை இந்த நிறுவனங்களுக்கு வழங்கும் வகையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

அவர்களுக்கான இந்த சலுகைகளால் நிச்சயமாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மீண்டெழும், தழைக்கும். ஆனால், இந்த நிறுவனங்களுக்கு சலுகை அளிப்பதுபோல இவர்களிடம் இருந்து உற்பத்தி பொருட்களை பெற்றுக்கொள்ளும் கனரக தொழில் நிறுவனங்களுக்கும் தமிழக அரசு உதவிக்கரம் நீட்டவேண்டும். இவர்களை சார்ந்திருக்கும் ஊரக தொழில்களையும் கைதூக்கிவிடும் வகையில், சலுகைகள் வழங்கவேண்டும். மொத்தத்தில், ஒரு பக்கம் கொரோனா ஒழிப்பு நடவடிக்கை, மற்றொரு பக்கம் மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் பணி என 2 நடவடிக்கைகளும் தொடரட்டும்.. தொடரட்டும்.. என்று மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

THE TIMES OF INDIA

15-May-2021

A new dawn of political bonhomie

Parties Set Aside Rivalry In Efforts To Tackle Covid



> **Covid does not discriminate based on political affiliation and, as public servants, we are morally obliged to stand united in this fight. Urge all parties across the country to work together to defeat the pandemic**
>
> **M K STALIN** | Chief minister

Julie.Mariappan
@timesgroup.com

Chennai: It's a new political culture in Tamil Nadu that's never been seen before. On Thursday, chief minister M K Stalin convened a meeting of all-party representatives in a bid to take them on board in tackling the Covid-19 pandemic. The same day, AIADMK MLAs were seated alongside ministers on a podium in Coimbatore during a review meeting to combat the pandemic. With Covid numbers surging in the state, political animosities are being set aside in the battle to contain the spread.

Responding to an appreciative tweet for working out a political consensus to fight the pandemic, Stalin on Friday tweeted, "Covid does not discriminate based on political affiliation and, as public servants, we are morally obliged to stand united in this fight. Urge all parties across the country to work together to defeat the pandemic. #OndrinaivomVaa (Let us come together)." The chief minister has deputed 22 ministers to 14 high-infected districts for Covid work.

Former AIADMK minister D Jayakumar said his party would support the government, but would also raise its voice, if anything went wrong. On Thursday, nine AIADMK MLAs of Coimbatore district arrived early for a meeting organised by the ministers, K Ramachandran and R Sakkarapani in Avarampalayam. Upon their arrival, the ministers called for chairs to be arranged on the podium for the AIADMK members, including former minister S P Velumani.

The gesture came in for much praise from CPI MP P R Natarajan. The DMK has no MLA in the district and the party high command had deputed Sakkarapani and Ramachandran from Dindigul and The Nilgiris districts respectively. Not only did the AIADMK legislators extend full support to the government but submitted a to-do list to combat the pandemic, including supply of food in Amma canteens or by the party district unit.

But it was no bonhomie everywhere. In Salem, for instance, eight AIADMK MLAs, including former CM Edappadi K Palaniswami and two PMK MLAs, did not show up for minister V Senthil Balaji's Covid review meeting despite invitations being sent to them. A lone DMK MLA was present. "A 500-oxygen bed facility will come up in Salem Steel Plant in ten days. A 1,000KV transformer will also come up to meet the power supply. Modular oxygen generator systems are getting ready in all 11 constituencies," the minister said, undeterred. He said similar facilities would come up in Karur.

Last year, when the pandemic unfolded, the then opposition DMK demanded that the government convene an all-party meeting for Covid management. But the EPS government said the pandemic was the domain of health workers. In Theni, MP P Ravindhranath called up to say he would not be able to attend owing to a bereavement in the family. "We are ready to take the suggestions of AIADMK legislators, as our CM said there should not be any discrimination in public service," said minister P Moorthy, who along with colleague, Palanivel Thiagarajan had been at the forefront in ramping up health infrastructure in Madurai.

AT LONG LAST
DMK workers with a placard of Stalin

Summit challenge

In his first term as chief minister, M.K. Stalin will have to deal with a strong opposition, an unfriendly Central government and an economy ravaged by the pandemic

BY LAKSHMI SUBRAMANIAN

As the trends began showing a convincing victory for the DMK on May 2, a senior IAS officer paid a quick visit to the Chittaranjan Salai residence of party supremo M.K. Stalin, with a bouquet of roses and a handful of files. The senior bureaucrat, who had worked with Stalin when he was the mayor of Chennai, was the first high-profile visitor to personally greet the incoming chief minister. The roses were to congratulate him, while the files were to brief him on the surging Covid-19 cases and the threat posed by the pandemic.

This is for the first time that someone other than M. Karunanidhi is taking over as chief minister of Tamil Nadu representing the DMK, and it is a major challenge for the party and its leadership. The previous DMK regime, which was in power from 2006 to 2011, had earned the wrath of the people for its alleged abuse of power. As the 68-year-old Stalin gets ready to take over as chief minister, the question doing the rounds on social media and in the minds of the people is, "Has the DMK changed?"

A change in the DMK has different connotations for different people. For party veterans, it is

THE WEEK

16-May-2021

Summit challenge...

now clear that the centre of power has shifted from the Karunanidhi residence at Gopalapuram to the swanky Chittaranjan Salai. The well-wishers of the party are keen to see whether Stalin will be inclusive like his father. For the DMK's alliance partners, the question is whether Stalin will run the show for the next five years taking them into confidence, or will it be a one-man show. For the DMK's political rivals, the worry is whether Stalin will proceed legally against them for their alleged misdeeds. The educated and the enlightened supporters of the DMK want to see how Stalin is going to deal with the Centre and safeguard the rights of the state. Finally, the public wants to know whether the DMK under Stalin will stay away from violence and abuse of power for which it is notorious for.

On the other hand, if there is one thing that people want Stalin and the DMK to keep unchanged, it is their efficiency in running the government. "During his tenure as mayor of Chennai or as the minister of local administration, Stalin was always courteous to the bureaucrats. He was never vindictive and gave them space to work. He was a good listener and was always supportive of the hard work for the welfare of the people," said former bureaucrat Ashok Vardhan Shetty, who has worked with Stalin. In fact, Health Secretary J. Radhakrishan rushed to Stalin's residence to congratulate him and brief him on the pandemic, probably keeping this in mind. On May 4, Stalin held a meeting with Chief Secretary Rajiv Ranjan, Director General of Police J.K. Tripathy, Radhakrishnan and other senior officials and called for proper implementation of the new lockdown regulations. In a press release, he suggested the deputation of IAS officers to the districts to ensure quality treatment to victims of Covid-19.

> While Tamil Nadu looks forward to active and vigorous leadership from Stalin, political observers feel that he should be careful **about parallel power centres developing within the family.**

While Tamil Nadu looks forward to active and vigorous leadership from Stalin, political observers feel that he should be careful about parallel power centres developing within the family. "He is definitely not like his father. The way he consolidated the party behind him over the years, even when the DMK was out of power, makes this obvious. He will be an inclusive person, but not someone who will allow others in the family to wield power," said political observer and academic P. Ramajayam.

Stalin takes over at a time when Tamil Nadu is facing a fierce battle between secular forces and hindutva elements. "He has raised expectations by keeping the secular alliance intact," said Thol. Thirumavalavan, who heads the Viduthalai Chiruthaigal Katchi (VCK), an alliance partner of the DMK. "Stalin explained how important it is for the DMK to come to power in Tamil Nadu when hindutva forces are craving for an entry."

For Stalin, however, the job will not be easy. He will have to work hard just like he did to rise to the top of the DMK. A raging pandemic that is unlikely to subside anytime soon, a debt-strapped treasury and a less-than-friendly government in Delhi will add to the challenges. But Stalin seems to be ready. "He has experience at different levels of administration as mayor, minister and deputy chief minister. But he has to deal with a Central government which does not [respect the] federal structure and is known for destabilising state governments," said Justice Chandru, a retired judge of the Madras High Court.

The state is also in a financial mess. The debt has grown from ₹1.30 lakh crore in 2011 when the DMK left office, to ₹4.85 lakh crore. "The DMK has always attacked the AIADMK for its bad finances and reckless spending. Now under Stalin, the new government will have to find ways to increase the state's revenues and reduce spending," said R. Srinivasan, head of the department of econometrics at Madras University.

Stalin will also have to deal with a strong opposition. The National Democratic Alliance has 75 members in the new assembly, with 66 from the AIADMK, four from the BJP and five from the PMK. Despite the intense faction feud between former chief ministers O. Panneerselvam and Edappadi K. Palaniswami, and the challenge posed by the reentry bid of former general secretary V.K. Sasikala, the AIADMK managed to put up a gutsy performance in the elections. The party polled 33 per cent votes, just three per cent less than that of the DMK. With a spirited opposition, a combative Central government, a raging pandemic and a challenging fiscal situation posing major challenges, Stalin has his task cut out in his first term as chief minister. ●

Business India
THE MAGAZINE OF THE CORPORATE WORLD

17-May-2021

Business India
THE MAGAZINE OF THE CORPORATE WORLD

17-May-2021

Stalin: a moment to seize

Of the four states that went to elections, Tamil Nadu alone voted for a change. The new CM, M.K. Stalin, who has promised transparency in governance, will have his hands full in restoring his Covid-struck state to its pre-eminent position as an industrial powerhouse

Muthuvel Karunanidhi Stalin is the new Chief Minister of Tamil Nadu and that shouldn't surprise any, barring the few diehard DMK baiters who clung on to spirited surveys that the ruling AIADMK would win a third term despite the voter-fatigue over its decade-long rule and the absence of its iconic 'Amma', Jayalalithaa.

It should not be too much to now expect Stalin to take an active role as an influential member of the troika of 'opposition' CMs, alongside Mamata Banerjee of West Bengal and Pinarayi Vijayan of Kerala, to battle for a better deal from the Modi regime in the allocation of funds and a fair spread of central resources across the states though he has reasons to do so. Take for instance the most recent report that despite its alarming Covid spike, Tamil Nadu received only 50 per cent of vaccine doses that the Health Ministry allocated for Gujarat, Karnataka and Rajasthan, which have almost similar population numbers. On the vaccine front, Stalin will now have to ensure that TN, which recorded the highest wastage of vaccine doses under the AIADMK regime as of 11 April, does

Business India
THE MAGAZINE OF THE CORPORATE WORLD
17-May-2021

The campaign 'Stalin in your constituency' won hearts and votes

better in the future.

To put the shine back on Tamil Nadu and make it a leading investment destination in Asia, the new CM will have to take a few leaves from his father's administrative book. As Srivats Ram, president, The Madras Chamber of Commerce & Industry, says, "There are some suggestions for infrastructural enabling that would increase the velocity of business, notably (a) extension of the Western Dedicated Freight Corridor to Chennai and to Kanyakumari (b) completion of the elevated ring road to Chennai ports (c) a second international airport and (d) making the industrial infrastructure world-class."

What has surprised most political observers is that it took the 68-year-old Dravidian war horse this long to reach the CM's chair, adorned by his late father Karunanidhi through five terms during 1969-2011. Many thought, and most in the DMK expected, that Stalin would launch a coup to seize Fort St.George, the seat of power across the Marina, the moment Jayalalithaa was rushed to the hospital in 22 September, 2016. As it turned out, she could not make it and passed away on 5 December.

No shortcuts

To those heavyweights in his party who had dropped strong 'hints' that the throne was up for grabbing, Stalin reportedly made clear he would take no shortcuts and rather wait for the public mandate, at the appointed time; but then, he would lead an all-out bid for it should the post-Jaya AIADMK collapse due to internal strife.

He pointed out that Tamil Nadu officials had discussed the issue with the Centre, which had decided to allocate 476 tonnes for its needs. But the orders were yet to be issued, he said. On May 8, a Union Health Ministry official wrote to the Tamil Nadu Chief Secretary and the Health Secretary, informing them that Tamil Nadu's allocation has been increased from 220 tonnes to 419 tonnes.

Although orders were issued, there was no implementation on the ground. Hospitals and administrators continue to request non-governmental organisations and all private bodies to augment oxygen supply. To augment supply, several district administrations have even tapped into car repair shops and all units where welding takes place (the welding process requires oxygen).

Stalin also wrote to Piyush Goyal, Union Minister for Commerce and Industries, for additional allocation of vials of the anti-COVID drug remdesivir, and the State floated global tenders to buy vaccines.

REMDESIVIR DEMAND

The queue for remdesivir vials is growing with each day at Chennai's Kilpauk Medical College (KMC) hospital, which was initially the only place where it was available. A Health Department official said: "We are unable to open dispensing counters for this drug at multiple places because the stock allocated to us is very low." People from across the State have been crowding at the KMC counter for the drug, forcing the government to move part of the stock to a few more districts.

An official said: "We ordered and paid for 2 lakh vials [of remdesivir] late last month. This was from a private company. Suddenly we learn that our quota was cut and the rest was diverted to another State." Stalin has demanded that Tamil Nadu be given at least 20,000 vials per day. The current allotment stands at 7,000.

With a shortage of drugs to treat the disease, oxygen-supported beds, and a massive shortage of vaccines, the government decided to impose a two-week lockdown from May 10. An official said: "There was no other way out. We need that breathing space."

From January 16 to May 10, not even 10 per cent of the State's population had been vaccinated: only about 65 lakh people had been given the first dose. The progress of vaccination was reportedly hit by a vaccine shortage too.

For instance, on May 9, only 25,448 people received a dose, while the number was just over 94,000 on May 10.

Although the number of daily COVID deaths is hitting unprecedented levels in the State, it appears that there is both clarity and concern among people across the State: clarity over the fact that the infection does not cause immediate death, and concern about being able to find a bed in a hospital or drugs prescribed, when needed. □

தினத் தந்தி

05-June-2021

இல்லத்தரசிகளுக்கு பயன் அளிக்கும் நல்ல திட்டம்!

கொரோனாவை கட்டுப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 15-ந்தேதி காலை 4 மணி முதல் 24-ந்தேதி காலை 4 மணி வரை ஊரடங்கை அறிவித்தார். அப்போது பொதுமக்களுக்கு தேவையான காய்கறிகள், பழங்கள் போன்றவை தோட்டக்கலைத்துறை மூலமாக சென்னை நகரத்திலும், அனைத்து மாவட்டங்களிலும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து வாகனங்கள் மூலமாக வழங்கப்படும் என்று அறிவித்தார். இதைத்தொடர்ந்து தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண் விற்பனைத்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இ-வணிக நிறுவனங்கள் மூலமாக சென்னை மாநகராட்சி மற்றும் மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் வாகனங்கள் மூலமாக காய்கறிகள், பழங்கள் பொதுமக்களுக்கு தடையின்றி வீட்டு வாசலிலேயே கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டன.

விவசாயிகள் தாங்கள் விளைவித்த காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட பொருட்களை சந்தைப்படுத்தவும், அடுத்த மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல தேவையான அனுமதி பெறவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள

வேளாண் விற்பனைத்துறை துணை இயக்குனர்கள், தோட்டக்கலைத்துறையை சேர்ந்த இணை மற்றும் துணை இயக்குனர்களை தொடர்புக்கொள்ள அரசால், அவர்கள் 'டெலிபோன்' எண்களோடு அறிவிப்பு வெளியிடப்பட்டது. தொடர்ந்து இந்த முழு ஊரடங்கு மேலும் வருகிற 7-ந்தேதி காலை 6 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. இந்த முறை காய்கறி, பழங்கள் விற்பனை மட்டுமல்லாமல் மளிகை பொருட்களையும் அந்தந்த பகுதிகளில் உள்ள மளிகை கடைகளால் வாகனங்கள் அல்லது தள்ளு வண்டிகள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதியுடன் குடியிருப்புகளுக்குச் சென்று விற்பனை செய்யவும், ஆன்லைன் மற்றும் தொலைபேசி வாயிலாக வாடிக்கையாளர்கள் கோரும் பொருட்களை வீடுகளுக்கே சென்று வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டது. இந்த திட்டங்களை எல்லாம் செயல்படுத்த முடியுமா? என்று ஆரம்பத்தில் சந்தேகம் இருந்தது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி, வேளாண்மைத்துறை செயலாளர் சமயமூர்த்தி மற்றும் மாவட்ட கலெக்டர்கள் மிக தீவிர நடவடிக்கை எடுத்ததன் விளைவாக இது சாத்தியம், என்பதோடு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கு எல்லாம் மிகுந்த பலன் அளிக்கும் வகையில் எல்லா பொருட்களும் வீடு தேடி வந்து, கிடைப்பதோடு, மிக, மிக குறைந்த விலையில் கிடைத்தும் வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் 42 ஆயிரத்து 864 வாகனங்கள் மூலம் காய்கறிகள் எடுத்து கொண்டுவரப்பட்டு, அவர்களிடம் இருந்து மூன்று சக்கர வண்டிகள், ஆட்டோ ரிக்‌ஷாக்கள் மூலம் பிரித்து, ஏராளமான வாகனங்கள் குடியிருப்பு பகுதிகளுக்கே சென்று விற்பனை செய்து வருகின்றன. எல்லா வாகனங்களிலும் விலைப்பட்டியல் ஒட்டப்பட்டிருக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒலி பெருக்கிகள் மூலம் அந்த வாகனங்கள் வரும்போது அறிவிப்பும் வெளியிடப்படுகிறது. வீடுகளின் அருகில் காய்கறிகள், பழங்கள் விற்பனை செய்யும் வாகனங்கள் வரும்போதே, " வாங்கம்மா வாங்க, காய்கறி வாங்க, வாங்க... பழங்கள் வாங்குவதற்கு வாங்க..." என்ற சத்தம் எப்போது கேட்கும் என்று இல்லத்தரசிகள் ஆவலோடு எதிர்பார்க்கும் ஒரு நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த 24-ந்தேதி முதல் நேற்று முன்தினம் வரை மட்டும் 1 லட்சத்து 29 ஆயிரத்து 964 டன்கள் அளவுக்கு காய்கறிகள், பழங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. சென்னை நகரில் காய்கறி விலையை பார்த்தால் நாம் காண்பது கனவா? நனவா? என்று இருக்கிறது. கோயம்பேட்டில் தக்காளியின் மொத்த விலை கிலோ ரூ.8-க்கும், சில்லரை விற்பனை விலை ரூ.15-க்கும் விற்கப்படுகிறது. வண்டிகளில் விற்கும்போது சற்று கூடுதலான விலைக்கு கிடைக்கிறது. மொத்தத்தில் விலையும் குறைவு, மளிகை பொருள், காய்கறிகள், பழங்கள் எல்லாமே வியாபாரிகளாலும், கடைக்காரர்களாலும் வீட்டு வாசலில் வந்து கிடைக்கிறது, வெளியே நடமாட்டமும் குறையும் என்ற வகையில் இந்த திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுமா? என்பது இல்லத்தரசிகளின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

முரசொலி

05-June-2021

- கொரோனாவைக் கட்டுப்படுத்தும் சவாலை சிறந்த முறையில் சமாளித்து வருகிறார்!
- தொடக்கத்திலேயே இதைவிடச் சிறப்பாக யாரும் செயல்பட முடியாது!

முதல்வருக்கு 100க்கு 100 மார்க்!

'இந்து' குழும இயக்குநர் என்.ராம் பாராட்டு!

தி கோவை மெயில்

The Telegraph

05-June-2021

JUST A NAME

What looks like a storm in a teacup may spill over the rim. The debate in Tamil Nadu regarding the use of the term, 'Union government', by M.K. Stalin, the chief minister heading the new Dravida Munnetra Kazhagam government, seems a waste of time. State leaders of the Bharatiya Janata Party, supported by their electoral allies in the All India Anna Dravida Munnetra Kazhagam, have objected to the change from 'Central government', which the BJP-friendly AIADMK used while in power. They claimed, first, that a democratically elected government should not change an expression which the people are used to. That is just silly, of course. Why should this change of nomenclature disturb the Opposition? These terms are used interchangeably. But the BJP suspects a hidden agenda and *mala fide* intentions behind the new government's preference. The DMK top brass's argument is that the Constitution defines the country as a Union of states, just as cases in the Supreme Court refer to the Union of India. It is neither wrong nor is the Tamil term for it new, since it was used first by C.N. Annadurai in 1967 — and repeatedly by the DMK since then.

The state BJP's insistence that the Centre be called the 'Central' government has two sources. One is insecurity — it has been left on the Opposition benches together with the AIADMK in the state. The defeat here coincided with its resounding defeat in West Bengal and its frank absence in Kerala. The BJP's professed intention to decimate all Opposition did not work in these states — they have voices of their own. Earlier, the DMK as Opposition had protested against the Centre's infringement of states' rights and had also made state autonomy a feature in its election manifesto. So the BJP is antsy about the timing of the DMK government's change of nomenclature; it believes the government is 'confrontationist'. In the larger context of the BJP's vision of a monolithic nation, the DMK has touched a raw nerve. This is the second source of the state BJP's jumpiness, because, instead of a federation of states, the BJP views India, according to the state BJP general secretary, as one entity with states formed only for administrative purposes. The BJP's aggressive thrust for centralization in every sphere manifests this self-serving vision. Not a storm in a teacup then, but a political and philosophical conflict that underlies the tensions in India today.

முதல் மாதத்தில் என்ன செய்தார் முதல்வர்?

ஆசிரியர்
தி கோவை மெயில்

'தடை தாண்டும் ஓட்டம்' என்று ஒரு விளையாட்டுப் போட்டி உண்டு. ஆங்கிலத்தில் 'ஹர்டுள்ஸ்' என்று சொல்லுவார்கள். ஓட்டத்தின் இடையே பல தடைகள் நிறுத்திவைக்க பட்டிருக்கும். உறுதி, வலிமை, யுக்தி, தன்னம்பிக்கை அனைத்தும் ஒருசேர இருந்தாலொழிய இதில் வெல்வது கடினம்.

தற்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அப்படிபட்ட சவால்கள் நிறைந்த ஓட்டத்தில் தான் துடிப்புடன் ஓடிக்கொண்டிருக்கிறார். கடைசியாக சட்டமன்றத்தில் துணை முதல்வராக பொறுப்பில் பார்த்த ஸ்டாலினுக்கும், தற்போது 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' ஆகிய நான் என கூறி முதல்வராக பதவியேற்று முதல் மாதத்தை நிறைவு செய்துள்ள ஸ்டாலினுக்கும் பல புதுமையான விஷயங்கள் உண்டு.

மாநில மக்களின் நன்மைக்காக பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார், கொரோனா கட்டுப்பாட்டில் மிக தீவிரமாக செயலாற்றி வருகிறார் என்பது மக்களின் கருத்து.

கோவைக்கு முதல்வர் இருமுறை ஆய்வு மேற்கொள்ள வந்தது, அதிகப்படியான தடுப்பூசியை சென்னைக்கு அடுத்தபடியாக கோவைக்கு தந்தது, இரு அமைச்சர்களை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிடும் பொறுப்பாளர்களாக அறிவித்தது, சிறப்பு அதிகாரியை கொரோனா கட்டுபாட்டிற்காக இங்கே நியமனம் செய்தது, இது அனைத்திற்கும் மேலாக அவர் கொரோனா சிகிச்சை வார்டுக்குள் சென்றது எல்லாம் அவருக்கு கோவை மீது அக்கறை உள்ளது என்பதை தான் வெளிப்படுத்துகிறது.

இவற்றையும் தாண்டி பலர் பல கருத்துக்களை முதல்வரின் முதல் மாத நடவடிக்கை மீது கொண்டுள்ளனர்:

முதல்வருக்கு 100/100

- என்.ராம், இயக்குனர், தி இந்து குழுமம்

தமிழக அரசின் நடவடிக்கைகள், குறிப்பாக கொரோனாவை கட்டுப்படுத்த எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இந்த அரசு கொரோனாவை கட்டுப்படுத்துவதை பிரதானமாக கருதி, அந்த சவாலை சிறந்த முறையில் சந்தித்துவருகிறது. கோவிட் குறித்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஆலோசனை குழுவை அமைத்து, அனைத்து கட்சி சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவம் தந்துள்ளது. அனைவரும் சேர்ந்து எடுக்கும் முடிவிற்கு நல்ல பலன் கிடைக்கும். இதை மு.க.ஸ்டாலின் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது வேண்டுமென கேட்டதற்கு அதிமுக ஏற்றுக்கொள்ளவில்லை.

மேற்கு தமிழக பகுதிகளில் தொற்றின் தாக்கம் அதிகமான தருணத்தில் முதல்வர் அங்கு சென்று ஆய்வு மேற்கொண்டார், அங்கு நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர முக்கியத்துவம் காட்டினார். ஏழை மக்கள் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் ரூ.4000 வழங்கினார். அவசிய தேவைக்கு உதவும் வண்ணம் நிச்சயம் உள்ளது என்பது அவர் வழங்கும் நிதிக்கு கிடைக்கும் ஆதரவில் தெரிகிறது.

முதல்வர் நல்ல அதிகாரிகளை நியமனம் செய்துள்ளார். தனக்கு பிடித்தவர்களை பொறுப்பில் அமர்த்தவேண்டும் என்ற சிந்தனையில்லாமல் சிறப்பாக செயலாற்ற கூடியவர்கள் யார் என்று அறிந்து அவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளார். சுகாதாரத் துறை செயலர் போன்ற திறமை மிக்க பழைய ஆட்சியில் இருந்த அதிகாரிகளும் இந்த அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ளனர்.

துவக்கத்திலேயே இதைவிட சிறப்பாக யாரும் செயல்பட முடியாது. நான் இவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு 100 மதிப்பெண் தருவேன். களத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருக்கக்கூடும். அவற்றை அரசு கண்டறிந்து சரிசெய்யவேண்டும்.

பத்திரிகையாளர்களை முன்கள பணியாளர்களாகவும், கொரோனாவால் உயிரிழந்த அவர்களுக்கு ரூ. 10 லட்சம் நிவாரணம் ஆகிய அறிவிப்புகளை எப்படி பார்க்கிறீர்கள்?

இந்தியாவில் 230க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கொரோனாவால் பாதிப்படைந்து இறந்துள்ளனர். இதில் நிறைய இளம் செய்தியாளர்களும் அடங்குவர். எங்கள் நிறுவனத்தில் பணியாற்றும் 28 வயதான பத்திரிகையாளர் ஒருவர் கூட அண்மையில் மரித்தார்.

பத்திரிகையாளர்கள் சிலர் வசதி படைத்தவர்களாக இருக்கலாம், ஆனால் பலர் ஏழ்மையான நிலையில் தான் இருக்கின்றனர். சில மாநிலங்களில் பத்திரிகையாளர்கள் தொற்று ஏற்பட்டு மரித்தோரை தகனம் செய்யும் இடத்திற்கு சென்று உண்மையாக இறந்தவர்கள் எத்தனை பேர், மறைக்கப்படுபவர்கள் எத்தனை பேர் என கணக்கு பார்த்து, உண்மையான தகவல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றனர். மிக பெரிய சவாலாக இருந்தாலும் பத்திரிகை துறை மூலம் தான் நிஜத்தை வெளிகொண்டு வர முடிகிறது.

இப்படிப்பட்ட ஆபத்தை சந்தித்துவரும் பத்திரிகையாளர்களுக்கு அரசு அறிவித்துள்ள உதவிகள் பெரிதும் வரவேற்கத்தக்கவை.

அரசு அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளர்கள் மட்டுமல்லாது ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளர்களுக்கும் இந்த உதவி கிடைக்க என்ன செய்யவேண்டும், அவர்களில் யார் உண்மையான பத்திரிகையாளர் என பார்த்திட வேண்டும். எதிர்க்கட்சி ஆதரவு செய்தியாளர் என்று பாராமல் தாராள மனதுடன் அனைவருக்கும் உதவிட வேண்டும்.

தேர்தலுக்கு முன் தடுப்பூசி பற்றிய சந்தேகத்தை எழுப்பியதும், மக்களிடையே ஆர்வத்தை குறைத்ததும் ஸ்டாலின் தான் என தமிழக பாஜக தலைமை கூறுவது குறித்து உங்கள் கருத்து ?

பாஜக செய்வது பொய் பிரச்சாரம். அவர்களால் இதைத்தான் சொல்லமுடியும், வேறு என்ன சொல்வார்கள். மக்கள் அந்த கட்சியை இந்த மாநிலத்தில் ஒதுக்கி வைத்துள்ளனர். எனவே இப்படி தான் பேசுவார்கள்.

கோவாக்சின் உபயோகத்துக்கு வந்தபோது அதன் மூன்றாவது கட்ட பரிசோதனை முழுமையாக முடியவில்லை. அது அவசரகால பயன்பாட்டிற்கு வந்தது. அப்போது மருத்துவத்துறை சார்ந்தோர் உட்பட பலருக்கும் சந்தேகம் நிலவியது.

அந்த தடுப்பூசி அங்கீகரிக்கப்பட்டபின்னர் மக்களிடையே போட்டுக்கொள்ளும் நம்பிக்கையும், விழிப்புணர்வும் அதிகரித்தது. அதிமுக காலத்தில் கொரோனாவை ஒரு அளவுக்கு கட்டுப்படுத்தினர் ஆனால் தடுப்பூசி விவகாரத்தில் ஏதும் பெரிதாக செய்திடவில்லை. தேர்தலுக்கு முன்பு தமிழகத்தில் தடுப்பூசியின் விரயம் 7% இருந்தது. தற்போது இந்த நிலை தமிழக மாவட்டங்கள் பலவற்றில் இல்லை. தடுப்பூசியை பொறுத்தவரை எல்லா கட்சிகளும் இணைந்து செயல்பட வேண்டும்.

நம் நாட்டில் உள்ள அனைவருக்கும் தடுப்பூசி இலவசமாக கிடைக்க வேண்டும். இன்று பல மாநிலங்களுக்கு போதிய தடுப்பூசி தேவைக்கேற்ப கிடைக்கவில்லை. இதற்கு மத்திய அரசு தான் பொறுப்பு. அவர்கள் தகுந்த நேரத்தில் தடுப்பூசிகளுக்கான ஆர்டர்களை செய்திருக்க வேண்டும், உற்பத்தியாளர்களுக்கு தேவையான உதவிகளை செய்திருக்க வேண்டும். உற்பத்தியாளர்களுக்கே ஆதரவான சூழல் தான் நிலவியது அப்போது.

உச்ச நீதிமன்றம் மத்திய அரசிடம் 'தடுப்பூசியை இந்த அரசு வாங்கினால் ஒரு விலை, மாநில அரசாங்கங்கள் வாங்கினால் ஒரு விலை என எப்படி அனுமதிக்க முடிந்தது'? என தடுப்பூசி குறித்து பல கேள்விகளால் துளைத்தெடுத்துள்ளது. இந்த விஷயத்தில் உச்ச நீதிமன்றத்தின் நடவடிக்கை மிக சிறப்பாக உள்ளது.

கொரோனாவை கட்டுப்படுத்திய பின்னர் தமிழக அரசின் கவனம் எதில் இருக்கவேண்டுமென நினைக்கிறீர்கள்?

இந்த அரசு வழங்கும் வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும், அனைவருக்குமானதாக இருக்கவேண்டும். சமீப காலத்தில் சமத்துவமின்மை அதிகரித்துள்ளது. இதை பெரிதளவு குறைக்கவேண்டும். உள்கட்டமைப்புகளுக்கான திட்டங்கள், மேம்படுத்தல் ஆகியவற்றால் சுற்றுசூழல் பெரிதளவு பாதிப்பு அடையாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

விவசாயத்தின் நலனுக்கும், நம்வளர்ச்சிக்கும் தேவையான திட்டங்களை இந்த அரசு வழங்க வேண்டும் இந்த 5 ஆண்டுகளில்.

மாநிலத்தின் வருமானத்தில் நாம் பெற்ற கடனுக்கான வட்டியை கட்டுவதில் பெரிய செலவு ஏற்பட்டுவருகிறது. இதை சரிசெய்து பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும். மாநில நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நிச்சயம் இதற்கான நடவடிக்கைகளை எடுப்பார் என நம்புகிறேன்.

மத்திய அரசுடன் எந்தெந்த விஷயங்களில் ஆதரவு வழங்குவது சரியோ அதை சிந்தித்து அவற்றில் தங்கள் ஒத்துழைப்பை தரவேண்டும்.

07-June-2021

மாணவர்களின் உயிர்காக்கும் துணிச்சலான முடிவு

மாணவர்களின் உயிரா? தேர்வா? எது முக்கியம் என்ற கேள்வி எழுந்தபோது, தமிழக அரசுக்கு, 'மாணவர்களாம் இளம் பிஞ்சுகளின் உயிர்தான் முக்கியம்', 'சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்' என்ற வகையில் பிளஸ்-2 பொதுத்தேர்வை ரத்து செய்து மிக துணிச்சலான முடிவை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்து இருக்கிறார். கொரோனா பரவல் அதிகமாக இருக்கிறது. 3-வது அலையும் வந்துவிடுமோ? என்ற அச்சமும் உள்ளது. தடுப்பூசி போடுவதை எடுத்துக்கொண்டால், ஜனவரி மாதம் 16-ந்தேதி முதல் 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டு வந்த நிலையில், மே 1-ந்தேதி முதல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் பணிகள் தொடங்கின. ஆக பிளஸ்-2 பொதுத்தேர்வை எழுதும் மாணவர்களில் பெரும்பாலானோர் 18 வயதுக்கு கீழே உள்ளவர்கள் என்ற வகையில், அவர்களுக்கு தடுப்பூசியும் போட முடியாது. இத்தகைய சூழ்நிலையில் மத்திய அரசாங்கம் ஏற்கனவே சி.பி.எஸ்.இ. 12-ம் வகுப்பு பொதுத்தேர்வை ரத்து செய்துவிட்டது.

தமிழக அரசும் என்ன முடிவை எடுக்கப்போகிறது? என்ற எதிர்பார்ப்பு வேகமாக எழுந்த நிலையில், ஏறத்தாழ 9 லட்சம் மாணவ-மாணவிகள் பிளஸ்-2

பொதுத்தேர்வை எழுத இருந்தார்கள். பிளஸ்-2 பொதுத்தேர்வை நடத்தினால்தான் உயர்கல்விக்கு போகமுடியும் என்ற கருத்தும், இப்போதுள்ள பரவலில் பிளஸ்-2 தேர்வு வேண்டாம் என்ற மற்றொரு கருத்தும் நிலவியது. முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காமல், 3 நாட்களாக பள்ளிக்கூட அளவில் தொடங்கி, மாவட்டம் மற்றும் மாநில அளவில் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், ஆசிரியர் சங்கங்கள், கல்வியாளர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக மருத்துவ நிபுணர்கள் மற்றும் உளவியல் நிபுணர்களின் ஆலோசனைகளை கேட்டு பிளஸ்-2 பொதுத்தேர்வை ரத்து செய்திருக்கிறார்.

மருத்துவ நிபுணர்கள் கொரோனா பரவல் அதிகமாக இருக்கும் இந்த நேரத்தில், 3-வது அலையும் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தடுப்பூசி போடாத மாணவர்களை தேர்வு எழுத வரச்செய்வது தொற்றை அதிகரிக்க செய்யும் என்ற ஆலோசனைகளை வழங்கினர். ஆனால் உளவியல் நிபுணர்கள் தேர்வை தள்ளிவைத்துக் கொண்டே போனால், மாணவர்களை மனதளவில் பாதிப்புக்குள்ளாக்கும் என்று ஆலோசனை கூறினர். இதையெல்லாம் சீர்தூக்கி பார்த்து இந்த ஆண்டு பிளஸ்-2 பொதுத்தேர்வை ரத்து செய்யும் உயிர்காக்கும் முடிவை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்தது மிக மிக பாராட்டுக்குரியது. இந்தநிலையில், உயர்படிப்புக்கு செல்வதற்காக, எந்த வகையில் அவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்குவது? என்பதை முடிவுசெய்ய பள்ளிக்கூட முதன்மை செயலாளர் தலைமையில் ஒரு குழுவையும் அமைத்துள்ளார். அந்தக்குழு அளிக்கும் பரிந்துரையின் பேரில் மதிப்பெண்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

பல கல்வியாளர்கள், மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஏற்கனவே 10 மற்றும் 11-ம் வகுப்பு பொதுத்தேர்வு நடந்து இருக்கிறது. அந்த மதிப்பெண்களை கணக்கில் எடுத்துக்கொள்ளலாம். பிளஸ்-2 தேர்வுக்கு செயல்முறைத்தேர்வு நடந்து முடிந்துவிட்டது. அதனையும், உள் மதிப்பீட்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டு மாணவர்களுக்கு மதிப்பெண்கள் வழங்கினால் எந்தவித சட்டச்சிக்கல்களும் இருக்காது என்று கருத்து தெரிவித்துள்ளனர். நீட் தேர்வையும் ரத்து செய்யவேண்டும் என்று பிரதமர் நரேந்திரமோடிக்கு, முதல்-அமைச்சர் கடிதம் எழுதி இருக்கிறார். எப்படி மாணவர்களை ஒரே இடத்தில் அமர வைத்து பிளஸ்-2, சி.பி.எஸ்.இ. 12-ம் வகுப்பு தேர்வுகளை எழுத வைத்தால் கொரோனா பரவல் ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் இருக்கிறதோ, அதே அச்சம், அதே காரணங்கள் நீட் தேர்வுக்கு பொருந்தும். எனவே பிரதமரும், மத்திய அரசாங்கமும் இந்த ஆண்டு நீட் உள்பட அனைத்து நுழைவுத்தேர்வுகளையும் ரத்து செய்யவேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று அறிவிப்பு வெளியிடவேண்டும் என்பதுதான் பொதுவான கருத்தாக இருக்கிறது.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

07-June-2021

விடியலின் வெளிச்சம்

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்று 30 நாட்கள் முடிந்து விட்டன. கொரோனாவின் கோர முகத்தை இந்தியாவே எதிர்கொண்ட சூழலில், ஒரு மாநில முதல்வர் எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஸ்டாலின் திகழ்கிறார். தமிழகத்தில் அவர் ஆட்சி பொறுப்பேற்ற சமயத்தில் கொரோனாவுக்கு மக்கள் கொத்து, கொத்தாக மடிந்து கொண்டிருந்தனர். அரசு மருத்துவமனைகளில் படுக்கைகள் கிடைக்காமல் பலர் திண்டாடிக் கொண்டிருந்தனர். அத்தகைய பரிதாப சூழலில், முதல்வர் ஸ்டாலினும், அவரது அமைச்சரவை சகாக்களும் களம் இறங்கி வியத்தகு சாதனைகளை செய்து காட்டினர். இதன் விளைவு ஒரே மாதத்தில் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. அரசு மருத்துவ மனைகளில் போதிய அளவு படுக்கைகளும், ஆக்சிஜன் தட்டுப்பாடும் தீர்ந்தது.

முதல்வர் ஸ்டாலினின் அறிவிப்புகள் 30 நாட்களுக்குள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை விதைத்திருக்கின்றன. ஆவின் பால் விலை லிட்டருக்கு ₹3 குறைக்கப்பட்டு விட்டது. சாதாரண கட்டண பேருந்துகளில் அனைத்து மகளிரும் இலவச பயணம் செய்ய வழிவகை செய்யப்பட்டது. 2.07 கோடி ரேஷன் அரிசி கார்டுகளுக்கு கொரோனா நிவாரணம் ₹2 ஆயிரம் கடந்த மாதம் முதலே வழங்கப்பட்டது. இம்மாதம் 2வது தவணை ₹2 ஆயிரம் வழங்கப்பட உள்ளது.

முதல்வர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனைகளில் கொரோனாவுக்கு சிகிச்சை செலவினத்தை அரசே ஏற்று கொள்வதும் நடைமுறைக்கு வந்துவிட்டது. உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டமும் செயல்பாட்டுக்கு வரவுள்ளது. கொரோனா தடுப்பூசிகளும் இதுநாள் வரை இல்லாத அளவுக்கு கடந்த ஒரு மாத காலத்தில் போடப்பட்டன.

ஊரடங்கு என்பது பொதுமக்களுக்கு வேப்பங்காய் போன்றது. அத்தகைய காலக்கட்டத்தில் ரேஷன் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், காய்கறிகள் மற்றும் பலசரக்கு வினியோகமும் வாகனங்கள் மூலம் தட்டுப்பாடின்றி அளிக்கப்பட்டது. தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தகுதிக்கேற்ற பணி நியமன ஆணை, ஆதரவற்ற குழந்தைகளுக்கு ₹5 லட்சம் வரை வைப்பு தொகை, கொரோனா தடுப்பு பணியில் இறந்த அரசுதுறை அலுவலர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு ₹25 லட்சம் வரை என அரசின் நிதி ஒதுக்கீடுகளும் பயனுள்ளதாகவே அமைந்தது. கொரோனா காலக்கட்டத்தில் மாணவர்களின் தலையில் தொங்கிய கத்தியான பிளஸ் 2 தேர்வும் ரத்து செய்யப்பட்டு விட்டன.

சமூக வலைத்தளங்களில் வரும் புகார்களை கூட தமிழக முதல்வர் ஸ்டாலின் கண்காணித்து, உடனடியாக தீர்த்து வைக்கிறார். மறைந்த எழுத்தாளர் கி.ரா.வுக்கு அரசு சார்பில் மரியாதை, விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம் உள்ளிட்ட அறிவிப்புகள் இலக்கிய உலகத்தையும் முதல்வர் வசம் ஈர்த்தது. தலைமைச் செயலாளர் தொடங்கி அரசு துறைகளில் முக்கிய அதிகாரிகள் நியமனம் ஊழலற்ற ஒரு அரசுக்கான ஒளிக்கீற்று. தமிழகத்தில் இப்போது நிகழும் தலைகீழ் மாற்றங்கள் ஒரு விடியலுக்கான வெளிச்சத்தை பாய்ச்சுகின்றன.

07-June-2021

Stalin's Crown

ON E-MAIL

Dr Ashok: This refers to your story on M.K. Stalin's victory in the Tamil Nadu elections *Prince Who Finally Became King* (May 17). Stalin was a close associate of his father, a giant in Tamil politics, and has been part of the DMK from a young age. This time he led from the front to bring the party back to power. In fact, Stalin has much more experience on the political front compared to his rivals. An important factor in his favour is that he has served as deputy CM of the state and also as mayor of Chennai. This experience in governance will prove to be useful in the days ahead. This is a great opportunity for him to establish his leadership and become a mass leader.

THE TIMES OF INDIA

07-June-2021

CONSUMER CONNECT INITIATIVE

Ready and raring to go

FIRST-TIME CHIEF MINISTER M K STALIN TOOK CHARGE AT A TIME WHEN THE STATE WAS IN THE THROES OF THE PANDEMIC. FROM SETTING UP A WAR ROOM TO VISITING COVID CARE WARDS, HE HAS HIT THE GROUND RUNNING

30 DAYS OF STALIN

- Set up a Covid war room
- Enforced a lockdown to bring down the number of cases
- Surveyed Covid care wards in hospitals
- Announced various schemes for frontline workers
- Doled out cash incentives to police officers
- Ensured adequate oxygen supply to the state

Respedit.Chennai
@timesgroup.com

No one would have envied chief minister MK Stalin on May 07. He took charge of the state at a time when Covid was spreading like wildfire through the state in the second wave.

But Stalin had already rolled up his sleeves before taking oath. On May 06, Stalin instructed chief secretary Rajeev Ranjan to set up a 'war room' that would function as a unified command control room to deal with all Covid related issues.

This war room subsequently became the nerve centre of operations for Covid management. From triaging and assigning beds for critical patients, to managing oxygen needs of hospitals to managing ambulances, the war room literally waged war against the deadly virus.

The chief minister led by example. On May 15, at around 11 pm, a desperate wife called 104 to request an oxygen bed for her sick husband. The call was answered by the Chief Minister, who listened to her, asked for details and directed her to a bed.

Despite having taken a political stand before election results, that a lockdown was unnecessary, Stalin doubled down and took the prudent call to keep people indoors, as cases rose rapidly. A unique model followed – where groceries and provisions came to the streets on pushcarts and vans, ensuring that people don't suffer while in lockdown.

Chief minister Stalin was visible at the frontlines on a daily basis. He visited hospitals, conducted reviews with district collectors and even donned a PPE kit and visited the Covid ward in Coimbatore Government Hospital.

[illegible] professionals were working. "This will give a boost of confidence to healthcare workers and their families," he said. "Wearing a PPE kit for long hours is troublesome and the doctors and nurses who are doing their jobs while wearing this for long hours must be commended," he added.

Stalin had managed to do two things with that one gesture. He signalled to healthcare workers that he understood their plight and he also silenced critics who had taken to social media to accuse the chief minister of not doing enough for the western districts. After his visit, Stalin tweeted that he went into the Covid wards against medical advice. He stated that he wanted to reassure the frontline workers in the state by his act.

Stalin has also announced a very welcome incentive to frontline workers who have been toiling for over a year in the battle against Covid. As per the scheme announced, doctors will be paid Rs 30,000 for the months [illegible] ers and [illegible] Rs 20,000 [illegible], lab technicians and ambulance drivers would be given Rs 15,000.

The chief minister also announced cash assistance of Rs 5000 to 1.17 lakh police personnel. From constables to Inspector rank, police personnel are eligible to receive this incentive, he announced.

Stalin also took charge of the oxygen situation in the state. First, he went to the Inox oxygen plant to monitor supply. As the Supreme Court allowed the Sterlite plant to produce oxygen, it was Stalin's team, led by his sister and Thoothukudi MP Kanimozhi, who convinced the protest groups to allow the plant to produce much needed oxygen. Thanks to the state government's intervention and support, Sterlite began producing oxygen in record time.

Chief minister Stalin has hit the ground running hard and fast. The worst appears to be over as far as the Covid second wave is concerned. The future will require the first time chief minister to be on his toes as the economic consequences of Covid loom large.

ஆனந்த விகடன்

09-June-2021

ச.அருண் பிரசாத்

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்றதும் நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார். “இப்படியான சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், இன்று நேற்றல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பே அவர் மனதில் உருப்பெற ஆரம்பித்துவிட்டன” என்கிறார் பொறியாளர் நரசிம்ம மூர்த்தி. சோவியத் யூனியன் உடைவதற்கு முன்பு, சோவியத் - இந்திய நட்புறவின் ஓர் அங்கமாக, அரசுமுறைப் பயணமாக 1989-ல் மு.க.ஸ்டாலின் சோவியத் ரஷ்யாவுக்குப் பயணப்பட்டபோது அவருடன் இருந்தவர் நரசிம்ம மூர்த்தி. அதுகுறித்து அவர் சொல்லும் தகவல்கள் அத்தனையும் ஆச்சர்யங்கள்!

‘சோவியத் ஒன்றியத்தில் கடும் அடக்குமுறை நிலவுகிறது. மக்களின் வாழ்வுமுறை மிக மோசமாக இருக்கிறது’ என்பன போன்ற மேற்குல நாடுகளின் அவதூறுகளைக் களையும் நோக்கில், சோவியத் அரசாங்கம் உலக நாடுகளின் தலைவர்களைச் சோவியத் ஒன்றியத்துக்கு வந்து பார்வையிடும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வந்தது. அதன்படி, சென்னையில் இருக்கும் சோவியத் கலாசார மையத்தின் (இன்று ரஷ்யக் கலாசார மையம்) அன்றைய இயக்குநர் ரொவோவ்ஸ்கி, அரசியல் கட்சி ஒன்றின் இளைஞர் அமைப்பில் பொறுப்பில் இருக்கும் ஒருவரை அந்த ஆண்டு சோவியத்துக்கு அனுப்ப முடிவு செய்தார். மையத்தின் இளைஞர் மன்றத் தலைவராக இருந்த நரசிம்ம மூர்த்தியிடம், ‘யாரை அனுப்பலாம்’ என்று கருத்து கேட்கிறார்.

“அப்போது மு.க.ஸ்டாலின் முதன்முறையாகச் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். ஏற்கெனவே அவருடைய துடிப்பான அரசியல் செயல்பாடுகளைப் பார்த்து அவர்மீது எனக்கு நன்மதிப்பு உருவாகியிருந்தது. ஸ்டாலினிடம் எனக்கு அறிமுகம் இல்லை என்றாலும், சோவியத் பயணத்துக்கு இவரே பொருத்தமானவர் என்று தோன்றியதால் ஸ்டாலினை முன்மொழிந்தேன்” என்று பேசத் தொடங்குகிறார் நரசிம்ம மூர்த்தி.

“ஸ்டாலின் பயணம் உறுதியான சமயத்தில், ரஷ்யாவில் ஓராண்டு ரஷ்ய மொழி படிக்க நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த செய்தி இன்ப

ஆனந்த விகடன்

09-June-2021

அதிர்ச்சியாக எனக்கு வந்து சேர்ந்தது. சோவியத் யூனியன் உடைவு நெருங்கிக்கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில், சோவியத் அரசாங்கப் பயணத் திட்டத்தின் கடைசிப் பிரதிநிதியாக ஸ்டாலினும், அரசாங்க உதவியில் பயிலும் கடைசி மாணவனாக நானும் ஒரே விமானத்தில் மாஸ்கோ சென்று இறங்கினோம். மூன்று நாள்களுக்குப் பிறகு ஸ்டாலின் என்னிடம், 'என்ன நரசிம்ம மூர்த்தி- நானொரு அரசியல்வாதி. ஆனா, என்னை ஒரு சுற்றுலாப் பயணி மாதிரி நடத்திட்டிருக்காங்க' என்று செல்லமாகக் கோபித்துக்கொண்டார். உடனடியாக அவரது பயணத் திட்டத்தை 'அரசியல்படுத்தினோம்.' அதன் விளைவாக, சோவியத் நாடாளுமன்றம் தொடங்கி அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்க்கத் தொடங்கினோம்.

தமிழ் பேசும், தமிழ் நூல்களை ரஷ்ய மற்றும் உக்ரேனிய மொழிகளில் மொழிபெயர்த்துவந்த

கம்யூனிஸ்ட் ஸ்டாலின் மண்ணணில் கழக ஸ்டாலின்!

ரஷ்யக் கவிஞர் விதாலி பூர்ணிகா அப்போது மாஸ்கோவில் வசித்துவந்தார். ஜெயகாந்தனின் நெருங்கிய நண்பர்; கலைஞர் மீது ஆழ்ந்த பற்று உண்டு.

ஸ்டாலின் ரஷ்யாவுக்கு வந்திருப்பதைப் பூர்ணிகாவிடம் சொன்னேன். 'முடிந்தால் நாளையே வீட்டுக்கு அழைத்துவாருங்கள்' என்று உற்சாகமானார். ஆனால், அரசாங்க நடைமுறைகளால் இரண்டுநாள் கழித்துத்தான் ஸ்டாலினை அவர் வீட்டுக்கு அழைத்துச்செல்ல முடிந்தது. தன் வீட்டின் முன்னறையில் ஒரு தமிழ் நூலகத்தையே வைத்திருந்தார் விதாலி. அதைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த ஸ்டாலினின் கையில் அகப்பட்ட முதல் புத்தகமே கலைஞரின் 'ரோமாபுரிப் பாண்டியன்.' ஸ்டாலினின் ரஷ்யப் பயணம் குறித்து, 'ரூஷ்யா' என்ற பிரபல ரஷ்யப் பத்திரிகையில் 'ஸ்டாலின் அவர்கள் திரும்பிவந்துவிட்டார்கள்' என்றொரு கட்டுரையை விதாலி எழுதினார். அதை நான் தமிழில் மொழிபெயர்த்து ஸ்டாலினிடம் கொடுத்தேன்" என்று ஆச்சர்யங்களைத் தெளிக்கிறார் நரசிம்ம மூர்த்தி.

"மாஸ்கோவின் வீதிகளில் நானும் அவரும் நிறைய நடந்தோம். அப்படி ஒரு நடையின்போது மகளிர் தினம் பற்றிப் பேச்சு வந்தது. அப்போதெல்லாம் இந்தியாவில் மகளிர் தினம் பிரபலமடைந்திருக்கவில்லை என்பதால் சோவியத் ஒன்றியத்தில் பெண்களின் நிலை, அவர்களுடைய பொருளாதாரச் சுதந்திரம், சமுதாயத்தில் அவர்களின் பங்களிப்பு ஆகியவை குறித்து விரிவாகப் பேசினோம்.

அப்போது சோவியத் அரசின் பல்வேறு துறைகளில் தலைமைப்பொறுப்பில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பலர் இருப்பதைச் சுட்டிக்காட்டினேன். பஸ், டிராம் ஓட்டுதல், கட்டுமானம் போன்ற ஆண்கள் மட்டுமே செய்யும் கடினமான வேலைகளில் பெண்கள் ஈடுபட்டிருப்பதை ஸ்டாலினே நேரடியாகப் பார்த்தார். பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வது, பொருளாதார ரீதியிலும் அவர்கள் தனித்து இயங்க வழிசெய்வது, சம உரிமை வழங்கியது எனச் சமூகத்தில் பெண்களின் முன்னேற்றத்தில் அரசு எந்த அளவுக்குக் கவனம் செலுத்தியது என்பதை அவரிடம் விளக்கினேன்.

மேலும், ரயில், பேருந்து, மெட்ரோ போன்ற பொதுப் போக்குவரத்து அமைப்பு ரஷ்யாவில் லாப நோக்கமின்றி, குறைந்த கட்டணத்தில் அல்லது கிட்டத்தட்ட இலவசமாக இயங்குகிறது என்பதை ஸ்டாலின் அறிந்தார். அன்று முழுவதும் சிந்தனை வயப்பட்டவராகவே இருந்த அவரிடம் இவை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று நம்பினேன்.

ரஷ்யாவில் ஸ்டாலின் சென்ற இடங்களில் எல்லாம், 'ஏன் உங்களுக்கு இந்தப் பெயர்' என்று பலர் கேட்டனர். அனைவருக்கும் பொறுமையாகப் பதிலளித்தார். அவரோடு பயணித்த 12 நாள்கள் மறக்கமுடியாதவை" என்கிறார் நரசிம்ம மூர்த்தி.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

09-June-2021

31 நாட்களிலும் முத்திரை பதித்த மு.க.ஸ்டாலின்

'ஓய்வில்லா சூரியன்' என்று எல்லோரும் போற்றி புகழ்ந்து கொண்டிருக்கும் பெருமைக்குரியவர், மறைந்த முதல்-அமைச்சரும், தி.மு.க. தலைவருமான கருணாநிதி. அவர் தன் மறைவுக்கு பிறகு 'ஓய்வில்லா சூரியன்' என்ற புகழ் மகுடத்தை தன் மகன் மு.க.ஸ்டாலினுக்கு சூட்டி சென்றிருக்கிறார். கருணாநிதிக்கு பிறகு 'ஓய்வில்லா சூரியன்' என்று மு.க.ஸ்டாலினைத்தான் கூறவேண்டும். அந்தவகையில் அவருடைய அயராத உழைப்பை 9.1.2015-ல் நடந்த பொதுக்குழு கூட்டத்திலேயே கருணாநிதி கூறியிருக்கிறார். தி.மு.க.வை வழிநடத்திச் செல்லக்கூடிய பக்குவத்தை பெற்றுள்ள தம்பி மு.க.ஸ்டாலின் என்று குறிப்பிட்டுவிட்டு, 'உழைப்பு, உழைப்பு, உழைப்பு-அதற்கு பெயர்தான் மு.க.ஸ்டாலின்' என்று பிரகடனப்படுத்தினார். அந்த உழைப்பின் தன்மையை, அந்த உழைப்பின் மேன்மையை, அந்த உழைப்பின் வலிமையை நீங்கள் இன்று உணர்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்று பொதுக்குழு உறுப்பினர்களை பார்த்து கூறினார். அன்று அவர் பொதுக்குழு உறுப்பினர்களிடம் கூறிய அதே உழைப்பின் தன்மையை, அதே உழைப்பின் மேன்மையை, அதே உழைப்பின் வலிமையை இன்று

தமிழகம் உணர்ந்து கொள்ளும் வகையில் கடந்த ஒரு மாதத்தில் மு.க.ஸ்டாலின் முதல்-அமைச்சர் என்ற முறையில் ஆற்றிய பணிகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

மே மாதம் 7-ந்தேதி தமிழ்நாட்டின் 23-வது முதல்-அமைச்சராக பொறுப்பேற்றார். ஆனால் அவரது பணி, அதற்கு பிறகு மட்டும் தொடங்கவில்லை. 3-ந்தேதி அவர்தான் ஆட்சி அமைக்கப்போகிறார். அவர்தான் முதல்-அமைச்சர் பொறுப்பை ஏற்கப்போகிறார் என்று எல்லோருக்கும் தெரிந்த நிலையில் மூத்த அதிகாரிகள் அன்றே அவரை மரியாதை நிமித்தமாக பார்க்க சென்றனர். ஆனால் அப்போதே அவர் பரவிவரும் கொரோனாவை கட்டுப்படுத்த என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம்? என்று ஆலோசனையை தொடங்கிவிட்டார். கடந்த 7-ந்தேதியோடு அவர் பதவியேற்று 31 நாட்கள் ஆகின்றன. ஆனால் இந்த 31 நாட்களிலும் ஒருநாள்கூட அவருடைய பணியின் ஒளி குறையவில்லை. பதவியேற்ற முதல்நாளிலேயே கருணாநிதி பயன்படுத்திய மை பேனாவால் முதல் 5 முத்தான திட்டங்களுக்கு கையெழுத்திட்டு, அறிவிப்புகளை வெளியிட்டார்.

கொரோனாவால் பணப்புழக்கம் இல்லாத நிலையில், மக்கள் அவதிப்பட்டு கொண்டிருந்த நேரத்தில், அவர் தேர்தல் அறிக்கையில் கருணாநிதி பிறந்ததினமான ஜூன் 3-ந்தேதி கொரோனா நிவாரண நிதியாக ரூ.4 ஆயிரம் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தாலும், மக்கள் படும் கஷ்டங்களை அறிந்து யாரும் எதிர்பார்க்காத விதமாக, அதற்கு முன்பே முதல் தவணையாக ரூ.2 ஆயிரம் வழங்கப்படும் என அறிவித்தார். அடுத்த கையெழுத்தாக ஆவின்பால் லிட்டருக்கு ரூ.3 குறைத்து, இல்லத்தரசிகளுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார். 3-வது கையெழுத்தாக அனைத்து மகளிரும் சாதாரண நகர்ப்புற பஸ்களில் கட்டணமில்லாமல் பயணிக்கலாம் என்று கையெழுத்திட்டு, தாய்க்குலத்தை பூரிப்படையச்செய்தார். 4-வது கையெழுத்தாக மக்களின் குறைகளை தீர்க்கும் 'உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர்' என்ற தனித்துறையை உருவாக்கினார். 5-வது கையெழுத்தாக கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது அவர்களின் மருத்துவக்கட்டணத்தை முதல்-அமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

முதல் நாளில்தான் 5 அருமையான திட்டங்களை வெளியிட்டார் என்றால், அடுத்து ஒவ்வொருநாளும் ஏதேனும் சில அறிவிப்புகள், ஏதாவது ஒரு வகையில் ஆய்வுக்கூட்டங்கள், ஏதாவது ஒரு வகையில் மத்திய அரசை வலியுறுத்துதல், ஏதாவது ஒரு வகையில் நேரடி ஆய்வு, மாவட்டங்களில் சுற்றுப்பயணம் என்று ஒருநாள்கூட சூரியன் ஓய்வு எடுப்பதில்லை என்பதுபோல ஓய்வில்லாமல் 31 நாட்களையும் மக்கள் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளும் முத்தான சாதனைகளை படைத்துள்ளார். முதல் 31 நாட்களில் முத்திரை பதித்த மு.க.ஸ்டாலின், தொடர்ந்து வரப்போகும் அனைத்து நாட்களிலும் முத்திரை பதிக்கவேண்டும். கொரோனாவை மிக விரைவில் விரட்டி அடிக்கவேண்டும். தமிழகத்தின் வளர்ச்சியை உன்னத நிலைக்கு கொண்டுவரவேண்டும் என்று தமிழ் சமுதாயம் வாழ்த்துகிறது.

கூட்டு வலிமை

நாடு முழுவதும் கொரோனா இரண்டாம் அலையால் தொழில்கள் முடங்கியிருக்கும் நிலையில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்தினர் மற்றும் சிறு கடனாளிகள் தங்களது கடனை திருப்பிச்செலுத்த கால அவகாசம் கோரி வருகின்றனர். அவர்களுக்கு தோள் கொடுத்து உதவும் நடவடிக்கையில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இறங்கியுள்ளார். குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை சார்ந்தவர்கள் மற்றும் சிறு கடனாளர்கள் இரு காலாண்டுகளுக்கு கடன்களை திருப்பிச்செலுத்த கூடுதல் கால அவகாசம் வழங்குவது தொடர்பாக மத்திய நிதி அமைச்சர் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ஆகியோரை வலியுறுத்த வேண்டும் என ஆந்திரா, பீகார், சத்தீஸ்கர், டெல்லி, ஜார்கண்ட், கேரளா, மராட்டியம், ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், தெலங்கானா, மேற்கு வங்காளம் ஆகிய 12 மாநில முதல்வர்களுக்கு கடந்த ஜூன் 8ம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், "கொரோனா தடுப்பூசிகளை கொள்முதல் செய்வதற்கான மிகச்சரியான ஒற்றை பேரமைப்பாக ஒன்றிய அரசே செயல்பட வேண்டும் என்னும் கருத்தினை மாநில முதலமைச்சர்கள் பலர் சுட்டிக்காட்டினோம். ஒன்றிய அரசே முழு அளவில் தடுப்பூசிகளை கொள்முதல் செய்து அனைத்து மாநிலங்களுக்கும் இலவசமாக வழங்கவேண்டும் என்றும் நாம் வலியுறுத்தினோம். நம் அனைவரின் கூட்டு முயற்சியின் காரணமாக, பிரதமர் தனது முந்தைய கொள்கையை கடந்த ஜூன் 7ம் தேதி மாற்றியமைத்துள்ளார்" என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த கடிதத்தில், "குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் சிறு கடனாளர்களை, கொரோனா பெருந்தொற்றில் இருந்து காப்பாற்ற, மாநில அரசுகள் மீண்டும் ஒன்றிணைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதாவது, அந்தந்த மாநில அரசுகளால் ஊரடங்குகள் அறிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில்கொண்டு, ₹5 கோடி வரையில் நிலுவைகளை கொண்டுள்ள அனைத்து சிறு கடனாளர்களுக்கும், குறைந்தது 2021-2022ம் ஆண்டின் முதல் இரு காலாண்டுகளுக்கு, கடன்களை திருப்பிச்செலுத்த கூடுதல் கால அவகாசம் அளிக்கவேண்டும். இந்த கருத்தினை ஒன்றிய நிதி அமைச்சர் மற்றும் ரிசர்வ் வங்கி ஆளுநர் ஆகிய இருவரின் கவனத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும். இந்த இக்கட்டான காலக்கட்டத்தில் நமது கூட்டு வலிமையை நாம் மீண்டும் வெளிப்படுத்த வேண்டியது அவசியம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் தொழில்கள் முடங்கியுள்ள நிலையில், சிறு கடனாளர்களை, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. இதை, மத்திய அரசுக்கு உணர்த்தும் வகையில் மு.க.ஸ்டாலின் தனது செயல்பாட்டை முன்னெடுத்துள்ளார். அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பார்கள். அதேபோல ஏற்கனவே தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் எடுத்த நடவடிக்கையால் கொரோனா தடுப்பூசி விவகாரத்தில் மத்திய அரசு வழிக்கு வந்தது. தற்போது கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற வகையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது இரண்டாவது அடியை எடுத்து வைத்துள்ளார். அதிலும் வெற்றி நிச்சயம் என்பது கண்முன்னே தெரிகிறது.

பிரகாசமான எதிர்காலம்

ஒரு புதிய அரசு தன்னை நிலைநிறுத்தி செயல்படுவதற்கே 3 முதல் 6 மாதங்கள் வரை பிடிக்கும். ஆனால், பொறுப்பேற்ற நாள் முதல் சரியான திட்டமிடலோடு ஆட்சியை நடத்தி வருகிறார் மு.க.ஸ்டாலின். இதற்கான உதாரணமாக 'வார் ரூம்' எனப்படும் கொரோனா பெருந்தொற்று கட்டளை மையத்தை குறிப்பிடலாம். கடந்த ஆண்டு கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு / தனியார் மருத்துவமனைகளில் படுக்கை உள்ளிட்ட வசதிகளை தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லாமல் இருந்தது. தற்போது 104 என்ற இலவச எண்ணுக்கு அழைத்தால் படுக்கை உள்ளிட்டவற்றை தெரிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் வீண் அலைச்சலை தவிர்க்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. முதலில் சென்னையில் துவக்கப்பட்ட வார் ரூம், தற்போது அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் சரியான நேரத்தில் அனுமதிக்கப்படும் ஒருவர் கொரோனா தொற்றிலிருந்து விரைந்து குணமடையும் சூழல் ஏற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

மேலும், கொரோனா 2வது அலையால் மக்கள் அலைக்கழிக்கப்படுவதை தவிர்க்க, ஆக்சிஜன் படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிறப்பு சிகிச்சை மையம் உருவாக்கப்பட்டது. சீனாவில் கொரோனா பரவத் தொடங்கியபோது இதுபோன்ற தற்காலிக மருத்துவ மையங்கள் உருவாக்கப்பட்டன. அதேபோன்று, தமிழகத்தின் பிரதான மாவட்டங்களிலும் கொரோனா சிறப்ப சிகிச்சை மையங்கள் துரிதமாக உருவாக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளது. மறுபுறம் அலோபதி சிகிச்சைகளை ஏற்க மறுப்பவர்களுக்காக, சித்த மருத்துவ சிறப்பு சிகிச்சை மையமும் துவக்கப்பட்டுள்ளது. கொரோனா 3வது அலை வந்தாலும், சமாளிக்கும் அளவுக்கான மருத்துவ வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

முதல்வரை போலவே, அவரது அமைச்சரவை சகாக்களும் திறம்பட செயலாற்றி வருகின்றனர். பிரதமர் மோடி மற்றும் மற்ற மாநில முதல்வர்கள், எதிர்க்கட்சியினரும் பாராட்டுமளவுக்கு சிறப்பான ஆட்சியை கட்டமைத்து வருகிறார் மு.க.ஸ்டாலின். 'கொரோனா நிவாரணம், மளிகைத்தொகுப்பு போன்ற நிவாரண திட்டங்களை ஏன், நம் மாநிலத்திற்கு வழங்க முடியவில்லை' - என கர்நாடக மாநில எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, நம் மாநிலத்தை சுட்டிக்காட்டி பேசியிருப்பதை நாம் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

தடுப்பூசிக்கு சர்வதேச டெண்டர் கோரியது, தமிழக தேவைகளுக்காக செங்கல்பட்டு தடுப்பூசி மையத்தில் தடுப்பூசி தயாரிப்பதற்காக, மாநில அரசுக்கு குத்தகை கேட்டு ஒன்றிய அரசிடம் கோரியது என கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அடுத்தடுத்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டிற்குரியதாக உள்ளன. இதனால் படிப்படியாக கொரோனா தொற்று குறைந்து வருகிறது. விரைவில், முழுமையாக மீண்டும் இயல்பு வாழ்க்கையை தொடங்குவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

மாலை மலர்

12-June-2021

மேட்டூர் அணை திறப்பும்! வரலாற்று பதிவும்!

ஜூன் 12...

இந்த நாளின் வரலாற்று பதிவில் மீண்டும் ஒரு வரலாறு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. ஆம்... ஜூன் 12-ந் தேதி மேட்டூர் அணை திறப்பு என்பது அந்த அணை உருவான காலத்தில் இருந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு மரபு.

அந்த மரபை பின்பற்றி தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அணையை திறந்து வைத்துள்ளார். சோழ வள நாட்டை வளப்படுத்தி தமிழகத்திற்கே சோறு போடுவதற்காக 1934-ல் கட்டி எழுப்பப்பட்டது மேட்டூர் அணை.

இந்த அணையால் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், கடலூர் உள்ளிட்ட 12 மாவட்டங்கள் பாசன வசதி பெறுகின்றன.

சுமார் 16 லட்சம் ஏக்கரில் விவசாயமும் நடைபெறுகிறது. மேட்டூர் அணை நிரம்பினால்தான் தமிழக மக்களின் வயிறு நிரம்பும் என்று சொல்லும் அளவுக்கு அணை கட்டி நீர் நிரப்பப்பட்ட காலம் முதல் இன்று வரை அதேசூழ்நிலை தான் உள்ளது.

தென்மேற்கு பருவமழை கேரளாவில் தொடங்கியதும் அப்படியே கர்நாடகாவிலும் மழை பெய்யும். அப்போது கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளில் நீர் நிரம்பும். அங்கிருந்து திறக்கப்படும் உபரி நீர் மேட்டூர் அணையை நிரப்பும்.

காவிரியில் தண்ணீர் திறந்து விட வேண்டும். அது மேட்டூர் அணையை தொட வேண்டும் என்பது சட்டமாக இருந்தாலும் உபரி நீரால்தான் மேட்டூர் அணை நிரப்பப்படுகிறது என்பதே உண்மை. இந்த அணையில் 90 அடிக்கு மேல் தண்ணீர் நிரம்பி இருந்தால்தான் மரபுபடி ஜூன் 12-ந்தேதி தண்ணீர் திறக்கப்படும்.

இன்று 88-வது ஆண்டாக மேட்டூர் அணை முறைப்படி பாசனத்துக்காக திறக்கப்பட்டுள்ளது. இத்தனை ஆண்டுகளில் இதுவரை 17 ஆண்டுகள் மட்டுமே குறித்த காலத்தில் அதாவது ஜூன் 12-ந் தேதி அணை திறக்கப்பட்டு இருக்கிறது. அதேநேரம் ஜூன் 12-க்கு முன்னதாக 11 முறை திறக்கப்பட்ட வரலாறும் இருக்கிறது.

முன்னதாக திறக்கப்பட்டதில் கடைசியாக 2011-ம் ஆண்டில் ஜூன் மாதம் 6-ந்தேதியே தண்ணீர் திறக்கப்பட்டது. நீண்ட நெடிய வரலாறு கொண்ட இந்த அணையின் நீர் திறப்பே மிகப்பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கும்.

இந்த அணையை போலவே நீண்ட நெடிய வரலாற்று பாரம்பரியம் கொண்ட தி.மு.க. தமிழகத்தை 6 முறை அரசாட்சி செய்துள்ளது. அந்த பாரம்பரியமிக்க கட்சியின் முதல்வர்களில் முதல்-அமைச்சராக மேட்டூர் அணையை திறந்த முதல் முதல்வர் என்ற பெருமை மு.க.ஸ்டாலினுக்கு கிடைத்துள்ளது.

அதேபோல் தமிழகத்தை ஆண்ட மிகச்சிறந்த மன்னர்களில் ஒருவரான கரிகால் சோழன் கட்டி வைத்த கல்லணையை மு.க.ஸ்டாலின் நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேட்டூர் அணையின் தண்ணீரானது இந்த கல்லணைக்கு வந்துதான் பல பகுதிகளுக்கும் பிரித்து விடப்படுகிறது.

திறக்கப்பட்டிருக்கும் இந்த தண்ணீர் கடைமடை வரைக்கும் செல்ல வேண்டும். அதற்காக தூர்வாரும் பணிகளையும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தீவிரப்படுத்தி இருக்கிறார். இது மேட்டூர் அணை நீரை நம்பி இருக்கும் கடைமடை நிலங்களுக்கும் கை கொடுக்கும் என்ற நம்பிக்கையை விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்தி இருக்கிறது.

மண் வளமும் வரலாற்று வளமும் மிகுந்த இந்த பகுதியில் ஆய்வு செய்த மு.க.ஸ்டாலின் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டது ஒரே ஒரு விசயம்தான். யாரும் குறை சொல்லாதபடி பணிகளை செய்யுங்கள் என்பதுதான் அது. இதன்மூலம் இந்த மண் பயனுற வேண்டும். மக்களும் பயனுற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தனது உணர்வை வெளிப்படுத்தி இருக்கிறார்.

அதற்கு ஏற்ற வகையில் அதிகாரிகளும் தூர்வாரும் பணிகளை செவ்வனே செய்து நீர்வழி பாதையெல்லாம் தடங்கல் இன்றி நீர் செல்லவும், தண்ணீரை சேமித்து வைக்கும் குளங்களில் எல்லாம் நீர் ததும்பவும் பாசன பகுதிகள் முழுமையும் பாசனம் நடைபெறவும் அதிகாரிகள் துணை நிற்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் விவசாயிகளும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். ஏனெனில் சுற்றுச்சூழல் மாறி வருகிறது.

பருவமழை என்பது பருவம் தவறிகூட பெய்யலாம். பெய்யாமல்கூட போகலாம். ஆனாலும் இருக்கிற தண்ணீரை வைத்து சிறப்பாக நீர் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு நம்மிடம்தான் இருக்கிறது.

நம்மைவிட தண்ணீர் வளம் குறைந்த எத்தனையோ நாடுகள் விவசாயத்தில் நம்மை விட மேல்நிலையில் உள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். காடு கழனி எல்லாம் செழிக்கட்டும். தமிழகத்தில் வளம் பெருகட்டும்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
13-June-2021

வேகமெடுக்கும் எய்ம்ஸ்

தமிழகத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படுமென, கடந்த 2015ல் அப்போதைய நிதியமைச்சர் அருண் ஜெட்லியால் அறிவிக்கப்பட்டது. மத்திய, மாநில அரசுகளின் "நீயா, நானா" இழுத்தடிப்பு, எய்ம்ஸ்க்கான போராட்டங்களை தொடர்ந்து ஒருவழியாக மதுரை தோப்பூரில் அமைக்கப்படுமென கடந்த 2018ல் அறிவிக்கப்பட்டது. கடந்த 2019, ஜனவரி 27ம் தேதி நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக பிரதமர் மோடி இதற்கான அடிக்கல்லை நாட்டினார். ஆனாலும், பணிகள் தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டன.

இதற்கிடையில் எய்ம்ஸ் கட்டுமானப்பணிகள் எப்போது துவங்குமென ஐகோர்ட் மதுரை கிளையில் தொடர்ந்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதுதொடர்பாக நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த வழக்கில், பல மாநிலங்களில் கட்டுமானப்பணிகள் துவங்கி விட்டன. இதுவரை மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கான பணிகள் துவங்கவில்லை. மதுரையில் எய்ம்ஸ் அமைந்திருந்தால் தற்போதைய கொரோனா காலக்கட்டத்தில் பெரும் உதவியாக இருந்திருக்கும். மதுரையிலும் மாணவர் சேர்க்கை, வெளிநோயாளிகள் பிரிவும் விரைவில் செயல்பட வாய்ப்புள்ளதா என கோரப்பட்டது.

இதற்கு ஒன்றிய அரசு தரப்பில் பதிலளிக்க 3 வார அவகாசம் வேண்டும் என கூறப்பட்டது. இதையடுத்து, பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் ஒன்றிய அரசு தரப்பில் விரைவாக பதிலளிக்க வேண்டும் எனக்கூறி, விசாரணையை ஜூன் 30க்கு தள்ளி வைத்தனர்.

முன்னதாக, நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலின்போது எய்ம்ஸ் மருத்துவமனை விவகாரத்தில், ஒன்றிய அரசு தொடர்ந்து தாமதப்படுத்துவதாக திமுக தேர்தல் பிரசாரத்தில் தொடர்ந்து குற்றம் சாட்டியது. மற்ற மாநிலங்களில் ஒன்றிய அரசின் நிதியில் கட்டப்படும்போது, தமிழ்நாட்டில் மட்டும் ஜப்பான் நிதியுதவியை எதிர்பார்ப்பது ஏன் என கேள்வி எழுப்பியது. குறிப்பாக, ஒற்றை செங்கல்லை காட்டி செய்த பிரசாரம் சமூக வலைத்தளங்களில் வைரலானது. மேலும், முதல்வர் பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின் கட்டுமானப்பணிகளை விரைவில் துவக்க நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியிருந்தார். திமுக மற்றும் கூட்டணி கட்சி எம்பிக்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

கடந்த 10ம் தேதி மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை நிர்வாக இயக்குனரான ஹனுமந்தராவ், வரும் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் மதுரை எய்ம்சில் மாணவர் சேர்க்கையுடன் வகுப்புகள் துவங்கும். 2, 3 மாதங்களில் கட்டுமான பணிகள் துவங்கப்படும் என நம்பிக்கை அளித்துள்ளார். கொரோனா அடுத்தடுத்த அலைகள் பரவி வரும் சூழலில், ஒன்றிய அரசு விரைவில் கட்டுமான பணிகளை துவக்க வேண்டும். இதுதொடர்பாக அதிகாரிகள் ஆய்வுக்கூட்டம் ஜூலையில் நடக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமருடனான சந்திப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின், மதுரை எய்ம்ஸ் தொடர்பாகவும் பேச உள்ளதாக தெரிகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டின் பல ஆண்டு கால கனவு இனிதே நிறைவேற வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

‘முதல்வர் மு.க.ஸ்டாலினைப் போன்ற எளிமையான முதல்வரைப் பார்க்கவே முடியாது’!

ஐந்து வருடங்களில் பெரும் சாதனைகளைப் படைப்பார்!

“சென்னை எக்ஸ்பிரஸ்” இணைய தள டிவிக்கு அளித்த பேட்டியில் பெண்கள் பாராட்டு!



15-June-2021

தமிழ்நாட்டுக்கென தனிச்சிறப்புடன் உருவாகட்டும் புதிய வேளாண் கொள்கை

குறுவை சாகுபடிக்காக ஜூன் 12-ல் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டதை அடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள அறிவிப்புகள் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன. அதற்கு முன்னதாக, கல்லணையில் நடந்துவரும் சீரமைப்புப் பணிகளையும் தூர்வாரும் பணிகளையும் நேரில் பார்வையிட்டபோதே அவரது தொலைநோக்குப் பார்வை முன்னறிவிக்கப்பட்டுவிட்டது. அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டாலும் அது கடைமடைக்கு வந்துசேராத நிலை இந்த ஆண்டில் இருக்காது என்பது புரிகிறது. தற்போது 9 மாவட்டங்களில் ஏறக்குறைய 4,000 கிமீ தூரத்துக்குத் தூர்வாரும் பணிகள் நடந்துவருகின்றன. அடுத்து வரும் பத்தாண்டுகளில் தமிழ்நாட்டின் நிகரப் பயிரிடும் பரப்பு 60%-லிருந்து 75% ஆக விரிவுபடுத்தப்படும் என்று கூறியுள்ள முதல்வர், அதற்கான திட்டமிடலும் தொடங்கிவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

வேளாண் துறை தொடர்பான முதல்வரின் அறிவிப்புகள் முழுமை பெற்று பத்தாண்டுக்குள் இறுதி இலக்கை எட்ட வேண்டும் எனில் அதற்கான ஒரு தனிச் சிறப்பான கொள்கையை வகுக்க வேண்டியதும் அவசியம். குறிப்பாக, உற்பத்தி இலக்கைப் போலவே அதற்கான சந்தை வாய்ப்புகளுக்கும் திட்டமிடல்கள் தேவை. விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் வரை அவற்றைப் பாதுகாக்கும் வகையில் மாவட்டம்தோறும் புதைக் கிடங்குகளை உருவாக்க வேண்டும். படிப்படியாக, அவற்றை ஊராட்சி ஒன்றிய அளவுக்கு விரிவுபடுத்த வேண்டும்.

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி மாதந்தோறும் தமிழ்நாட்டுக்கு அளிக்கப்பட வேண்டிய காவிரி நீரை அளிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார். காவிரிப் படுகையில் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கான ஏல அறிவிக்கையைக் கைவிடக் கோரி பிரதமருக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாட்டுக்கான நீர்ப் பங்கீடு, வேளாண் மண்டலப் பாதுகாப்பு இரண்டுக்கும் முதல்வர் கொடுக்கும் முக்கியத்துவம் தெளிவு. அரசின் அறிவிப்புகளைத் தாண்டி, உழவர்களிடம் அவர் முன்வைத்துள்ள வேண்டுகோள்களும் கருத்தில் கொள்ளத்தக்கவை. தண்ணீர் சிக்கனம், முறைவைத்துப் பாசன நீரைப் பயன்படுத்துதல், செம்மை நெல் சாகுபடி முறை ஆகியவற்றைப் பின்பற்றுமாறு அவர் விவசாயிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார். உணவு உற்பத்தியில் தமிழ்நாடு சாதனை படைக்கும் என்ற முதல்வரின் நம்பிக்கையும் விருப்பமும் இன்றைய பெருந்தொற்றுக் காலகட்டத்தில் பொருளாதாரக் கண்ணோட்டத்திலும் பாராட்டுக்குரியது. தொழில் துறையில் புதிய முதலீடுகளுக்கும் உடனடி சந்தை வாய்ப்புகளுக்கும் பெரிய அளவில் வாய்ப்புகள் இல்லாத நிலையில், மிகப் பெரும் எண்ணிக்கையில் வேலைவாய்ப்புகளை அளிக்கும் துறையாக வேளாண் துறையே பார்க்கப்படுகிறது. அடுத்த சில மாதங்களில் நோய்த்தொற்றின் பாதிப்பிலிருந்து முழுமையாக விடுபட முடியும் என்றாலும், அதன் காரணமான பொருளாதாரப் பாதிப்புகளை மேலும் சில ஆண்டுகளுக்கு எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். வேளாண்மைத் துறைக்கு முதல்வர் கொடுக்கும் கவனம் அதற்கான தீர்வுகளில் ஒன்றாக அமையட்டும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

17-June-2021

மு.க.ஸ்டாலினின் முத்தான அறிவிப்பு

"ரூ.2 ஆயிரத்துடன், மளிகை தொகுப்பு வழங்கியது ஏழை மக்களுக்கான அற்புதமான திட்டம்"

'சொன்னதை செய்துவிட்டார்', என பொதுமக்கள் பாராட்டு

சென்னை, ஜூன்.17-

"ரேஷன் கடைகளில் ரூ.2 ஆயிரத்துடன், மளிகை தொகுப்பு வழங்கியது ஏழை மக்களுக்கான அற்புதமான திட்டம்" என்றும், இதன்மூலம் "முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்னதை செய்துவிட்டார்" என வும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

ரூ.2 ஆயிரம், மளிகை பொருட்கள் தொகுப்பு

தமிழகத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக ரூ.4 ஆயிரம் வழங்கப்படும் என தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தநிலையில் சட்டமன்ற தேர்தலில் வெற்றிபெற்று முதல்-அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட மு.க.ஸ்டாலின் உடனடியாக 5 கோப்புகளில் கையெழுத்திட்டார். அதில் கொரோனா நிவாரண நிதியாக ரூ.4 ஆயிரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் இடம்பெற்றிருந்தது.

இந்த நிவாரண உதவி 2 கட்டங்களாக வழங்கப்படும் என்று அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. இதன்படி கடந்த மாதம் ரூ.2 ஆயிரம் நிவாரணம் ரேஷன் கடைகளில் வழங்கப்பட்டது. இந்தநிலையில் 2-வது தவணையாக ரூ.2 ஆயிரம் கொரோனா நிவாரண உதவியுடன், 14 வகை மளிகை பொருட்கள் அடங்கிய இலவச தொகுப்பு ரேஷன் கடைகளில் கடந்த 15-ந்தேதி (நேற்றுமுன்தினம்) முதல் வழங்கப்பட்டு வருகிறது.

ஏழை மக்களுக்கு பலன் அளிக்கும்

ரேஷன் கடைகளில் ரூ.2 ஆயிரம் - 14 வகை மளிகை பொருட்கள் தொகுப்பு வழங்கும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கைக்கு பொதுமக்கள் ஏகோபித்த பாராட்டு தெரிவித்துள்ளனர்.

அதன் விவரம் வருமாறு:-

பொன்னி

இல்லத்தரசி பொன்னி:- கொரோனா சூழலில் ஏழை மற்றும் நடுத்தர மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். இந்தநிலையில் அவர்களின் நலனுக்காக நிவாரண நிதியும், மளிகை பொருட்களும் வழங்கியது மிக நல்ல நடவடிக்கையாகும். இதற்காக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், தமிழக அரசுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இக்கட்டான இந்த நேரத்தில் இந்த நடவடிக்கை நிச்சயம் ஏழை மக்களுக்கு பலன் அளிக்கும். மளிகை தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் பொருட்களும் தரமாகவே இருக்கிறது.

மகிழ்ச்சியாக இருக்கிறது

ஜானகி

மூதாட்டி ஜானகி:- மனதார சொல்கிறேன். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நல்லா இருக்கவேண்டும். என் குடும்பத்தார் ஆதரவு இல்லாத சூழலில் மிகவும் தவித்து வருகிறேன். இந்த கொரோனா சூழலில் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறேன். ஆனால் இந்த நிவாரண அறிவிப்பும், மளிகை தொகுப்பும் எனக்கு கிடைத்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஏழை-நடுத்தர மக்களுக்கு இதன் அருமை நிச்சயம் தெரியும். இதன்மூலம் சில நாட்கள் தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியும். ஒரு வீட்டு சமையலுக்கு தேவையான பொருட்கள் எல்லாமே இருக்கிறது. இப்போதுள்ள சூழலில் இது மிகவும் பாராட்டவேண்டிய நடவடிக்கை. கருணாநிதியின் முத்தான மகன் மு.க.ஸ்டாலினின் முத்தான நடவடிக்கை இது.

அரசின் நல்ல திட்டம்

முத்துலட்சுமி

கல்லூரி மாணவி முத்துலட்சுமி:- ரேஷன் கடைகளில் ரூ.2 ஆயிரத்துடன், மளிகை தொகுப்பு வழங்கியது ஏழை மக்களுக்கான அற்புதமான திட்டம் ஆகும். இதற்காக தமிழக அரசுக்கும், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். மளிகை தொகுப்பு அடங்கிய பையில் கூட அரசின் முத்திரை தான் இருக்கிறதே தவிர, தேவையற்ற விளம்பரங்கள் இல்லை. இதுவே ஒரு நல்ல அரசுக்கு அடையாளமாக இருக்கிறது. இப்போதைய நிலையில் கொரோனாவால் பொருளாதாரம் முடங்கி, வேலைவாய்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே ஏழை-நடுத்தர மக்களின் நலனுக்காக இதுபோல திட்டங்கள் இன்னும் நிறைய வகுக்கப்பட வேண்டும். இந்த திட்டம் உண்மையிலேயே நல்ல திட்டம் தான். வாழ்த்துகள்.

நிச்சயம் வரவேற்கத்தக்கது

பவித்ரன்

கல்லூரி மாணவர் பவித்ரன்:- தமிழக மக்களுக்கு பலனுள்ள நல்ல திட்டமாகவே இதை பார்க்கிறோம். இது போன்ற திட்டங்கள் நிச்சயம் வரவேற்கத்தக்கது. சொன்னபடியே 2 தவணைகளாக கொரோனா நிவாரண நிதி வழங்கப்பட்டு இருக்கிறது. மேலும் மளிகை பொருட்களின் தொகுப்பும் வழங்கப்படுகிறது. இதர அத்தியாவசிய பொருட்களும் வழக்கம்போலவே வழங்கப்பட்டு வருகிறது. இந்த நல்ல நடவடிக்கையை முன்னெடுத்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி. ரேஷன் கடைகளிலும் சமூக இடைவெளி கடைப்பிடித்து பொருட்கள் வழங்குகிறார்கள். இதனையும் நல்ல நடவடிக்கையாகவே பார்க்கிறோம்.

நல்ல நடவடிக்கை

சரஸ்வதி

இல்லத்தரசி சரஸ்வதி:- கடந்த மாதம் ரேஷன் கடையில் ரூ.2 ஆயிரம் வாங்கினோம். இந்த மாதம் ரூ.2 ஆயிரத்துடன் மளிகை பொருட்களும் கிடைத்திருக்கிறது. வேறு என்ன சொல்லமுடியும்? இப்போதுள்ள பொருளாதார சூழலில், ஏழை மக்கள் நலனுக்காக இந்த நல்ல திட்டம் அறிவிக்கப்பட்டு, நல்லபடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் எல்லோரும் ரூ.2 ஆயிரத்துடன், மளிகை பொருட்கள் தொகுப்பை மகிழ்ச்சியுடன் வாங்கி செல்கிறார்கள். தொடர்ந்து இதுபோல நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஏழை-நடுத்தர மக்களின் நலன் காக்கவேண்டும்.

தரமான பொருட்கள்

தினேஷ்குமார்

தனியார் நிறுவன ஊழியர் தினேஷ்குமார்:- உண்மையில் மெச்சிபாராட்ட வேண்டிய திட்டம். ஏழை வீட்டுக்கு தேவையான பொருட்கள் வழங்கப்பட்டு இருக்கிறது. அத்தியாவசிய செலவுக்கு ரூ.2 ஆயிரமும் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் நல்ல நடவடிக்கை இது. ஏழை மக்கள் நலன் காக்க இதுபோன்ற திட்டங்கள் தொடர வேண்டும். மக்களும் ஆர்வமுடன் வந்து நிவாரண உதவியுடன், மளிகை பொருட்கள் வாங்கிசெல்கிறார்கள். பொருட்களும் தரமாகவே இருக்கிறது.

தினத்தந்தி
DAILY THANTHI
19-June-2021

மனநிறைவும், மகிழ்ச்சியும் தந்த சந்திப்பு!

தமிழக முதல்-அமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு, முதல் முறையாக நேற்று முன்தினம் டெல்லிக்கு சென்று பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து பேசினார். "பிரதமருடனான இந்த சந்திப்பு மனநிறைவான, மகிழ்ச்சிதரும் சந்திப்பாக இருந்தது" என்று மு.க.ஸ்டாலின் கூறினார். நமது முதல்-அமைச்சர் பிரதமரை முதன்முதலில் சந்திக்கிறார். இருவரும் எதிர் எதிர் கொள்கைகளை கொண்டவர்கள். தேர்தலில் எதிரணியில் இருந்தவர்கள். இந்த சந்திப்பு எப்படி இருக்குமோ? என்று தமிழக மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

மக்களவையில் காங்கிரஸ் கட்சிக்கு அடுத்த பெரிய எதிர்க்கட்சி, தேசிய அளவில் எதிர்க்கட்சி தலைவர்கள் வரிசையில் முக்கிய இடத்தை பெற்றுள்ளவர் மு.க.ஸ்டாலின் என்ற வகையில், நாடு முழுவதும் இந்த சந்திப்பை உற்றுநோக்கிக் கொண்டிருந்தது. ஆனால், கட்சியின் கொள்கை வேறு, மத்திய - மாநில அரசுகளின் உறவு வேறு என்பதை இருபெரும்

தலைவர்களும் நன்றாக கடைப்பிடிப்பதில் உள்ள தெளிவு இந்த சந்திப்பில் தெரிந்தது. மத்திய - மாநில அரசுகளின் இடையே இருக்க வேண்டிய ஒரு நல்லிணக்கத்தின் அடையாளமாக இந்த சந்திப்பு இருந்தது.

"தமிழக வளர்ச்சி திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பை தருவேன்" என்ற வாக்குறுதியை பிரதமர், மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார். "எந்த கோரிக்கையாக இருந்தாலும் என்னோடு எந்த நேரத்திலும் தொடர்புகொள்ளலாம்" என்று வெளிப்படையாகவே மு.க.ஸ்டாலினிடம் பிரதமர் நரேந்திரமோடி கூறினார். "உறவுக்கு கைகொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற மறைந்த தலைவர் கருணாநிதியின் கொள்கையை பின்பற்றி எங்கள் நடைமுறை நிச்சயம் இருக்கும்" என்று இந்த சந்திப்புக்கு பிறகு மு.க.ஸ்டாலின் கூறியதில் இருந்து, மத்திய அரசாங்கத்துடன் மு.க.ஸ்டாலின் அரசு நல்லுறவோடும் இருக்கும், அதே நேரத்தில் தனது உரிமையையும் விட்டுகொடுக்காது என்பதும் தெரிகிறது.

இந்த சந்திப்பை பயன்படுத்தி, தமிழ்நாட்டுக்கு தேவையான முக்கிய திட்டங்கள் அனைத்தையும் பட்டியலிட்டு மு.க.ஸ்டாலின் கொடுத்திருக்கிறார். குறிப்பாக, "கொரோனா பரவல் அதிகம் உள்ள இந்த நேரத்தில், கூடுதலான தடுப்பூசிகளை தமிழகத்துக்கு வழங்கவேண்டும். செங்கல்பட்டு மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தடுப்பூசி தயாரிக்கும் தொழிற்சாலைகளை உடனடியாக செயல்படுத்தவேண்டும். தமிழகத்துக்கு வரவேண்டிய நிதி ஆதாரங்களை மத்திய அரசு முழுமையாக வழங்கவேண்டும். சரக்கு சேவை வரி பாக்கியை முழுமையாக தமிழ்நாட்டுக்கு தரவேண்டும். நீர் பிரச்சினை தீர்க்க நடவடிக்கை. 'நீட்' உள்ளிட்ட அனைத்து நுழைவுத்தேர்வுகளையும் ரத்து செய்ய வேண்டும். திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்கவேண்டும்" என்பதில் தொடங்கி, தமிழ்நாட்டுக்கு தற்போது தேவைப்படும் அனைத்து திட்டங்களையும் வரிசைப்படுத்தி கோரிக்கை மனுவாக கொடுத்தது மட்டுமல்லாமல், அதற்கான காரண காரியங்களையும் எடுத்துச்சொல்லியிருக்கிறார்.

பிரதமர் நரேந்திரமோடியும், "தமிழக முதல்-அமைச்சர் சந்தித்திருக்கிறார். மனு தந்திருக்கிறார்" என்பதோடு விட்டுவிடாமல், "நான் பரிசீலிக்கிறேன்" என்று மட்டும் சொல்லி முடிக்காமல், "நான் சம்பந்தப்பட்ட மந்திரிகள், அதிகாரிகளுடன் கலந்துபேசி நிச்சயம் நல்ல முடிவு எடுப்பேன். நம்பிக்கையுடன் இருங்கள்" என்று உறுதியளித்தது, ஒரு நல்ல நம்பிக்கையை மு.க.ஸ்டாலினுக்கு மட்டுமல்லாமல், தமிழக மக்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது. முதல்-அமைச்சரின் பிரதமருடனான இந்த சந்திப்பு ஒரு நல்ல ஒளியை காட்டுகிறது. பிரதமர் சம்பந்தப்பட்ட மந்திரிகள், அதிகாரிகளுடன் கலந்து பேசுவேன் என்று கூறியிருக்கிறார். முதல்-அமைச்சர் மனுவில் உள்ள கோரிக்கைகளை நிச்சயம் சம்பந்தப்பட்ட மத்திய மந்திரிகளுக்கும், அதிகாரிகளுக்கும் அனுப்பிவைப்பார். இனி தமிழ்நாட்டிலும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், துறை செயலாளர்கள் டெல்லியில் உள்ள அந்த துறை மந்திரி மற்றும் உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு, தேவைப்பட்டால் நேரில் சென்று சந்தித்து, ஒவ்வொரு கோரிக்கையையும் நிறைவேற்றுவதற்கான தொடர் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இதில் எத்தனை கோரிக்கைகளை மத்திய அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றும்? என்பதையும், எத்தனை கோரிக்கைகளை தமிழக அமைச்சர்கள், அதிகாரிகள் நிறைவேற்றுவதற்கான முயற்சியில் வெற்றி பெறுவார்கள்? என்பதையும் தமிழக மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
21-June-2021

முதல்வரின் டெல்லி பயணம் சொல்லும் செய்தி

தமிழ்நாட்டின் வளர்ச்சி தொடர்பான திட்டங்களைப் பெறுவதில் கவனம் செலுத்துகிற அதே நேரத்தில், கருத்தியல் தளத்தில் பாஜக எதிர்ப்பை திமுக ஒருபோதும் கைவிடாது என்பதே முதல்வர் அளித்த கோரிக்கைகளின் சாரம்!

ரவிக்குமார்

தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை முதல் முறையாக மு.க.ஸ்டாலின் சந்தித்துத் திரும்பியிருக்கிறார். தமிழ்நாட்டின் உரிமைகள் மற்றும் நலன் சார்ந்த 25 தலைப்பிலான கோரிக்கைகளை விரிவான ஆவணமாகப் பிரதமரிடம் சமர்ப்பித்திருக்கிறார். முதல்வரும் பிரதமரும் சந்தித்துக்கொள்வது இயல்பானதுதான் என்றாலும், இந்தச் சந்திப்பு குறித்துப் பரவலான எதிர்பார்ப்பு ஏற்பட்டதற்குக் காரணம், கடந்த சட்டமன்றத் தேர்தலிலும் அதற்கு முன்பும் திமுக கடைப்பிடித்துவந்த பாஜக எதிர்ப்புதான். மாநில உரிமைகள், தமிழர் நலன் முதலானவற்றை முன்னிலைப்படுத்தி திமுக மேற்கொண்ட பாஜக எதிர்ப்புப் பிரச்சாரத்துக்கு ஒப்புதல் அளித்துதான் தமிழ்நாட்டு மக்கள் திமுகவை இப்போது ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியிருக்கிறார்கள். இந்தச் சூழலில், இந்தச் சந்திப்பு முதல்வருக்கும் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு என்பதைக் காட்டிலும், எதிரெதிர் கருத்து நிலைகளைக் கொண்ட இரு தலைவர்களின் சந்திப்பாகவே பார்க்கப்பட்டது.

தமிழ்நாடு முதல்வரின் கோரிக்கைகளில் பெரும்பாலானவை திமுகவின் கொள்கைப் பிரகடனமாகவே இருந்தன. நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கையை ரத்துசெய்ய வேண்டும்; மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும்; குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை ரத்துசெய்ய வேண்டும் முதலானவற்றைக் கோரிக்கைகள் என்று பார்ப்பதைவிடவும் பாஜக அரசின் கொள்கைகளுக்குத் தமிழ்நாட்டின் எதிர்ப்பைத் தெரிவிப்பது என்றுதான் பார்க்க வேண்டும். செங்கல்பட்டு, ஊட்டியில் தடுப்பூசித் தயாரிப்புக்கான அனுமதி; புதிய துறைமுகங்கள்; சேலத்தில் தொழில் பூங்கா அமைப்பதற்கான அனுமதி; தமிழ்நாட்டில் விமான நிலையங்களின் மேம்பாடு; தூத்துக்குடி துறைமுக விரிவாக்கம்; சேதுசமுத்திரத் திட்டம்; கோவையில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனை உள்ளிட்ட கோரிக்கைகள் தமிழகத்திலுடைய வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு உதவ வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இருந்தன.

வெற்றிகரமான பயணமா?

தமிழ்நாடு முதல்வரின் டெல்லிப் பயணம் எந்த அளவுக்கு வெற்றிகரமாக அமைந்தது என்ற கேள்வியை இப்போது அதிமுக தரப்பில் எழுப்புகின்றனர். இந்தப் பயணத்தின் வெற்றியை இந்தக் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட்டனவா, இல்லையா என்பதை வைத்து முடிவுசெய்யக் கூடாது. என்ன விதமான கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன என்பதை வைத்தே பார்க்க வேண்டும். தமிழ்நாடு முதல்வர் முன்வைத்த கோரிக்கைகள் தமிழ்நாடு சார்ந்தவையாக மட்டுமின்றி, ஒட்டுமொத்த மாநிலங்களின் உரிமைகள் தொடர்பான வழக்காகவும் அமைந்திருந்தன. இது பிற மாநில முதல்வர்களுக்கு உற்சாகம் அளிப்பதாகவும் வழிகாட்டுவதாகவும் இருக்கிறது. மாநில உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டில் இந்தியாவிலேயே அதிக விழிப்புணர்வு கொண்ட மாநிலமாக விளங்கும் தமிழ்நாடு, கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் அந்தத் தகுதியைத் தவறவிட்டிருந்தது. இப்போது அதை மீட்டெடுத்திருக்கிறது என்பதுதான் இதில் கவனிக்க வேண்டிய செய்தி.

ஒன்றிய அரசோடு திமுக அரசு எம்மாதிரியான அணுகுமுறையை மேற்கொள்ளும் என்பதை ஆர்வமுடனேயே தமிழ்நாடு அரசுடன் ஒன்றிய அரசு எம்மாதிரியான அணுகுமுறையை மேற்கொள்ளும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். கரோனாவைக் கையாள்வதில் ஒன்றிய அரசு சந்தித்திருக்கும் தோல்வியும், விலைவாசி உயர்வும், பொருளாதார வீழ்ச்சியும் பிரதமர் மோடியின் செல்வாக்கில் மிகப் பெரிய சரிவை ஏற்படுத்தியுள்ளன. அடுத்த ஆண்டு உத்தர பிரதேசத்தில் சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய நிலையில், பிரதமரின் செல்வாக்கில் ஏற்பட்டுள்ள சரிவு பாஜகவுக்குக் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. உத்தர பிரதேசத்தில் வெற்றி பெற்றால்தான் 2024-ல் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பது பற்றி பாஜக சிந்திக்க முடியும். எப்படியானாலும் 2024 நாடாளுமன்றத் தேர்தலை 2019 தேர்தலைப் போல செல்வாக்கான நிலையில் பாஜகவால் சந்திக்க முடியாது.

மாநில அணிசேர்க்கை

தமக்குச் சவாலை ஏற்படுத்துகிற நிலையில் காங்கிரஸ் இல்லை என்று தற்போது அவர்கள் திருப்திப்பட்டுக்கொண்டாலும், காங்கிரஸ் தன்னைச் சீரமைத்துக்கொள்ள வாய்ப்பிருப்பதை மறுக்க முடியாது. அதுபோலவே பாஜக, காங்கிரஸ் அல்லாத மாநிலக் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு மாற்று உருவாக்குவதற்கும் வாய்ப்புகள் உள்ளன. அப்படி உருவாகாமல் தடுக்க வேண்டியது பாஜகவுக்கு மிக மிக அவசியம். அப்படிப் பார்க்கும்போது பாஜக அல்லாத மாநில முதலமைச்சர்களில் கருத்தியல் வலிமை கொண்டவராகத் தமிழ்நாடு முதலமைச்சர் இருக்கிறார் என்பதையும், திமுகவை இந்த அணிசேர்க்கைக்குள் முனைப்பாக ஈடுபடாமல் தடுப்பது தேசிய அளவில் மாநிலக் கட்சிகளின் மாற்று உருவாகாமல் தடுப்பதற்கு அவசியம் என்பதையும் பாஜக நன்றாகவே அறியும். எனவே, தமிழ்நாடு முதலமைச்சருடன் ஒரு நல்லுறவைப் பேணுவது ஒன்றிய பாஜக அரசுக்குத் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

தமிழ்நாடு முதலமைச்சர் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளில் ஒருசிலவற்றையாவது ஒன்றிய அரசு நிறைவேற்றக்கூடும். தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான கோரிக்கைகளை அவர்கள் நிறைவேற்றுவதில் பெரிய தடை எதுவும் இல்லை. நிலுவை வரிவருவாயில் பாக்கியைக் கொடுப்பதும் சாத்தியம்தான். கோவையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைத்தால் பாஜகவுக்கும் அது அரசியல்ரீதியில் அனுகூலமாக இருக்கும் என்று அவர்கள் எண்ணக்கூடும். இவை எல்லாவற்றையும்விட, மீனவர்களுக்காகத் தேசிய ஆணையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றால், அது கடலோர மாநிலங்கள் எல்லாவற்றிலுமே பாஜகவுக்கு நற்பெயரை ஈட்டித் தரும் என்பதால் அதையும்கூட நடைமுறைப்படுத்த வாய்ப்பிருக்கிறது.

கோரிக்கைகளின் நோக்கம்

தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ் நாட்டின் உரிமை சார்ந்த கோரிக்கைகளை ஒன்றிய அரசு நிறைவேற்றாது என்பது தெரிந்தேதான் அவற்றை முதல்வர் முன்வைத்திருக்கிறார். அதன் மூலம் மத்தியில் ஆளும் பாஜக அரசு தமிழ்நாட்டுக்கும் தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் எதிரானது என்பதை மக்களுக்கு உணர்த்துவதுதான் தமிழ்நாட்டின் முதல்வருடைய நோக்கமாக இருக்கலாம்.

2024 வரை தமிழ்நாட்டுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்க ஒன்றிய பாஜக அரசு நிச்சயம் விரும்பாது. இந்த நிலையை சரியாகப் பயன்படுத்திக்கொண்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சி தொடர்பான திட்டங்களை முன்வைத்து அவற்றைப் பெறுவதில் கவனம் செலுத்துகிற அதே நேரத்தில், கருத்தியல் தளத்தில் பாஜக எதிர்ப்பை திமுக ஒருபோதும் கைவிடாது என்பதே முதல்வர் அளித்த கோரிக்கைகளின் சாரம். உறவுக்குக் கை கொடுத்தபடி உரிமைக்குக் குரல் கொடுப்பதையே தமிழ்நாட்டு மக்களும் விரும்புகிறார்கள் என்பதை அவர் அறியாதவரல்ல. ஒரு முதலமைச்சராக ஒன்றிய அரசின் நண்பராகவும், திமுக தலைவராக மாநில உரிமைப் போராளியாகவும் இருப்பது எப்படி என்பதைத் தமிழ்நாட்டு முதல்வர் தனது நடைமுறையில் நன்றாகவே பயின்றிருக்கிறார். அந்தப் பாதையில்தான் அவர் செல்வார் என்பதே இந்தப் பயணம் உணர்த்தும் செய்தி.

- ரவிக்குமார், எழுத்தாளர், நாடாளுமன்ற உறுப்பினர்
தொடர்புக்கு: writerravikumar@gmail.com

THE NEW INDIAN EXPRESS

21-June-2021

TN HAS DONE WELL, MUST KEEP GUARD UP

As the second wave of Covid cases is on the wane in Tamil Nadu, the state government has rightly taken a cautious approach in effecting a staggered 'unlocking' of restrictions in force. Acknowledging that a one-size-fits-all response is not feasible, the government has introduced more relaxations in districts such as Chennai, which peaked earlier and now has a test positivity rate of 3%, while maintaining status quo in districts such as Coimbatore, which is still reporting a TPR of 10%. However, although public transport is being opened up in four districts with low TPR, the state has wisely avoided allowing high-risk activities such as indoor dining.

The DMK government took office during the peak of the second wave in the state and, despite some stumbles, largely acquitted itself by managing a crisis in supply of medical oxygen and rapidly expanding TN's health infrastructure. Yet, ahead of any third wave of infections, it must keep its guard up. Surveillance and screening efforts by local bodies may be downsized but ought not be discontinued. Dismantling these systems as the first wave waned proved a mistake as patients fell through the cracks from March till May when these efforts were restarted across the state in earnest. As part of continuing surveillance, testing must remain easily accessible and regular fever camps, as initiated in Chennai, must continue across the state. Similarly, Tamil Nadu must embark on a transparent audit of deaths during the second wave so that the real cost of the pandemic is known, the kin of victims access benefits and every loss of life is recorded.

However, the key weapons against the coronavirus remain appropriate public behaviour and vaccination. Despite the state's best efforts, with limited vaccine supply, the inoculation efforts are yet to hit their stride. Meanwhile, it is essential that authorities model and reinforce appropriate behaviour and the public learns to comply.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
22-June-2021

புகழ் உரைகள் இல்லாத ஆக்கபூர்வமான கவர்னர் உரை!

ஒவ்வொரு ஆண்டும் சட்டசபையின் முதல் கூட்டத்தொடர் கவர்னர் உரையுடன் தொடங்கும். கவர்னர் உரை என்பது பொதுவாக அரசின் கொள்கைகளை கோடிட்டு காட்டும் உரையாகத்தான் இருக்கும். பெரிய அறிவிப்புகள் எதையும் எதிர்பார்க்க முடியாது. மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு பொறுப்பேற்றபின் முதல் சட்டசபை கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. கவர்னர் பன்வாரிலால் புரோகித் உரையாற்றினார். இந்த உரை மிகவும் வித்தியாசமான, ஆக்கபூர்வமான உரையாக இருந்தது. அரசையோ, முதல்-அமைச்சரையோ தனிப்பட்ட முறையில் புகழ்ந்து கூறும் வாசகங்கள் இடம்பெறவில்லை. தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட வாக்குறுதிகள் பட்ஜெட்டில்தான் இடம்பெறும் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்த நேரத்தில், கவர்னர் உரையிலேயே பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டது ஆச்சரியத்தை கொடுத்தது. உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம் என்ற கொள்கைக்கு ஏற்ப, நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லும் கூட்டு முயற்சியாளர்களாக ஒன்றிய அரசுடன், தொடர்ந்து நல்லுறவை பேணும் என்ற வரிகள் உரிமையை விட்டுக்கொடுக்காமல், மத்திய அரசுடன் நல்லிணக்கத்தோடு தமிழக அரசு செயல்படும் என்பதை பட்டவர்த்தனமாக காட்டியுள்ளது.

தமிழ் மொழியை இந்திய அலுவல் மொழிகளில் ஒன்றாக அறிவிக்க ஒன்றிய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும் என்று கூறி, தமிழுக்கு பெருமை சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில்

பொருளாதார வளர்ச்சியை அடைவதற்காக, தமிழக அரசுக்கு ஆலோசனை வழங்க அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக்கழகத்தின் பேராசிரியரும், நோபல் பரிசு பெற்றவருமான எஸ்தர் டப்லோ, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் பேராசிரியர் ரகுராம்ராஜன், ஒன்றிய அரசின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் அரவிந்த் சுப்ரமணியன், பொருளாதார நிபுணர் பேராசிரியர் ஜான் ட்ரீஸ், முன்னாள் ஒன்றிய நிதிச்செயலாளர் டாக்டர் எஸ். நாராயண் ஆகிய உலகின் தலைசிறந்த பொருளாதார அறிஞர்கள் கொண்ட முதல்-அமைச்சருக்கான ஆலோசனை குழு அமைக்கப்படும். இந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழக அரசு மாநிலத்தின் பொருளாதாரத்தை மீண்டும் எழுச்சி பெறச்செய்யும் என்ற அறிவிப்பு வரவேற்புக்குரியதாகும். பொருளாதாரம் தழைத்தால்தான் மக்களின் வாழ்வில் வளம் சேரும்.

இதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் நிதிநிலையின் தற்போதைய உண்மையான நிலையை விளக்கும் வெள்ளை அறிக்கை அடுத்த மாதம் வெளியிடப்படும் என்று அறிவித்திருப்பதன் மூலம் தமிழ்நாட்டின் நிதிநிலை எப்படி இருக்கிறது? என்பதை சாமானியனும் தெரிந்துகொள்ளமுடியும். வேளாண்மைக்கென தனியாக பட்ஜெட், முன்னாள் முதல்-அமைச்சர் கலைஞர் கருணாநிதியால் தொடங்கப்பட்ட உழவர் சந்தைகளுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் தொடங்கப்படும், கிராமப்புற சந்தைகள் உருவாக்கப்படும், வாகனங்கள் மூலம் மக்களுக்கு வீட்டிலேயே காய்கறிகளும், பழங்களும் விற்பனை செய்யப்படும் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும் என்பதெல்லாம் விவசாயிகளுக்கு பெரும் பயனளிப்பதாக அமையும். ரேஷன் கார்டுக்கு விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த அனைவருக்கும் 15 நாட்களுக்குள் 'ஸ்மார்ட் கார்டு' வழங்கப்படும் என்பது மகிழ்ச்சிகரமான அறிவிப்பாகும். கொரோனாவால் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கான திட்டங்களை வகுக்க தொழிலதிபர்கள், வங்கியாளர்கள், நிதித்துறை வல்லுனர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது.

தொடக்கத்தில் இருந்தே மு.க.ஸ்டாலின், நிபுணர்களின் ஆலோசனையை பெற்றே அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது போற்றுதலுக்குரியது. தமிழ் வழியில் பயின்றவர்களுக்கும், அரசு பள்ளியில் பயின்றவர்களுக்கும் அரசு பதவிகளுக்கான வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என்ற அறிவிப்பு மாணவர்களுக்கு பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தும். 48 பக்கங்கள் அடங்கிய இந்த உரை முழுவதுமே முத்து. முத்தான அறிவிப்புகளை கொண்டதாக, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதாக இருக்கிறது. கவர்னர் உரையிலேயே இவ்வளவு அறிவிப்புகள் இருக்கிறது என்றால், தேர்தல் அறிக்கையில் மு.க.ஸ்டாலின் அறிவித்த வாக்குறுதிகள் பல பட்ஜெட்டில் இடம்பெறும் என்பதை இந்த உரை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

THE TIMES OF INDIA

22-June-2021

The famous five who are to steer state's growth

New DMK Govt Under Pressure To Deliver On Growth, Equity

D.Govardan@timesgroup.com

Minutes after governor Banwarilal Purohit announced in his address to the state assembly the formation of a five-member economic advisory council for chief minister M K Stalin, #TamilNadu started trending on Twitter. Accolades poured in for the state's move to draft in Nobel Laureate Esther Duflo, Prof Jean Dreze, Raghuram Rajan, Arvind Subramanian, and S Narayan, and for the collective "bandwidth" of these economics experts.

An order constituting the council said, the government is in the midst of a serious economic crisis induced by the pandemic. The government's fiscal situation is also precarious with persistent high revenue and fiscal deficits and a large overhang of debt. The people's expectations are high that the government would deliver on faster economic growth, social justice and equity.

"The council comprises two macro economists and two development economists. The idea is nobody will doubt their credentials. We want to identify specific issues and ask their advice and based on their inputs formalize what we want to do to enhance the capacity and capability of the state. It will be more action oriented, rather than report oriented and there is enough diversity of opinion there for us to get the right feedback," a senior state government official said, adding that none of the five will receive any "remuneration".

Fundamentally it is a superb thought process, says S Chandrakumar, chairman, CII Tamil Nadu. "The speed at which the government has put such a team together shows its positive intent and it is an excellent initiative. The pace at which this government is working, Chennai could soon become the next FinTech capital of India, as dreamt by our CM ten years ago when he was the deputy CM," Chandrakumar said.

"A committee is not a panacea to solve legacy problems. But a committee with such high ability and calibre will definitely lay the roadmap for protecting the future. This kind of bandwidth no other committee has had. It increases the credibility of the state, even as it gets ready to attract international capital for growth," R Ganapathy, chairperson, IIT Madras Entrepreneurs Forum, said.

C Lakshmanan, associate professor at Madras Institute of Development Studies (MIDS), termed it a welcome departure from the aversion that Dravidian parties had towards intellectuals and economists from outside Tamil Nadu. "Only thing it should not work at cross-purpose with the already constituted State Development Policy Council (SDPC)," he said.

ARVIND SUBRAMANIAN | FORMER CHIEF ECONOMIC ADVISER TO CENTRE

Arvind Subramanian is an Indian economist and known as an **expert of the Indian and Chinese economies,** and the global economic power shifts. Arvind succeeded Raghuram Rajan as the **chief economic adviser** to the Union government from **2014 to 2018.** He was a former economist with the International Monetary Fund (IMF)

ESTHER DUFLO | NOBEL LAUREATE

A French-American economist and a professor for Poverty Alleviation and Development Studies at the Massachusetts Institute of Technology. Esther Duflo, her Indian-American husband Abhijit Banerjee and Michael Kremer **won the Nobel Prize for Economics in 2019** for their **approach to alleviate global poverty.** Duflo already has a Tamil Nadu connect. As the director of The Abdul Latif Jameel Poverty Action Lab (J-PAL), Duflo has been **working with Tamil Nadu** government after J-PAL entered into an MoU in 2014 to undertake projects **to reduce poverty through policies based on scientific evidence**

PROF JEAN DREZE | WAS ON NAT'L ADVISORY COMMITTEE

The **Belgian-born Indian** welfare and development economist Jean Dreze, influenced by economist Amartya Sen, has been living in India since 1979 and became an Indian citizen in 2002. The **combination of field work and qualitative analysis on life and poverty** makes his works distinctive. Associated with the Delhi School of Economics and University of Ranchi as honorary and visiting professor, Dreze has co-authored a number of publications with Sen. A few years ago, a photo of him having food on the road along with the poor on the roads of Delhi went viral on social media. Not many around then knew that he **was on the National Advisory Committee during the UPA regime** and was drafted by then Prime Minister Dr Manmohan Singh for the ambitious MNREGA scheme



RAGHURAM RAJAN | EX-GOVERNOR OF RBI

Raghuram Rajan is an Indian economist and the Katherine Dusak Miller Distinguished Service Professor of Finance at the University of Chicago. A former chief economist and director of research at the International Monetary Fund (IMF), he went on to become the **23rd governor of Reserve Bank of India** in 2013. Prior to that, he functioned as the **chief economic adviser** for the Union ministry of finance in **2012**

S NARAYAN | FORMER FINANCE SECRETARY AND FORMER ECONOMIC ADVISER

A 1965 batch IAS officer (retired), Narayan was a **former finance secretary** with the Union government and the **economic adviser to former Prime Minister A B Vajpayee.** He had worked with the Tamil Nadu government for two decades earlier. He has written a book – 'The Dravidian Years: Politics and Welfare in Tamil Nadu'.

The Telegraph

22-June-2021

TN economic council inducts talent

Stalin attempts what Modi won't

M.R. VENKATESH,
ANIMESH BISOEE AND
OUR BUSINESS BUREAU

Chennai: The debt-ridden Tamil Nadu government has constituted a five-member Economic Advisory Council to chief minister M.K. Stalin, which includes Nobel laureate Esther Duflo and former Reserve Bank of India governor Raghuram Rajan, to steer the southern state's economic revival.

Duflo, who won the Economics Nobel in 2019 along with husband Abhijit Vinayak Banerjee and Michael Kremer, will head the top-level team of advisers.

The other advisers on the council are Arvind Subramanian, who was chief economic adviser to the Narendra Modi-led government in its first term; Jean Dreze, development economist and social scientist; and S. Narayan, former Union finance secretary and also a former economic adviser to Prime Minister Modi.

The announcement was made by governor Banwarilal Purohit in his address to the Tamil Nadu Assembly, which opened in Chennai on Monday after the recent and emphatic victory of the secular progressive front led by Stalin.

Later in the day, the state government issued an official order notifying the composition of the new team of economic advisers to the Tamil Nadu chief minister. The new council will coordinate with the state planning commission as well.

"They (the government) have issued an order," Narayan told **The Telegraph** on Monday evening.

Dreze, who has co-authored books with Nobel laureate Amartya Sen and advised the UPA government on its flagship anti-poverty MGNREGA scheme, said in an email to this newspaper: "I accepted this assignment with some hesitation, because I am a little sceptical of unilateral policy advice disconnected from wider deliberation. But hopefully, some consultation processes will evolve."

Esther Duflo, Raghuram Rajan

Jean Dreze, Arvind Subramanian

Dreze, who is now in Bastar, Chhattisgarh, added: "In any case, I look forward to this learning experience and I shall do my best to make myself useful."

Some the economists on the council — especially Rajan and Subramanian — have been trenchant critics of the Modi government's policies. It will be interesting to see what suggestions they come up with.

State governments have been left with very little independent ammunition in their fiscal armoury after switching to a goods and services tax (GST) regime in 2017. They are also subject to very rigid regulations on borrowings.

The decision to put together such a group of economists drew immediate praise from fellow economists.

"This is such excellent news. Congratulations, M.K. Stalin. If these people also had a say in all-India policymaking, India's economy would turn around from where it has reached," Kaushik Basu, chief economic adviser to the Manmohan Singh-led UPA government, tweeted.

"This is perhaps the first time that any state has opted for a structured approach to economic policymaking through a council of advisers. However, there have been several instances when noted economists have served as economic advisers to chief ministers," said N.R. Bhanumurthy, vice-chancellor of B.R. Ambedkar School of Economics.

Nobel laureate Abhijit Banerjee heads a global advisory board that counsels Bengal chief minister Mamata Banerjee on addressing the economic impact of the pandemic. **(See Metro)**

In Chennai, governor Purohit said the council would bring out a white paper in July that would focus on the true state of Tamil Nadu's finances.

"The fiscal situation of Tamil Nadu is precarious with persistent high revenue and fiscal deficits, and a large overhang of debt. At the same time, expectations of people are very high..." the state government said in its notification. Tamil Nadu had been governed by the AIADMK, now a BJP ally, for the past 10 years.

Tamil Nadu — which has had a long reputation for populist schemes offering free rice and laptops to the poor — reported outstanding liabilities of Rs 5.12 lakh crore in its budget estimates for 2020-21, which works out to an increase of 124 per cent over the Rs 2.28 lakh crore in 2015-16, according to a RBI review of state budgets that was put out last October.

The state had budgeted for a fiscal deficit of Rs 59,346.3 crore in its budget estimates for 2020-21 — the highest among the country's states and Union Territories.

மாலை முரசு

23-June-2021

வரவேற்கத் தகுந்த நெறிமுறைகள்!

புதிய தகவல் தொழில் நுட்ப புரட்சியால் பல்வேறு நன்மைகள் நமக்கு கிடைத்த போதிலும் தகவல் பரிமாற்றத்தில் இயல்புக்கு மாறான தவறான தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. என்னதான் சட்டத்தின் கூர்முனைகள் பாய்ந்தாலும் இணைய வழியில் தவறாக பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. குறிப்பாக பாலியல் தொடர்பான செய்திகள் அல்லது தகவல்கள் பகிரங்கமாக பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. இதனை தடுக்க சைபர் கிரைம் என்று ஒரு பிரிவு காவல் துறையில் தனியாகவே செயல்படுகிறது. இருப்பினும் பாலியல் தொடர்பான குற்றங்கள் குறையவில்லை. ஏதோ ஒரு மூலையில் யாரோ ஒருவர் மூளையில் உதிக்கும் தவறான எண்ணங்களுக்கு வடிகாலாக இணையவழி பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது.

இதனை தடுக்க போக்சோ சட்டமும் கொண்டு வரப்பட்டது. அப்படியும் பாலியல் தொடர்பான குற்றங்கள் தொடர்கதையாகவே இருந்து வருகின்றன. இரு தனிநபர்களுக்கு இடையே பரிமாறிக்கொள்ளப்பட்டு வந்த இந்த பாலியல் தகவல்கள் இப்போது பள்ளிகளுக்கும் பரவத் தொடங்கியுள்ளது. கல்வி புகட்டும் ஆசிரியர்களே மாணவிகளிடம் இணையவழியில் தவறாக நடந்து கொள்வது வெளிச்சத்துக்கு வந்த வண்ணம் உள்ளன. தனியார் பள்ளி ஆசிரியர் ஒருவர் பல மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறி கைதாகி உள்ள நிலையில் மேலும் பிற பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் தங்களுக்கு நடந்த பாலியல் தொல்லை பற்றி சமூக வலைதளங்களில் பேச தொடங்கியுள்ளனர்.

பள்ளிகளில் நடைபெறும் பாலியல் வன்முறை சம்பவங்கள், பல சந்தர்ப்பங்களில் வெளியே தெரிவதில்லை. புகார் கொடுத்தாலும் பள்ளி நிர்வாகங்கள் அந்த புகார்களை முறையாக விசாரிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு பல காலமாகவே நீடிக்கிறது. தடைகளை தாண்டி நீதிமன்றத்துக்கு வழக்கு வந்தாலும் தீர்ப்பு வருவதற்கு ஆகும் காலம் தாமதம் காரணமாகவும் பலர் புகார் அளிக்க முன்வருவதில்லை. அண்மையில் பள்ளி மாணவிகள் பாலியல் வன்முறைக்கு ஆளாவது குறித்த புகார்கள் குவிந்தன. கொரோனா தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்டுள்ளதில் இணையவழி மூலமாக பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர்களால் பாடவகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த இணையவழி பாட வகுப்புகள் நடக்கும் போது, ஆசிரியர்கள் மாணவிகளுக்கு இணைய வழி வாயிலாக பாலியல் தொல்லை கொடுத்தது வெளிச்சத்துக்கு வரவே தமிழக அரசு இணையவழி வகுப்புகளுக்கான நெறிமுறைகள் மற்றும் பள்ளிக்குழந்தைகளை பாலியல் வன்முறையில் இருந்து பாதுகாப்பது குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. இந்த நெறிமுறைகள் அனைத்து கல்வி வாரியங்களைச் சார்ந்த அனைத்து பள்ளிகளுக்கும் பொருந்தும் என்று தெரிவித்துள்ளது.

மாணவர் பாதுகாப்பை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யவும் அது சார்ந்த நடவடிக்கைகள் குறித்து மதிப்பீடு செய்யவும், ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு அமைக்கப்படும் என்று இந்த வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு மாத காலத்தில் மாநில அளவில் ஒரு கட்டுப்பாட்டு அறையை பள்ளிக்கல்வித்துறை உருவாக்கும் என்றும் அனைத்துத் தரப்பினரும் தங்களது குறைகளை எளிதாகத் தெரிவிக்கும் வகையில் இம்மையத்தில் கட்டணமில்லை நேரடி தொலைபேசி மற்றும் தனிப்பட்ட மின்னஞ்சல் வசதி உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இணையவழி கற்றல்– கற்பித்தல் விரைவில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், மாணவிகள், வகுப்பறை சூழலுக்கு ஏற்றவாறு உடை அணிய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. புகார் மற்றும் மாணவர்களின் கருத்துகளை எளிதே தெரிவிப்பதற்காக பள்ளி வளாகத்தில் பாதுகாப்பு பெட்டிகள் வைக்கப்படும் என்றும் ஒவ்வொரு வருடமும் அனைத்து பள்ளிகளிலும் நவம்பர் 15 முதல் நவம்பர் 22 வரை குழந்தைகள் துன்புறுத்தலை தடுக்கும் வாரம் என விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. தமிழக அரசு அறிவித்துள்ள இந்த வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் நல்ல பலனை தரும் என்பதில் ஐயமில்லை. இது வரவேற்க தக்க ஒரு நல்ல திட்டமாகும்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
23-June-2021

தலைமுறை வாழ்த்தும்

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் அதிமுக ஆட்சியின் அலங்கோலங்களால் தமிழ்நாடு தவித்துப்போய் நின்றது. குறிப்பாக இளைஞர்கள் எதிர்காலம் தெரியாது திகைத்தனர். அவர்கள் அரசு பணி பெறும், பயிற்சி பெறக்கூடிய இடங்கள் எல்லாம் பிறமாநிலத்தவர்கள் பங்கெடுக்கும் வகையில் சட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டன. அதனால் தமிழ்நாட்டில் உருவாகும் அரசு பணியில் கூட வடமாநில இளைஞர்கள் வந்து ஆக்கிரமித்தனர். தமிழர்களுக்கு இடங்கள் மறுக்கப்பட்டன. வேதனை தீயில் இருந்தவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக அரசு அமைந்த பிறகு நடக்கும் முதல் சட்டமன்ற கூட்டத்தொடரிலேயே தமிழில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்ற முத்தான அறிவிப்பு வந்து இருக்கிறது.

இல்லை என்றால் தமிழில் தேர்வு எழுதி பெற வேண்டிய அஞ்சல் துறையில் தமிழக இளைஞர்களை விட, தமிழ் தெரியாத, புரியாத வடமாநில இளைஞர்கள் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற முடியுமா? அப்படியும் ஒரு தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டு இருந்தது இந்த தமிழ்நாட்டில் தான். அதுவும் அதிமுக ஆட்சியின் தான். தெற்கு ரயில்வே அறிவிக்கும் அத்தனை வேலைவாய்ப்பு பணியிடங்களிலும் 90 சதவீதம் வடமாநிலத்தவர்கள் ஆக்கிரமிப்பு. இனி அப்படி நடக்க இயலுமா?. அதற்குத்தான் இடம் கொடுக்குமா திமுக தலைமையிலான தமிழக அரசு. வாய்ப்பில்லை என்பதால்தான் கடந்த சில வாரங்களுக்கு முன்பு தெற்கு ரயில்வே பணிமனை பயிற்சிக்கு கூட தமிழக இளைஞர்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இதுதான் காலம், இனி எல்லாம் மாறும். திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையில் 600 இடங்களில் 550 வடமாநில இளைஞர்கள் அரசு பணி பெற்றது போல் இனிமேல் பெற முடியுமா?

ஏன் தமிழ்நாடு மின்வாரியத்தில் கூட உதவி செயற்பொறியாளர்கள் வாய்ப்பு வடமாநிலத்தவர்களுக்கு வழங்கப்பட்டதே. இங்கேயே பொறியியல் படித்த லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை தேடி அரசின் கதவை தட்டிக்கொண்டு இருக்கும் போது வடமாநில இளைஞர்களுக்கு லட்சங்களில் புரளும் சம்பளம் கொண்ட பணிகளை ஒதுக்கியதே அதிமுக அரசு. இன்று எல்லாம் தலைகீழ். இனியாரும் அத்துமீற முடியாது. அதற்கு தெற்கு ரயில்வேயின் ஒரு அறிவிப்பே சான்று. கூடங்குளம், நெய்வேலி உள்பட தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு துறைகளிலும் தமிழ்நாட்டை சேர்ந்தவர்களுக்கே இனிமேல் முன்னுரிமை வழங்கும் வகையில் மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்று மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு அறிவித்து இருக்கிறது. மற்ற மாநிலங்கள் எல்லாம், அந்த மாநிலங்களில் உள்ள அரசு வேலைகள் உள்ளூர் இளைஞர்களுக்கே வழங்கப்படும் என்று அறிவித்த போது அதிமுக அரசு வேடிக்கை பார்த்தது. இனி தமிழக அரசின் செயல்பாடுகளை பார்த்து மற்ற மாநிலங்கள் வியக்கப்போகிறது. அதற்கு முன்னுதாரணமான அறிவிப்பு தான் தமிழில் படித்தால் அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும் என்ற அறிவிப்பு. தமிழ்நாட்டின் இளம் தலைமுறை நிச்சயம் வாழ்வாங்கு வாழ்த்தும்.

THE NEW INDIAN EXPRESS

23-June-2021

'DRAFT PORTS BILL A BID TO USURP STATE POWERS'

EXPRESS NEWS SERVICE
@ Chennai

TAKING strong exception to the Union government's bid to dilute State governments' control over minor ports, through the Draft Indian Ports Bill, 2021, Chief Minister MK Stalin on Tuesday wrote to his counterparts from eight coastal States and one Union Territory. He urged the Chief Ministers of Gujarat, Maharashtra, Goa, Karnataka, Kerala, Andhra Pradesh, Odisha, West Bengal, and Puducherry to oppose the Bill unitedly during the Maritime State Development Council's (MSDC) the meeting, on June 24.

Recalling the recent actions, initiated by the Government of India on management of minor ports, hitherto managed and regulated by State governments, Stalin pointed out that the Draft Indian Ports Bill, 2021, aims at modifying the current management model of minor ports. "As per the existing Indian Ports Act, 1908, the powers to plan, develop, regulate and control the minor ports vests with the States concerned. However, the new draft Bill proposes to change this and transfer many of these powers to the MSDC, which has so far, been only an advisory body. Further, many powers currently exercised by States would be taken over by the Union government," Stalin underscored.

Stating that the present system has led to good development of minor ports by the States, the CM added that the move to bring in a new Bill would have long term adverse implications on the management of minor ports as States would not have any major role anymore. "We have taken up the issue with the Union Ministry for Ports and Shipping, strongly opposing

such steps to reduce States' autonomous role in regulation and management of minor ports," he wrote. Stalin also proposed that his counterparts express objection to this new draft Bill and take joint action to prevent any move to dilute the powers already vested with the States.

Earlier in the day, Stalin, while speaking at the State Assembly, said that a resolution will also be passed against the three farm laws and the Citizenship Amendment Act (CAA).

Won't allow any shale gas projects: Thenarasu

Chennai: Minister Thangam Thenarasu on Tuesday told the Assembly that the State won't give permission for any hydrocarbon, methane and shale gas projects. He said the ONGC's proposal to seek clearance for digging wells in Ariyalur and Cuddalore districts were rejected by the TN Environment Impact Assessment Authority. ENS

We have taken up the issue with the Union Ministry for Ports and Shipping, strongly opposing such steps to reduce States' autonomous role in regulation and management of minor ports

MK Stalin, CM

குமுதம்

23-June-2021

கார்த்திக் புகழேந்தி

புதிய அரசின் முதல் 30 நாட்கள்...

முடக்கமா, முன்னேற்றமா?

12 குமுதம் 23.6.2021

குமுதம்

23-June-2021

கொரோனா இரண்டாம் அலையின் தீவிரம் ஒருபக்கம்! நிர்வாகக் கட்டமைப்புகளை முடிந்த அளவுக்கு மாற்றியமைக்கும் தொடர்ச்சியான வேலைப்பளு மறுபக்கம்!

நூறு நாட்களில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது, நற்பெயருக்குக் களங்கம் ஏற்படாமல் பொதுமுடக்கத்தை மீண்டும்

குமுதம் 23.6.2021 13

குமுதம்

23-June-2021

அமல்படுத்துவது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது கோரிக்கை வைத்தபடி, கோவிட் நிவாரண நிதியினை உடனடியாக வழங்குவது என நாலாப் பக்கங்களிலிருந்தும் மேலே பாயக் காத்திருந்த அம்புகளைச் சமாளித்து, மூச்சு முட்டும் வேகத்தில் தன் முப்பது நாட்களை நிறைவு செய்திருக்கிறது முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு!

இன்று, கோவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் 'சென்னையைப் பாருங்கள்' என்று மலேஷிய எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஸ்ரீ அன்வர் இப்ராஹிம் தமிழ்நாட்டைச் சுட்டிக்காட்டும் அளவுக்கு முன்மாதிரி நடவடிக்கைகளால் தமிழகம் மீண்டு கொண்டிருக்கிறது.

அதிகாரிகள் நியமனங்கள் ஆச்சரியம் அளித்தாலும் எந்தத் தடுமாற்றமும் இல்லாமல், விட்ட இடத்தில் இருந்து தொடங்குவது போல ஒவ்வொரு துறையும் சீராக இயங்குவது முதல்வர் ஸ்டாலினின் அனுபவ முதிர்ச்சியைக் காட்டுகிறது.

பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்துப் பயணம், பால் விலைக் குறைப்பு, 2.07 கோடி ரேசன் கார்டுகளுக்குத் தலா நாலாயிரம் ரூபாய் நிவாரணம், கொரோனா சிகிச்சைக்கு அரசு காப்பீடு, தொகுதி மக்களிடம் பெற்ற மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தனித்துறை என முதல்வர் ஸ்டாலின் கையெழுத்திட்ட முதல் ஐந்து அரசாணைகளுமே எவ்வித விமர்சனத்திற்கும் உள்ளாகாமல் நற்பெயரையே அவருக்குப் பெற்றுத் தந்திருக்கின்றன.

நிவாரண உதவிகளை வழங்கும்போது ரேசன் கடைகளில் மக்கள் திரண்டது, சில இடங்களில் கட்சியினர் விளம்பர பேனர் வைத்தது என்று எதிர்த்தரப்பில் இருந்து சிறுசிறு சப்தங்கள் எழுந்தாலும் அவசியமான நேரத்தில் தாமதமில்லாமல் இரண்டு தவணைகளாக வழங்கப்பட்ட கொரோனா நிதியுதவி அனைவரின் முணுமுணுப்புகளையும் ஒன்றுமில்லாமல் செய்துவிட்டது.

'இன்னொரு பொதுமுடக்கத்தை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது' என்று ஏற்கெனவே

> காலங்காலமாகத் தன்னைத் திட்டித் தீர்த்தவர்களையும்கூட 'உதவியாக இல்லாவிட்டாலும் உபத்திரமாக இருக்காதே' என்று அருகில் நிறுத்திக் கொண்டார்.

அறிவித்த போதும் நிலைமையைச் சமாளிக்க தேவையான முன்னேற்பாடுகளோடு, காவல்துறைக் கடுமை காட்டாமல், ஈ-பாஸ் குழப்பங்கள் இல்லாமல் குறிப்பாக டாஸ்மாக் மதுக்கடைகளைத் திறக்காமல் சக்சஸ்ஃபுல்லாக அமல்படுத்தியிருக்கிறார்.

பதவியேற்பு நிகழ்வில் 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி ஏற்கும்போதே ஒரு திடமான முடிவுடன், தீர்க்கமான திட்டமிடலுடன்தான் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன் என்று தன் அமைச்சரவை உட்பட கூட்டணிக் கட்சியினருக்கும் சமிக்ஞை காட்டிவிட்டார் ஸ்டாலின். ஆட்சியில் அமர்ந்து சரியாக ஏழாவது நாளில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, ஊரடங்கு தொடர்பான ஐந்து தீர்மானங்களை நிறைவேற்றிய போதே முன்பின் இம்மாதிரி அணுகுமுறையை எதிர்கொண்டு அனுபவமில்லாத எதிர்க்கட்சியினர் கூட திக்குமுக்காடினர்.

காலங்காலமாகத் தன்னைத் திட்டித் தீர்த்தவர்களையும்கூட, 'உதவியாக இல்லாவிட்டாலும் உபத்திரமாக இருக்காதே' என்று அருகில் நிறுத்திக்கொண்டார். அரசியலில் இது ஒரு நல்ல வியூகம். பழைய அரசு இயந்திரத்தைச் சீரமைக்க செயல்திறன் முழுவதையும் செலவிடும்போது, வீண் வம்புகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அந்த வகையில் இந்த முப்பது நாட்களை மிகச் சிக்கனமாகப் பார்த்துப் பார்த்து செலவழித்திருக்கிறார் மு.க.ஸ்டாலின். அது அவரது ரன் ரேட்டை சீராக வைத்திருக்க உதவியிருக்கிறது.

பேரிடர்கள் வரும்போதுதான் ஓர் அரசின் செயல்பாடுகள் உன்னிப்பாகக் கவனிக்கப்படும். அந்த வகையில் ஸ்டாலினின் தேர்தல் வெற்றிக்கு சில வாரங்களுக்கு முன்பே தமிழ்நாடு கடும் இக்கட்டான

குமுதம் 23.6.2021 | 15

குமுதம்
23-June-2021

நிலையில் தவித்துக்கொண்டிருந்தது. சுறுசுறுப்பான நடவடிக்கைகள் மட்டுமல்ல; உடனடி மறுசீரமைப்பும் எதிர்காலத் திட்டங்களும் அவசியம் என்ற நிலையில், பதவியேற்ற முதல் நாள், மாலையிலே சென்னை நந்தம்பாக்கம் கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தைப் பார்வையிடச் சென்றார்.

அடுத்த நாளே தமிழ்நாட்டுக்கு ஆக்ஸிஜன் ஒதுக்கீட்டை அதிகரிக்க பிரதமருடன் தொலைபேசியில் உரையாடினார். மத்திய அமைச்சருக்குக் கடிதம் எழுதினார். அண்டை மாநிலங்களின் உதவியை நாடினார். ஆக்ஸிஜன் படுக்கை வசதி கொண்ட சிறு குறு சிகிச்சை மையங்களை மாவட்டந்தோறும் பரவலாக்கினார். 5,930 கோடி நிதி ஒதுக்கி, மாவட்ட வாரியாக அமைச்சர்களைப் பொறுப்பாளர்களாக நியமித்து கொரோனா பரவலைத் தடுக்கச் சிறப்புக் கவனம் செலுத்தினார் ஸ்டாலின்.

உள்ளாட்சித் துறை அமைச்சராக, மாநிலத்தின் துணை முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த காலங்களில் அவர் கற்றுக்கொண்ட 'மைக்ரோ லெவல் ப்ளானிங்' இதில் அவருக்குக் கைகொடுத்திருக்கிறது.

வெளிப்படைத் தன்மைதான் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த மிக முக்கியத் தேவை என்று உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தியதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது தமிழக அரசு. தமிழ்நாட்டில் தொற்று பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை, குணமடைந்து வீடு திரும்பியோர், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள், சிகிச்சைப் பெறுவோரின் நிலைமை என்று அத்தனை டேட்டாவும் நொடியில் கையில் வந்து விழுகிறது. இவ்வளவு ஏன், இதுவரை எண்பது நூறு என்று விற்கப்பட்டு வந்த N-95 முகக்கவசத்தின் அதிகபட்ச விற்பனை விலை வரைக்கும் தீர்மானமாக இவ்வளவுதான் என்று அரசுத் தரப்பில் இருந்து அறிவிப்பு வருகிறது.

உள்ளாட்சித் துறை அமைச்சராக, மாநிலத்தின் துணை முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த காலங்களில் அவர் கற்றுக்கொண்ட 'மைக்ரோ லெவல் ப்ளானிங்' இதில் அவருக்குக் கைகொடுத்திருக்கிறது. கூடுதலாக டெக்னாலஜியைத் துணைக்கு வைத்துக் கொண்டதும் சாமர்த்தியம்தான். அதனால்தான் இன்று தொற்றுப் பரவலைத் தடுப்பதில் முன்மாதிரியாக

சென்னை மாநகராட்சி விளங்குகிறது.

மக்கள் தொகை நெருக்கம் அதிகமுள்ள சென்னையில் கையாண்ட இந்த வழிமுறைகள், மாநிலம் முழுக்க விரிவுபடுத்த வேண்டும். குறிப்பாக கொங்கு மண்டலத்திற்குக் கூடுதல் கவனம் தேவை என்று குரல்கள் எழுகின்றன. அவை முழுக்க முழுக்க எதிர்ப்பலைக் குரல்களும் அல்ல! தவிர, கசப்பு மருந்துதான் என்றாலும், பொது முடக்க நீட்டிப்பு நீண்ட நாட்களுக்குத் தாக்குப்பிடிக்காது.

அதேவேளையில், தொற்று பாதித்து இறந்த மருத்துவர் குடும்பங்களுக்கு நிவாரணம், காவலர்கள், மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை, கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள், வைப்பு நிதி, கடன் தள்ளுபடி என்று நலத்திட்ட அறிவிப்புகள் அடுக்கடுக்காக வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

ஒருவகையில் மக்களுக்கான அரசின் தார்மீகக் கடமைகள் இவை என்று எடுத்துக் கொண்டாலும் தமிழ்நாட்டின் கஜானா வறட்சி உள்ளங்கை நெல்லிக்கனி! அரசின் வருவாய் குன்றி, கடன் பெருத்து படுமோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

இந்நிலையில், நீட், புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பு, தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய நிதி கோரிக்கை என்று பணிப்போரும் அல்லாத துவந்த யுத்தமும் அல்லாத ஒருவித எதிர்மறைப்போக்கு பெருகியிருக்கிறது. ஜி.எஸ்.டி கவுன்சில் கூட்டத்தில் மத்தியில்

உள்ள அத்தனை பேரின் கண்ணிலும் தூசியாக விழுந்திருக்கிறார் தமிழக நிதி அமைச்சர். பிரதமரின் இலவச தடுப்பூசி அறிவிப்புக்குப் பின்னால் உச்சநீதிமன்றத்தோடு சேர்த்து அவரது உரிமைக்குரலுக்கும் பங்கிருக்கிறது.

அதேசமயம், மத்திய அரசு முன்னுரிமை அளித்து, மாநிலத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டங்களின் பலன் பெரும்பாலும் தமிழகத்திற்குக் கிடைப்பதில்லை. உதாரணமாக நாடு

குமுதம்

23-June-2021

முழுவதும் கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம். இது, 1970களிலேயே தமிழ்நாடு முழுக்க தி.மு.க. ஆட்சியில் செயலுக்கு வந்துவிட்ட திட்டம். எனவே, புதிய ஒதுக்கீடு கிடைக்க வாய்ப்புமில்லை. இந்த நிலையில்தான் மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவுக்குப் புத்துயிரூட்டி புதிய வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது.

இந்த வளர்ச்சித் திட்டங்களின் பலனை மாநிலம் முழுக்கப் பரவலாக்க வேண்டிய அவசியம் முதலமைச்சர் ஸ்டாலினின் கண்முன் நிற்கிறது.

ஒருவிதத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள், மாநில உரிமை சார்ந்த முன்னெடுப்புகள், நிர்வாக மறுகட்டமைப்பு, முடிவெடுக்கும் துணிச்சல் ஆகிய விஷயங்களின் அடிப்படையில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆட்சி முந்தைய பழனிசாமி அரசுடன் ஒப்பிடும்போது பன்மடங்கு சிறப்பானது. அமைச்சர்கள், அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் என்று பலரின் பங்களிப்பும் அதற்கு உறுதுணை புரிந்திருக்கிறது. சங்கிலித் தொடர்போல ஒருமித்த கருத்துகொண்ட ஓர் அரசு நிர்வாகம் ஸ்டாலினின் செயல்களுக்குப் பின்னணியில் இருந்து முழு ஆதரவை அளித்து வருகிறது. அதனாலே, தன்மீது வைக்கப்பட்ட விமர்சனங்கள் அனைத்துக்கும் செயல்களால் பதில் சொல்வதுபோல அசுரவேகத்தில் அவரால் செயல்பட முடிகிறது!

வரவிருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் உரையாற்ற ஆளுநருக்கு முறைப்படி அழைப்பு விடுக்கச் சென்ற முதல்வர் ஸ்டாலினுக்கு, அபர்ணா பாண்டே எழுதிய, ‘Making India Great’ புத்தகத்தைப் பரிசளித்தார் ஆளுநர் பன்வாரிலால். அந்தப் புத்தகத்தின் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஒரு மிக முக்கிய செய்தி இருக்கிறது.

தடையற்ற வளர்ச்சி பணி

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டு கால அதிமுக ஆட்சியில் உள்ளாட்சி தேர்தல் முழுமையாக நடத்தி முடிக்கப்படவில்லை. நீதிமன்ற உத்தரவை மீற முடியாமலும், மத்திய அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு பெறவும் அரைகுறையாக உள்ளாட்சி தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது. அதாவது, கிராமப்புறங்களில் அதிமுகவுக்கு அதிக வாக்கு கிடைக்கும் என்ற அடிப்படையில் கிராமப்பகுதிகளில் மட்டும் உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பட்டது. நகராட்சி, மாநகராட்சி உள்ளிட்ட மாநகர் பகுதிகளில் படுதோல்வியை சந்திக்க நேரிடும் என்பதால், இந்த அமைப்புகளுக்கு, கடைசி வரை தேர்தல் நடத்தவில்லை.

அத்துடன், அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி, மாவட்டங்கள் பிரிப்பில் ஆர்வம் காட்டியதால், நெல்லை, தென்காசி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய 9 மாவட்டங்களில் கிராம பகுதிகளுக்குகூட உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படவில்லை. காரணம், வார்டு மறுசீரமைப்பு பணிகள் முடிவடையாததால் உள்ளாட்சி தேர்தல் நடத்த முடியவில்லை என அரசு தரப்பில் நீதிமன்றத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது. மீதமுள்ள 27 மாவட்டங்களில் மட்டும் கிராமப்புற உள்ளாட்சி தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது.

வெற்றியோ, தோல்வியோ எது வந்தாலும் சந்திக்க தயார்... என்ற மனப்பக்குவம் முந்தைய ஆட்சியாளர்களிடம் இல்லை. இதன் காரணமாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு முழுமையாக தேர்தல் நடத்த முடியவில்லை. வார்டு வாரியாக மக்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்து, அடிப்படை கட்டமைப்பு பணிகளை செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அரைகுறை தேர்தலை காரணம் காட்டி, மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெறுவதிலேயே தங்களது சாணக்கியத்தனத்தை காட்டினர்.

இந்நிலையில், விடுபட்ட மாவட்டங்களில் உள்ளாட்சி தேர்தலை நடத்த உத்தரவிடக்கோரி, உச்சநீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், விடுபட்ட 9 மாவட்டங்களில் தொகுதி மறுவரையறை பணிகளை முழுமையாக நிறைவுசெய்து, வரும் செப்டம்பர் 15ம் தேதிக்குள் உள்ளாட்சி தேர்தலை நடத்தி முடித்து, தேர்தல் முடிவுகளை வெளியிட வேண்டும் என தமிழக மாநில தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டுள்ளது. இது, வரவேற்கத்தக்கது.

விடுபட்ட இந்த 9 மாவட்டங்கள் மட்டுமின்றி, மாநிலம் முழுவதும் ஒரே சீராக, முழுமையாக உள்ளாட்சி தேர்தல் நடத்தினால், பெருநகர மக்கள் முதல் கிராமப்புற மக்கள் வரை அனைவரும் பயன் பெறுவார்கள். தார்சாலை, குடிநீர் வினியோகம், தெருவிளக்கு பராமரிப்பு, சுகாதாரம் பேணுதல் என வீதிகள்தோறும் மக்கள் நலப்பணிகள் தங்குதடையின்றி நடைபெற, உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் அவசியம். அந்தந்த பகுதி பிரச்னைகளை மக்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளிடம் முறையிட்டு, உடனுக்குடன் தீர்வுகாண இத்தேர்தல் பெரிதும் உதவும். கொரோனா தாக்கம் குறைந்ததும், இந்த விஷயத்தில் அக்கறை செலுத்தினால் அனைத்தும் சிறக்கும். வளர்ச்சி பணிகள் தடையின்றி தொடரும்.

DAILY THANTHI
dtNEXT
26-June-2021

TN's five-step path to progress

This week, the Tamil Nadu government pulled off a coup of sorts, when it announced the leading experts who would comprise the Economic Advisory Council to Chief Minister MK Stalin. Nobel laureate Esther Duflo who shared the Nobel Prize in 2019 with her husband economist Abhijit Banerjee, for their work on the alleviation of global poverty, is one of the members of this team. Apart from Duflo, RBI former Governor Raghuram Rajan, former Chief Economic Adviser Dr Arvind Subramanian, development economist Prof Jean Dreze and former finance secretary Dr S Narayan have also been onboarded to prepare a roadmap for rapid and inclusive growth of TN.

Their appointments are being viewed as a progressive shift for TN towards a scholarly approach to problem-solving. This might not be the first time that reputed economists have served as economic advisers to Chief Ministers. Abhijit Banerjee serves as the head of a global advisory body, that guides West Bengal CM Mamata Banerjee in mitigating the economic fallout of the pandemic. However, this is perhaps the first time that any state has opted for such a structured approach to economic policymaking, envisioned by a council of advisers. And team Stalin needs to bring out all the big guns, considering Tamil Nadu's fiscal scenario.

Governor Banwarilal Purohit described TN's debt-ridden situation as precarious with persistent high revenue and fiscal deficits, and a large overhang of debt. Tamil Nadu also had the dubious distinction of budgeting for a fiscal deficit of Rs 59,346.3 cr as per budget estimates for 2020-21, which is the highest among states and union territories in India. Purohit, however, added that people have high expectations from the new government.

Interestingly, this five-member team was put together by the state's Finance Minister PTR Palanivel Thiagarajan, a former investment banker, who said it was the CM's ambition to bring together the finest minds working in economics today. The Tamil connect is a unifier that runs deeply within this panel. Three of the council members – Rajan, Subramanian and Narayan are Tamilians. Duflo is known for her work in evidence-based policymaking, and she has been working with Tamil Nadu through the Abdul Latif Jameel Poverty Action Lab (J-PAL), which she co-founded with Banerjee. Rajan is part of a select group of economists who had forecast the 2008 global financial crisis.

Similarly, Subramanian is considered instrumental in bringing fresh perspectives to the Centre's annual economic surveys, where he spoke of India's deepening twin balance sheet crisis. In the aftermath of the pandemic and the job losses, states have been looking at alternative sources of employment for migrant workers in rural India. The MGNREGS has been considered for the same. And it is no surprise that the welfare economist Prof Dreze, who happens to be the brain behind MGNREGS, has also been onboarded in this council. And there is Narayan, who has first-hand experience navigating the nation's labyrinthine economic corridors and is the author of *The Dravidian Years - Politics and Welfare in Tamil Nadu.*

He emerged with an air of seriousness and began making investments in his political future. As India's economy opened up in the 1990s, he made friends within Chennai's business community, and eventually Karunanidhi made him mayor of the city, which is the state capital. With a dyed-black pompadour, white half-sleeved shirts and traditional *veshtis*, he started to cultivate an image of his own, albeit piously subordinate to his father's.

Now 68, Mr Stalin remains aloof. Until recently he kept undistinguished company: party hacks rather than the Tamil intelligentsia whose conversation Karunanidhi sought out. Mr Stalin is not the personality his father was. He does not need to be. The DMK's chief rival, AIADMK, managed to hang on to power for years after the death of its charismatic leader in 2016 by accepting help from the BJP, ascendant in the rest of India but detested by Tamils. In the general election of 2019, when Mr Modi's approval rating in most north Indian states was more than 60%, in Tamil Nadu it stood at just 2.2%. That put the kiss of death on the AIADMK. Mr Stalin's DMK won the recent state election in a landslide.

"Aware of his own limitations—as charismatic leader, orator, ideologue—he seems to want to go down in history as a man of governance," says A.R. Venkatachalapathy, a historian. He is pragmatic too, retaining the health minister of the defeated government on a covid-19 committee. The pandemic has made Tamils grateful for their relatively strong public-health infrastructure. That is one way in which the state distinguishes itself from the rest of the country. Its quietly competent leader may prove to be another. ■

TAKING TAMIL NADU TO THE PINNACLE OF GLORY

After taking oath as Chief Minister of Tamil Nadu on May 7, 2021, M K Stalin swung into action to transform the state administration with vigour and enthusiasm. However, the pandemic has posed formidable challenges to his administration in protecting the lives and livelihoods of millions of people while dealing with the looming economic crisis. His 60-day rule reveals his determination to bring an efficient administration to push the state as an ideal destination for investment in India.

Honouring his commitments made during elections, he lost no time in signing five government orders initiating a slew of welfare measures. An estimated 2,07,67,000 family ration card holders got Rs 4,000 in toto as Covid relief fund. Aavin milk price was reduced by Rs 3 per litre. Women could use city transport buses for free, so could transgenders and physically challenged people.

To redress the grievance of people in 100 days, a new department has been established under the title 'CM in Your Constituency.' Private hospitals will treat Corona patients under the Chief Minister Relief scheme and the expenditure will be borne by the government.

In a significant move, a five-member steer team was formed with eminent people like Nobel Laureate Professor Esther Duflo, former RBI governor Raghuram Rajan, former economic advisor to the Union Government Arvind Subramanian, Professor Jean Dreze of Delhi School of Economics and former Union Finance Secretary S NarayananSignificantly, to make revitalise the state's economy and make it investment friendly,.

Stalin's clarion call to political parties in the state to set aside ideological differences and unanimously function as people's representatives to tackle the pandemic's mounting challenges was seen as a mature move. As an astute politician, the Tamil Nadu Chief Minister is well aware of the importance of micro, small and medium enterprises in a labour-intensive economy. He has written to Finance Minister Nirmala Seetharaman, Prime Minister Modi and Reserve Bank governor Shakthikanta Das on the need to provide moratorium for six months on loans taken without levying interest and also not deducting employee's share of Provident Fund.

To compensate the loss in GST revenue and subsidy to state civil supplies corporation, the state government has requested the centre to release the funds. To compensate the loss in revenue due to pandemic challenges, the state has requested adhoc grants-in-aid. Also, to generate the additional revenue required, the state government has requested the centre to enhance the percentage of state's production value from three to four per cent.



AMIDST FORMIDABLE CHALLENGES, CHIEF MINISTER M K STALIN'S 60-DAY PERFORMANCE HAS REVEALED HIS PRUDENCE AND INHERENT CAPABILITY TO TRANSFORM TAMIL NADU INTO AN IDEAL DESTINATION FOR INVESTMENT

Chief Minister M K Stalin's innovative scheme to constitute a separate department with a special officer to redress the grievances of people within a specified time, titled 'Chief Minister in Your Constituency', has received 400,000 petitions so far; and 70,000 petitions have been registered.

Soon after assuming power, Stalin has provided employment to the kin of those who died in the anti-Sterlite Copper agitation held in Thoothukudi based on their educational qualification on humanitarian grounds.

The government has immediately ordered payment of Rs 3 lakh to the deceased family and Rs 2 lakh to those injured in the explosion of Ammonia boiler in Grimson unit at SIPCOT complex in Cuddalore.

Chief Minister M K Stalin has written to the Defence Minister Rajnath Singh to trace the whereabouts of 12 fishermen missing from Kanyakumari district and four from Bangla Desh. He has also represented to External Affairs Minister S Jaishankar on behalf of 24 fishermen from Kanyakumari and Kerala languishing in Qatar jail. An Iranian registered vessel was carrying Indian fishermen and they were arrested by Qatar's navy people.

The unutilised vaccine producing facility set up by HLL Biotech in Chinglepet was pointed out to the centre and highlighting the need to resume the vaccine plant assuring all help at the state level.

The Tamil Nadu CM's initiative to provide compensation to the families of the deceased journalists and monetary assistance to accredited journalists also came as a breather for those in the media.

During the Dove-de storm that wreaked havoc, an estimated missing 21 fishermen's families were in dire straits. The legal heirs of the deceased fishermen's family were sanctioned a compensation of Rs 20 lakh. Six retired transport workers were paid a token amount from the outstanding due of Rs 497.32 crore to 2,457 that would be paid shortly.

Chief Minister Stalin has announced a slew of healthcare projects and awards to people who have made an indelible mark in their respective fields. A 500-bed multi-specialty hospital at a cost of Rs 250 crore will be set up at Kings Institute complex in Guindy. A library in memory of late Chief Minister M. Karunanidhi will be set up in Madurai at a cost of Rs 70 crore. In Tiruvarur, Tamil Paddy Storage Depots will be built at a cost of Rs 30 crore.

A significant achievement during the 60-day period is the order issued to upload all the land title deeds of temples located across the state and coming under the purview of HR&E department on the website. For any new administration, 60-day is a small period and that too when the state has been hit by pandemic's second wave requiring 24x7 monitoring and control. Going by the progress achieved so far, there is no denying that chief minister M K Stalin has become the embodiment of an administrator with humane nature and one who believes in consensus when it comes to the question of handling crucial issues concerning state's welfare.

-V Nagarajan

dt NEXT
DAILY THANTHI
06-July-2021

Off to a good start

If the old English proverb 'Well begun is half done' still holds good during these precarious pandemic times, the DMK government in Tamil Nadu under first-time Chief Minister MK Stalin has already won half the battle. Going by their first sixty days at Fort St George, Stalin and his handpicked team of ministers have left little if at all any, scope for criticism having taken the baton in the midst of a horrific second wave of COVID-19 at a time when people were literally gasping for oxygen and dying in ambulances, waiting to be admitted to hospitals.

From ensuring adequate oxygen supply for patients in critical care to multiplying manifold the number of beds available for the exploding surge in cases, as well as streamlining the sales of crucial drugs such as Remdesivir, Amphotericin B etc, the state government's performance in facing the pandemic head-on and ensuring the situation does not go out of hand deserves commendation. Stalin, who has been an understudy of his father and DMK patriarch M Karunanidhi for most of his adult life, has proven that all those years were not an exercise in futility. He has taken up initiatives that are one-of-a-kind in the country such as the formation of the Economic Advisory Council comprising top economists from across the world to advise his government on reviving the flailing state finances.

But running a state government is no sprint. With the second wave of the pandemic ebbing across the state and vaccine coverage on the rise, the challenges posed by the pandemic could subside, at least for a while, as more complex, long-term issues resurface. Stalin and his government's handling of these will determine his place in history. Among the immediate challenges facing the government would be the state government's handling of the NEET medical entrance exam this year. With the Madras High Court challenging the legal maintainability of the Justice AK Rajan Commission constituted by the state to study the impact of NEET and the National Testing Agency gearing up to conduct the nationwide exam soon, the DMK will have a tough time explaining to the Opposition and student community on deliverance, or not, of its poll promise of doing away with NEET. With the state government's NEET coaching classes for poor students from government schools cancelled this year, those rural students who have been left in the lurch would definitely demand an answer.

While the state government has already sought more time in executing another major poll promise of reducing petrol and diesel costs citing the second wave-related expenses, Stalin is also likely to face challenges in opposing the National Education Policy and in formulating a separate education policy for TN. From releasing convicts in the Rajiv Gandhi assassination case to opposing privatisation of banks, Railways, and other PSUs, fulfilling promises made in the 503-point mega manifesto released by the DMK ahead of the polls will prove to be the biggest challenge to the DMK government in the coming months and years.

With the BJP expected to saddle up for the 2024 Lok Sabha elections soon, the state government would be prudent in calibrating its expectations when it comes to active cooperation from the Centre. A lot depends on how Stalin's carefully chosen cabinet deals with emerging situations without giving in to temptation. As Stalin rapidly moves towards his crucial 100 days in office milestone, he will have to use all the skills he learnt from his father-mentor Karunanidhi as well as play the balancing act with a canny and sometimes obstructionist BJP government at the Centre, to deliver on his promises.

துக்ளக்

07-July-2021

பொருளாதார ஆலோசனைக் குழு

– ஒரு கண்ணோட்டம்

உலகப் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அமைத்தது முதல்வர் ஸ்டாலினின் திறமையான, காலத்திற்கேற்ற செயல். நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் எஸ்தர் டஃப்லோ, முன்னாள் ரிஸர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன், மத்திய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன், புகழ்பெற்ற பொருளாதார நிபுணரும், வறுமை ஒழிப்புப் பிரச்னைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட ஜான் ட்ரேஸ், மற்றும் முன்னாள் மத்திய நிதிச் செயலரும் மாநில - மத்திய நிர்வாகத்தில் அனுபவமுள்ள எஸ். நாராயணன் போன்றோர் இக்குழுவின் உறுப்பினர்கள்.

கொள்கைகளை வகுப்பதிலும், பணவியல் மற்றும் நிதிக் கொள்கைகளில் ஆழ்ந்த நுண்ணறிவும் கொண்டுள்ள இக்குழு உறுப்பினர்களின் சிறந்த அனுபவங்கள், மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சிறந்த பலனைத் தரக்கூடும். ராஜன் மற்றும் சுப்பிரமணியன் இருவரும், தேசிய அளவில் சிறப்பாகப் பங்காற்றியுள்ளனர்.

பொருளாதாரத்தில் நாட்டின் இரண்டாவது பெரிய மாநிலம் தமிழ்நாடு. ஆயினும், மாநிலத்தின் நிதிநிலை திருப்திகரமாக இல்லை; தமிழக அரசின் நிதி நிலைமையைச் சீரிருத்த ஒரு அவசியமும் அவசரமும் உள்ள நேரம் இது. பெரும் நிதி பற்றாக்குறை, கடன் சுமை, தேவை அளவில் வருவாயை உயர்த்துவதற்கான வழியின்மை,

தமிழ் நாட்டின் தொடர்ந்த வளர்ச்சிக்கும் நீண்ட கால திட்டமிடுவதற்கும் உகந்ததாக இல்லை.

அரசு ஊழியர்களின் ஊதியங்கள் மற்றும் ஓய்வு காலப் பலன்களும், உதவித் தொகைகள், நிகர கடன் வழங்கல் மற்றும் வட்டி செலுத்துதல் ஆகிய மூன்று செலவினங்களும் மொத்த வருவாயை விட மிக அதிகமாக உள்ளன. இந்த நிதியாண்டில் மொத்த வருவாய் 2.19 லட்சம் கோடி ரூபாய்; செலவினங்கள் 3.03 லட்சம் கோடி ரூபாய்; ஆக நிதிப் பற்றாக்குறை 84,202 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் நிதி பற்றாக்குறையினால், இந்த நிதி ஆண்டின் இறுதியில் அரசின் மொத்த கடன் 5.41 லட்சம் கோடி ரூபாய் என்ற அளவில் உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. புதிய நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் இது பற்றி கவலை தெரிவித்து, விரைவில் ஒரு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்படும் என கூறியுள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களுக்கு, இது ஒரு பொன்னான தருணம். ஒரு பெரிய அறுவை சிகிச்சை தேவைப்படும் வியாதிக்கு, இதுவரை சிறு பிளாஸ்திரி ஒட்டி சரி செய்வது போல் இருந்து வந்துள்ளோம். எனவே, நிர்வாகத்தில் ஒரு பெரும் மாற்றத்தை காண வேண்டிய தருணம் இது. மத்திய அரசு 1991-ல் ஒரு பெரும் நிதி நெருக்கடியை சந்தித்தது. பிரதமர் நரசிம்ம ராவ், நிதி அமைச்சர் மன்மோகன் சிங் ஆகியோர் துணிந்து, பொருளாதார வளர்ச்சிக்கு இருந்த முட்டுக் கட்டைகளை அகற்றி, நிதிக் கொள்கையில் ஒரு புதிய மாற்றத்தை அளித்தனர்.

தற்போது தமிழக அரசு அமைத்துள்ள இக்குழு, புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்கள் அடங்கிய குழு. இது, மாநிலத்தின் பழைய நடைமுறைகளிலிருந்து, விரும்பத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துமென்று நம்பலாம். 1991-ல் மன்மோகன் சிங் - பி.வி.நரசிம்ம ராவ் கூட்டணி செயல்படுத்தியது போன்ற சீர்திருத்தங்களைச் செயல்படுத்த துணிந்து முன்வர வேண்டும்.

அரவிந்த் சுப்பிரமணியன் முன்வைத்த பொதுவான வருவாய்த் திட்டம் (Universal Basic Income), மாநிலத்தின் பல கோடி ரூபாய் மதிப்பிலான இலவச நலத்திட்டங்களை ஒருங்கிணைக்க ஒரு பொன்னான வாய்ப்பு. பயனாளிகளுக்கு நேரடி நன்மை பரிமாற்றத்தால் (Direct Benefit Transfer) இது எளிதாக்கப்படும். மேலும் நலத்திட்டங்கள் தகுதியான மக்களுக்குச் சென்று சேரவும் இது உதவும். ஊழலையும் கணிசமாகக் குறைக்கும். இக்குழு 2030 மற்றும்

– எஸ்.விஸ்வநாதன்
ஆசிரியர், இண்டஸ்ட்ரியல் எகனமிஸ்ட்

துக்ளக்

07-July-2021

பொருளாதார ஆலோசனைக் குழு ...

அதற்கு அப்பாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை கணிக்க நன்கு உதவும்.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்ற திராவிடக் கட்சிகளின் சக்தி வாய்ந்த தலைவர்கள், மாநிலப் பொருளாதார நிர்வாகத்தில் கட்சிக்கு அப்பாற்பட்ட பொருளாதார நிபுணர்களை ஈடுபடுத்துவதில் ஆர்வம் காட்டியதில்லை. அவர்களைக் கலந்தாலோசித்ததும் இல்லை. மேலும் குறுகிய காலத் தேர்தல் ஆதாயங்களுக்காக மக்கள் நலத் திட்டங்களில், அதிகம் கவனம் செலுத்தினர்.

மத்திய அரசு உலக அனுபவமுள்ள வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களை ஆலோசகர்களாக, பல ஆண்டுகளாக ஈடுபடுத்தி வருகிறது. பொருளாதாரக் கொள்கைகளில் பணியாற்ற நிதி அமைச்சகம் ஒரு தலைமைப் பொருளாதார ஆலோசகரையும், பல நிபுணர்களையும் கொண்டுள்ளது. டாக்டர் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது, பொருளாதாரக் கொள்கைகள் குறித்து ஆலோசனை வழங்க, டாக்டர் சி.ரங்கராஜனின் தலைமையில் ஒரு சக்திவாய்ந்த குழுவை அமைத்தார்.

பழனிசாமி தலைமையிலான முந்தைய அ.தி.மு.க. அரசு பொருளாதார மேம்பாடு குறித்து ஆலோசனைகள் வழங்க, மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் (Madras School of Economics) தலைவர் டாக்டர் சி.ரங்கராஜனின் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. இக்குழு நடுத்தர மற்றும் நீண்ட காலப் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய விரிவான அறிக்கையை சமர்ப்பித்தது. இக்குழுவில் மாநில அரசு அதிகாரிகளைத் தவிர கல்வி, தொழில், மேம்பாட்டு நிதி மற்றும் வங்கி போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த 24 நிபுணர்கள் இடம் பெற்றிருந்தனர்.

ஸ்டாலின் சென்னை மாநகரத்தின் முதல் மேயராகவும், பின்னர் மாநில துணை முதல்வராகவும் நிர்வாகத்தில் நல்ல அனுபவத்தைப் பெற்றுள்ளார். மாநிலத்தின் நிதி நிலையை உத்தேசித்து, பொருளாதார மேம்பாட்டுக் கொள்கைகளை வகுக்க நிபுணர்களை நியமிப்பதன் அவசியத்தை, அவர் உணர்ந்திருப்பது வரவேற்புக்குரியதே. ●

தினத் தந்தி

DAILY THANTHI

13-July-2021

சிறு துறைமுகங்கள் தமிழக அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும்!

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், கூட்டாட்சி தத்துவத்தை நடைமுறைப்படுத்துவதில் நல்ல முன்மாதிரியாக திகழ்கிறார். மத்திய அரசாங்கத்திடம் சில முக்கியப் பிரச்சினைகளுக்காக கோரிக்கை விடுக்கும்போது, தான் மட்டும் அல்லாமல், மற்ற மாநில முதல்-மந்திரிகளையும் சேர்த்துக் கொள்கிறார். இதைத்தான் பண்டைய காலங்களில், "ஊர்கூடி தேர் இழுத்தால்தான் நகரும்" என்பார்கள். அந்தவகையில், ஏற்கனவே கடந்த மாதம், 12 மாநில முதல்-மந்திரிகளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில், "கொரோனா ஊரடங்கை கருத்தில்கொண்டு, ரூ.5 கோடி வரையில் கடன் நிலுவை வைத்திருக்கும் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை சார்ந்தவர்களுக்கும், சிறு கடனாளர்களுக்கும், கடன்களை திருப்பிச்செலுத்த இரு காலாண்டுகளுக்கு கூடுதல் கால அவகாசம் வழங்கவேண்டும் என்று மத்திய நிதி மந்திரி மற்றும் ரிசர்வ் வங்கி கவர்னரை வலியுறுத்தவேண்டும்" என்று கூறியிருந்தார்.

அதுபோல, தொடர்ந்து குஜராத், மராட்டியம், கோவா, கர்நாடகம், கேரளா, ஆந்திரா, ஒடிசா, மேற்கு வங்காளம், புதுச்சேரி ஆகிய 9 மாநில முதல்-மந்திரிகளுக்கு, "மத்திய அரசாங்கம் நிறைவேற்ற திட்டமிட்டுள்ள திருத்திய வரைவு இந்திய துறைமுகச்

சட்டத்திற்கு அனைவரும் எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும்" என்று கூறியுள்ளார். நாட்டிலுள்ள பெரிய துறைமுகங்களை மத்திய அரசாங்கம் நிர்வகிக்கிறது. 1908-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய துறைமுகங்கள் சட்டப்படி, சிறு துறைமுகங்களின் அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் இருக்கிறது. இந்த புதிய மசோதாப்படி, இதில் சில அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் கடல்சார் மாநில மேம்பாட்டு கவுன்சிலுக்கு மாற்ற வகைசெய்யப்படுகிறது.

இதுவரையில், இந்த கவுன்சில் ஒரு ஆலோசனை அமைப்பாகத்தான் இருக்கிறது. இப்போது மாநில அரசுகளிடம் உள்ள அதிகாரங்கள் எல்லாம் இந்த கவுன்சிலுக்கு போய்விட்டால், அந்தந்த மாநில அரசின் அதிகாரங்கள் நீர்த்துப்போய்விடும். எனவே, எல்லோரும் சேர்ந்து இதை எதிர்க்கவேண்டும் என்று முதல்-அமைச்சர் கோரியிருந்தார்.

சில நாட்களுக்கு முன்பு மத்திய துறைமுகங்கள் துறை இணை மந்திரி தலைமையில், காணொலிக்காட்சி வழியாக நடந்த கடல்சார் மாநில மேம்பாட்டு கவுன்சிலின் 18-வது கூட்டத்தில் தமிழக அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு, தமிழக அரசின் கடும் எதிர்ப்பை பதிவு செய்தார். தமிழ்நாட்டை பொறுத்தவரை இந்த புதிய சட்டம் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும். 7,516 கி.மீ. நீளம் கொண்ட இந்திய கடலோர பகுதியில், தமிழ்நாட்டில் 1,076 கி.மீ. நீள கடற்கரை இருக்கிறது. இதில், சென்னை, எண்ணூர் காமராஜர், தூத்துக்குடி வ.உ.சி. ஆகிய 3 பெருந்துறைமுகங்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தமிழக அரசின் கட்டுப்பாட்டில் கடலூர், நாகப்பட்டினம், பாம்பன், ராமேசுவரம், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய இடங்களிலுள்ள சிறு துறைமுகங்கள் இருக்கின்றன. தனியார் முதலீட்டு துறைமுகங்களாக, காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், பனையூர், திருச்சோபுரம், சிலம்பிமங்கலம், பரங்கிப்பேட்டை, 'பி.ஓய்.-03' எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், திருக்குவளை, உடன்குடி, கூடங்குளம் ஆகிய இடங்களிலுள்ள சிறு துறைமுகங்களும் இருக்கிறது.

சிறு துறைமுகங்கள் மூலம் பெருந்துறைமுகங்களின் போக்குவரத்து நெரிசலும், சாலை மற்றும் ரெயில் போக்குவரத்து நெருக்கடியும் குறைக்கப்படுகிறது. இந்த துறைமுகங்களை அடிப்படையாகக்கொண்ட அனல் மின்நிலையம், உரத் தொழிற்சாலை, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் போன்ற தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தேவையான சரக்குகளை கையாள்கிறது. தமிழ்நாட்டில் மத்திய மற்றும் மேற்கு பகுதி மாவட்டங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு துறைமுக இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது. இதன்மூலம் தமிழக அரசுக்கும் வருவாய் ஈட்டப்படுகிறது.

ஏற்கனவே, மாநில பட்டியலில் இருந்த கல்வியை, பொதுப்பட்டியலுக்கு மாற்றியதையே பலர் எதிர்த்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், சிறு துறைமுகங்களும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கு சென்றுவிடக்கூடாது. மாநிலங்களுக்கு அதிகாரங்கள், பொறுப்புகளை கூடுதலாக கொடுக்க வேண்டிய காலக்கட்டத்தில் இருக்கும் இப்போதைய சூழ்நிலையில் இருப்பதையும் பறிக்க வேண்டுமா?, வேண்டாம்.. வேண்டாம்.. என்பதே தமிழகத்தின் கோரிக்கையாக இருக்கிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
14-July-2021

மு.க.ஸ்டாலின் கொண்டுவரும் திராவிட மாடல் வளர்ச்சி!

எந்தவொரு சாலையையும், பளபளக்கும் சாலையாக மாற்ற வேண்டுமென்றால், முதலில் குண்டும் குழியுமாக இருக்கும் நிலையை செப்பனிடவேண்டும். மேடுபள்ளங்களை சீர்செய்யவேண்டும். இப்படி பல பணிகளை செய்த பிறகுதான், அந்த சாலை சீர்மிகு சாலையாக மாறும். அதுபோலத்தான், நாட்டில் ஒரு முழுமையான வளர்ச்சியை கொண்டுவர வேண்டுமென்றால், பொருளாதார வீழ்ச்சி, நிதி பற்றாக்குறை ஆகியவற்றை போக்கி, உற்பத்தி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், தனிநபர் வருமானத்தை பெருக்குதல், பணப்புழக்கத்தை அதிகரித்தல், வணிக வளர்ச்சி என்று எல்லா வளர்ச்சிகளையும் மேம்படுத்தவேண்டும்.

முதல்-அமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்று 68 நாட்கள் ஆகின்றன. இந்த குறுகிய காலத்தில், ஊரடங்கு நீட்டிப்பு, கொரோனா தடுப்பு நடவடிக்கை என, எந்த பணிகள் என்றாலும் நிபுணர்களின் ஆலோசனையை பெற்றே செயல்படுத்தி வருவது மிகவும் பாராட்டுக்குரியது. அந்தவகையில், கடந்த மாதம் 21-ந்தேதி கவர்னர் உரையில் ஒரு நல்ல அறிவிப்பை, அவர் தலைமையிலான அரசு வெளியிட்டுள்ளது. அதில், "பொருளாதார வளர்ச்சி மந்த நிலையிலுள்ள தமிழ்நாட்டை மாற்றியமைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். அரசிற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கிட 'முதல்-அமைச்சருக்கான பொருளாதார

ஆலோசனைக் குழு' ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

அந்தக் குழுவில், அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் பேராசிரியரும், நோபல் பரிசு பெற்றவருமான எஸ்தர் டப்லோ, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜன், மத்திய ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன், பொருளாதார நிபுணர் ஜான் ட்ரீஸ், முன்னாள் மத்திய நிதிச் செயலாளர் எஸ்.நாராயண் ஆகிய உலகின் தலைசிறந்த பொருளாதார அறிஞர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

முதல்-அமைச்சரின் பொருளாதார ஆலோசனை குழு அறிவிப்பு வெளியானவுடன், தமிழ்நாட்டை சேர்ந்தவர்களை நியமிக்கக் கூடாதா?, தமிழ்நாட்டில் பொருளாதார நிபுணர்கள் இல்லையா? என்றெல்லாம் விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், போபாலில் பிறந்திருந்தாலும் ரகுராம் ராஜனின் பெற்றோர் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள். அரவிந்த் சுப்ரமணியன் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டவர். சென்னையில்தான் படித்திருக்கிறார். அவருடைய தாத்தா-பாட்டி, கலைஞர் வாழ்ந்த கோபாலபுரத்தில்தான் வாழ்ந்தவர்கள். கலைஞரை நன்கு தெரிந்தவர்கள். எஸ். நாராயண் தமிழ்நாட்டை சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி. தமிழக அரசிலும், மத்திய அரசாங்கத்திலும் நிதித் துறை செயலாளராக இருந்த மிகச்சிறந்த அறிவாற்றல் கொண்டவர். அடுத்து, ஜான் ட்ரீஸ் மற்றும் எஸ்தர் டப்லோ ஆகியோர் தமிழகத்தை பற்றி நன்கு தெரிந்தவர்கள்.

இந்த குழுவின் முதல் கூட்டத்தை கடந்த வாரம் வெள்ளிக்கிழமை காணொலிக்காட்சி மூலமாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நடத்தினார். அப்போது, தன் அரசு கொண்டுவர விரும்பும் பொருளாதார வளர்ச்சி என்ன? என்பதை மிகத்தெளிவாக விளக்கி கூறினார். அவர்களிடம், "அனைத்து சமூகங்களையும், அனைத்து மாவட்டங்களையும், அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, இதுதான் திராவிட மாடல் என்பது. அந்த நோக்கத்தோடுதான் தமிழ்நாடு வளரவேண்டும் என்பது என்னுடைய ஆசை" என்றார்.

மேலும், "தொழில் வளர்ச்சி-சமூக மாற்றம்-கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்கவேண்டும். வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாகவும் இருக்கவேண்டும். பொருளாதாரம்-கல்வி-சமூகம்-சிந்தனை-செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளரவேண்டும். அதுதான் பெரியாரும், அண்ணாவும், கருணாநிதியும் காணவிரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி" என்றார்.

ஆக, தான் முயற்சிக்கும் வளர்ச்சி இந்த திராவிட மாடல் வளர்ச்சிதான். இதற்குரிய ஆலோசனைகளை இந்த பொருளாதார நிபுணர்கள் தரவேண்டும் என்பதை மு.க.ஸ்டாலின் தெளிவாக கூறிவிட்டார். இனி அந்த திசையில் தமிழகம் பயணம் செய்ய, இந்த புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்கள் ஆலோசனைகளை வழங்குவார்கள். அதை மு.க.ஸ்டாலின் நிச்சயம் நிறைவேற்றுவார். தமிழகம் திராவிட மாடல் வளர்ச்சியைகாணும் என்பதில் தமிழக மக்கள் முழு நம்பிக்கையை கொண்டிருக்கிறார்கள், வாழ்த்துகிறார்கள்.

மாலை மலர்

14-July-2021

அரசு ஊழியர்கள் வாரம் 2 நாள் கைத்தறி ஆடை:

மு.க.ஸ்டாலின் அறிவிப்புக்கு கைத்தறி நெசவாளர்கள் வரவேற்பு

கைத்தறியில் தயாராகும் சேலம் வெண்பட்டு.

தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்து பிரதான தொழிலாக திகழ்வது நெசவுத் தொழிலாகும். தமிழ்நாடு முழுவதும் 4.27 லட்சம் கைத்தறிகள் இயங்குகின்றன. 2.83 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் உள்ளனர். இவர்கள் 1345 கைத்தறி கூட்டுறவு சங்கங்கள் வழியாக ஆண்டுக்கு சுமார் ரூ.450 கோடிக்கு துணி உற்பத்தி செய்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தில் நெய்க்காரன்பட்டி, கொண்டலாம்பட்டி, புத்தூர், பஞ்சுகாளிப்பட்டி, மேச்சேரி, ஓமலூர், சித்தாமணியூர், செம்மாளப்பட்டி மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் ராசிபுரம், தருமபுரி மாவட்டம் அரூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட இடங்களிலும் கைத்தறி பட்டு ரகங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கைத்தறிகள் மூலம் சாதாரண இலவச வேட்டி, சேலை முதல் ஜரிகையுடன் கூடிய பட்டு வரையில், உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழகம் முழுவதும் இந்த தொழிலை நம்பி, நேர்முகமாகவும், மறைமுகமாகவும், ஒரு கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர். தமிழக அரசின், கோ ஆப்டெக்ஸ் நிறுவனங்களுக்கு பல்வேறு பகுதிகளில் இருந்து துணி வகைகள் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. சேலம், அம்மாபேட்டை, பொன்னம்மாபேட்டை பகுதியில், பட்டு ஜரிகை வேட்டிகள், துண்டுகள், கேரளா வேட்டிகள், கோவில்களில் சாமிக்கு அணிவிக்கும் பட்டு ஆடைகள், சேலைகள், ஆந்திர மக்கள் அணியும் வேட்டிகள் போன்றவை கைத்தறியில் தயாராகி வருகிறது.

இந்த பகுதிகளில் 15 ஆயிரம் நெசவுக்கூடங்கள் உள்ளன. 50 ஆயிரம் பேர் இத்தொழிலை செய்து வருகின்றனர். ஆரம்பத்தில் இருந்ததை காட்டிலும், தற்போது 5 ஆயிரம் கூடங்கள் மூடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தாங்கள் தயார் செய்வதை நேரடியாக, ஜவுளி நிறுவனங்களுக்கு வழங்கி, வருவாய் ஈட்டி வருகின்றனர். அதிக அளவில் வருமானம் இல்லாதபோதும் தலைமுறையாக செய்து வருவதால் அவற்றை விடாமல் தொடர்ந்து வருகின்றனர்.

ஏற்கனவே அரசு கைத்தறி துணி உற்பத்தியாளர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஏற்கனவே கைத்தறி ஆடை விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தில் வேட்டி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. கல்லூரிகளில் மாணவிகள் கைத்தறி சேலை அணிந்தும், மாணவர்கள் வேட்டி அணிந்தும் கைத்தறி உற்பத்தியை ஊக்கப்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் அரசு ஊழியர்கள் வாரத்தில் 2 நாட்கள் கைத்தறி ஆடை அணியவேண்டும் என்று தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது கைத்தறி நெசவாளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. கொரோனாவால் முடங்கி கிடந்த கைத்தறி தொழில் மீண்டும் புத்துயிர் பெறும் நிலை ஏற்பட்டு உள்ளது.

இதுபற்றி சேலத்தை சேர்ந்த கைத்தறி நெசவாளர்கள் கூறியதாவது:

கைத்தறியில் 2 நாள் நெய்தால் தான், ஒரு வேட்டி தயாராகும். இதன் மூலம், 600 ரூபாய் கூலி கிடைக்கும். சாமி வேட்டி, துண்டு நெய்வதற்கு, 3 மணி நேரமாகும். அதில், 75 ரூபாய் வரை கிடைக்கும். முன்பு போன்று நெசவுத்தொழில் இல்லை. கடந்த 1995 ஆண்டு முதல் 2000-ம் ஆண்டு வரை கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல கூலி கிடைத்தது. அதாவது ரூ.150 இருந்து ரூ 200 வரை கிடைத்தது. ஆனால் அது தற்போது பாதியளவாக குறைந்துள்ளது. கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும்.

இப்போதைய தலைமுறையினர் அதிகம் படித்ததால் பரம்பரையாக செய்து வந்த தொழிலை தொடர்வதில்லை. கிடைக்கும் வருமானத்தை கொண்டு வாழ்ந்து வருகிறோம். தமிழக முதல்-அமைச்சரின் அறிவிப்பு எங்கள் வயிற்றில் பால்வார்ப்பதாக உள்ளது.

அரசு ஊழியர்கள் மட்டுமல்ல பிற தனியார் நிறுவனத்தினரும் வாரம் 2 நாள் கைத்தறி ஆடை உடுத்தினால் எங்கள் வாழ்க்கை மேம்படும். மேலும் தமிழக அரசு, ஜவுளி தொழிலையும், நெசவாளர்களையும் வாழ வைப்பதற்காக இதுபோன்ற புதிய திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்பது தான் ஒட்டு மொத்த நெசவாளர்களின் கோரிக்கையாக உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

நக்கீரன்

14-July-2021

பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் 1989-ல் திமுக ஆட்சிக்கு வந்தபோது, கலைஞர் தனது அமைச்சரவை சகாக்களுடன் முதலில் வந்தது திருக்குவளைக்கும் திருவாரூக்கும் தான். திருவாரூரில் இம்முறை தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கிய ஸ்டாலின் பத்தாண்டுகளுக்குப் பின் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று கழக ஆட்சியை தமிழகத்தில் அமைத்திருக்கிறார். இரண்டாம் அலையில் நெஞ்சு நிமிர்த்தி நின்ற கொரோனாவை கட்டுப்படுத்திய பின், கலைஞரின் வழியில் திருவாரூக்கு வருகைதந்தார். முதல்வரான பின் தன் குடும்பத்தினருடன் மேற்கொண்ட முதல் பயணம் இது. தேர்தல் வெற்றிக்கான நன்றியறிவிப்பு பயணமாக மட்டும் அமையாமல், மக்களுடனான தொடர்பை உறுதிப்படுத்தும் பயணமாக அமைந்திருந்தது.

திருச்சியிலிருந்து திருவாரூருக்கு காரில் வந்தவர், திருவாரூர் மாவட்ட எல்லையான வடுவூரில் யாரும் எதிர்பார்த்திராத வகையில் அங்கு செயல்பட்டு வந்த செருமங்கலம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குள் நுழைந்து அங்கிருந்த கொள்முதல் நிலைய

10

முயற்சி செய்யாமல் ஒன்றை அடையத் துடிப்பவன் ஒரு பொருளை இழக்கும்போது கவலை கொள்வது ஏன்?

அதிகாரிகளிடமும் சுமைதூக்கும் தொழிலாளர்களிடமும், "விவசாயிகளிடம் 40 ரூபாய் வாங்குறீங்களாமே. இனி அப்படி நடக்கக்கூடாது. உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். விவசாயிகளின் மனம் நோகாதபடி நடந்து கொள்ளவேண்டும்" என்றார். அங்கிருந்த தொழிலாளர்களோ "எங்களுக்கு சம்பளம் போதுமானதாக கொடுத்தால் விவசாயிகளிடம் கைவேந்த மாட்டோம் அய்யா" என கூற, நானும் "உங்களில் ஒருவன் தான், உங்களுக்கு நல்லது நடக்கும்" எனக் கூறிவிட்டு புறப்பட்டார்.

மறைந்த இயற்கை வேளாண்மை ஆர்வலர் நெல் ஜெயராமனின் அண்ணன் மகனும் நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளருமான ராஜீவ் மற்றும் நிர்வாகிகள் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து இலுப்பைப்பூ சம்பா, கருப்பு கவுனி, துளசிவாசனை சீரக சம்பா, சேலம் சன்னா ஆகிய பாரம்பரிய நெல்லை கொடுத்து மரியாதை செய்தனர். அதோடு நெல் ஜெயராமன் பெயரில் விதை வங்கி உருவாக்கவேண்டும். நம்மாழ்வார் பெயரில் இயற்கை வேளாண்மை கல்லூரி அமைக்க வேண்டும். சத்துணவில் பாரம்பரிய அரிசியை வழங்கவேண்டும். பாரம்பரிய நெல்லை ஆவணப் படுத்த வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

அஞ்சுகம் அம்மையார் நினைவிடத்தில் குடும்பத்தினருடன் முதல்வர்

பாரம்பரிய நெல் கொடுத்து முதல்வருக்கு மரியாதை

-மக்களுடன் ஒரு பயணம்!

அங்கிருந்து புறப்பட்டு திருவாரூர் செல்லும் போது, காட்டூரிலுள்ள அவரது பாட்டி அஞ்சுகம் அம்மையாரின் நினைவிடத்திற்குச் சென்றார். அவரோடு துர்கா ஸ்டாலின், மகன் உதயநிதி, மகள் செந்தாமரை, மருமகன் சபரீசன், மருமகள் கிருத்திகா, பேரப்பிள்ளைகளுடன் மரியாதை செலுத்தினார். காட்டூரிலிருந்து திருவாரூர் செல்லும்போது, பவித்திரமாணிக்கத்தில் இரண்டு பள்ளிக் குழந்தைகள் கையில் புத்தகத்தோடு நிற்பதைக் கவனித்த முதல்வர் ஸ்டாலின் தனது காரை நிறுத்தச்சொல்லி அவர்களிடம் பேசினார். அப்போது அந்த மாணவர்கள் கலைஞர் உரையெழுதிய திருக்குறள் புத்தகத்தை முதல்வர் ஸ்டாலினுக்கு பரிசளித்தனர். இரவு, திருவாரூர் சன்னதி தெருவில் உள்ள கலைஞர் வளர்ந்த வீட்டில் குடும்பத்துடன் தங்கினார் மு.க.ஸ்டாலின்.

மறுநாள் காலை ஏழாம் தேதி சன்னதி தெரு இல்லத்திலிருந்து நடைபயணமாக தெற்கு வீதி வரை நடந்து சென்று பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து திருவாரூரில் நடைபெறும் தூர்வாரும் பணிகள் குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். பின்னர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வாகனத்தில் சென்றார். திடீரென வாகனத்தை நிறுத்தச் சொல்லி ஓடம்போக்கி ஆற்றில் நடைபெறும் தூர்வாரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார். பின்பு 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப் பட்டுள்ள ஒருங்கிணைந்த தாய் சேய் நலப் பிரிவு மையத்தை திறந்து வைத்துவிட்டு, முதல் தளத்தில் அவசர சிகிச்சை பிரிவு, மகப்பேறு மருத்துவம், ரத்த வங்கி உள்ளிட்ட இடங்களைப் பார்வையிட்டு மருத்துவமனைக்கு தேவையான அனைத்து வசதிகளும் உள்ளதா என மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் 100 சதவிகிதம் கொரோனா தடுப்பு ஊசி செலுத்திக் கொண்ட காட்டூர் கிராம ஊராட்சி மன்ற தலைவர் விமலா முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் காயத்ரி கிருஷ்ணனுக்கு முதல்வர்

www.nakkheeran.in

நக்கீரன்

14-July-2021

வாழ்வதற்கு செலவு மிக குறைவு அடுத்தவனைபோல வாழ்வதற்குதான் செலவு மிக அதிகம்.

பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்.

திருக்குவளைக்கு செல்லும் கலைஞரின் உற்ற நண்பர்களுள் ஒருவரும், முன்னாள் ஒன்றியச் செயலாளருமான புலிவலம் ஆர். பி. சுப்பிரமணியனை முதல்வர் ஸ்டாலினும், உதயநிதியும் நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். கட்சியின் மூத்த பிரமுகரான புலிவலம் சுப்பிரமணியன் இருக்கையில் அமர்ந்திருக்க, முதலமைச்சர் ஸ்டாலின், இளைஞரணிச் செயலாளர் உதயநிதி இருவரும் நின்றவாறே அவரிடம் நலம் விசாரித்தனர். தந்தையின் நண்பருக்கும் அவரது வயதுக்கும் முதல்வர் அளித்த மரியாதை, உடன் வந்த அதிகாரிகளையே ஆச்சரியப்பட வைத்தது.

கலைஞர் திருவாரூர் வந்தால், அவருக்கு விரால் மீன்குழம்பு சாப்பாடு சுப்ரமணியன் வீட்டிலிருந்துதான் போகும். கடைசி வரை அது தொடர்ந்தது. ஆளுங்கட்சியாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் கலைஞர் வருகைக்காக திருவாரூர் ரயிலடியில் நின்றவர் ஆர்.பி.சுப்பிரமணியம். கலைஞரின் மகனும் பேரனும் அவர் முன் நின்றபடி நலம் விசாரித்தது, எங்களை கண்கலங்கச் செய்துவிட்டது. இதுக்குப் பேருதான் குடும்பப் பாசமுள்ள கட்சி என்கிறார்கள் திமுக தொண்டர்கள்.

அங்கிருந்து திருக்குவளை செல்லும் வழியில், பின்னவாசல் என்கிற கிராமத்தில் எஸ்.ஆர் சோப்ரா. எஸ். ரமா ஆகியோர் திருமண மண்டபத்தின் முன்பாக மணக்கோலத்தில் நின்றதைக் கவனித்தவர் காரை நிறுத்தச் சொல்லி அந்த இணையரின் திருமணத்தை நடத்தி வைத்துவிட்டு சென்றார்.

திருக்குவளையில் உள்ள குலதெய்வ கோயிலின் மரியாதைக்குப் பிறகு, கலைஞர் பிறந்த வீட்டிற்கு குடும்பத்தினருடனும் கட்சி நிர்வாகிகளுடனும் தோழமைக் கட்சி எம்எல்ஏக்களுடனும் சென்ற முகஸ்டாலின், அங்கிருந்த கருணாநிதியின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்பு அங்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்களை முதல்வர் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆர்வமுடன் பார்வையிட்டனர். அந்த இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் பதிவேட்டில் முதல்வர், தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே, ஓயாது பணியாற்றிய உழைப்பால் முதல்வராக பொறுப்பேற்றுள்ள நான் எடுத்துக்கொள்ளும் உறுதி, தலைவர் கலைஞர் அடிக்கடி சொல்வார் பதவி என்பது பொறுப்பு என்பார், ஆக பொறுப்போடு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொள்கிறேன்' என்று எழுதி கையொப்பம் இட்டுவிட்டு கிளம்பினார்.

ஸ்டாலின் வருகை குறித்து காவல்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், கடந்த கால ஆட்சிகளில் முதல்வர் விசிட் என்றாலே முன்கூட்டியே இடங்கள் பிக்ஸ் பண்ணி அதற்கான பாதுகாப்பு உள்ளிட்ட செட்டிங் இருக்கும். ஆனால் ஸ்டாலின் வருகையும் அவரது செயல்பாடுகளும் முற்றிலுமாக மாறியிருக்கு. பொதுமக்கள் எளிமையாக சந்திக்கிறாங்க, மனு கொடுக்கிறாங்க, மனு மீதான நடவடிக்கை இருப்பதனால்தான் மக்கள் மனுவோடு காத்திருக்காங்க. அதேபோல முதல்வரும் எந்தவித திட்டமிடலும் இல்லாம ரோட்டில் நிற்கும் மக்களை திடீர், திடீர்னு காரை நிறுத்தி சந்தித்து குறைகளைக் கேட்கிறார். எங்களுக்கு அச்சம் இருந்தாலும், மக்களுக்கான ஆட்சி மீண்டும் வந்துவிட்டது என்ற நம்பிக்கை உருவாகியிருப்பதை மறக்க முடியாது" என்கிறார் கடமையுணர்வுடன்.

க.செல்வகுமார்

புலிவலம் சுப்பிரமணியனிடம் நலம் விசாரித்த முதல்வர் ஸ்டாலின்

கிராமத்தில் திருமண நிகழ்ச்சியில்...

தினகரன்

15-July-2021

உலகமே வியக்கும் வகையில் மு.க.ஸ்டாலின் ஆட்சி

நடிகர் வடிவேலு புகழாரம்

கொரோனா நிவாரண நிதியாக ₹5 லட்சத்துக்கான காசோலையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நடிகர் வடிவேலு வழங்கினார்.

சென்னை, ஜூலை 15: உலகமே வியக்கும் வகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி நடத்துகிறார். கொரோனாவை ஒரே மாதத்தில் கட்டுப்படுத்தியிருக்கிறார் என நடிகர் வடிவேலு கூறினார்.

கொரோனா நிவாரண நிதியாக ₹5 லட்சத்தை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தலைமை செயலகத்தில் நடிகர் வடிவேலு நேற்று வழங்கினார்.

பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது:

ஆட்சிக்கு வந்து ஒரே மாதத்தில், உலகமே வியந்து உற்றுப்பார்க்கிற வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சி நடத்தி வருகிறார். ஆட்சிக்கு வந்த ஒரே மாதத்தில் கடுமையாக பணிகளை மேற்கொண்டு, கொரோனாவை கட்டுப்படுத்திவிட்டார். கொரோனா தடுப்பூசி போட வேண்டும் என்பதையும் மக்களிடம் மென்மையாக எடுத்துக் கூறி, யார் மனதும் புண்படாதபடி தடுப்பூசி போட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அதிலும் முதல்வர் சாதித்து காட்டியுள்ளார்.

தடுப்பூசி போடுவதில் இப்போதும் சிலரிடம் முரண்பாடான கருத்து இருக்கிறது. 'நாங்க தேக்குண்ணே... எங்க பாடிக்கு எதுவும் ஆகாது. ஊசி எல்லாம் வேணாம்'னு சிலர் சொல்கிறார்கள். தேக்கை கூட அரித்து விடலாம். அதனால் ஊசி போட்டுக்கொள்ளுங்கள். ஒரு படத்தில் அல்வாவாக என்னிடம் வந்து, 'அண்ணே நான் கிளினிக் ஆரம்பிச்சிருக்கேன். வந்து ஊசி போட்டுக்குங்க' என்பார். 'நான் நல்லாத் தானே இருக்கேன், நான் எதுக்கு ஊசி போடணும்' என்பேன். உடனே ஒரு கட்டையால் என் மண்டையை உடைத்துவிட்டு, 'இப்போ வாங்கண்ணே' என கூப்பிடுவார். அது போல்தான் கொரோனா தடுப்பூசி போடச்சொன்னால், சிலர் 'நாங்க நல்லத்தானே இருக்கிறோம்' என்கிறார்கள். அதையெல்லாம் யோசிக்காமல், அனைவரும் ஊசி போட முனைப்பு காட்ட வேண்டும். பழையபடி சினிமாவில் தொடர்ந்து நடிப்பீர்களா என கேட்கிறார்கள். நல்லதே நடக்கும் என்பதுதான் என் பதில். சினிமாவிலிருந்து வளர்ந்து இப்போது ஓடிடி வந்துள்ளது. அதில் நடிக்கவும் பேச்சு நடக்கிறது.

ராம்நாடுன்னு ஒன்று உள்ளது. ஒரத்தநாடு என்றும் உள்ளது. இதுபோல் நிறைய இருக்கிறது. நல்லா இருக்கிற தமிழ்நாட்டை எதுக்கு பிரிக்கணும். எதுக்கு அந்த பாவம்? தமிழ்நாடு நல்லா நிர்வாகத்தில் இருக்கும்போது, எதற்கு இதெல்லாம்? இதையெல்லாம் கேட்கும் போது தலை சுத்துது. இவ்வாறு வடிவேலு கூறினார்.

மக்கள் குரல்

16-July-2021

இந்தியாவின் 10 சிறந்த முதலமைச்சர் பட்டியல்: மு.க.ஸ்டாலின் முதலிடம்

சென்னை, ஜூலை 16–

இந்தியாவின் 10 சிறந்த முதலமைச்சர் பட்டியலில் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் முதலிடம் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சட்டமன்றத் தேர்தலில் திமுக வெற்றி பெற்றதையடுத்து அக்கட்சியின் தலைவர் மு.க. ஸ்டாலின் முதல்வராக கடந்த மே 7ஆம் தேதி பதவியேற்றுக் கொண்டார். ஸ்டாலின் முதல்வராக பதவியேற்ற பிறகு, பத்திரிகையாளர்கள் முன்கள பணியாளர்களாக அறிவிக்கப்பட்டதுடன், ஆவின் பால் விலை குறைப்பு, மதுரையில் கலைஞர் நூலகம், அனைத்து மகளிரும், திருநங்கைகளும், மாற்றுத் திறனாளிகளும் சாதாரண நகர பேருந்தில் இலவசமாக பயணம் செய்ய அனுமதி, கொரோனா நிவாரண நிதியாக ரூ.4 ஆயிரம் உள்ளிட்ட பல முக்கிய திட்டங்களை கொண்டு வந்தார்.

கொரோனா காலகட்டத்தில் பல அதிரடி முடிவுகளை எடுத்து இரண்டாம் அலையை கட்டுப்படுத்தியதை சென்னை உயர்நீதிமன்றம் உள்பட பலரும் பாராட்டி வருகின்றனர். இந்நிலையில் கிரௌட் விஸ்டம் (crowd wisdom) என்ற பத்திரிகை இந்தியாவில் சிறந்த 10 முதலமைச்சர்கள் என்ற பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் திமுக தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் முதலிடம் பிடித்துள்ளார். ஸ்டாலினை அடுத்து கேரள முதல்வர் பினராயி விஜயன் இரண்டாம் இடம் பிடித்துள்ளார். இதை தொடர்ந்து ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட்நாயக் மூன்றாம் இடம் பிடித்துள்ளார். அசாம் மாநில முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா 4 ஆம் இடத்திலும் ஐந்தாம் இடத்தில் மம்தா பானர்ஜியும் இடம் பெற்றுள்ளார்.

மேலும் உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் 6 வது இடத்திலும் டெல்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் 7 வது இடத்திலும் 8 வது இடத்தில் இமாச்சல் பிரதேச முதல்வர் ஜெய்ராம் தாக்கூரும், 9 இடத்தை மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரேவும் ஆந்திர முதல்வர் ஜெகன் மோகனும் பங்கிட்டுக் கொண்டுள்ளனர். இந்த பட்டியலில் 10 வது இடத்தை கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் பிடித்துள்ளார்.

FRONTLINE
LEADING THE DEBATE SINCE 1984

16-July-2021

THE ECONOMY

Panel for progress

The Tamil Nadu government wins all-round praise for setting up a well-balanced council of eminent minds to guide it in the path to economic recovery. BY R.K. RADHAKRISHNAN

IN a move applauded widely, the Tamil Nadu government announced on June 21 that it would constitute a five-member economic advisory council headed by Raghuram Rajan, former Reserve Bank of India (RBI) Governor, to advise Chief Minister M.K. Stalin on measures to be taken to revive the economy, which has been devastated by two successive waves of the COVID-19 pandemic.

Although the economy is in dire straits across the entire country, each State is now left to fend for itself as the government of India had decided that it did not need domain experts to suggest ways and means to tide the country over one of the biggest crises independent India has ever faced. Tamil Nadu's move, which was welcomed by almost all opposition parties, was met with a stony silence from the Bharatiya Janata Party (BJP). The State's decision is being looked upon as a way out of the current economic nightmare, which has led to the loss of several million jobs across India and has pushed crores of people into poverty.

TEAM'S MANDATE

The team of economists does not have a rigid mandate, as is usually the case with committees and commissions, but it has been given the overarching responsibility of taking into consideration the State's economy as a whole and not work on piecemeal suggestions. According to a senior leader of the ruling Dravida Munnetra Kazhagam (DMK), this is the reason why all the economists on the council agreed to be part of it.

The other members of the team of economists are Arvind Subramanian, former Chief Economic Adviser (CEA) to the Central government; Nobel laureate Esther Duflo of the Massachusetts Institute of Technology (MIT), United States; development economist Jean Dreze, who places people at the centre of all policies; and S. Narayan, former Union Finance Secretary.

In all, the committee has the right balance of two world-renowned macroeconomists, two social welfare economists and a seasoned bureaucrat well-versed in India's welfare schemes and its benefits, who are expected to identify and discuss issues and provide suggestions on what paths to take.

Named Tamil Nadu's Economic Advisory Council to the Chief Minister, the committee will be headed by Raghuram Rajan. Rajan left his job as RBI Governor in 2016, reluctantly, at the end of his first term. He had hoped to stay on to see through some of the macroeconomic changes he had set in motion; indeed, it was speculated that although Rajan would be agreeable to a shortened second term, Prime Minister Narendra Modi was not keen on it.

In June 2016, the Bengali news-

M.K. STALIN, Tamil Nadu Chief Minister, handing a package of essential commodities to a migrant labourer, in Chennai on June 25.

16-July-2021



THE MEMBERS OF THE ADVISORY COUNCIL are Raghuram Rajan, former RBI Governor; S. Narayan, former Union Finance Secretary; Arvind Subramanian, former Chief Economic Adviser to the Union government; Jean Dreze, development economist; and Esther Duflo, Nobel laureate in economics.

paper *Ananda Bazar Patrika* first reported that Rajan had sent in his request to the Prime Minister to be relieved at the end of the first term.

Just a few months after Rajan left, Modi announced the disastrous demonetisation drive, which devastated the Indian economy. However, to this day, every BJP spokesperson describes the move as a 'masterstroke', although the reality is vastly different, as was recorded in *Frontline*, first in the Cover Story article "Monumental blunder" (December 12, 2016) and then in subsequent issues.

The Chennai-born Arvind Subramanian, who took over the job of Chief Economic Adviser to the Government of India in 2014, a year after Rajan left the position to take charge as RBI Governor, had to defend the various ham-handed measures of the Narendra Modi government, including demonetisation. He held the job for just under four years and finally quit citing personal reasons. ("Growth story in shreds", *Frontline*, July 5, 2019.) Soon after Subramanian left the job and went back to the U.S., former Union Finance Minister P. Chidambaram tweeted: "I am disappointed, but not surprised, that Dr Arvind Subramanian has decided to leave the government before the end of his term. Dr Arvind Subramanian was either not consulted or his views were brushed aside on many important issues." He added: "It is no longer a secret that the CEA was not consulted before demonetisation. The CEA's views on GST rates and his report on the Revenue Neutral Rate (RNR) were rudely brushed aside and, as a result, we have an animal that is not GST."

In short, two of the five members of the council worked with the Narendra Modi government and decided not to stay on because they differed with the rulers on what exactly constituted economics.

Jean Dreze, who worked with the second United Progressive Alliance (UPA) government, contributed significantly to the first draft of the National Rural Employment Guarantee Act (NREGA), which later became the Mahatma Gandhi NREGA. He is a right to food activist who works on issues such as hunger, famine and gender inequality.

Dreze is also not in the Modi government's good books. In March 2019, he was taken into "preventive custody" in Jharkhand along with two other activists for not getting permission before conducting a meeting. They were later released. ("Economists should also engage with popular movements and people at large", October 12, 2018.)

Esther Duflo won the Nobel Prize for economics in 2019 along with Abhijit Banerjee and Michael Kremer "for their experimental approach to alleviating global poverty".

The Nobel Prize website notes: "One of humanity's most urgent issues is the reduction of global poverty, in all its forms. Abhijit Banerjee, Esther Duflo, and Michael Kremer have introduced a new approach to obtaining reliable answers about the best ways to fight global poverty. It involves dividing this issue into smaller, more manageable, questions. Since the mid-1990s, they have been able to test a range of interventions in different areas using field experiments, for example for improving educational outcomes or child health."

S. Narayan co-authored a book on the welfare-oriented development policies in Tamil Nadu called *The Dravidian Years: Politics and Welfare in Tamil Nadu* ("Foundations of justice", *Frontline*, August 31, 2018). He has the rich experience of working with three Chief Ministers of Tamil Nadu—M. Karunanidhi, M.G. Ramachandran and J. Jayalalithaa—and later in the Atal Bihari Vajpayee government at the Centre.

TN GOVERNOR'S ADDRESS

The constitution of the council was revealed in the Governor's address to the Tamil Nadu Assembly on June 21. The customary address lays out the path for the government to adhere to during the year.

Governor Banwarilal Purohit said: "Based on the recommendations of this council, the government will revitalise the State's economy and ensure that the benefits of economic growth reach all segments of



V.V. KRISHNAN



VIA REUTERS

society. "In recent years, we have seen a slowdown in Tamil Nadu's economic growth rate. The government will make all out efforts to reverse this trend and usher in a period of rapid economic growth taking full advantage of the available limited window of the demographic dividend." He added that the council was being formed to "chart out a rapid and inclusive economic growth path for Tamil Nadu".

On June 22, Palanivel Thiagarajan, the State Finance Minister, said on Twitter: "I am privileged to work with individuals of such great talents and warm hearts. Each one accepted without even asking who the other members were. M.K. Stalin and I are grateful for their service and committed to acting quickly on their inputs—suo motu or in response to requests."

The Tamil Nadu's government's move came in for appreciation from economists and some political parties. Kaushik Basu, former CEA to the Government of India (2009-12) and former Chief Economist of the World Bank, tweeted on June 22: "The new economic advisers to the TN govt are terrific economists and individuals of integrity. A political leader needs courage to appoint advisers who will have the courage to disagree with leader. Congrats. This gives hope for good policy and growth." Economist Ratin Roy too said that the "distinguished senior council" will "serve the State well".

PTI

PALANIVEL THIAGARAJAN, Tamil Nadu Finance Minister, after attending the 16th State Assembly session, in Chennai on June 22.

Derek O'Brien of the Trinamool Congress said on Twitter: "Think Federal. April 2020: Bengal sets up Global Advisory Board with international experts to combat COVID-19. June 2021: Tamil Nadu appoints Economic Advisory Council with global experts so that financial benefits reach all. States act for the future."

WHITE PAPER ON FINANCES

As a first step to figure out the rot in the system, the State government has decided to come out with a white paper on Tamil Nadu's finances. The Governor said: "The fiscal health of the State is a cause for serious concern, and this government will focus on improving the fiscal position and bringing down the overall debt burden. As a first step, a report (white paper) detailing the true state of Tamil Nadu's finances will be released in the month of July, so that the people of Tamil Nadu are fully informed." The Comptroller and Auditor General's report on fiscal discipline for the year ended March 31, 2019, cites several issues, including over-projecting of revenue, runaway growth of revenue expenditure, using of borrowings to finance revenue expenditure (as against capital expenditure), lowering of development expenditure, decline in return on investment and increase in outstanding liabilities.

Thiagarajan said that before the DMK came to power, it was not aware of three things: one, the Union government would switch about Rs.50,000 crore from excise to cess (which is not shared with States); two, the scale of the second wave of COVID and the spending required (which, he said, would amount to several thousand crores of rupees); and three, the full extent of the fiscal decay. The Tamil Nadu government is expected to present the annual Budget in July and convey to the people of the State the true extent of its liabilities. The DMK government believes that this will constitute a starting point for its planning, even as a new COVID-19 variant, the Delta plus, is spreading across some parts of the country. □

தொழில்வளம் பெருகட்டும்

ஒரு நாடு அல்லது மாநிலம் வளர்ச்சிப்பாதையில் செல்ல தொழில் சார்ந்த திட்டங்களை அதிகரிக்க வேண்டும். அந்த வகையில் சென்னையில் தொழில் துறை சார்பில் நடந்த முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு என்ற நிகழ்ச்சியில் சுமார் ₹28,508 கோடி முதலீட்டில் 83,482 பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 49 திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். 35 தொழில் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் முன்னிலையில் கையெழுத்தாகி உள்ளது.

கொரோனா 2வது அலை தீவிரமாக பரவி வரும் சூழலில் முதல்வராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலினின் செயல்பாடுகளால், பரவல் வெகுவாக குறைந்துள்ளது. ஒருபக்கம் தொற்றை தடுக்க முழு வீச்சில் தடுப்பு பணிகள், மறுபுறம் மாநில வளர்ச்சிக்கான திட்டங்களையும் மேற்கொண்டு வருவது பாராட்டிற்குரியது.

தெற்காசியாவிலேயே தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை உயர்த்துவதே திமுக அரசின் லட்சியமென சென்னை தொழில் துறை விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியிருப்பது, இளைய தலைமுறையின் வேலைவாய்ப்பு கனவை நனவாக்கும் ஒரு மாபெரும் முயற்சியாகவே பார்க்கப்படுகிறது.

இதெல்லாம் எப்படி சாத்தியம் என்ற கேள்வி எழலாம். முந்தைய திமுக ஆட்சிக்காலத்தில் தொழில்துறையில் நிறைவேற்றியுள்ள திட்டங்களையே இதற்கான சாட்சியங்களாக கூறலாம்.

கடந்த 1996, டிசம்பரில் சென்னை, ஸ்ரீபெரும்புதூர் அருகே இருங்காட்டுக்கோட்டையில் ஹூண்டாய் கார் தயாரிப்பு தொழிற்சாலையை அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதி துவக்கி வைத்தார். இவரது ஆட்சிக்காலத்தில் அதிகளவு கார் தொழிற்சாலைகளை உருவாக்கப்பட்டதால், சென்னை "ஆசியாவின் டெட்ராய்ட்" என அழைக்கப்பட்டது. மேலும், சிப்காட் தொழில் வளாகங்கள், ₹338 கோடியில் தரமணி டைடல் பார்க் உட்பட ஏராளமான தொழிற்நுட்ப பூங்காக்களும் உருவாக்கப்பட்டன. சென்னை சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கரில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட்டது.

2006-11 திமுக ஆட்சியின்போது முன்னணி நிறுவனங்களுடன் 27 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, சென்னை சுற்றுவட்டார பகுதிகளில் 51 புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சுமார் 2.40 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். சேலம் உருக்காலை, ஏசியன் பெயிண்ட் தொழிற்சாலை, மணலியில் பெட்ரோ பிராடக்ட்ஸ் தொழிற்சாலை மற்றும் மதுரை, தூத்துக்குடி உள்பட பல இடங்களில் ஏராளமான தொழிற்சாலைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், தடையற்ற மின்சாரம் கிடைக்க அனல் மின் நிலையங்கள், ₹14,600 கோடி மதிப்பில் சென்னை மெட்ரோ திட்டம் போன்றவையும் திமுக ஆட்சியில்தான் உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த திமுக ஆட்சியில் தொழில்துறை அபார வளர்ச்சிப் பெறுவதற்கான சான்றுகள் ஏற்கனவே உள்ள நிலையில், தற்போதைய ஆட்சியிலும் அதற்கான முன்னெடுப்பு பணிகள் துவங்கி உள்ளதால், முதல்வர் குறிப்பிட்டது போல தெற்காசியாவில் தொழில் புரிவதற்கான சிறந்த மாநிலமாக தமிழகம் மாறப்போகும் நாள் வெகுதொலைவில் இல்லை.

தினத் தந்தி

DAILY THANTHI

22-July-2021

முதலீட்டாளர்களின் முதல் முகவரி–தமிழ்நாடு!

Stalin has also demanded withdrawal of the draft Cinematograph (Amendment) Bill, 2021, which seeks to give the Centre powers to reverse certifications given to films by the censor board. "Stalin is opposed to NEET and GST, in particular, and overall the attitude of the Union government towards states. On the demand for giving more powers to the states, Tamil Nadu's voice matters. Stalin, therefore, realises his unique role among influential voices in the country," says Manivannan.

Stalin has begun his chief ministerial innings on a promising note, showing that he has both the intent and ideas to transform governance. His administration has fulfilled some of the poll promises, such as free travel for women in ordinary fare buses across Tamil Nadu and slashing prices of 'Aavin' milk supplied by the state-run dairy. To show he walks the talk, Stalin, on his very first day in office (May 7), tasked an IAS officer with redressing public grievances he had received during the poll campaign. But several challenges await him, beginning with an anticipated third wave of Covid. "The Stalin government's policies and programmes and his governance model will be better known only after the pandemic is behind the state," says Moorthy. The Tamil Nadu CM will be a keenly watched administrator in the months ahead. ■

ister Sekar Babu on the job of visiting the major state government-run temples with the aim of retrieving portions of their vast properties lost to private lessees and sub-lessees over the decades. He has also got the list of properties of these temples uploaded online, apart from announcing various measures for streamlining temple management (see *The Great Temple Run*).

Dravidian rule, be it by the DMK or AIADMK, has been marked by an unedifying track record of corruption over the decades, so it has been a daunting task for Stalin to begin on a clean slate. "While the choice of bureaucrats for select posts, including in the CMO, suggests that he has picked some individuals with high integrity, the same cannot be said of all his ministers. Some ministers face cases and old complaints in departments commonly identified with corruption, such as municipal administration, highways and public works," says Jayaram Venkatesan, founder-convenor of Arappor Iyakkam, an anti-corruption watchdog in the state. Several cases filed by Arappor Iyakkam against ministers of the previous AIADMK government are pending with the state's Directorate of Vigilance and Anti-Corruption or are being heard by the courts. The DMK, too, had made allegations against AIADMK ministers during the assembly poll campaign and presented the governor with a 'corruption list' of the previous government.

As chief minister, Stalin will be expected to act on these cases that his party had raised. At present, he appears to be accommodative. What will eventually happen may also depend on how others act and react, especially those in the AIADMK, when he allows due process in pursuing corruption charges against former ministers. "Stalin is showing maturity. He can deal with compliments and criticism with great balance because he has spent long years being on the edge of

STALIN'S MAJOR CHALLENGE WILL BE THE PANDEMIC-HIT ECONOMY. THE STATE'S DEBT IS EXPECTED TO BE OVER Rs 5 LAKH CRORE IN 2021-22

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
04 Aug-2021

வீடு தேடிவரும் மருத்துவம்!

இப்போதெல்லாம் மக்களுக்கு பல சேவைகள் வீட்டின் கதவுகளை தட்டி அளிக்கப்பட்டு வருகின்றன. வங்கி சேவைகள்கூட வாசலிலேயே கிடைக்கிறது. கொரோனா தாக்கம் ஏற்பட்ட 16 மாதங்களாக மாணவர்கள்கூட ஆன்லைன் மற்றும் கல்வி தொலைக்காட்சி மூலம் வீட்டிலேயே இருந்துதான் படிக்கிறார்கள். இந்தநிலையில், நாளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் "வீடு தேடி மருத்துவம்" என்ற திட்டத்தை கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள சாமனப்பள்ளி என்ற குக்கிராமத்திற்கு நேரடியாக சென்று தொடங்கிவைக்கிறார். இது மிகவும் பாராட்டுக்குரியது, வரவேற்புக்குரியது.

தமிழ்நாட்டில் நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்த நோய் பரவலாக 40 வயதுக்கு மேற்பட்ட பலருக்கு இருக்கிறது. இவர்களெல்லாம் மருந்து, மாத்திரைகளை தினமும் தவறாமல் உட்கொள்ளவேண்டும். தனியார் மருத்துவர்களிடம் சென்று சிகிச்சைபெற்று, அவர்கள் எழுதிக்கொடுக்கும் மருந்து, மாத்திரைகளை பணம் கொடுத்து வாங்கமுடியாத ஏழைகள் ஏராளமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அரசு மருத்துவமனைகளுக்கு சென்றால், இலவசமாக டாக்டர்கள் மருத்துவ பரிசோதனை செய்வதோடு, தேவையான மருந்துகளையும் கொடுக்கிறார்கள்.

கொரோனா உச்சத்தில் இருந்த நேரத்தில், ஊரடங்கு காரணமாக போக்குவரத்து வசதியில்லாத காரணத்தால், இதுபோன்ற நோய் உள்ளவர்கள்

மருத்துவமனைக்கு செல்லமுடியாத நிலையில், கடந்த பல மாதங்களாக நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உடலில் சர்க்கரையின் அளவும், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு ரத்த அழுத்தத்தின் அளவும் அதிகமாகிவிட்டது. கொரோனா பாதிப்பும் இதுபோல இணை நோய்கள் உள்ளவர்களுக்கே அதிகமாக ஏற்படும் சூழ்நிலையில், இவர்கள் மருந்து, மாத்திரைகளை நாள் தவறாமல் உட்கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகிறது. கொரோனா உயிரிழப்புகளிலும் 60 சதவீதம் இந்த நோய்கள் உள்ளவர்களுக்கே ஏற்பட்டிருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில், நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், புற்றுநோய், காசநோய், சிறுநீரகநோய் உள்ளவர்களுக்கு, அவர்கள் வீடு தேடிபோய் மருந்து, மாத்திரைகளை வழங்குவதுதான் தமிழக அரசின் இந்தத்திட்டம். அதாவது, தற்போது அரசு மருத்துவமனைகளுக்கு வந்து மருந்து, மாத்திரைகள் வாங்குபவர்களின் வீடுகளுக்கே சென்று மருத்துவப் பணியாளர்கள் நேரடியாக வழங்குவார்கள். இதுமட்டுமல்லாமல், சிறுநீரககோளாறுக்கு டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படும் மக்களுக்கு, அவர்கள் வீட்டிற்கே கையில் எடுத்துக்கொண்டு செல்லக்கூடிய "போர்ட்டபிள்" டயாலிசிஸ் கருவியை கொண்டு சென்று சிகிச்சையளிப்பது இந்த திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இந்த திட்டம் நிச்சயமாக கிராமப்புற, மலைவாழ் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும்.

ஆரம்பத்தில் 20 லட்சம் பேருக்கு இவ்வாறு வீடுகளுக்கே சென்று மருந்து, மாத்திரைகள் அளிக்கவும், தொடர்ந்து ஒரு கோடி பேருக்கு இந்த திட்டத்தை செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. வயது முதிர்ந்தவர்கள் மருத்துவமனைகளுக்கு செல்வது என்பது, நிச்சயமாக பெரும் சிரமம். அவர்களுக்கு இந்தத்திட்டம் பெருமளவில் உதவியாக இருக்கும். மருந்து, மாத்திரைகள் கொடுப்பதோடு, அடுத்தக்கட்டமாக வயது முதிர்ந்தவர்களுக்கும், மருத்துவமனைகளுக்கு செல்ல முடியாதவர்களுக்கும் வீடு தேடிவந்து சிகிச்சையளிக்கும் திட்டத்தையும் தமிழக அரசு பரிசீலித்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

"வீடு தேடி மருத்துவம்" திட்டம்போல, சில நாட்களுக்கு முன்பு மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பெட்டம் முகிலாளம் என்ற மலைகிராமத்துக்கு உயர் அதிகாரிகளுடன் நடந்தேசென்று, இரவில் அங்குள்ள மக்களை சந்தித்து, பின்னர் அங்கு மின்விசிறி வசதிகூட இல்லாத ஆரம்ப பள்ளிக்கூடத்திலேயே தங்கியிருந்து, காலை எழுந்து 15 கி.மீ. தூரம் நடந்துசென்று 8 மலைகிராம மக்களை சந்தித்து, அவர்களின் குறைகளை கேட்டதோடு மட்டுமல்லாமல், தடுப்பூசிபோட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதும் மிகவும் பாராட்டத்தக்கது.

இதுவரை, அமைச்சர்களையே நேரில் பார்க்காத அந்த மக்களுக்கு, அமைச்சர் ஒருவர் தங்களை நேரில்வந்து சந்தித்ததும், தங்களோடு இரவில் தங்கியிருந்ததும் பெரும் மகிழ்ச்சியை அளித்தது. அமைச்சர் சென்றதுபோல தமிழ்நாட்டில் எல்லா கிராமங்களுக்கும் அதிகாரிகளும் நேரில்சென்று மக்கள் குறைகளை கேட்டால், ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

முரசொலி

04 Aug-2021

'திருநங்கை' என்ற வார்த்தையை அடைமொழியாக்கி அரசுடமையாக்கியவர் கலைஞர்!

முதல்வர் மு.க.ஸ்டாலினை கலைஞரின் மறு உருவமாகவே பார்க்கிறோம்!

முதல் திருநங்கை கவுன்சிலர் ரியா "குங்குமம் தோழி" இதழுக்குப் பேட்டி!

சென்னை, ஆக.4–

"குங்குமம் தோழி" – மாதமிருமுறை இதழில் மகேஸ்வரி நாகராஜன், ஆர். சந்திரசேகர் ஆகியோர் சுழகத்தின் சார் பில் கவுன்சிலர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முதல் திருநங்கை ரியா வைச் சந்தித்து பேட்டி கண்டனர். அவரது பேட்டியில் இருந்து சில பகுதிகள் வருமாறு:–

தங்களின் அரசியல் நகர்வு குறித்து...

என் அம்மா வழித் தாத்தா திராவிட இயக்கச் சிந்தனைகளைக் கொண்டவர். கலைஞர் மீது மிகப் பெரும் மதிப்புக் கொண்டவர். தன் மகன் அல்லது மகள் வழியில் யாரையாவது அரசியலுக்குள் கொண்டு வரவேண்டும் என்பதே அவரின் விருப்பம். அவர் மூலம் இயக்க சிந்தனைகள் எனக்குள்ளும் இருந்தது.

அப்போது நான் பெங்களூரு, சென்னை போன்ற ஊர்களில் திருநங்கைகள் நலன் சார்ந்து அமைப்பு ரீதியாக இயங்கிக் கொண்டிருந்தேன். 2008ல் கலைஞர் அவர்கள் 'திருநங்கை' என்கிற வார்த்தையை எங்களுக்கு அடைமொழியாக்கி 'அரசுடமையாக்கி'னார். அந்த பெயர் சூட்டிய போது நாங்கள் நாங்களாகவே இல்லை. 2009ல் திருநங்கைகள் நல வாரியத்தையும் எங்களுக்காகவே உருவாக்கினார். இந்தியாவில் எந்தவொரு மாநிலமும் நிறைவேற்றாத, தமிழகத்தில் மட்டுமே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அது.

தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தான் அப்போதைய துணை முதல்வராக இருந்தார். நலவாரியத் திட்டங்களை அவர் வரிசையாக அறிவித்தபோது, "ஒட்டுமொத்த சுதந்திரத்தையும் அவர்களுக்கு இந்த இடத்தில் பிரதிபலிக்கிறேன். அவர்கள் சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் சராசரி மனிதர்களாகப் பயணிக்கலாம். சுதந்திரக்காற்றை அவர்களும் சுவாசிக்க வேண்டும்" எனப் பேசினார்.

நலவாரியத் திட்டங்களை அறிவித்து இது உனது உரிமை என, எங்களுக்கான கல்வி, வேலை வாய்ப்பு, வீட்டுமனை, அடையாள அட்டை, ரேஷன் அட்டை, ஆதார் அட்டை என அனைத்திற்கும் வழிவகை செய்து அறிவிப்பை வெளியிட்டது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் தற்போதைய முதல்வர் ஸ்டாலின் அவர்களுமே.

சொந்த நாட்டில் அகதிகளாய் வாழ்ந்த நாங்கள், அதன் பிறகே சுதந்திரக் காற்றை சுவாசித்தோம். 2014ல் மாநிலங்களவையில் திருநங்கைகளுக்கான மசோதாவை திருச்சி எம்.பி.சிவா அண்ணன் அவர்கள் முனைப் போடு தாக்கல் செய்து ஒருமனதாக நிறைவேற்றிக் காட்டினார். இது எவ்வளவு பெரிய மாற்றம்.

தமிழ் நாட்டில் எங்களுக்கு நல வாரியம் அமைத்த தற்காகவும், மாநிலங் களவையில் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியதற்காகவும் கலைஞர் அவர்களை இரண்டு முறை நேரில் சந்தித்து அவரது அன்பையும், ஆசீர் வாதத்தையும் பெற்றேன்.

2019ல் திருநங்கைகள் அடிப்படை உறுப்பினராக கட்சியில் சேர்க்கப்படலாம் என்கிற

நன்றி : குங்குமம் தோழி

சிறப்புத் தீர்மானத்தை தளபதி ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்தார். அவரை கலைஞரின் மறு உருவமாகவே நாங்கள் பார்க்க ஆரம்பித்தோம். அப்போது உள்ளாட்சித் தேர்தல் அறிவிப்பும் வெளியானது. நான் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், கருவேப்பம் பட்டி தொகுதியில் நிற்பதற்காக அவரை நேரில் சந்தித்தேன். அவரும் அனுமதிக்க, 24 குக்கிராமங்கள் இணைந்த என் ஊரில் அனைவரின் ஒப்புதலைப் பெற்று மீண்டும் தளபதி ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வேட்புமனு தாக்கல் செய்தேன்.

திருநங்கை ஒருவர் தேர்தலில் நிற்கிறார் என்கிற செய்தி ஊடகங்களில் வெளியாக, என் கிராமத்தை நோக்கி ஊடக வெளிச்சம் பாய்கிறது. என் கிராமம் நட்சத்திரத் தொகுதியாக மாறி நிற்க, மக்கள் என்னை கொண்டாடுகிறார்கள்.

தேர்தல் வெற்றிக்கான அன்பை எப்படி சம்பாதித்தீர்கள்?

எனது கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு குடும்பமும் என்னை அவர்கள் வீட்டு பெண்ணாகப் பார்க்கத் தொடங்கினர். என் தொகுதியைச் சேர்ந்த பெண் குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள் என அனைவரின் ஆதரவும் எனக்கே இருந்தது. அவர்கள் எப்போதும் என்னுடனே இருக்கத் தொடங்கினர். என்னுடனே பயணித்தார்கள். அவர்களின் வீடுகளிலும் எனக்கே ஓட்டுபோட பெற்றோரை வலியுறுத்தினர். ஒரு வயதான அம்மா என்னிடம், "என் கை எப்போதும் இரட்டை இலைக்கு தான் போகும். என் பேத்தி சொன்னதால் உனக்காக முதல் முதலாக கை மாறி உதயசூரியனுக்கு போடுறேன்மா" என்றார்.

15 ஆண்டுகளாக அ.தி.மு.க.வின் ஆதிக்கம் நிறைந்த என் தொகுதியில், அவர்களே ஆட்சிப் பொறுப்பிலும் இருந்தனர். நான் எதிர்த்து நிற்பதை அறிந்து, 'இதுவா இது நின்னா நான் அசால்டா ஜெயிப்பேன்' என்று எள்ளி நகையாடினார். ஆண்களும் பெண்களுமாக 7600 ஓட்டுகள் கொண்ட கருவேப்பம்பட்டி தொகுதியில் நான் ஒருத்தி மட்டுமே திருநங்கை. எல்லா வார்டிலும் 100 ஓட்டு வித்தியாசத்தில் 947 வாக்குகள் முன்னிலையில், 2698 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றேன்.

இந்த மாற்றத்தை எப்படி உணர்கிறீர்கள்?

தமிழ் நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட மிகப் பெரிய அரசியல் கட்சியில் முதல் திருநங்கை கவுன்சிலர் நான். சமூகம் எங்களைப் புறக்கணித்து, கேலி கிண்டல் செய்கிறது என்கிற எண்ணம் தகர்ந்த நோயது. திருநங்கைகளுக்கு அரசியல் தெரியாது என்கிற போலியான பிம்பத்தையும் நான் உடைத்திருக்கிறேன். பாலினச் சீண்டல்கள் தற்போது சுத்தமாக எனக்கில்லை. மரியாதையுடன் ரியாமா என அவர்கள் வீட்டுப் பெண்ணாய் என்னைப் பார்க்கிறார்கள். இதற்கெல்லாம் அடித்தளம் அமைத்தவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர். அவர் இல்லையென்றால் நாங்கள் இல்லை. அவர் எங்களுக்கு பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் அதே கேலி கிண்டல்களுடன் எங்கள் சமூகம் அப்படியேதான் இருந்திருக்கும். கலைஞர் ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் திருநங்கைகளுக்காக உதவியது தொடர்பாய் ஆயிரம் புகைப்படங்களை ஆதாரமாய் என்னால் காட்ட முடியும். தற்போதைய முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஆட்சியிலும் அதுவே தொடர்கிறது.

இவ்வாறு 'குங்குமம் தோழி' ஆகஸ்ட் 1–15 இதழில் பேட்டி வெளியாகியுள்ளது.

முரசொலி
04 Aug-2021

நமது இயக்கத்தின் தலைவராகவும் – மகனாகவும் இருந்து கடமையாற்றிடும்

முதல்வர் மு.க.ஸ்டாலினின் உளப்பாங்கு கண்டு உளமார வாழ்த்துகிறேன்!

சட்டப் பேரவையில் கலைஞர் திருவுருவப் படத்திறப்பு குறித்து முதல்வருக்கு – பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் நெகிழ்ச்சிக் கடிதம்!

அன்புச் சகோதரர் தலைவர் முதல்வர் ஸ்டாலின் அவர்களே, வணக்கம்,

முதற்கண் வாழ்த்துகள்.

1957 ஆண்டு முதல் நீண்ட நெடுங்காலமாய் தமிழ் மொழிக்காகவும், தமிழர் நலனுக்காகவும் சட்டமன்றத்தில் ஒலித்த குரலுக்குச் சொந்தக்காரரான தங்கள் தந்தையும், எனது தந்தையின் உற்ற தோழருமான முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்தை, இந்திய ஒன்றியத்தின் குடியரசுத் தலைவரின் திருக்கரத்தால் திறந்து வைத்ததைக் கண்டு அகமகிழ்ந்தோம்.

அந்நிகழ்வில் கலந்து கொள்ள உங்களால் வாய்ப்புப் பெற்ற என் மகன் வெற்றிஅழகன், தான் சட்டமன்றத்தில் நேரிடையாகக் கண்டதை விரிவாக விவரித்தார். அதைக் கேட்டு நாங்கள் அனைவரும் பூரிப்படைந்தோம்.

நமது இயக்கத்தின் தலைவராகவும், மகனாகவும் இருந்து கடமையாற்றி உள்ள உங்களது உளப்பாங்கைக் கண்டு உளமார வாழ்த்துகிறேன்.

அயராது உழைப்பை நல்கியிருக்கும் தங்களுக்கு, சற்று ஓய்வு மிக அவசியம்.

ஆட்சியின் சுமை உங்களது கண்களில் தெரிகிறது. தமிழக மீட்பு என்ற பெரும் பயணம் தொடங்கியிருக்கும் தங்களுக்கு, உடற் சோர்வு இல்லாதிருக்க சற்று இளைப்பாறுதல் அவசியம்.



வாழ்க தங்கள் நற்றமிழர் தொண்டு!

வளர்க உங்கள் புகழ்!

வெல்க நம் அரசு!

வணக்கம்,

நட்புடன்,

அ.அன்புச்செல்வன்

3-8-2021

THE NEW INDIAN EXPRESS

05 Aug-2021



A model of the Secretariat was presented to President Kovind and TN Governor

SUCCESS STORIES SET IN STONE

The sculpture of TN's Secretariat building was the showstopper at the state legislature's centenary celebrations. Meet Arun Titan, the man behind the model

ROSHNE BALASUBRAMANIAN

August 2, 2021, marked a momentous occasion for Tamil Nadu. A solemn function, commemorating the centenary year of the state's legislature was conducted at the 17th century Fort St George, Tamil Nadu's seat of power. The celebrations, inaugurated by President of India, Ram Nath Kovind, was not just a matter of pride for the officials, but also for a motley group of creatives from the city-based art firm Silaii.

A little over a week before the historic event, the office of the Tamil Nadu government reached out to Arun Titan, founder of Silaii. "The opportunity came to me through someone I had met during my formative days as a photographer. He holds an important position in the government now and when they were thinking of creating miniatures of the Secretariat building, to be presented to the dignitaries, he thought of me. I was thrilled when this opportunity came by and my team and I started work immediately," recalls Arun, a visual artist and photographer.

The model, measuring almost 2 feet in width, was created using photographs of the structure for references. It was vital to get the details of the historic building right, informs Arun. "Detailing is very important when it comes to sculpting. Having a larger canvas helped us in creating the details with precision. It was a laborious and time-consuming task, the team hardly slept until the models were ready. But the effort was completely worth it!" he enthuses. The models were presented to dignitaries including President Kovind, and Governor of Tamil Nadu, Banwarilal Purohit, by chief minister MK Stalin.

Arun and his team have sculpted images of several political icons

On a creative pursuit

Silaii, the two-year-old venture, is a manifestation of Arun's vision — to fuse entrepreneurship with his creative pursuits. "Our country doesn't have a robust 'collectables culture' unlike foreign countries. From the models of Iron Man and other superheroes to anime characters, they have it all. However, here, it's very limited. We have limited merchandise specific to movies and most collectables are in a 2-dimensional format. My idea was to turn imageries — of stars, leaders, everyone and everything into 3-D models," he details. As a larger vision,

> Our country doesn't have a robust 'collectables culture' unlike foreign countries. We have limited merchandise specific to movies and most collectables are in a 2-dimensional format.
>
> Arun Titan, Silaii

Arun points that this meant bringing together skilled sculptors, chalking an organised and sustainable model for their livelihoods and taking the creations to the public. "We are working towards this model," he says.

"We create sculptures that are rooted, offering a touch-and-feel experience, and an emotional connection to our patrons. We also take custom orders. We've had people ask us to recreate models of their late parents, just so that they continue to be a part of their lives. What we do is beyond just a creative pursuit or business," shares the alumni of The Government College of Fine Arts.

Silaii's products are a combination of stone powder and resin. "We didn't want to create fragile hollow models. The durability of our sculptures are important to us and we ensure the components aid us in achieving it," he adds.

Making merchandise

During the release of director Lokesh Kanagaraj's movie *Master* starring actor Vijay, the brand turned the official merchandise partner for the film. As part of the promotions, models of the actor's character from the film, measuring almost two-and-a-half feet were created by Silaii. "We had stalls, and the sculptures were also displayed in cinema halls and mall complexes like Sathyam, PVR and Phoenix MarketCity. This propelled us towards more opportunities," he shares, adding that their products are available at Imen Connexions, Starmark and Odyssey.

From sculptures of Dravidian icons like Periyar, Anna and M Karunanidhi; actor-politician MGR, poet Thiruvalluvar, poet Bharathiyar, actor-politician J Jayalalithaa, former President late APJ Abdul Kalam to economist-politician BR Ambedkar, Silaii has been consistently adding more names and figures to its catalogue. "We receive a minimum of 100 calls a day inquiring about our sculptures. We have been continuously attempting to integrate new dimensions and technologies into our work. But we are stepping on the gas patiently to ensure the quality isn't compromised. Currently, we are working on a few requests including recreating a model of the Gandhi statue at the Delhi Museum and another for the Tamil Heritage Trust. We are also looking for investors to scale our brand," he shares.

The sculptures are priced from ₹999 onwards. For details, visit: www.silaii.com

தினமலர்
உண்மையின் உரைகல்
07 Aug-2021

ஓசூர் பெண்ணிடம் பேசிய முதல்வர்

ஓசூர், ஆக. 7–

ஓசூர் பெண்ணிடம் முதல்வர் ஸ்டாலின், நான்கு நிமிடங்கள் பேசினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி அருகே சாமனப்பள்ளியில், 'மக்களை தேடி மருத்துவம்' திட்டத்தை நேற்று முன்தினம் துவக்கி வைத்த முதல்வர் ஸ்டாலின், ஓசூர் உழவர் சந்தை சாலையில் காரில் சென்றார்.

அப்போது, சாலையோரம் காத்திருந்த பத்மநாபன் என்பவரின் மனைவி ரம்யா, 42, முதல்வர் ஸ்டாலினின் முக கவசத்தை எடுக்குமாறு கூறி ரசித்தார்.

தன் மொபைல் போன் எண் குறிப்பிட்ட கடிதத்தையும், முதல்வரிடம் ரம்யா வழங்கினார்.

இந்நிலையில், ரம்யா மொபைல் போனுக்கு நேற்று முன்தினம் மாலை 6:00 மணிக்கு மேல், 'லேண்ட் லைனில்' அழைப்பு வந்தது. அதில், முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

ரம்யா

அவரிடம் பேசிய ரம்யா, ''தரமான சாலைகள் அமைத்து, நதிகளை இணைத்தாலே தமிழகம் எங்கோ சென்று விடும். நீங்கள் மக்கள் முதல்வராகி விட்டீர்கள் சார்.

''உங்களிடம் பேச முடியும் என நான் நினைக்கவே இல்லை

இது ரொம்ப ஆண்டுக்கு தொடர வேண்டும். ரொம்ப நன்றி சார், போன் செய்து பேசியதற்கு,'' என்றார்.

''என் தந்தையிடம் பேச முடியுமா,'' என ரம்யா கேட்க, ''கட்டாயமாக பேசுறேன், இருக்காங்களா,'' என ஸ்டாலின் கேட்க, ''அப்பா ஊரில் இருக்கிறாங்க.

''கான்பரன்ஸ் கால் செய்யவா,'' என ரம்யா கேட்க, ''வந்த பின் போன் செய்து கொடுங்கள்,'' என்றார் ஸ்டாலின். தொடர்ந்து, அவரது மகள் விஷ்மயாவுடனும் முதல்வர் பேசினார்.

நக்கீரன்

07 Aug-2021

கர்வத்தோடு வாழ்வதற்கு காசு, பணம், நகை, வீடு தேவையில்லை
"நம்மை நேசிக்க ஒரே ஒருவர் இருந்தால் போதும்

க லைஞரின் மரணத்தின்போது இரங்கல் கவிதையை வாட்ஸ்ஆப்பில் பகிர்ந்தவர் தலைமைக் காவலர் செல்வராணி. திருச்சி மாநகரம் பொன்மலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணியாற்றி திருச்சி காவல் ஆணையர் அலுவலகத்தில் முகநூல் பிரிவில் தலைமைக் காவலராகப் பணியாற்றி வந்த செல்வராணி ராமச்சந்திரன், கலைஞருக்காக இயற்றிய இரங்கல் கவிதை, சமூக ஊடகங்களில் வைரலானது. அந்த இரங்கல் கவிதைக்காக மெமோ அனுப்பியது காவல்துறை. அந்த இரங்கல் கவிதையில் கலைஞரை அப்பா என்று குறிப்பிட்டிருந்தார் செல்வராணி. அதுதான் அன்றைய அ.தி.மு.க. அரசின் காவல் துறைக்கு கோபத்தை வரவழைத்தது.

மெமோவுக்கு பதில் தந்து, நேரில் விளக்கம் அளித்த செல்வராணி, 'ஜெயலலிதாவை 'அம்மா' என்று காவல்துறை அதிகாரிகள் சொல்வதுபோலத்தான் கலைஞரை 'அப்பா' என்றேன்' எனத் தெரிவித்திருந்தார். அவருடைய பதிலோ, விளக்கமோ ஏற்கப்படாத நிலையில், அவரை நாகப்பட்டினத்துக்கு இடமாற்றம் செய்து உத்தரவிட்டனர். இதனால் தனது பணியை இராஜினாமா செய்தார் தலைமைக் காவலர் செல்வராணி. அதன்பின் திருச்சி சென்ற மு.க.ஸ்டாலின், செல்வராணியையும் அவரது குடும்பத்தாரையும் வீடு தேடி சந்தித்ததுடன், கலைஞரை அப்பா எனக் கவிதை எழுதிய செல்வராணியைத் தன் தங்கையாகக் கருதுவதாக ஊடகங்களிடம் தெரிவித்தார். இயக்கப்

விடுப்பு சலுகை வசதி!

நிம்மதி பெருமூச்சுவிடும் காவல்துறை!

நக்கீரன் 2021 ஆக. 07-10 21

நக்கீரன்

07 Aug-2021

உடன் இருப்பதால் மட்டும் உறவுகளாகிவிட முடியாது. எங்கேயோ இருந்துகொண்டு நமக்கு ஒன்று என்றால் துடிக்கும் ஒவ்வொரு இதயமும்தான் உண்மையான உறவுகள்

பணிகளிலும் பொதுநலத்திலும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார் செல்வராணி.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு அமைந்த பிறகு, காவல்துறை சார்பாக இரண்டு முக்கிய அறிவிப்புகள் வெளியானது. ஒன்று 'வி.வி.ஐ.பி.கள் வரும்போது பெண் காவலர்கள் பாதுகாப்பு பணியில் சாலையில் நிற்பது கூடாது' என்பது. மற்றொன்று, 'கண்டிப்பாக வாரத்திற்கு ஒருமுறை காவலர்களுக்கு விடுப்பு வழங்கவேண்டும்' என்பது. இதனை அடுத்து, பந்தோபஸ்து உள்ளிட்ட வெளியிடப் பணிகளில் இருக்கும் காவலர்களுக்காக கழிப்பறையுடன் கூடிய நடமாடும் ஒய்வறை வாகனமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக, மு.க.ஸ்டாலினை 'ஆண் தாய்' என குறிப்பிட்ட செல்வராணியிடம், 'தற்போதைய நடவடிக்கைகள் என்ன பலன் தரும்' எனக் கேட்டோம்.

"முதல்வர் அவர்கள், பெண் காவலர்கள், வி.வி.ஐ.பி.கள் வரும்பொழுது சாலையோர பாதுகாப்பில் நிற்க வேண்டாம் என்ற அறிவிப்புக் கண்டு வியந்துபோனேன். என்ன ஒரு ஆழமான சிந்தனை. பெண் காவலர்களின் மனநிலையை யாருமே இதுவரை புரிந்ததில்லை. நாங்கள் புரிய வைக்க முயற்சித்து, முயற்சித்து பலமுறை தோற்றுப்போயிருக்கிறோம். ஒரு பெண் முதலமைச்சராக இருந்தபோதும்கூட எங்களின் நிலையை அவர்கள் உணரவே இல்லை. 'ஒரு பெண்ணின் வலி இன்னொரு பெண்ணுக்குத்தான் தெரியும்' என்பதெல்லாம் பொய்த்துப் போய்விட்டது. ஒரு பெண்ணின் வலி ஆணுக்கும் தெரியுமென நிரூபித்திருக்கிறார் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 21 ஆண்டுகள் காவல்துறை பணியில் இருந்திருக்கிறேன். கர்ப்பிணியாக இருக்கும் போதும் இரவுப்பணிகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும்.

வி.வி.ஐ.பி.கள் வருகை என்றால் பலமணி நேரங்களுக்கு முன்னதாகவே ரோட்டுக்கு போய்விட வேண்டும். சாப்பாட்டைப் பற்றியோ, இயற்கை உபாதைகளைப் பற்றியோ யாரும் கவலைப்பட மாட்டார்கள், கவலைப்பட்டதும் இல்லை. ஆனால் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'நடமாடும் ரெஸ்ட் ரூம்' வாகன வசதியை பெண் காவலர்களுக்கு செய்து கொடுத்திருப்பது கண்டு கண்கள் ஆனந்தத்தில் நனைகிறது.

2005-ல் அம்மையார் ஜெயலலிதா திருச்சிக்கு வருகிறார். எனக்கு திருச்சி விமான நிலைய சாலையில்தான் பணி. நாலுமணி நேரத்துக்கு முன்னதாகவே ரோட்டில் பார்க்கும் இடத்துக்கு போய்விட வேண்டும். என் நான்கு மாத கைக்குழந்தையை பால் கொடுத்து வீட்டில் விட்டுட்டு ரோட்டிக்கு வந்து விட்டேன். குழந்தை வீட்டில் பசியில் கத்திக் கொண்டிருப்பதாக தகவல் வருகிறது. குழந்தை பசியில் அழற செதி கேட்டதுமே, பால் கசிந்து என் காக்கி உடை நனைந்துகொண்டிருக்கிறது. ஆண் காவலர்களின் மத்தியில் கூனிக் குறுகிப்போய் நின்றேன். தண்ணீரை எடுத்து நெஞ்சு முழுவதும் நனைத்துக்கொண்டேன். யாராவது கேட்டால், 'தண்ணீர் குடிக்கும்போது தவறி சட்டையில் ஊத்திவிட்டது' என்று சொல்லலாம் என்று.

> "குழந்தையை ஆட்டோவில் கொண்டுவரச் சொல்லி நான் ரோட்டி பார்த்த இடத்திலேயே ஆட்டோவில் அமர்த்து என் மகளுக்கு பாலூட்டி அனுப்பினேன்."

பால் கொடுக்க அனுமதி கிடைக்கவில்லை. வருவது வி.வி.ஐ.பி. என்பதால் ஆப்செண்ட் ஆனால் தொல்லை. ஆகவே குழந்தையை ஆட்டோவில் கொண்டுவரச் சொல்லி நான் ரோட்டி பார்த்த இடத்திலேயே ஆட்டோவில் அமர்த்து என் மகளுக்கு பாலூட்டி அனுப்பினேன். இதைச் சொல்ல நான் வெட்கப்படவில்லை. யார் என்ன

www.nakkheeran.in

மன வலிமை உள்ளவர்களால் மட்டுமே மனதில் உள்ள காயங்களை மறைத்து சிரிக்க முடியும்

நினைப்பார்களோ என்று நான் கவலைப்படவும் இல்லை. யாருமே வலியை எழுதாவிடில் எப்படி வலி பிறருக்குத் தெரியும்? இந்த மாதிரியான சிரமங்களைக் கடந்த என்னைப் போன்ற பெண் காவலர்களால்தான் முதல்வர் அவர்களின் இந்த அறிவிப்பையும் தாயுள்ளத்தையும் கொண்டாட முடியும்.

1973-ல் கலைஞர்தான் முதன்முதலில் பெண் காவலர்களை பணிக்கு அமர்த்தினார். ஒரு அரசியல் சாணக்கியனால்கூட சிந்தித்து செயல்படுத்த முடியாத ஒன்றை, அவர் பெற்ற பிள்ளை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்துவதைக் கண்டு மகிழ்கிறேன். இவற்றையெல்லாம் கண்டு மகிழ கலைஞர் இன்று இல்லையே என்று வருந்துகிறேன்.

காவலர்கள் போதுமான நேரத்தை குடும்பத்தோடு செலவிட முடியாததால்தான் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். மனைவி, குழந்தைகளோடு சேர்ந்து மூன்றுவேளை உணவு கூட உண்டிருக்கமாட்டார்கள். அதனால்தான் காவலர்கள் பெரும்பாலும் விரக்தியில் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அறிந்து வாரத்தில் ஒருநாள் விடுமுறை அறிவித்திருப்பது காவலர்கள் மத்தியில் அளவற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

முதலமைச்சரை காவலர் குடும்பங்கள் கொண்டாடுகிறார்கள். நிறைய காவலர்களின் குடும்பத்தில் உள்ளவர்கள், 'ஸ்டாலின் நல்லா இருக்கணும்'னு வாழ்த்துகின்ற செய்தியை என் காதால் கேட்கும்பொழுது ஆனந்தமாய் இருக்கிறது. முதல்வரைக் காணும் ஒவ்வொரு பெண் காவலர்களுக்கும் முதல்வர்மீது கொண்ட தாயன்பும் மதிப்பும் மரியாதையும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. எத்தனை எத்தனை போராட்டங்கள், அவமானங்கள், புறக்கணிப்புகள். எல்லாவற்றையும் கடந்து போராடி ஆட்சியைப் பிடித்த பின்னும் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் ஆகச்சிறந்த உழைப்பாளியை நாம் பாராட்டத்தான் வேண்டும். முன்னாள் காவலர் என்ற முறையிலும், தங்கை என்ற மகிழ்ச்சியிலும் இரு கரம் கூப்பி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார். காவலர் பணியை உதறித் தள்ளிய செல்வராணியின் மனநிலையில்தான் இருக்கிறார்கள், பணியில் இருந்துவரும் பெண் காவலர்கள்.

தி.மு.க. தன் தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்த வாக்குறுதிகளில் ஒன்றைத்தான் ஆட்சிக்கு வந்தபிறகு நிறைவேற்றியிருக்கிறார் முதல்வர். அதனை நடைமுறைப் படுத்துவதில் முனைப்பாக இருக்கிறார் டி.ஜி.பி. சைலேந்திரபாபு. காவலர்களுக்கு வாரம் ஒரு நாள் விடுப்பு, வி.வி.ஐ.பி. வருகையின்போது பெண் காவலர்களை பாதுகாப்பு பணிக்கு அனுப்புவதிலிருந்து விலக்கு போன்ற நடவடிக்கைகள் காவல்துறையில் பணியாற்றுவோரை நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்திருக்கிறது.

-ராஜுவேல்

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
08 Aug-2021

மருத்துவப் படிப்பில் ஓபிசி-க்கு 27% இடஒதுக்கீடு

முதல்வருக்கு பிற்படுத்தப்பட்டோர் அமைப்புகள் நன்றி

சென்னை

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை, அகில இந்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பின் தலைவரும், ஓய்வுபெற்ற நீதிபதியுமான வி.ஈஸ்வரய்யா, சமூகப் புரட்சி கூட்டணித் தலைவர் நீதியரசர் வீரேந்திர சிங் யாதவ், உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ராஜீவ் ரஞ்சன் ராஜேஷ், டெல்லி பல்கலைக்கழக பேராசிரியர் அவதேஷ் கர்சா, அகில இந்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பு செயல் தலைவர் ஹன்ஸ் ராஜ் ஜங்கரா, உத்தரப் பிரதேச மாநிலத் தலைவர் ஸ்ரீகாண்ட் பால், எஸ்.சி., எஸ்.டி. மற்றும் ஓபிசி மாணவர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் லட்சுமி நரசிம்ஹா ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்பில் 27 சதவீத இடஒதுக்கீட்டை மத்திய அரசிடம் வலியுறுத்தி, பெற்றுத் தந்ததற்காக முதல்வருக்கு அவர்கள் நன்றி தெரிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் உடனிருந்தார்.

பின்னர், முதல்வரிடம் பல்வேறு அமைப்பினர் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: மருத்துவப் படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடானது, தங்களாலும், தங்களது சட்டக் குழுவினரின் முயற்சியாலுமே கிடைத்துள்ளது. இதன்மூலம் ஓபிசி பிரிவினருக்கான சமூக நீதி காப்பாற்றப்பட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஜாதி வாரிக் கணக்கெடுப்பு தொடர்பாக நாங்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விவசாயிகளின் விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்க வேண்டும். மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி முதல் முதுநிலை பட்டப் படிப்பு வரை தரமான கல்வி வழங்க வேண்டும்.

நிர்வாகம், செயல்பாடு, சட்டம், நீதித் துறை மற்றும் தனியார் துறைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை முறையாக வழங்க வேண்டும்.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கு தனி துறை அமைக்க வேண்டும். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கான இடஒதுக்கீட்டை வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் அனைவருக்கும் வழங்க வேண்டும்.

அதில் இனப் பாகுபாடு கூடாது என்றும் நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். தங்களது தலைமை மற்றும் வழிகாட்டுதலில் இந்தக் கோரிக்கைகளை வென்றெடுப்போம் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

08 Aug-2021

புதிய நம்பிக்கை

'ஸ்டாலின்தான் வாராரு, விடியல் தரப்போறாரு' என்ற பிரசார முழக்கத்துடன் தமிழக தேர்தல் களத்தில் இறங்கிய திமுக, வெற்றி பெற்று வாகை சூடியது. மு.க.ஸ்டாலின் முதல்வராக பணியில் அமர்ந்த கையோடு அடுத்தடுத்து எடுத்து வரும் நடவடிக்கைகளால் அதிமுக ஆட்சிக் காலத்தில் இருண்டு போன தமிழகம் விடியலை காண துவங்கியுள்ளது.

தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் திமுகவுக்கு நிகர் வேறு எந்த கட்சியும் இல்லை என்பது வரலாறு. கடந்த மே மாதம் முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்றதும், ரேஷன் அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணம், பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணம், ஆவின் பால் விலை குறைப்பு உள்ளிட்ட 5 தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் முதல் கையெழுத்து போட்டார். தொடர்ந்து வாக்குறுதிகளை நிறைவேற்றிவரும் மு.க.ஸ்டாலின், அடுத்ததாக நிறைவேற்ற உள்ள வாக்குறுதி மிக முக்கியமானது.

இந்த ஆண்டு வேளாண்துறைக்கென தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்பதுதான் அந்த அறிவிப்பு. இந்த நிதியாண்டுக்கான, பொது பட்ஜெட்டை தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வரும் ஆகஸ்ட் 13ம் தேதி சட்டப்பேரவையில் தாக்கல் செய்ய உள்ளார். அதற்கு அடுத்த நாள் வேளாண்துறைக்கான தனி பட்ஜெட்டை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்கிறார் என்ற அறிவிப்பு விவசாயிகள் மத்தியில் புதிய நம்பிக்கையை விதைத்திருக்கிறது. விவசாயம் தமிழக பொருளாதாரத்தின் முதுகெலும்பு. தமிழ்நாட்டில் 35 சதவிகித ஜி.டி.பி விவசாயத்திலிருந்துதான் வருகிறது. ஆனால், விவசாயிகளுக்கு கட்டுப்படியான வருமானம் இல்லை. அவர்களின் வாழ்வை மேம்படுத்த, தனி பட்ஜெட் அவசியம். இது விவசாயிகளின் நீண்டகால கோரிக்கை. கடந்த அதிமுக ஆட்சியில், வேளாண்மைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்ய தொடர்ந்து விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர். ஆனால், அதிமுக அரசு அனைத்தையும் நிராகரித்து வந்தது.

இப்போது, திமுக ஆட்சி அமைந்ததும் விவசாயிகளின் நலன் காக்க வேளாண்மைக்கு தனி பட்ஜெட் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது.

விவசாய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டால், சாகுபடி பரப்பளவு உயரும். விளை பொருள்களுக்கான சந்தை வசதி முறைப்படுத்தப்படும். மகசூல் பெருக்கத்திற்கான நவீன தொழில்நுட்ப வசதிகள் கிடைக்கும். பாரம்பரிய விவசாய முறைகளை மேம்படுத்துவதற்கான தனி திட்டங்கள் வகுக்கப்படும். வேளாண்மை தொழிலை லாபகரமான தொழிலாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தமிழகத்தில் சுமார் 45 லட்சம் ஹெக்டேர் நிலம் விளை நிலமாக உள்ளது. தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டு, விளை நிலங்களின் பரப்பளவு அதிகரிக்கும் வகையில் பட்ஜெட்டில் அறிவிப்புகள் வெளியாகும் என எதிர்பார்ப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வேளாண்மைக்கு தனி பட்ஜெட் என்ற முதல்வர் மு.க.ஸ்டாலினின் புது முயற்சி வெற்றி பெற்று உணவு உற்பத்தியில், தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

முரசொலி

09 Aug-2021

மக்கள் தேடிய அரசு!

'**ம**க்களைத் தேடி மருத்துவம்' – என்ற மகத்தான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்திருந்தார். கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலத்தில் மக்களைக் காக்கும் மகத்தான பணியைச் செய்து முடித்த முதலமைச்சரின் மீண்டுமொரு சிறந்த திட்டமாக 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கே முன்மாதிரியான திட்டமாக இது ஆகிவிட்டது.

இந்த திட்டத்தைத் தொடக்கி வைத்து பேசிய முதலமைச்சர் அவர்கள், **"மருத்துவமனை களைத் தேடி மக்கள் வரும் சூழலை மாற்றும் வகையில் மக்களைத் தேடி மருத்துவம் செல்லும் காலத்தை உருவாக்கி இருக்கி றோம்.நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுக்கே சென்று சில அவசியமான மருத்துவச் சேவைகளை வழங்கப் போகிறோம்.45 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் இயலாமையில் உள்ள நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உடல் பரிசோதனைகள் செய்யப்பட இருக்கிறது. பொதுச் சுகாதாரப் பணியாளர்கள், தன்னார்வலர்கள் இதில் பங்கெடுத்து சேவையாற்ற இருக்கிறார்கள். அனைவருக்கும் நலவாழ்வு என்ற திட்டத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டமாக 1264 பெண் சுகாதாரத் தன்னார்வலர்களும், 50 இயன்முறை மருத்துவர்களும், 50 செவிலியர்களும், இல்லம் தேடி வரும் இந்த சேவையில் ஈடுபடுத்தப் படுவார்கள்.**

இவை படிப்படியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டின் இறுதிக்குள் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும். அவர்களுக் கான கூடுதல் சிகிச்சைகளை மருத்துவமனைகளில் வழங்குவோம். இதற்காக முதல் கட்டமாக 242 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல்கட்டமாக 30 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு கோடி மக்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்." என்று சொன்னார்.

இந்தத் திட்டம் எப்படி செயல்படப் போகிறது, மக்களுக்கு எத்தகைய பயனைத் தேடித் தரப்போகிறது என்பதை மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தினார் முதலமைச்சர்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக திருச்சியில் நடந்த மாபெரும் கூட்டத்தில் ஏழு உறுதிமொழிகளை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்தார்கள். அதில் ஒன்றுதான் 'அனைவருக்கும் நலவாழ்வு' என்பதாகும். அத்தகைய தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாகத் தான் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

திட்டமானது தொடங்கியதுமே அதற்கான உரிய பலனைத் தந்துவிட்டது. அத்தகைய உடனடி பலனை முதலமைச்சர் அவர்களும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். இந்தப் பலன் குறித்து மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியம் நேற்றைய தினம் சொல்லி இருப்பதைப் பார்க்கும் போது நல்வாழ்வுத் துறையே 'மாரத்தான்' வேகம் பிடித்திருப்பதை உணர முடிகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட இரண்டே நாட்களில் 13 ஆயிரத்து 247 பேர் பயனடைந்துள்ளனர். அதிகபட்சமாக திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆயிரத்து 22 பேரும், கோவை மாவட்டத்தில் 969 பேரும், சேலம் மாவட்டத்தில் 800 பேரும், சென்னையில் 753 பேரும் பயனடைந்துள்ளார்கள். இந்த திட்டத்தின் மூலமாக 3 ஆயிரத்து 722 நீரிழிவு நோயாளிகளுக்கு 2 மாதத்திற்கு தேவையான மருந்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. ரத்த அழுத்தத் தினால் பாதிக்கப்பட்டிருந்த 5 ஆயிரத்து 816 பேருக்கு ரத்த அழுத்தத்திற்கான மருந்துகள் கொடுக்கப் பட்டுள்ளன. நீரிழிவு, ரத்த அழுத்தம் ஆகிய 2 இந்த நோய்களாலும் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 768 பேருக்கு 2 நோய்களுக்கான மருந்துகள் கொடுக்கப் பட்டுள்ளன.

நீண்ட நாள் சிகிச்சையில் இருப்பவர்கள் 426 பேருக்கு மருந்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் 454 பேருக்கு 'பிசியோதெரபி' செய்யப்பட்டுள்ளது. 11 பேருக்கு நாளை 'டயாலிசிஸ்' செய்யும் உபகரணம் உள்பட. **இதுவரை மொத்தமாக தமிழகத்தில் 13 ஆயிரத்து 247 பேர் கடந்த 2 நாட்களில் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தில் பயனடைந்துள்ளார்கள். இது வெறும் புள்ளிவிபரம் அல்ல. இத்தனை ஆயிரம் மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளி வீசியிருக்கிறது கடந்த இரண்டே நாளில். அதுதான் முக்கியமானது.**

வீடு தேடி மருத்துவம் என்ற சேவையின் மூலமாக மக்களை நேரடியாக அரசே கவனிக்கிறது. அவர்களுக்கு நிலையான சேவையை அரசே தருகிறது. ஒரு குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் மருத்துவ சேவை கிடைக்கிறது. இன்னும் சொன்னால், ஒரு குடும்பம் எத்தகைய நலத்துடன் இருக்கிறது என்பதை அரசு அறிந்து கொள்கிறது. ஒரு குடும்பத்தின் நலன் குறித்த பதிவேடானது அரசாங்கத்திடம் இருக்கப் போகிறது. மக்கள் நலன் காக்கும் அரசு இப்படித்தான் செயல்படும்.

உடல் நலம் பாதிக்கப்படும் அனைவரும் மருத்துவமனைகளுக்கு வருவது இல்லை. பொருளாதாரச் சூழல் மட்டுமல்ல, மனரீதியாகவே, 'நமக்கு எங்கே குணமாகப் போகிறது?' என்ற எண்ணத்தோடு வீட்டிலேயே முடங்கிக் கொள் கிறார்கள். மருத்துவத்துக்கு முன்னதாக இருக்கும் 'பயணம்' என்பது கூட மக்களுக்கு மலைப்பை ஏற்படுத்துவதாக இருக்கிறது. அதனாலேயே மருத்துவ மனைகளுக்குச் செல்வதை கிராமப்புற மக்கள் தவிர்த்து விடுகிறார்கள். இதனாலேயே நோய்கள் முற்றிவிடுகிறது. குணப்படுத்த சிரமம் ஏற்படுத்துகிறது.

இதனை நாம் கொரோனாவிலேயே பார்த்தோம். லேசான காய்ச்சல் வந்ததும் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றால், குணப்படுத்துவது எளிது. ஒருவாரம் கடந்துவிட்டால், அதுதான் மூச்சுத்திணறலை ஏற்படுத்துகிறது. நுரையீரலைப் பாதிக்கிறது. உயிரைப் பறித்தும் விடுகிறது. இதுபோன்ற அவலங்கள் இனி நிகழக்கூடாது என்றால் அதற்கான திட்டமிடுதல் தேவை என்று தமிழ்நாடு முதலமைச்சர் நினைத்தார். அதற்கு ஏற்பத் தீட்டப்பட்டதுதான் 'மக்களைத் தேடி மருத்துவம்' ஆகும்.

மக்கள் தேடிய அரசு அமைந்ததால்தான் மக்களைத் தேடி மருத்துவம் வருகிறது!

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
09 Aug-2021

வேளாண் துறைக்கு தனி பட்ஜெட்:

தமிழக அரசுக்கு ஜக்கி வாசுதேவ் பாராட்டு

சென்னை, ஆக.9-

ஈஷா அறக்கட்டளை நிறுவனர் ஜக்கி வாசுதேவ் தனது டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

வரலாற்று சிறப்புமிக்க வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்யவிருக்கும் தமிழக அரசுக்கு பாராட்டுகள். மிக தொன்மையான வேளாண் பாரம்பரியம் கொண்ட, இயற்கைவிவசாயத்தில் முன்னோடியான தமிழகம் இதன் மூலம் மகத்தான பொருளாதார, சுற்றுச்சூழல், ஆரோக்கிய பலன்களை நிச்சயம் பெறும். வாழ்த்துகள் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், ஜக்கி வாசுதேவ் வெளியிட்டுள்ள அறிக்கையில், இயற்கை வேளாண்மைக்கு தனி கவனம், உழவர் சந்தைகளுக்கு புத்துயிர் அளித்தல், கிராம சந்தைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் போன்ற முக்கிய அம்சங்கள் இடம்பெறும் என முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இவை அனைத்தும் வரவேற்கத்தக்க அம்சங்கள் ஆகும் என்று கூறியுள்ளார்.

வெள்ளை அறிக்கை வெளியீடு

புதுமையான அமைதி புரட்சி

கி.வீரமணி பாராட்டு

தஞ்சை, ஆக. 11- தி.க. தலைவர் கி.வீரமணி தஞ்சையில் நேற்று அளித்த பேட்டி:

தமிழக நிதி அமைச்சர் சிறப்பான வகையில் நிதி நிலை குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு எதையும் ரகசியம் காக்காமல் வெளிப்படைதன்மையை கடைபிடிப்பதை இது காட்டுகிறது. இந்த அறிக்கையை பொறுத்தவரை நான் முழு பொறுப்பேற்கிறேன் என நிதியமைச்சர் கையெழுத்திட்டு, இந்தியாவிலேயே புதுமையான அமைதி புரட்சியை செய்துள்ளார். தமிழகத்தில் நல்ல அரசு அமைந்துள்ளது.

அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல்கள் கிழடி போல் தோண்ட தோண்ட வரும். முக கவசத்தில் கூட ஊழல் செய்துள்ளனர். இது பழிவாங்கும் செயல் அல்ல. ஆதாரத்தோடு அவர்கள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சோதனையில் பணம் கைப்பற்றப்பட்டுள்ளது. யார், யார்? பினாமி என்பது தெரிய வந்துள்ளது. ஊழலில் சிக்கிய சாதாரண ஒரு அமைச்சரின் மகன் ஹெலிகாப்டர் வைத்துள்ளதாக தகவல் வருகிறது. ஜெயலலிதா இருந்திருந்தால் இவர்கள் ஹெலிகாப்டரில் பறப்பார்களா? ஹெலிகாப்டர் கீழே நின்று குனிந்தவர்கள் தான் இவர்கள். இதெல்லாம் எப்படி வந்தது. மக்கள் பணம் திரும்ப மக்களுக்கே கிடைக்க வேண்டும். தனி நீதிமன்றம் அமைத்து விரைவாக விசாரணை செய்து ஊழல் மூலம் ஈட்டிய சொத்துக்கள் உள்நாட்டில் இருந்தாலும், வெளிநாட்டில் இருந்தாலும் பறிமுதல் செய்து அரசுடைமையாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

மாலை முரசு

12 Aug-2021

அரசு விழா அறிவிப்புக்கு வரவேற்பு!

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய தமிழ்நாட்டில் இருந்து புறப்பட்டு இந்தியாவையும், கீழை நாடுகள் சிலவற்றையும் வெற்றி கொண்ட சோழ மன்னன் ராஜேந்திர சோழன். இந்திய துணைக்கண்டத்தில் பிற மன்னர்கள் நிகழ்த்தாத சாதனைகளை நிகழ்த்தியவர். சோழர்களின் வரலாற்றில் ராஜராஜ சோழனின் இடம் மிக முக்கியமானது என்றாலும், கடல் தாண்டிய அவருடைய வெற்றிகள் என்பவை இலங்கையோடு முடிந்து விடும் நிலையில் ராஜேந்திர சோழன் இந்தியா மட்டுமல்லாமல் கடல் தாண்டி சென்று, பல நாடுகளை வென்று புதிய தலைநகரை நிர்ணமித்து தமிழக வரலாற்றில் உன்னதமான ஓர் இடத்தைப் பெற்றவர்.

1014–1015ல் ராஜராஜ சோழனின் மறைவுக்குப்பிறகு சோழநாட்டின் மன்னனாக முடிசூட்டிக் கொண்ட ராஜேந்திர சோழன் மதுராந்தகன் என்ற தனது இயற்பெயரை ராஜேந்திர சோழனாக மாற்றிக்கொண்டார். அப்போதில் இருந்து 1044 வரை ராஜேந்திர சோழனின் ஆட்சியே நடைபெற்றது. சோழர் வரலாற்றில் முதலில் மகத்தான மன்னனாக அறியப்பட்ட ராஜேந்திர சோழனின் சாதனைகளுக்குப் பின்னணியாக இருந்தவன் ராஜேந்திர சோழன் தான். இன்றைய குடகு பகுதிகளில் தங்கி இருந்து சாளுக்கிய நாடு, கேரளா நாடுகளை அடக்கினான். பல படையெடுப்புகளை நடத்தி எதிரிகளை கட்டுக்குள் வைத்திருந்தான். அதனால் தான் தஞ்சையில் அவனால் அமைதியாக ஆட்சியை நடத்த முடிந்தது.

ராஜேந்திர சோழன் மன்னனாக முடிசூட்டிய பிறகு தன் முன்னோர்களின் தலைநகரான தஞ்சையில் இருந்த படி 10 ஆண்டுகள் அதாவது 1014–1024– வரை ஆட்சி செய்தான். தன்னுடைய மகத்தான சாதனை அனைத்தையும் இந்த 10 ஆண்டுகளிலேயே செய்து முடித்தான் அவன். அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் ராஜேந்திர சோழனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள பிரகதீஸ்வரர் ஆலயம் உலகப்புகழ் வாய்ந்த ஒன்றாகும். ராஜேந்திர சோழனின் காலம் முதல் சோழர்களின் கலை மற்றும் கட்டிடக்கலைகளின் அழகிய தொகுப்பாகவும், வாழும் வரலாறாகவும் இன்று வரை விளங்குகிறது. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனங்களான யுனெஸ்கோ உலகப் புராதன பாரம்பரிய சின்னமாக அறிவித்துள்ளது. இந்த ஆலயத்தின் சிறப்பினை கண்டுகளித்திட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்த ஆலயத்தில் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் திருவாதிரை விழாவானது அப்பகுதி வாழ் மக்களால் வெகு விமரிசையாகவும், சிறப்புடனும் கொண்டாடப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் கொண்டாடப்பட்டு வந்த இந்த விழாவினை அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என்று பல்வேறு ஆய்வாளர்கள், பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்த கோரிக்கைகளைப் பரிசீலித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை விழா சுற்றுலா, பண்பாடு, அறநிலையத்துறை சார்பில் அரசு விழாவாக இனி கொண்டாடப்படும் என்று அறிவித்திருக்கிறார். தமிழக முதல்வரின் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கதாகும்.

ராஜேந்திர சோழன் காலத்தில் தான் நிர்வாகமும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. அரசாங்க நிர்வாகம் மிகுந்த கவனத்துடன் நிறுவப்பட்டது. நிலப்பிரபுக்கள், விவசாயிகள், தொழில் குழுக்கள் ஆகியோரது நலனை பாதுகாக்கும் மன்னனின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அதிகார வர்க்கம் உருவாக்கப்பட்டது. நன்கு பயிற்சி பெற்ற வீரர்களை கொண்ட படை ஒன்று உருவாக்கப்பட்டு நாட்டின் எல்லைகளை பாதுகாப்பதோடு, புதிதாக கைப்பற்றப்படும் நாடுகளின் எதிர்ப்புகளையும் அடக்கியது. இது தவிர நீர் மேலாண்மையில் ராஜேந்திர சோழன் பெரும் கவனம் செலுத்தினார். அவனுடைய ஆட்சி காலத்தில் மக்கள் சுதந்திரமாக அமைதியாக இருந்தார்கள். வணிகர்களுக்கு கடற்கொள்ளையர்களின் தொல்லை நீங்கியது. பெண்கள் அதிகாரிகளாக இருந்தார்கள். ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் ஆகியோரின் மகத்தான சாதனைகளால் தான் பிற்காலச் சோழர்களின் ஆட்சி 430 ஆண்டுகள் நீடித்தது. இந்தியாவில் எந்த ஒரு இந்திய பேரரசனை எடுத்துக் கொண்டாலும், ஏதோ ஒரு விஷயத்தில் தான் மகத்தான சாதனையை படைத்திருப்பார்கள். ஆனால் ராஜேந்திர சோழன் எல்லா விதத்திலும் சாதனை படைத்தவர். அத்தகைய மாமன்னனின் பிறந்தநாள் விழாவை அரசு விழாவாக தமிழக அரசு அறிவித்திருப்பது பாராட்டுக்குரியது. தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் போற்றி மகிழும்.

தமிழர் விழா

தமிழகத்தில், அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் மாமன்னன் ராஜேந்திர சோழனால் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டுள்ள பிரகதீஸ்வரர் கோயில் உள்ளது. இது, உலகப்புகழ் வாய்ந்த ஒன்றாகும். முதலாம் ராஜேந்திர சோழன் காலம் முதல், சோழர்களின் கலை மற்றும் கட்டிட கலைகளின் அழகிய தொகுப்பாகவும், வாழும் வரலாறாகவும் இது விளங்குகிறது. ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ நிறுவனம், இதை, உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்துள்ளது. இந்த ஆலயத்தின் சிறப்பினை கண்டுகளிக்க, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

மிகவும் பிரசித்திபெற்ற இந்த ஆலயத்தில் மாமன்னன் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் ஆடி மாதம் திருவாதிரை விழாவானது, அப்பகுதி வாழ் மக்களால் வெகு விமரிசையாகவும், சிறப்புடனும் கொண்டாடப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் கொண்டாடப்படும் இவ்விழாவை, அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என அப்பகுதி வாழ் மக்கள், வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள் பல ஆண்டுகளாக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தன. முந்தைய ஆட்சியாளர்கள் இதை கண்டுகொள்ளவில்லை.

தற்போது, இந்த விவகாரம், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயிலில் மாமன்னன் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை விழா, இனி அரசு விழாவாக கொண்டாடப்படும் என உத்தரவிட்டுள்ளார். தற்போது நிலவிவரும் கொரோனா நோய் தொற்று காரணமாக, வரும் ஆண்டு முதல் இந்த விழா, அரசு விழாவாக மிக சிறப்பாக கொண்டாடப்படும் எனவும் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு, தமிழ் மக்கள் நெஞ்சில் பால் வார்ப்பதுபோல் உள்ளது. ஒன்றிய அரசு, கடந்த 8 ஆண்டு காலமாக, தமிழக நலன்களை புறக்கணிப்பதிலும், தமிழ்மொழியை முடக்கி, இந்தி மற்றும் சமஸ்கிருதம் மொழியை திணிப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறது. அந்த முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், தமிழ்மொழியின் சிறப்பையும், பெருமையையும் மீண்டும் உலகிற்கு உணர்த்தும் வகையிலும் தமிழக முதல்வரின் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

தமிழர் நலன் காப்பதிலும், தமிழ் சமுதாயத்தை மேம்படுத்துவதிலும் தமிழக அரசு உறுதியாக இருக்கும். இந்த விஷயத்தில் யாருடனும் சமரசம் செய்துகொள்ள மாட்டோம் என்பதையே, முதல்வரின் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் நிரூபித்து காட்டி வருகிறது.

குங்குமம்

13 Aug-2021



தமிழ்நாடு 100 கலைஞர் 60!

● சென்னை மாகாணமாக முன்பு தமிழ்நாடு இருந்தபோது, முதன் முதலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை 1921ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அந்த வகையில், தமிழக சட்டசபைக்கு இது நூற்றாண்டு விழாவாகும். இந்த விழாவுடன், தமிழக முதல்

குங்குமம்

13 Aug-2021

அமைச்சராக 5 முறையும், எம் எல்ஏவாக 13 முறையும் இருந்த மறைந்த முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதியின் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது.

● மக்களாட்சி என்ற தத்துவத்தின் முதல் இந்திய செயல்வடிவம் என்று 1921ம் ஆண்டின் சட்டமன்றத்தைக் கூறலாம். அவ்வாறான தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் அவை என்பது தமிழகத்தில் மட்டும் கூடவில்லை. இந்திய அளவிலான ஓர் அவையும், தமிழகம் தவிர மேலும் எட்டு மாகாணங்களின் அவைகளும் உருவாயின.

ஆனால், தமிழக சட்டமன்றம் மட்டுமே தன் வரலாற்றுத் தொடர்ச்சியை உணர்ந்து நூற்றாண்டு விழா எடுத்தது.

● 1920ல் நடைபெற்ற தேர்தலில் தமிழ்நாட்டில் மட்டுமே காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக தெளிவான ஒரு சித்தாந்தத்துடன் தன்னை வடிவமைத்துக்கொண்ட நீதிக்கட்சி என்ற ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தது.

● நீதிக்கட்சி அரசு 1921ம் ஆண்டே முதன்முறையாக கம்யூனல் ஜிஓ என்ற வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுக்கான சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தது. இதை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருந்தாலும், 1928ம் ஆண்டுதான் நடைமுறைக்கு வந்தாலும், அதற்கான அச்சாரம் 1921ம் ஆண்டிலேயே இடப்பட்டுவிட்டது. அதேபோல பெண்களுக்கு வாக்குரிமையும், பிரதிநிதியாகும் உரிமையும் உறுதி செய்யப்பட்டது. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி முதல் சட்டமன்ற பெண் உறுப்பினர் ஆனார்.

● தமிழக சட்டமன்றத்தின் நூறாண்டுகளில் அறுபதாண்டுக் காலம் அதில் இடையறாது பங்கேற்றவர் கலைஞர். 13 முறை சட்டப் பேரவை உறுப்பினர், ஒரு முறை சட்ட மேலவை உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர், பொதுப்பணி – போக்குவரத்துத் துறை அமைச்சர், 5 முறை முதல்வர், 19 ஆண்டுகால ஆட்சி நிர்வாகம்... என ஒன்றிய, சட்டமன்ற வரலாற்றில் கிட்டநெருங்க முடியாத சாதனையாளர்.

1957ம் ஆண்டு குளித்தலை சட்டமன்றத் தொகுதியில் வென்று

குங்குமம்

13 Aug-2021

சட்டமன்றத்தில் நுழைந்த அவர், அதன் பிறகு நடந்த எந்த தேர்தலிலும் தோல்வியைச் சந்திக்கவில்லை. இது மட்டும் அவரது பெருமையல்ல. நீதிக்கட்சி எந்த அதிகாரப் பரவலைக் கொள்கையாகக் கொண்டு தொடங்கப்பட்டதோ, அந்த சமூக நீதிப் பார்வையை தமிழக அரசியலின் பொதுப்புத்தியாக மாற்றியதில் அளப்பெரும் பங்காற்றியவர் கலைஞர் என்றால் மிகையாகாது.

அதனால் சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் அவருடைய திருவுருவப் படத்தை சட்டமன்றத்தில் திறந்துவைத்தது சாலப் பொருத்தம். அதிலும் இந்தியக் குடியரசுத் தலைவர் அதைத் திறந்துவைத்தது, இது தமிழ்நாட்டின் தனி வரலாறல்ல, இந்திய வரலாற்றின் தவிர்க்க முடியாத தனித்துவமான அங்கம் என்பதை உணர்த்துகிறது.

● தமிழ்நாடு சட்டப்பேரவையில் இதுவரை 16 தலைவர்களின் திருவுருவப் படங்கள் திறக்கப்பட்டுள்ளன. முதன்முதலில் பி.சுப்பராயன் படம் திறக்கப்பட்டது. பின்னர், நாடு சுதந்திரம் அடைந்தபோது ஆட்சியிலிருந்த ஓ.பி.ராமசாமி ரெட்டியாரின் படம் திறக்கப்பட்டது. மகாத்மா காந்தி, ராஜாஜி, திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா, காமராஜர், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காயிதே மில்லத், முகமது இஸ்மாயில், ராமசாமி படையாச்சியார், வ.உ.சி, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரின் உருவப்படங்கள் திறக்கப்பட்டுள்ளன.

பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்தை அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி திறந்து வைத்தார். காமராஜரின் திருவுருவப் படத்தை அப்போதைய குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி திறந்துவைத்தார். இப்போது கலைஞரின் திருவுருவப் படத்தை இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்துள்ளார்.

அந்தவகையில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்திய குடியரசுத் தலைவரால் திறந்து வைக்கப்பட்ட 2வது (காமராஜருக்குப்பிறகு) தலைவரின் திருவுருவப் படம் கலைஞருடையது தான்! ●

குங்குமம் 13.8.2021 5

100 நாள் சாதனை மலர்கள், 100 ஆண்டுகளாய் மணம் வீசும்!

மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்து, நாளை 14-ந்தேதியோடு 100 நாட்கள் நிறைவு பெறுகிறது. இந்த 100 நாட்களிலும் ஒரு நாள் பாக்கியில்லாமல், அவர் ஏதாவது புதிய அறிவிப்புகளை வெளியிட்டும், ஆய்வுக்கூட்டங்களை நடத்தியும், சுற்றுப்பயணங்களை மேற்கொண்டும் வந்திருக்கிறார். நாள் தவறினாலும், அவரிடம் இருந்து அறிவிப்புகள், உத்தரவுகள் வெளிவர தவறியதில்லை.

பொதுவாக பெரியவர்கள் மண்ணை விட்டு மறையும்போது, தன் பிள்ளைகளுக்கென வீடு, வாசல், சொத்துகளை வைத்துவிட்டு செல்வார்கள். ஆனால், இயற்கை எய்திய தி.மு.க. தலைவர் கருணாநிதி, தனக்கே உரித்தான "ஓய்வில்லா சூரியன்" என்ற புகழ் மகுடத்தை தன் மகன் மு.க.ஸ்டாலினுக்கு சூட்டிவிட்டு சென்றிருக்கிறார். கருணாநிதி எப்போதுமே மு.க.ஸ்டாலின் உழைப்பில் பெரும் மகிழ்ச்சி கொள்வார். அதனால்தான் அவர், "உழைப்பு.. உழைப்பு.. உழைப்பு..., அதன் பெயர்தான் மு.க.ஸ்டாலின்" என்று பிரகடனப்படுத்தியிருந்தார்.

அந்தவகையில், மு.க.ஸ்டாலின் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலான பொது வாழ்க்கையிலும் சரி,

கருணாநிதி மறைவுக்கு பிறகு தி.மு.க. தலைவர் பொறுப்பை ஏற்று, இப்போது முதல்-அமைச்சர் ஆனதில் இருந்தும் சரி, உழைப்பு.. உழைப்பு.. உழைப்பு.. என்பதையே தாரக மந்திரமாகக்கொண்டு செயல்படுகிறார். கடந்த ஏப்ரல் 6-ந்தேதி நடந்த தேர்தலுக்கு முன்பு தமிழகம் முழுவதும் ஓய்வில்லாமல் சுற்றி சுற்றிவந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது அவர், "உங்கள் தொகுதியில் ஸ்டாலின்" என்ற ஒரு புதிய திட்டத்தின்கீழ், ஒரு பெரிய பெட்டியில் மக்கள் தங்கள் குறைகளை மனுவாக எழுதிப்போடலாம். அந்த பெட்டியை பூட்டி, சாவி தன் கைவசமே இருக்கும். தன் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் 100 நாட்களில் அதற்கு தீர்வுகாணப்படும் என்று அறிவித்திருந்தார்.

அந்தவகையில், 4,57,645 மனுக்கள் பெறப்பட்டன. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு, முதல்-அமைச்சராக மே 7-ந்தேதி பொறுப்பேற்று நாளை 100 நாள் நிறைவடையும் நிலையில், அத்தனை மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு 3,66,040 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பதவியேற்ற அன்றே, தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தபடி, "அரிசி கார்டு வைத்திருக்கும் 2 கோடியே 7 லட்சத்து 67 ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.4 ஆயிரம், ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3 குறைப்பு, அனைத்து மகளிருக்கும் அரசு போக்குவரத்து கழக சாதாரண நகர பஸ்களில் இலவச பயணம், மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கை மனுக்கள் மீது உடனடி தீர்வுக்காக 'உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர்' என்ற புதிய துறை உருவாக்கம், அதற்கு சிறப்பு அதிகாரியாக ஷில்பா பிரபாகர் சதீஷ் நியமனம், தனியார் மருத்துவமனைகளில் கொரோனா நோய் தொற்றுக்கு சிகிச்சை பெறுபவர்களுக்கான செலவினத்தை முதல்-அமைச்சர் காப்பீடு திட்டத்தின்கீழ் அரசே ஏற்பு" என்ற 5 அறிவிப்புகளை வெளியிட்டார்.

"கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல நிவாரணங்கள் அறிவிப்பு, கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.5 லட்சம் வைப்புநிதி, கல்வி மற்றும் விடுதி கட்டணங்கள் அரசு ஏற்பு, தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளுக்கு ரூ.3 லட்சம் நிவாரணத்தொகை, அரசு காப்பகம் அல்லது விடுதிகளில் இல்லாமல் உறவினர் அல்லது பாதுகாவலரின் ஆதரவில் வளரும் குழந்தைகளுக்கு பராமரிப்பு செலவாக மாதம் ரூ.3 ஆயிரம் உதவித்தொகை வழங்கப்படும்" என்ற மனிதாபிமானமிக்க அறிவிப்புகளை வெளியிட்டார்.

இந்த 100 நாட்களில் மொத்தம் 120-க்கும் மேற்பட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் பல அறிவிப்புகள் தேர்தலில் அவர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளன. முதல் 100 நாள் சாதனைகள் மகத்தானது. இந்த சாதனை அடுத்த 5 ஆண்டுகளிலும் தினமும் தொடரவேண்டும், 100 ஆண்டுகள் இந்த சாதனை மலர்கள் மணம் வீசும் என்று தமிழக மக்கள் வாழ்த்துகிறார்கள்.

THE TIMES OF INDIA

13 Aug-2021

100 DAYS OF STALIN GOVERNMENT

DAY 1, SCHEME 1: After he was sworn in on May 7, CM Stalin launched a scheme allowing women to travel in buses for free. (Inset) He found the perfect ally in former Wall Street banker Palanivel Thiaga Rajan, who as finance minister is leading TN's economic revival

TRAILER OVER, LET THE SHOW BEGIN

Celebrations Were On Hold As The DMK Govt Got Down To Business Battling The Covid Wave, Reviving A Troubled Economy And Tackling Tiffs With Neighbour States In Its First 100 Days In Office

Julie.Mariappan@timesgroup.com

TARGET 2030

- Make Tamil Nadu a **$1 trillion** economy
- Attract **₹23 lakh** crore of new investments
- Create jobs for **46 lakh** people

The state has so far inked deals with **₹17,141 crore** with investors

A day after the election win for the DMK, the Chittaranjan Salai residence of M K Stalin in Chennai saw officials queuing up to discuss the Covid-19 situation. Stalin hardly had any time to savour his victory. He confessed to family and friends that he had won a "crown of thorns". In his 100 days at Fort St George, change with continuity has been the mantra.

If Amma Unavagams and HR&CE temples continue to feed the needy, a Greater Chennai Corporation tender worth Rs 120 crore was cancelled on suspicion of corruption. A dream team of international economists was constituted to set right the economy, though rivals dubbed it optics. Undeterred, the 68-year-old chief minister aims to make Tamil Nadu a $1 trillion economy by 2030 and inked deals worth Rs 17,141 crore with investors.

Rivals taunt the DMK that students will have to appear for NEET despite its poll promise to do away with the exam. To counter this, the DMK government decided to introduce a bill to extend the 7.5% quota in MBBS/BDS admissions for government school students to other professional courses. The previous Edappadi K Palaniswami government had announced the 7.5% quota for medical aspirants ahead of the assembly election.

"The chief minister works relentlessly, holds reviews with us and officials frequently. He asks us to do field visits, study and rectify problems. Unlike our late leader's tenure which was like free flow of water in the river with no big challenges, our CM has many and he is handling them well," municipal administration minister K N Nehru said. The party has also sought to shed its anti-Hindu image with an energetic P K Sekar Babu helming the HR&CE department.

> "The chief minister works relentlessly, holds reviews with us and officials frequently. He asks us to do field visits, study and rectify problems. Unlike our late leader's tenure which was like free flow of water in the river with no big challenges, our CM has many and he is handling them well
> — K N Nehru | MUNICIPAL ADMINISTRATION MINISTER

On Centre-state relations, Stalin, drawing on lessons from his father, has sought to balance confrontation and cooperation. While he meets Prime Minister Narendra Modi as protocol warrants, his finance minister is combative about GST. Stalin urged the eight coastal states to oppose the draft Indian Ports Bill, 2021, on the grounds that it reduces states' autonomy. On river water disputes with Karnataka, the DMK government has talked tough. Stalin likens the DMK and its government to an elephant that none could tame, which stands on the four legs of social justice, self respect, linguistic and ethnic affinity, and state autonomy.

What's also making headlines is Stalin's brand of 'inclusive' governance. He's appeal to all parties to work together for Covid management ensured that AIADMK and BJP MLAs took part in government's review meetings. Former AIADMK minister C Vijayabaskar was included in the government's Covid-19 management panel.

The bureaucracy is forced to keep pace with the chief minister. He visits the secretariat twice a day and sits for long hours, travels to districts and reserves Sundays for his Kolathur constituency for the 'Ungal Thoguthiyil Muthalamaichar' scheme.

In the first lap, Stalin is earning praise as a people's chief minister. What next? Whatever the optics of cracking down on alleged corruption by the previous AIADMK regime, the going will be tough with the state's finances still weak.

PEDAL POWER

- One fine Sunday morning, fitness enthusiasts were stunned to see CM Stalin in full cycling gear whizzing past them. The CM even paused his ride to oblige quite a few selfie requests

NEET could prove to be govt's most troublesome test

Ragu.Raman@timesgroup.com

In its first 100 days, the DMK government took two major decisions in education. One was to conduct re-exam for more than 4.25 lakh engineering students who appeared for a proctored online test in February. Second, when a majority of parents and teachers wanted the Class XII state board exams to be held, CM Stalin decided to cancel them based on views of medical experts.

Academics called the first move regressive. Anna University was the only state university in the country to come up with proctored online tests to conduct a semblance of an exam during the pandemic. Instead of helping other state universities develop such online assessment tools and improve assessment standard, the state brought down the standard of Anna University exams to the level of other universities.

The second decision had to be taken in view of the Covid-19 pandemic. The government had to come up with a weightage system keeping in mind the interests of rural and urban students and gave 50% weightage to Class X board exam marks. It affected the top scoring students as there was little difference between them and others. A majority of students and parents, however, were happy in the end.

There are many positives in the approach of the new government. It appointed a committee headed by Justice A K Rajan to study the impact of NEET in medical admissions and another headed by Justice D Murugesan to study the representation of government school students in professional courses.

Now, with schools and colleges set to reopen physical classes, more challenges await the government. They include bringing back dropouts, preventing child marriages and retaining students in government schools. More than 2 lakh children moved to government and aided schools from private schools. Government colleges and state universities are crippled with faculty shortages and financial crises. At least three state universities are on the verge of collapse. Education will be one of the key parameters in which the success or failure of the DMK government will be rated.

DMK govt ropes in big names, woos industry to achieve target $1 trillion

D.Govardan@timesgroup.com

Having taken over the reins of the state under the Covid-19 cloud, M K Stalin's DMK government did not have the customary time to celebrate. With cases escalating, it was serious business from Day One.

"The first thing CM told us was – We will contain the pandemic with all our might. You ensure that industrial operations are not affected in any way and export units function without hindrance to meet commitments. By ensuring that, we (immediately) created a positive image for Tamil Nadu not only with industries here, but also with their overseas clients," minister for industries Thangam Thennarasu told TOI.

The government has not slowed down since. It roped in experts such as Nobel

FOCUS ON BIG PICTURE: Despite battling a pandemic, the government hosted an industrial conclave in Chennai

laureate Esther Duflo and former RBI governor Raghuram Rajan for the Chief Minister's Economic Advisory Council, a move hailed by the industry. And the council has since been working closely with the government.

That was just the beginning. Stalin has set a target for Tamil Nadu to become a $1 trillion economy, attract Rs 23 lakh crore of new investments and create jobs for 46 lakh people – all by 2030.

Despite fighting a pandemic, the industries department managed to host an Industrial Conclave in Chennai, where new MoUs were signed for projects to bring in Rs 17,000 crore fresh investments and generate employment for more than 50,000 people. To prevent trouble in future, the state announced a 30% capital subsidy for units setting up Covid-critical equipment and a couple of units have started construction.

"This government has opted for continuity in its approach to aggressively woo investors from across the globe. Our CM laid the foundation stones for projects already signed and initiated commercial operations of projects already constructed," a senior official said.

A new single-window portal, covering 100 digital services of the government, was launched by Stalin. The portal earlier had only 44 services and by the end of 2021, another 210 services will be offered.

While the state got General Electric to establish a Centre of Excellence, it is pushing to have six more such centres in emerging technologies. This will help train employees across sectors to 'Industry 4.0' standards and make them competitive.

"In less than 100 days, we have a road map ready on what to focus for next two-three years — diversification of industries into backward districts, targeting emerging sectors, skill development to... make industry competitive by strengthening ITIs and polytechnics, establishing and reviving innovation centres to boost startups across segments," the official said.

MSMEs too are on the government's radar. An expert committee was set up to advise the state on reviving MSME units affected by demonetisation, GST and the pandemic. "We did away with a few restrictions to open up government supply opportunities to startups, released Rs 168 crore capital subsidy to 1,975 MSMEs and extended the period for renewal of 15 statutory licenses like pollution and fire till December 31,2021," another official said.

"At CII, we interacted with almost all key industrial departments including elected members and civil servants. They are extremely focused. There is a clear agenda with this government to position Tamil Nadu as a pro-industry or industry-friendly state," S Chandrakumar, chairman, CII Tamil Nadu said.

தினத்தந்தி DAILY THANTHI

14 Aug-2021

பெட்ரோல் விலை குறைப்புக்கு பொதுமக்கள் வரவேற்பு

சென்னை, ஆக.14-

தமிழக அரசு பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள பெட்ரோல் விலை குறைப்பு அறிவிப்புக்கு பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

மக்கள் கருத்து

2021-22-ம் நிதி ஆண்டுக்கான தமிழக அரசின் பட்ஜெட் நேற்று வெளியானது. இதில் பெட்ரோல் விலை ரூ.3 குறைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியானது. இது தொடர்பாக மக்களிடம் கருத்து கேட்கப்பட்டது.

மக்களின் கருத்துகள் விவரம் வருமாறு:-

வரவேற்கத்தக்கது

இல்லத்தரசி ஜோதி ஜெயகுருசாமி (அம்பத்தூர்):-

பெட்ரோல் விலை உயர்வால் பொதுமக்களும், வியாபாரிகளும் என அனைத்து தரப்பினரும் மிகுந்த வருத்தம் அடைந்து வந்தனர். இந்தநிலையில் தமிழக அரசு தாக்கல் செய்திருக்கும் பட்ஜெட்டில் பெட்ரோல் விலை ரூ.3 குறைக்கப்படும் என அறிவிப்பு வெளியாகியிருப்பது சற்று ஆறுதலை அளித்துள்ளது. இது வரவேற்கத்தக்கது தான்.

அதேவேளை சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத மின்சாரத்தில் இயங்கும் பேட்டரி வாகனங்களை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான உரிய மானியத்தையும் அறிவித்தால் மிக நன்றாக இருக்கும்.

அவசியமான நடவடிக்கை

ஆன்-லைன் உணவு வினியோக ஊழியர் ரவி (ஆழ்வார்பேட்டை):-

இப்போதைய நிலையில் இது அவசியமான நடவடிக்கை தான். தினமும் சராசரியாக ரூ.200 முதல் ரூ.250 வரை பெட்ரோலுக்காக செலவழிக்கிறேன். இனி அதில் ரூ.10 வரை சேமிப்பாக வரும்.

பெட்ரோல் விலையை இன்னும் குறைத்தாலும் தகும். ஏனெனில் அதிகரித்து வரும் பெட்ரோல் விலையால் மக்கள் குழப்பத்தில் இருந்தனர். தற்போது பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதின் மூலம் பெட்ரோல் விலை ரூ.3 குறையும். இது ஏழை-நடுத்தர மக்களுக்கு ஓரளவு நிம்மதியை ஏற்படுத்தும்.

மக்கள் நலனுக்காக...

தனியார் நிறுவன ஊழியர் நிர்மலா முருகப்பன் (ஆனைமேடு):-

இது நிச்சயம் நல்ல நடவடிக்கை தான். தற்போதைய அரசு மக்கள் நலன்களுக்காக பல திட்டங்களை அறிவித்து வருகிறது. அந்தவகையில் பெட்ரோல் விலை ரூ.3 குறைக்கப்படும் அறிவிப்பு வரவேற்கத்தக்கதே.

பெட்ரோல் விலை இன்னும் குறைத்தால் நன்றாகத்தான் இருக்கும். அதற்கான முதல்படியாக இந்த அறிவிப்பு அமையட்டும். மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கை போல, மத்திய அரசும் ஜி.எஸ்.டி. வரம்புக்குள் பெட்ரோல் விலையை கொண்டுவந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

நிம்மதி அளிக்கிறது

தனியார் நிறுவன ஊழியர் கணேஷ் (அம்பத்தூர்):-

பெட்ரோல் விலை இப்படி உயரும் என்று எதிர்பார்க்கவே இல்லை. இருந்தாலும் இந்த ஒரு நடவடிக்கை நிச்சயம் வரவேற்கத்தக்கது தான். மாநில அரசு போல மத்திய அரசும் வரி குறைப்பு நடவடிக்கை எடுத்தால், மக்களுக்கு இன்னும் மகிழ்ச்சியாகவே இருக்கும். வாகனங்களை அதிகமாக பயன்படுத்துவோருக்கு பெட்ரோல் விலை குறைப்பு ஓரளவு நிம்மதியை ஏற்படுத்தி இருக்கிறது. அந்தவகையில் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

தொழிலாளிகள் மகிழ்ச்சி

ஆட்டோ ஓட்டுனர் முருகம்மாள் (பெரும்பாக்கம்):-

அனைத்து தரப்பினரையும் பெட்ரோல் விலை ஏற்றம் கடுமையாக பாதித்துள்ளது. தமிழக அரசின் இந்த பட்ஜெட் அறிவிப்பு ஓரளவு நிம்மதியை அளித்துள்ளது. இருந்தாலும் பெட்ரோல் விலையை இன்னும் குறைக்க வேண்டும். அதற்கான எல்லா கட்ட நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். இது எங்களை போல தொழிலாளிகளுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தும்.

டீசல் விலையை குறைக்க வேண்டும்

கார் டிரைவர் சரவணன் (மறைமலைநகர்):-

பெட்ரோல் விலை குறைப்பு நடவடிக்கையால் வாடகைக்கு கார் ஓட்டுபவர்கள் தினமும் ரூ.100 முதல் ரூ.120 வரை சேமிக்க முடியும். பெட்ரோல் போலவே டீசல் விலையையும் குறைத்தால் அனைத்து வாகன ஓட்டுனர்களும் மகிழ்ச்சி அடைவார்கள். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டால் நன்றாக இருக்கும்.

அதேபோல பெட்ரோல்-டீசல் விலையை மேலும் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அனைத்து தரப்பினரையும் மேலும் மகிழ்விக்க முடியும். பெட்ரோல் விலை குறைப்பு நடவடிக்கை நிச்சயம் தேவையானது.

இவ்வாறு பெட்ரோல் விலை குறைப்புக்கு அனைத்து தரப்பினரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

தினகரன்

ஒரு புதிய அனுபவம்

14 Aug-2021

பெட்ரோல் விலை லிட்டருக்கு ₹3 குறைப்பு

பொருளாதாரம் அறிந்த முதல்வராக மு.க.ஸ்டாலின் இருப்பது மகிழ்ச்சி

பொதுமக்கள் பேட்டி

சென்னை, ஆக.14: பெட்ரோல் விலை லிட்டருக்கு ₹3 குறைத்து நேற்று பட்ஜெட் கூட்டத்தில் தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கு தமிழக மக்கள் குறிப்பாக சென்னைவாசிகள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, ஆதரவு தெரிவித்துள்ளனர். அவர்களின் பேட்டி வருமாறு:

நாகராஜ் (பிரிண்டர், வண்ணாரப்பேட்டை): பெட்ரோல் விலை 102 ரூபாயை கடந்து விற்பனை செய்யப்படுவதால் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறோம். தற்போது தமிழக அரசின் விலை குறைப்பு அறிவிப்பை மனதார வரவேற்று, முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தினேஷ் (சிறு வணிகர், திருவொற்றியூர்): பெட்ரோல் விலை குறைப்பால் பொருட்களின் விலையும் குறையும். இதனால், என்னை போன்ற சிறு வணிகர்கள் மட்டுமின்றி நடுத்தர மக்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் என அனைவரும் பயன் பெறுவார்கள்.

பெஞ்சமின், (சமூகஆர்வலர், கொடுங்கையூர்): பெட்ரோல், டீசல் விலை உயர்வு காரணமாக விலை உயர்வு என தொடர்ந்து அடுத்தடுத்து மக்களை குறி வைத்து ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது. கடும் நிதி சுமையிலும் மக்கள் பிரச்னையை மனதில் வைத்து தமிழக அரசு பெட்ரோல் விலையை குறைத்திருப்பது பாராட்டுக்குரியது.

அம்பிகா (கட்டிட தொழிலாளி, பல்லாவரம்): கொரோனா ஊரடங்கால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள, அத்தியாவசிய பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது. தற்போது, பெட்ரோல் விலை குறைப்பால் அத்தியாவசிய பொருட்களின் விலையும் கணிசமாக குறைய வாய்ப்பு உள்ளது. தமிழக அரசின் இந்த செயல் எளிய மக்கள் வாழ்வில் ஒளி ஏற்றுவதாக உள்ளது.

முத்து (ஓட்டல் நடத்துபவர், பரங்கிமலை): பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட பெட்ரோல் விலை குறைப்பால் எங்களது செலவில் மாதம் ₹3 ஆயிரம் குறையும். வருடத்துக்கு ₹36 ஆயிரம் வரை சேமிக்கலாம். இந்த விலை குறைப்பு எங்கள் தொழிலுக்கு மட்டுமல்லாமல் வாகனங்களில் தினந்தோறும் கோயம்பேடு சென்று வரும் வியாபாரிகளுக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி.



சண்முகம் (பெட்டிக் கடைக்காரர், அயனாவரம்): காங்கிரஸ் ஆட்சியில் ஒரு லிட்டர் பெட்ரோல் ₹60ஆக இருந்தது. ஆனால் மோடி ஆட்சியில் ₹100ஐ தாண்டிவிட்டது. பெட்ரோலிய பொருட்களின் விலையை உயர்த்தினால் அத்தியாவசிய பொருட்களின் விலையும் உயரும் என்பது கூட தெரியாத பிரதமராக மோடி தொடர்வது வேதனையளிக்கிறது. ஆனால், பொருளாதாரம் அறிந்த முதல்வராக மு.க.ஸ்டாலின் இருப்பது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது.

கார்த்திக் (ஓட்டல் ஊழியர், புழல்): இருசக்கர வாகனங்களில் வேலைக்கு செல்பவர்கள் பெட்ரோலுக்காக பெரும் தொகையை செலவழிக்கும் அவல நிலையில், தமிழக அரசின் இந்த விலை குறைப்பு அறிவிப்பு மகிழ்ச்சியான செய்தி. கூலி தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு இது உதவியாக இருக்கும்.



சுரேஷ் (ஆட்டோ டிரைவர், மேற்கு தாம்பரம்): பெட்ரோல் விலை 102 ரூபாயை கடந்து விற்பதால், வருவாய் பாதித்து வாழ்க்கை நடத்த முடியாமல் தவித்து வருகிறோம். தற்போது, தமிழக அரசின் இந்த விலை குறைப்பு அறிவிப்பு எங்களை போன்ற ஆட்டோ டிரைவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



விஜயகுமார் (தனியார் நிறுவன ஊழியர், துரைப்பாக்கம்): பெட்ரோல் விலை குறைப்பு அறிவிப்பால் வாகனங்களில் பணிக்கு செல்பவர்கள் பெரிதும் பயனடைவார்கள். இதற்கு தமிழக முதலமைச்சருக்கு நன்றி. இதே போல் மக்கள் நலனை கருத்தில் கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் நல்லாட்சி புரிவார்.

ராமமூர்த்தி (வெல்டு பட்டறை தொழிலாளி, தரமணி): பெட்ரோல் விலை குறைப்பால் எனக்கு ஒரு மாதத்திற்கு 300 முதல் 1000 ரூபாய் வரை மிச்சமாகும். இந்த தொகை குடும்ப தேவைக்கு பயன்படுத்த உதவியாக இருக்கும். என்னை போன்ற தொழிலாளிகளுக்கு இந்த அறிவிப்பு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



தினமணி

14 Aug-2021

திமுக அரசின்

நூறு நாளில் நூற்றாண்டு சாதனை!

சொன்னதைச் செய்த முதல்வர்!

கரோனா மீட்பு நடவடிக்கையில் தொடங்கி காகிதமில்லா சட்டப் பேரவை என்ற மைல்கல்லைத் தொட்டு நூறு நாள்களை நிறைவு செய்திருக்கிறது திமுக அரசு. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பதவியேற்று சனிக்கிழமையுடன் (ஆக.14) நூறு நாள்கள் பூர்த்தியாகிறது.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற தனது பெயரை முழுமையாகக் கூறி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்ட போது விழாவில் பங்கேற்ற யாரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்களா என்பதை அறிய முடியவில்லை. காரணம், அனைவரது முகத்திலும் முகக் கவசம். கரோனா தனது கோரப்பிடியை இறுக்கமாகப் பற்றியிருந்த நேரம். இந்தப் பிடியில் இருந்து மாநிலத்தை மீட்கும் நடவடிக்கைகள் மே 7-ஆம் தேதி காலை 11.30 மணியில் இருந்து தொடங்கின.

அன்றைய தினம் தலைமைச் செயலகத்துக்கு வந்த அவர், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளில் முக்கியமான 5 உறுதிகளைச் செயல்படுத்துவதற்கான கோப்புகளில் கையெழுத்திட்டார். 2.07 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு தவணைகளாக தலா ரூ.2 ஆயிரம் வழங்குவது, ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு, தனியார் மருத்துவமனைகளிலும் கரோனா சிகிச்சை செலவை அரசே ஏற்பது, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற தனித் துறை உருவாக்கம், நகரப் பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் என முற்றிலும் பொதுமக்களின் நலன் சார்ந்த திட்டங்கள் செயலாக்கத்துக்கு வந்தன.

அரசு நிதி நெருக்கடியில் மூச்சைப் பிடித்துக் கொண்டிருக்க, மக்களோ கரோனா நோய்த் தொற்றால் பிராண வாயு கிடைக்காமல் அவதிப்பட்டனர். இரண்டையும் ஒரு சேர சமாளிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிற பணிகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டு அரசு இயந்திரம் முழுவதும் கரோனாவின் மேல் தனது பார்வையைச் செலுத்தியது. நிதி நெருக்கடியில் இருந்து மீளும் வழிகளில் ஒன்றாக, தொழிலதிபர்கள் உள்பட பொது மக்களிடம் நிதி அளிக்க கோரிக்கை விடுத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். கரோனா நோய்த் தொற்று பாதிப்பைக் குறைக்கத் தேவையான ஆலோசனைகளை அளிக்க பேரவை கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைத்தது. பிராண வாயு





கிடைக்காதோருக்கு வெளி மாநிலங்களில் இருந்து அவற்றை எடுத்து வரும் பணியை மேற்கொண்டது என தடுப்பு நடவடிக்கைப் பணிகளை மறுபுறம் மேற்கொண்டார். இதனால், கரோனா எனும் கொடிய நோய்த் தொற்று மெல்ல மெல்ல விலகத் தொடங்கியது. ஒரு மாதத்துக்குள்ளாக நோயின் தாக்கம் வெகுவாகக் குறைந்தது.

நோய்த் தொற்றைக் குறைக்க பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டாலும், அதனால் மக்கள் பாதிக்காமல் இருக்க அரிசி அட்டைகளுக்கு ரூ.4 ஆயிரமும், 14 பொருள்கள் கொண்ட மளிகைத் தொகுப்பும் அளிக்கப்பட்டன. பணத்தை மக்களிடம் நேரடியாக அளித்து அவர்களுக்கான வாங்கும் சக்தியை உயர்த்தியது சிறப்பான முயற்சி என பொருளாதார நிபுணர் அபிஜித் பானர்ஜி பாராட்டுத் தெரிவித்தார். நோய்த் தொற்று வெகுவாகக் குறைந்து வந்த சூழ்நிலையில், இதர பணிகளில் மெல்ல அரசின் கவனம் திரும்பியது.

இந்தப் பணிகளை முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த தினமான ஜூன் 3-ஆம் தேதியில் இருந்து அரசு தொடங்கியது. அன்றைய தினம் எழுத்தாளர்கள், தமிழறிஞர்களை கௌரவிக்கும் வகையிலான திட்டங்களை அவர் அறிவித்தார். தமிழறிஞர்கள், எழுத்தாளர்களுக்கு சிறப்பு விருது, வீட்டு வசதி, மதுரையில் கருணாநிதி பெயரில் நூலகம் ஆகிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இலக்கியத்துடன் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

மாநில உயர்கல்வி மன்றம் திருத்தியமைக்கப்பட்டதுடன், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தொழில் கல்வி படிப்புகளில் 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அரசின் திட்டங்கள் அறைக்குள் உருவானாலும், அது உருமாற்றம் அடைந்து ஒப்புதல் கொடுக்கப்படும் இடம் என்னவோ சட்டப் பேரவைதான். இத்தகைய சிறப்பு வாய்ந்த சட்டப் பேரவை, நூற்றாண்டைக் கண்டுள்ளது. இதற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் முறைசாக விழா எடுக்கப்பட்டது. இந்த விழாவின் ஒருபகுதியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப்படமும் பேரவையில் திறக்கப்பட்டது. நூற்றாண்டு கண்ட பேரவை இப்போது நவீன மாற்றம் கண்டதும் இந்த நூறு நாள்களில்தான்.

இதுவரை காகிதங்கள் வழியே நிதிநிலைக் கணக்குகள் சொல்லப்பட்டு வந்த நிலையில், கணினியின் மூலமாக இந்த ஆண்டு சொல்லப்பட்டுள்ளது. காகிதமில்லாத நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த முதல் அரசு என்ற பெருமையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பெற்றுள்ளது.

இந்த சாதனைகள் ஒருபுறம் நடத்தேற, அரசுக்கு அணி சேர்க்கும் வகையில் துறை ரீதியாக போட்டி போட்டுக் கொண்டு அமைச்சர்கள் களத்தில் குதித்தனர். கரோனா நோய்த் தொற்றைத் தடுக்கும் பணியில் 30 நாள்களுக்கும் மேலாக ஈடுபட்ட அவர்கள், துறை ரீதியான பணிகளில் கவனம் செலுத்தினர்.

இந்து சமய அறநிலையத் துறையில் ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்டது, கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் திட்டம், அரசின் நிதிநிலைமை அறிய வெள்ளை அறிக்கை, கரோனா காலத்திலும் ரூ.28 ஆயிரம் கோடிக்கு தொழில் முதலீடுகள் ஈர்ப்பு-வேலைவாய்ப்புகள் உருவாக்கம், முதுபெரும்தலைவர் சங்கரய்யாவுக்கு தகைசால் தமிழர் விருது, மின்துறை சார்ந்த குறைகளைத் தெரிவிக்க மின்னகம் என்ற சேவை மையம் போன்ற எண்ணற்ற திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இன்னும் பல திட்டங்கள் வருவதற்கு பேரவைக் கூட்டத் தொடர் காத்துக் கொண்டிருக்கிறது. நூறைத் தாண்டிய சாதனைகள் படைப்பதற்கு.

தினமணி

14 Aug-2021

காகிதமில்லா பட்ஜெட்!

மு.க. ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசின் முதலாவது நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. எதிர்பார்த்ததைவிட அதிகமான அறிவிப்புகளுடனும், தொலைநோக்கு நிதி நிர்வாக திட்டங்களுடனும் தயாரிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கை என்று இதை வகைப்படுத்துவதுதான் சரியாக இருக்கும்.

முன்கூட்டியே வெள்ளை அறிக்கையை வெளியிட்டு, தான் புத்திசாலி என்பதை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் உணர்த்தியிருக்கிறார். தமிழகத்தின் நிதிநிலைமை மோசமாக இருப்பதையும், அதிகரித்து வரும் கடன் சுமையையும் வெள்ளை அறிக்கை மூலம் ஏற்கெனவே வெளிப்படுத்தி விட்டதால், நிதிநிலை அறிக்கை குறித்த எதிர்பார்ப்புகள் குறைந்துவிட்டன. அதனால், இப்போதைய அறிவிப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக உலக அளவில் மிகப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்திப் பொருளாதாரத்தைத் தடம்புரளச் செய்திருக்கும் கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றுப் பின்னணியில், எல்லா அரசுகளும் திணறிக் கொண்டிருக்கின்றன. இயல்பு வாழ்க்கையே பாதிக்கப்பட்டிருக்கும் சூழலில், பொருளாதாரம் ஸ்தம்பித்திருப்பதும், அதனால் அரசுக்கான வரி வருவாய் வறண்டு போயிருப்பதும் எதார்த்த உண்மை. அதில் தமிழகம் மட்டும் விதிவிலக்காக இருந்துவிட முடியுமா என்ன?

முந்தைய ஆட்சியில் கடந்த மார்ச் 11-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை அறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வரவு ரூ.2,18,991.96 கோடி என்றால், இப்போது அதுவே ரூ.2,02,495 கோடி என்று மறு மதிப்பிடப்பட்டுள்ளது. அரசின் செலவினங்களும் (ரெவின்யூ எக்ஸ்பென்டிச்சர்) ரூ.2,60,409.26 கோடியிலிருந்து ரூ.2,61,188.57 கோடியாக அதிகரித்திருக்கிறது. அதனால், முன்பு எதிர்பார்க்கப்பட்ட வருவாய் பற்றாக்குறையான ரூ.41,417.30 கோடி இப்போது ரூ.58,692.68 கோடியாக அதிகரித்திருக்கிறது.

இந்தப் பின்னணியில்தான் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தனது நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார். தேர்தல் வெற்றிக்காக திமுகவால் தரப்பட்ட வாக்குறுதிகளைவிட, தமிழகத்தின் நலன் கருதிக் கூறப்பட்ட வாக்குறுதிக்கு அவர் முன்னுரிமை அளித்திருக்கிறார் என்பதைப் பாராட்ட வேண்டும்.

'வருவாயில் ஏற்பட்ட சரிவை நிறுத்தி, நிதிநிலைமையைச் சீர்படுத்துவது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் முக்கியமானது. ஒரே நேரத்திலோ, ஒரே ஆண்டிலோ அதனைச் செய்துவிட முடியாத அளவுக்கு அந்தப் பணி கடினமாக உள்ளதால், குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரை தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்' என்கிற அவரது நிதிநிலை அறிக்கைக் கருத்து வரவேற்புக்குரியது. ஒரு நிர்வாகியின் பார்வை அதில் தெரிகிறது.

தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சமாகக் கருதப்பட வேண்டியது, கணினி மயமாக்கலுக்கும், இணையவழி நடவடிக்கைகளுக்கும் நிதியமைச்சர் கொடுத்திருக்கும் முன்னுரிமை. அனைத்து தமிழக பொது சேவைகளில் மின்னணு அளவீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்படுவதும், அரசின் அனைத்துக் கொள்முதல்களில் மின்னணுக் கொள்முதல் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதும் மிகப் பெரிய நிர்வாக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். அதன் மூலம் இடைத்தரகர்களின் செயல்பாடுகளும், ஊழல்கள் நடப்பதும் தடுக்கப்படும். இணையவழி செயல்பாட்டின் தொடக்கத்தை அறிவிப்பதாக அமைந்திருக்கிறது, முதன்முறையாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் காகிதமில்லா நிதிநிலை அறிக்கை. இதுதான் இந்த நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சம் (ஹைலைட்).

பத்து ஆண்டுகளில் ஆயிரம் தடுப்பணைகள், கதவணைகள்; காசிமேடு மீன்பிடித் துறைமுக மேம்பாடு; தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்; நான்கு இடங்களில் கடல் பூங்காக்கள்; ஒன்பது மாவட்டங்களில் புதிய சிப்காட் பூங்காக்கள்; துணிநூல் துறைக்காக தனி இயக்குநரகம்; ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதியிலும் மூன்று கோடி ரூபாய் செலவில் விளையாட்டரங்கங்கள்; 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 65 கோடியில் திறன்மேம்பாட்டு மையங்கள் போன்றவை வரவேற்புக்குரிய தேவையான அறிவிப்புகள்.

பேருந்துகள் வாங்குவதிலிருந்து பெரும்பாலான திட்டங்கள் மத்திய அரசின் உதவியுடன்தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பொதுவாக, மாநில அரசுகள் அதை வெளியில் தெரிவிப்பதில்லை. கிராமப்புற வீட்டுவசதி திட்டமும், குடிநீர் வழங்கும் திட்டமும் மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் என்று வெளிப்படைத் தன்மையுடன் அறிவித்திருப்பது நிதியமைச்சரின் நேர்மையைக் காட்டுகிறது.

ஒருபுறம் அரசின் கடன் சுமை; இன்னொருபுறம் நிதிப்பற்றாக்குறை. இதற்கிடையிலும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் ரூ.2,756 கோடி கடனை தள்ளுபடி செய்து, புதிதாக ரூ.20,000 கோடி கடன் வழங்க நடவடிக்கை என்று அறிவித்திருப்பதும், பேரவை உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூபாய் மூன்று கோடியாக அதிகரித்திருப்பதும், ஏற்கெனவே பேரிழப்பில் இயங்கும் போக்குவரத்துத் துறையை மேலும் கடனாளியாக்க ஆயிரம் புதிய பேருந்துகள் வாங்குவதும் நிதியமைச்சரை நிர்வாகி அல்லாத சாதாரண அரசியல்வாதியாக்கிக் காட்டுகின்றன.

நிதிச்சுமை இல்லாத பல வாக்குறுதிகள் கடந்த நூறு நாளில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்கிற குற்றச்சாட்டை எதிர்கொள்ளாமல் இருப்பதற்கு பெட்ரோல் லிட்டருக்கு ரூ.3 குறைத்து வழங்கப்படுகிறது.

கொடுத்துவிட்ட வாக்குறுதிகள்; பற்றாக்குறையான நிதியாதாரம் - இதற்கிடையில் குறைந்த காலவெளியில் தயாரித்து வழங்கியிருக்கும் நிதிநிலை அறிக்கை என்கிற அளவில் பாராட்டலாம்.

தினகரன்

14 Aug-2021

இ-பட்ஜெட் சாதனை

தமிழக சட்டமன்றத்தில் காகிதமில்லாத இ-பட்ஜெட் முதன் முறையாக தாக்கல் செய்யப்பட்டது சாதனை மணிமகுடமாக விளங்குகிறது. திமுக தனது தேர்தல் அறிக்கையில் உறுதியளித்த பல வாக்குறுதிகள் பட்ஜெட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சிப்பொறுப்பேற்று 100 நாள் சாதனையை பட்ஜெட் பிரதிபலித்துள்ளது.

பெட்ரோல் மீதான வரியை ₹3 குறைத்த முதல்வரின் உத்தரவு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ₹1,160 கோடி வருவாய் இழப்பு என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கோடிக்கணக்கான நடுத்தர குடும்பங்களுக்கு நிவாரணமாக இது அமையும். தமிழகம் முழுவதும் புதியதாக 10 கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட இருக்கிறது. மேலும் 25 கல்லூரிகளில் ஸ்மார்ட் வகுப்பறை அமைப்பதற்கு ₹10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அண்ணா பல்கலையுடன் இணைந்து ஆளில்லா விமானக்கழகம் உருவாக்கப்பட இருக்கிறது. மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

வேலூர், திருப்பூர், தூத்துக்குடியில் தொழில்நுட்ப பூங்காக்கள் உருவாக்க அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கன்வாடி மையங்களின் தரம் உயர்த்த ₹48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 300 சுற்றுலா தலங்களை மேம்படுத்த ₹187 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பொங்கலுக்கு 1.81 கோடி விலையில்லா வேட்டி, சேலை வழங்கப்பட இருக்கிறது. மேலும் கூட்டுறவு சங்கங்களில் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ₹2,756 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குடும்ப தலைவிகளுக்கு ₹1000 வழங்கும் திட்டத்தால் பயன்பெறுவதற்கு ரேஷன் கார்டில் குடும்ப தலைவர் பெயரை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழ் வளர்ச்சிக்கு எப்போது திமுக அரசு முக்கியத்துவம் அளிக்கும். இதற்காக ₹80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறைக்கு ₹29 கோடியும், காவல்துறைக்கு ₹8.930 கோடியும், தீயணைப்பு துறைக்கு ₹405 கோடியும், நீதித்துறைக்கு 1,713 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளது. 10 ஆண்டுகளில் ஆயிரம் தடுப்பணைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது முக்கிய அம்சமாகும். உலக வங்கி நிதி உதவியுடன் 610 கோடியில் நீர்நிலைகள் புனரமைக்கப்பட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மேட்டூர், அமராவதி, வைகை அணை நீர்தேக்க மட்டத்தை பழைய நிலைக்கு உயர்த்த நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த ₹2056 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மகளிர் இலவச பஸ் பயண திட்டத்துக்கு மசல் மானியமாக ₹703 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி அனைத்து துறைகள் மேம்பாட்டிலும் கவனம் செலுத்தி நிதி ஒதுக்கீடு பட்ஜெட்டில் செய்யப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட் அடுத்த ஆண்டு தாக்கல் செய்யப்படும் முழுமையான பட்ஜெட்டுக்கு ஒரு முன்னோட்டம் என்பதில் சந்தேகமில்லை என்பது பொருளாதார நிபுணர்களின் கணிப்பாக உள்ளது. காகிதமில்லாத இ-பட்ஜெட் திமுக ஆட்சியின் சாதனைகளை மக்கள் இதய கணினியில் பதிய செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தினத்தந்தி
DAILY THANTHI
14 Aug-2021

வரி இல்லாமல், பெட்ரோல் விலையை குறைத்த பட்ஜெட்!

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு பதவியேற்றபின் முதல் முறையாக நேற்று சட்டசபையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. ஏற்கனவே அ.தி.மு.க. அரசு இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்த நிலையில், இந்த பட்ஜெட்டை முழு பட்ஜெட்டாக கருதமுடியாது. ஏனெனில் இது அடுத்த 6 மாதங்களுக்கான பட்ஜெட்தான் என்றவகையில், திருத்தப்பட்ட பட்ஜெட்தான். ஆனால் மிகவும் வித்தியாசமாக காகிதம் இல்லாத 'இ-பட்ஜெட்'. அதாவது மின் நிதிநிலை அறிக்கையாக தாக்கல் செய்யப்பட்டது.

எதிர்காலம் தகவல் தொழில்நுட்ப காலம் என்ற வகையில் நமது சட்டமன்றத்தில் அதன் தொடக்கம் நிகழ்த்தப்பட்டுள்ளது. கடந்த 9-ந்தேதி 126 பக்கங்கள் கொண்ட தமிழக அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையில் நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் எவ்வாறு தமிழக அரசு நிதி பற்றாக்குறையில் தடுமாறிக்கொண்டு இருக்கிறது என்று தெரிவித்த கருத்தை வைத்து, மக்கள், இந்த நிதி பற்றாக்குறையில் எப்படி தேர்தல் அறிக்கையில் கூறியதை அரசு நிறைவேற்றப்போகிறது? தமிழக அரசு, வருமானத்தை பெருக்க என்னென்ன வரிகளை, கட்டணங்களை

உயர்த்துமோ? என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் இந்த நிதி நெருக்கடியிலும் புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை என்பது மகிழ்ச்சிக்குரியது.

தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகள் என்பது 5 ஆண்டு ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றவேண்டியது. அதை முழுமையாக முதல் பட்ஜெட்டிலேயே எதிர்பார்க்கமுடியாது என்பது நிதர்சனமான உண்மை. ஆனால் எந்த வரிகளையும் உயர்த்தாமல் இன்ப அதிர்ச்சியாக தேர்தல் அறிக்கையில் கூறியபடி பெட்ரோல் விலையை ஒரு லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பதற்கான அறிவிப்பை நிதி அமைச்சர் வெளியிட்டார்.

பெட்ரோல் மீதான வரியை மத்திய அரசாங்கம் அதிகரித்து, மாநில அரசுக்கு பகிர்ந்தளிக்காமல் பெருமளவில் பயன் அடைகிறது. பெட்ரோல் விலை உயர்வுக்கு மத்திய அரசாங்கம்தான் பங்கெடுக்கவேண்டும். ஆனால் இந்த விலை உயர்வால் ஏழை-எளிய, நடுத்தர மக்களின் வலியை உணர்ந்து மாநில அரசின் வரியை 3 ரூபாய் அளவுக்கு குறைப்பதாகவும், இதனால் தமிழக அரசுக்கு ரூ.1,160 கோடி நிதிச்சுமை ஏற்படும் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். பெட்ரோல் விலையை குறைத்த தமிழக அரசு விரைவில் டீசலுக்கும் வரியை குறைக்கும் என்பது எல்லோருடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. தேர்தல் அறிக்கையில் கூறியபடி ரூ.2,756 கோடி மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி மற்றும் 2-க்கும் குறைவாக குழந்தைகள் உள்ள மகளிர் அரசு ஊழியர்களுக்கு மகப்பேறு விடுமுறையாக இப்போது அளிக்கப்படும் 9 மாத கால விடுமுறை, 12 மாதங்களாக உயர்த்தப்படுவதும் பெண்களுக்கு பெரும்பயன் அளிக்கும். கருணாநிதி தொடங்கிய 'நமக்கு நாமே திட்டம்', 'அண்ணா மறுமலர்ச்சி திட்டம்' ஆகியவற்றுக்கு புத்துயிர் அளித்திருப்பதன் மூலம் கிராமங்கள் இனி எல்லா வசதியையும் பெறுவதற்கு வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பை பெருக்கவும், தொழில்வளர்ச்சிக்கும் பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் 1,100 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,000 கோடி செலவில் அறைகலன்களுக்கான (பர்னிச்சர்) சர்வதேச பூங்கா அமைக்கப்படும். இதன்மூலம் ரூ.4,500 கோடி முதலீடு ஈர்க்கப்படும். 3½ லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். விழுப்புரம், வேலூர், தூத்துக்குடி, திருப்பூர் மாவட்டங்களில் சென்னையில் இருப்பதுபோல தகவல்தொழில்நுட்ப நிறுவனங்களை கொண்ட 'டைடல் பார்க்'குகள் அமைக்கப்படும். கோயம்புத்தூரில் பாதுகாப்பு கருவிகளுக்கான உற்பத்தி பூங்கா அமைக்கப்படும். திருவண்ணாமலை, தர்மபுரி, நெல்லை, விருதுநகர், சிவகங்கை, விழுப்புரம், நாமக்கல், தேனி, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 'சிப்காட்' தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும். இதுபோன்ற மேலும் பல மாவட்டங்களுக்கான தொழில் பூங்காக்கள் தொழில் வளர்ச்சிக்கு நிச்சயம் வித்திடுவதாக இருக்கும். சுற்றுச்சூழலுக்கு பெருமளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ரூ.92,529.43 கோடி நிதிப்பற்றாக்குறையிலும் மேலும் பல ஆக்கப்பூர்வமான அறிவிப்புகள் அனைத்து தரப்பையும் தொடும்வகையில் அறிவிக்கப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மாலை முரசு

14 Aug-2021

வரவேற்கத் தகுந்த பட்ஜெட்!

தமிழக சட்ட சபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான முதல் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் இந்த நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். தமிழக சட்ட சபை வரலாற்றில் காகிதம் இல்லாத இ– பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும். நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள அறிவிப்புகளை சபை உறுப்பினர்கள் தெரிந்து கொள்வதற்கு வசதியாக ஒவ்வொருவருக்கும் தொடு திரை கணினி வழங்கப்பட்டது. காலை 10 மணிக்கு நிதி நிலை அறிக்கையை வாசிக்கத் தொடங்கிய பழனிவேல் தியாகராஜன் பகல் 1 மணிக்கு வாசித்து முடித்தார். அதாவது இடைவிடாமல் 3 மணி நேரம் இந்த நிதி நிலை அறிக்கையை அவர் வாசித்து முடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக சட்ட சபையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த நிதி நிலை அறிக்கையில் ஏராளமான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழகத்தை பொறுத்தவரையில் மொத்தம் 2.70 கோடி பேர் இருசக்கர வாகனங்களை பயன்படுத்துகிறார்கள். பெட்ரோல் விலை உயர்வால் பாதிக்கப்படும் ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தின் வலியை போக்கும் வகையில் பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. இது மிகுந்த வரவேற்புக்குரியது. இந்த விலைக்குறைப்பு இன்றுமுதலே நடைமுறைக்கு வருகிறது. இந்த அறிவிப்பு இருசக்கர வாகனங்களை பயன்படுத்தும் சாதாரண, நடுத்தர வர்க்கத்தினருக்கு ஒரு பயன் உள்ள அறிவிப்பாகும். இதேபோல் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூ.2,756 கோடி தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

இன்னொரு முக்கிய அம்சமும் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளது. தகுதி வாய்ந்த குடும்பங்கள் கண்டறியப்பட்டு குடும்பத் தலைவிகளுக்கு மாதம் தோறும் ரூ.1000 வழங்கும் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. குடும்ப அட்டையில் குடும்பத் தலைவி பெயர் இடம் பெற்றிருந்தால் மட்டுமே இந்த திட்டம் பொருந்தும் என்று தவறுதலாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. குடும்ப அட்டையில் தலைவர் பெயர் இடம் பெற்றிருந்தால் அந்த பெயரை மாற்றத் தேவையில்லை. தலைவர் பெயரில் குடும்ப அட்டை இருந்தாலும், இந்த தொகை கிடைக்கும் என்று அறிவிப்பையும் நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் இந்த நிதி நிலை அறிக்கையில் தெளிவுபடுத்தி இருக்கிறார். கிராம மேம்பாட்டுக்காக அண்ணா மறுமலர்ச்சி திட்டம் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்றும் இதற்காக ரூ.1,200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் நிதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இந்த திட்டம் குக்கிராம அளவில் நிலவும் அடிப்படை உட்கட்டமைப்பிற்கான இடைவெளிகளை நிறைவு செய்வதாக இருக்கும் என்றும் அவர் உறுதியளித்திருக்கிறார்.

இதேபோல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்துக்கு ரூ.1,000 கோடி, கலைஞர் அறிமுகப்படுத்திய நமக்கு நாமே திட்டத்துக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து உள்ளூரின் முக்கியமான பணிகளை மேற்கொள்ள மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதியோர் ஓய்வூதியத் திட்டம் முழுமையாக சீர் அமைக்கப்பட்டு அனைத்து தகுதி வாய்ந்த நபர்களும் விடுதல் இன்றி பயன் பெறுவதை உறுதி செய்யும் வகையில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு ரூ.487.56 கோடி என உயர்த்தப்பட்டிருக்கிறது.

பள்ளி கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் விதமாக இந்த வரவு, செலவு திட்டத்தில் மொத்தமாக ரூ.32,599.54 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழில் நுட்ப வசதிகளுடன் கண்காணிக்க கூடிய மற்றும் ஆதாரங்கள் அடிப்படையிலான பயிற்சி வழங்க ஏதுவாக 413 கல்வி ஒன்றியங்களுக்கும் தலா 40 திரை கையடக்க கணினிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டம் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் திறனை அதிகரிக்க செய்யும் என்பதில் ஐயமில்லை.

மேலும் அரசுப்பள்ளி மாணவர்கள் கணினி திறன்களை இளம் வயதிலேயே பெறுவதை உறுதி செய்யும் வகையில் 1,784 அரசு நடுநிலைப்பள்ளிகளில் ரூ.114.18 கோடி மதிப்பீட்டில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர இந்த ஆண்டு புதிதாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படும் என்றும் 25 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ. 10 கோடி மதிப்பீட்டில் ஸ்மார்ட் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகள் கல்வித்துறையில் இந்த அரசு எந்த அளவுக்கு அக்கறை செலுத்துகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கை வரவேற்கத்தக்க அறிவிப்புகளுடன் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இது தமிழக மக்களுக்கு மனநிறைவைத்தரும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடம் இல்லை.

76 லட்சம் பனை விதைகள்:

இந்திய நாடார்கள் பேரமைப்பு பாராட்டு!

சென்னை, ஆக. 14

இந்திய நாடார்கள் பேரமைப்பு நிறுவனரும் தலைவருமான ராகம் சவுந்தர பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இன்றைய பட்ஜெட்கூட்டத்தொடரில் பனை மேம்பாட்டு இயக்கம்ரூ.3 கோடியில் செயல்படுத்தப்படும்என்றும்மாநில மரமான பனைமரத்தைதமிழகத்தில்வெட்டக்கூடாது என்றும் அப்படி வெட்டுவதாக இருந்தால்மாவட்ட ஆட்சியரின் அனுமதி கட்டாயம்என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில்பனை மரங்கள்வளர்க்கவும்பனை மரங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்த தமிழகத்தில்76 லட்சம் பனை விதைகள்மற்றும்ஒரு லட்சம்பனை மரக்கன்றுகள்மானியத்தில்வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றுமீ அறிவிக்கப்பட்டுள்ளது.



ராகம்சவுந்தரபாண்டியன்

அதேபோல்பனைத்தொழில்பாதுகாக்கப்படடபனங்கருப்பட்டி காய்ச்சுவதற்கு நவீன எந்திரம் வாங்குவதற்கு மானியம்வழங்கி உத்தரவு பிறப்பித்த முதலமைச்சர், இந்திய நாடார்கள்பேரமைப்பு சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

THE TIMES OF INDIA

14 Aug-2021

Communal forces will not get an inch in TN ... law will take care of AIADMK: Stalin

He may have completed just 100 days in office, but for first-time chief minister ***M K Stalin****, it has been an action-packed stint. As the DMK government gears up for the rest of its tenure, the chief minister, replying to a questionnaire from* ***TOI****, spoke on a range of issues, including the crackdown on alleged corruption of former AIADMK ministers and his inclusive style of governance*

Pic: B A Raju

Jaya.Menon @timesgroup.com

How did you feel when you took oath and said, 'I, Muthuvel Karunanidhi Stalin...'?

When I said Muthuvel Karunanidhi Stalin, it marked the continuation of about 150 years of history. Born in little-known Thirukuvalai, Muthuvelar gave Tamil Nadu a great leader. A poet and songwriter himself, he was the father of Kalaignar. Born into a backward community, he rose to be a leader of the oppressed. I am a continuation of this history. Stalin is not a mere name. It's a continuation of this history. I felt great saying it aloud while taking the oath. It was not just me, crores of DMK cadres too felt as if they were taking the oath along with me. I consider it an achievement, having given them such joy. Kalaignar had said, 'only if you sprint long, you can leap to greater heights'.

As you complete 100 days, how many promises have you fulfilled?

We protected the people of Tamil Nadu from the deadly effects of a second wave. As promised, we disbursed 4,000 Covid-19 relief to all ration card-holders in two instalments. And, though it was not a promise, we provided a hamper of 13 grocery items. Women can now ride free in buses. Under the 'Ungal Thoguthiyil Muthalamaichar' (Chief Minister in your Constituency) scheme, we have redressed the grievances of several people...

What about the opposition charge that you haven't delivered on several promises?

This is just a tactic of the AIADMK to divert the attention of the people from the earlier corrupt regime. People are keenly observing, acknowledging it and praising the achievements of our government. Law will take care of the AIADMK men who had indulged in corruption.

How different from the previous government was your approach to dealing with Covid-19?

I took up Covid-19 containment and relief measures even before I assumed office. Soon after being sworn in chief minister, my government worked 24X7 to ensure people's welfare. We set up a war room. We worked on a war- footing to tackle the oxygen shortage and tide over the crisis. We ensured there was no shortage of oxygen beds. We made the vaccination a mass movement. We significantly brought down Covid mortality. Even amidst lockdown, we ensured people's livelihood was not greatly affected. But proof of the way the AIADMK government handled the pandemic is evident in the corruption even in the purchase of broomstick, bleaching powder and masks.

How cooperative has the Centre been with the state on Covid management in releasing funds and vaccines? Is TN getting its due share of vaccines?

We had to pressure the Union government for everything the state required. Even the vaccine allocation for us was very low. We had to escalate the issue right up to the Prime Minister to get our due share. Even today, the situation is such that we continue to fight relentlessly even for life-saving matters.

On GST, another point of contention with the Centre, what are your plans?

The GST policy snatches the rights of the states, and this has been the DMK's stand. The Union government does not give states due share as per agreed schedule. Tamil Nadu should be given its full share of taxes for the pandemic period. We should get back the situation wherein states should handle their own revenues and taxes.

As for Centre-state relationship, why did you start off on a confrontationist note – First 'Ondriya Arasu', then the draft Indian Ports Bill?

We use the term Union government only as per the principles of federalism. That is how it has been defined in the Constitution. How can that be wrong? We will continue to oppose schemes that snatch the rights of states. They only weaken the federal structure, not strengthen it.

Communal forces will not get an inch in TN ... law will take care of AIADMK: Stalin

> People trust me and come forward with their complaints that are addressed through appropriate departments... I represent everyone
>
> **M K STALIN** | CHIEF MINISTER

Would such a stand make it difficult for TN? Did the Palaniswami government's friendly ties with the Centre help the state?

To protect his chair, Palaniswamy preferred to remain a bonded labourer to the Union government. It is wrong to consider that as friendship. This is a selfish, deceitful act. Indira Gandhi once said that in support and opposition, Kalaignar will remain firm in his stand. We will follow that. We will be vocal for Tamil Nadu's rights. We will fight to ensure the country's federal structure remain strong.

What will be your role in bringing together the opposition parties across the country, something which Mamata Bannerjee has been calling for?

In the last Lok Sabha election itself, DMK's victorious 'Tamil Nadu Formula' (an alliance forged with Congress and other parties, including the Communists) created ripples in Indian political circles. That formula is still being talked about. When such talks translate into action, the desired change will happen.

How are TN's finances? What's its total debt?

For the last 10 years, especially the last seven years, TN has been pushed deep into trouble due to fiscal mismanagement. Our finance minister's white paper exposed that. Tamil Nadu has been burdened with 5 lakh crore debt. The DMK government's objective is to reduce this debt burden imposed on every Tamil by the AIADMK government. This will be achieved by increasing productivity, attracting investments, streamlining taxes, ensuring that the state gets its dues from the Centre on time, and getting the funds sanctioned in tune with the state's development. This Budget is a precursor to that.

What was the idea behind the Economic Advisory Council?

The state appointed the chief minister's Economic Advisory Council with eminent economic experts to ensure equitable growth in all departments, social justice-based welfare schemes and to offer timely as well as constructive advice to the government for financial reforms. It will not be a wasteful expenditure as seen in the AIADMK regime, but to help Tamil Nadu achieve self-sufficiency in economic and financial development.

Do you miss your father? That he was not around to have seen you achieve victory and watch your performance as CM?

Not just I, but DMK cadres and the people of Tamil Nadu do miss Kalaignar. There is a yearning within me that Kalaignar is not around to witness the sixth time the DMK has formed a government... I keep saying frequently that he is within us, guiding us and watching over us.

How different is your style of functioning from that of your father?

He is Kalaignar M Karunanidhi. I am Muthuvel Karunanidhi Stalin. Just like the similarity in the names, it is the Kalaignar government, keeping with the times... His experience and deep visionary thoughts would be the guiding force for my government.

Your consultative, inclusive approach towards the opposition – are you scripting a new style of governance and politics?

Embracing people and their representatives in an inclusive approach has been the hallmark of DMK founder C N Annadurai when he was chief minister of Tamil Nadu. There can be differences among parties in the political arena. This is not necessary when it comes to taking care of people's welfare. Here civility should take priority.

But the AIADMK has accused your government of vendetta politics with searches on M R Vijayabaskar and S P Velumani's premises.

The DMK government is only pursuing legal action against former AIADMK ministers, who indulged in corrupt activities and worked against the interests of the people. The just and legal action based on audited reports, evidence and several complaints of corruption will continue. The law will take its rightful course.

What are your big five challenges?

The Covid-19 pandemic, critical financial situation, stagnant industrial growth, the state's rights that have been snatched away by the Union government, absence of new power generation for 10 years, administrative decay are all tough challenges for us...

How do you ensure that everyone, not just DMK cadres or sympathisers, benefit out of programmes likes 'Ungal Thoguthiyil Muthalamaichar'?

I am not chief minister for the DMK alone. I am CM for the whole Tamil Nadu. People trust me and come forward with their complaints that are addressed through appropriate departments... I represent everyone.

How do you plan to strengthen the DMK in the western belt?

DMK is strong even in the western region. In the Parliament election, we swept the western belt. Though we did not sweep the region for the assembly election, people voted for us sufficiently and everyone understands this from the election results. Despite spreading false propaganda and using its ill-gotten gains (in the election), the AIADMK could not tolerate the support that DMK garnered. I think this false propaganda spread by a motivated group is behind this question from you. DMK continues to enjoy goodwill of all Tamils in all parts of Tamil Nadu.

Will a weakened AIADMK help the DMK more or the BJP?

The DMK is a movement that has always drawn on its own strength. In Tamil Nadu politics, communal forces will not get even an inch of space.

The DMK had joined hands with the BJP in the past. Can that repeat?

Politically, we are still part of the United Progressive Alliance.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

14 Aug-2021

INTERVIEW | M.K. STALIN

'I was not entirely happy, but refused to be overcome by fatigue'

The Chief Minister is confident that his government has fulfilled the initial expectations of the people, and this pace would be sustained

B. KOLAPPAN
CHENNAI

As the DMK government completes 100 days in office, Chief Minister M.K. Stalin reflects back on the extremely challenging times in which his party assumed power. A pandemic was raging, and people had high expectations. Looking back, he says he is confident that his government has fulfilled the initial expectations of the people, and this pace would be sustained throughout. In an interview, he lists the issues that cropped up during the initial days and future challenges.

The DMK came to power after a gap of 10 years and the pandemic posed a challenge when you assumed office. What was your state of mind then?

■ The pandemic had started a year before the DMK came to power. Even then, in the initial days, we functioned in a responsible manner as a ruling party would. Under the programme *'Ondrinaivom Vaa,'* we distributed provisions and vegetables to people. We cooked food and distributed it to lakhs of people and extended financial assistance to auto drivers. The DMK came to power during the second wave of COVID-19 and when the number of new infections reached 30,000 per day. Now we have brought the situation under control. We have upgraded the infrastructure of the government to face any wave. I thank the people who had voted for the DMK with the hope that the party would protect the people of the State.

When officials called on me after the election results indicated a victory for the DMK, I discussed with them the measures to control the spread. To tell the truth, I did not feel any great happiness that the party had captured power and that I had become the Chief Minister. The rapid spread of COVID-19 wiped the smile off my face. But I refused to be overcome by fatigue or hopelessness. I took it as an opportunity and a challenge to keep the faith reposed in the DMK by the people that it could save the State from the impact of the second wave.

Official measures started seconds after we assumed office. The Chief Minister, the Health Minister, the Health Secretary, doctors, nurses and other medical professionals worked every second. Of course, it was a testing period, but I knew it could be overcome. We achieved it through our resolute action. It was possible because of the co-operation of doctors, nurses and frontline workers. They deserve praise.

The second wave created another crisis. Shortage of vaccines, oxygen and beds caused a series of crises...

■ We fully realised that the AIADMK government had put up only an empty show. They suppressed all the details about COVID-19. Medical equipment were bought for an exorbitant price. Even deaths were suppressed. The AIADMK government fooled itself and the people by believing that everything was right. When we assumed office, your questions remained a challenge to us. The government functioned on a war footing. A war room was created. We studied the requirements of people and inadequacy in the medical infrastructure and took immediate action. Beds were added and I personally visited new wards. We ensured that every hospital had adequate oxygen facilities. It was not just the Health Minister. The Industries Minister also joined our efforts and speeded up the work. Other departments also extended help. We quickly created infrastructure to get our quota of oxygen from the Union government, oxygen from other areas, manufacture oxygen and supply it to the required areas. We strove hard to get vaccines and ensured that they were not wasted. We broke the vaccine hesitancy among the people. Though the initial crisis posed a threat, we faced it and worked with the hope that we could protect the people and save Tamil Nadu.

The functioning of your government has created an expectation among people in a short period of time that their problems would be addressed quickly. Can you sustain this?

Definitely. That is why I am here. It is my only duty. I have vowed to attend to people's issues immediately and find a solution. I am confident that I can sustain the integrated growth of the State. I have built an administration in which Ministers and officials have understood the responsibilities of the government and act accordingly. Some Ministers hold portfolios that have direct access to people and people know about their activities immediately. There are Ministers whose portfolios have an indirect connection with the

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

14 Aug-2021

INTERVIEW | M.K. STALIN

'I was not entirely happy, but refused to be overcome by fatigue'

> Though the initial crisis posed a threat, we faced it and worked with the hope that we could protect the people and save Tamil Nadu

development of the State and the welfare of people. Those departments also conduct meetings and discussions and perform efficiently. The contribution of the Economic Advisory Council for the Chief Minister and the State Development Policy Council is also important. Only these coordinated performances ensure smooth functioning of the administration. Our goal is people's welfare and we will not deviate from it.

Educational institutions remain closed. Though online learning continues, the pandemic has denied students the opportunity to play and interact with their classmates on the campus. Will you open schools and colleges as the infection rate has come down? You can also vaccinate the 18-25 age group easily in colleges, can't you?

The government is eliciting the opinion of doctors, educationists and parents to get an idea about the situation and based on their opinion, the government is keen on opening schools and colleges. When schools and colleges are opened, the government would make arrangements to vaccinate students. The government would also address the psychological problems faced by students because of their staying home for months.

The government has come out with a White Paper on the State's finances as promised in the DMK manifesto. Is there any plan to reduce or stop freebies?

■ The White Paper is different from the DMK's manifesto. It explains how the State's finances reached a comatose state during the AIADMK rule. It destroyed finances by borrowing, more borrowing and paying interest for borrowings and borrowing to pay interest. The DMK had pointed this out even when it was in the Opposition. But the AIADMK denied it. Now we have proved it with evidence. We will not go back on our electoral promises in view of the financial crisis and we have said this in the White Paper. The DMK made promises for the welfare of people. We had studied the ways to fulfil the promises before making them. Instead of seeing them as freebies, we consider them schemes to preserve and boost the livelihood. We are firm on fulfilling promises at the appropriate time.

A separate budget for agriculture is to be presented. On the one hand, there is a need to increase the agriculture production; on the other, wetlands and water sources are being destroyed. Do you have any special scheme to protect them?

■ The DMK's 10-year vision document stresses the need for increasing the cultivable area to 20 lakh hectares. A separate Budget is going to be presented, keeping this aspect in mind. The government has renamed the department, realising that agriculture is not land alone but includes the lives of farmers. There is a separate department for irrigation to preserve the water resources. We have taken into consideration climate change and the environment and created a department. We are evolving schemes to increase the State's forest cover to 33% and those schemes will protect wetlands, water resources and natural wealth from looting.

You have been fighting to get exemption from NEET. Don't you think there is a need to improve the curriculum of the common school system to simultaneously benefit students?

■ Our government will function in the manner of the Kalaignar government that introduced reforms in the curriculum to suit the changing circumstances. The lessons and practicals will be designed accordingly. The syllabus of Tamil Nadu will improve the learning abilities and will be on a par with the other streams of schooling.

Do not confuse NEET with the educational ability as they are different. NEET benefits students of a particular stream. It favours a student who is ready to spend lakhs to learn at coaching centres. It does not offer space for poor and government school students. That is why we have said in the Budget that a unique education policy would be evolved.

The State maintains standards in professional courses, but it is not the case in arts and science courses. Do you have any plan to set the trend right?

■ Tamil Nadu is the State that created a separate department for higher education. *Kalaignar* created it 15 years ago. He was instrumental in setting up a central university in Tiruvarur. Steps will be taken to launch courses for research at art and science colleges in tune with the global requirements.

Will the legislative council be revived?

■ It should be. It is the policy of the government that democracy should be lively and there should be scholarly debates.

நக்கீரன்

14 Aug-2021

ஸ்டாலின் ஆட்சி 100 நாள்!

மக்கள் போட்ட கணக்கு!

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் பொறுப்பேற்று, நூறு நாட்கள் நெருங்கிவிட்ட நிலையில், மக்களிடம் இந்த அரசாங்கம் பெற்ற மதிப்பெண் என்னவென்பதை அறிய நாம் களமிறங்கியபோது, கருத்து மழையைக் கொட்டித் தீர்த்தனர். மகிழ்ச்சி, நன்றி, எதிர்பார்ப்பு, ஏமாற்றம், ஆதங்கம் என அனைத்தும் வெளிப்பட்டன.

வள்ளிநாயகம் : "சிலிண்டருக்கு 100 ரூபா குறைப்போம்னாங்க. பெட்ரோல், டீசல் வரியை குறைப்போம்னாங்க. டாஸ்மாக்க மூடுவோம்னாங்க. நீட் தேர்வு ரத்துன்னாங்க. தி.மு.க. அறிக்கையில சொன்னது எதுவும் நடக்கல.

சரஸ்வதி: "கண்பார்வை சரியில்ல. 200 ரூவா சம்பளத்துல சமையல் வேலைக்கு போயி பாடுபடுறேம்யா. எனக்கு மூணு புள்ளைங்க. உதவித்தொகை கேட்டு மனு குடுத்தேன். வி.ஏ.ஓ. நாலு தடவ வந்து விசாரிச்சிட்டு போனாரு. உதவித்தொகை கிடைச்சபாடில்ல. ஆட்சி மாறி என்ன பிரயோஜனம்? அதிகாரிங்க மாறலியே?

சேகம்மாள்: "இலவச வீட்டு மனைப்பட்டா கேட்டு மனு குடுத்தேம்யா. 'ஒங்களுக்கு மகன் இருக்கான், மனுவ நிராகரிச்சிட்டோம்'னு காரணம் சொல்லுறாக. ரெண்டு புள்ள இருக்கிற மீரானுக்கு குருக்கள்பட்டில இலவச வீட்டு மனைப்பட்டா குடுத்திருக்காக. ஏன் இந்த பாரபட்சம்?"

சந்திரகலா: "தி.மு.க. ஆட்சிக்கு வரணும். ஸ்டாலின் முதல்வராகணும்கிற எதிர்பார்ப்பு

9

> மாநில உரிமைகளை விட்டுக்கொடுக்காத தலைமையை பார்க்கிறப்ப மக்களுக்கும் ஒரு தன்னம்பிக்கை வருது. எப்படி பார்த்தாலும், இந்த நூறு நாள் ஆட்சிக்கு 100-க்கு 80 மார்க் தாராளமா போடலாம்.

ஆண்களைவிட பெண்கள்கிட்டதான் அதிகமா இருந்துச்சு. இந்த 100 நாள் ஆட்சியில பெண்களுக்கு இலவச பஸ்ங்கிறது மட்டும்தான் ஆறுதலா இருக்கு. இல்லத்தரசிகளுக்கு மாதம் 1000 ரூபாய்ங்கிறது எப்ப கிடைக்குமோ? மத்தபடி கவலை தீர்ற மாதிரி எதுவும் பெரிசா நடக்கல.

மேகலா: "எங்க வீட்ல ரெண்டு பிள்ளைங்க படிக்கிறாங்க. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் நீட் தேர்வு ரத்தாயிரும்னு சொன்னாங்க. இப்ப என்னடான்னா, நீட் தேர்வுக்கு படிக்க அரசாங்கம் வசதி செய்து கொடுக்கும்கிறாங்க. ஓட்டு போட்ட மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிய நிறைவேற்றலைன்னா ஏமாற்றம்தானே?

முருகானந்தம்: "தமிழர்களோட உணர்வுகளுக்கு மதிப்பளிச்சு நடக்குது தி.மு.க. ஆட்சி. தமிழ்ல அர்ச்சனை பண்ணுறது... கோவில் நிலங்களை மீட்டெடுத்தது... அந்த நிலத்துல கல்லூரிகள் திறப்போம்னு சொல்லுறதெல்லாம் வேற லெவல். மாநில உரிமைகளை விட்டுக்கொடுக்காத தலைமையை பார்க்கிறப்ப மக்களுக்கும் ஒரு தன்னம்பிக்கை வருது. எப்படி பார்த்தாலும், இந்த நூறு நாள் ஆட்சிக்கு 100-க்கு 80 மார்க் தாராளமா போடலாம்.

கருப்பாயி: "தினமும் 10 கி.மீ. தொலைவுல இருந்து காய்கறி வாங்கிட்டு வந்து விற்கிறேன். வர்ற லாபத்துல பாதி பஸ்ஸுக்கே செலவாயிட்டு இருந்துச்சு. இப்ப அந்த பாரத்த இறக்கி வச்சிட்டாரு புண்ணியவான் ஸ்டாலின். அப்படியே அரிசி கார்டுக்கு ரூ.1000 தந்துட்டாருன்னா, என் பேரப்புள்ள காலம் வரைக்கும் வாழ்க்கைய தைரியமா ஓட்டிருவேன்.

சரோஜா: "தி.மு.க. ஆட்சின்னாலே ரவுடியிசம் தலைவிரிச்சாடும்னு கேள்விப்பட்டிருக்கேன். இதுவரைக்கும் அப்படி எதுவும் நடக்கல. இனிமேயும் அப்படி நடக்காம பார்த்துக்கணும்.

ராஜேந்திரன்: "கொரோனா தொற்று கட்டுக்குள்ள வந்து பல மாவட்டங்கள்ல இப்ப இறப்பு பெரிசா இல்ல. இதுவே ஒரு நல்ல முயற்சிதான். அதேமாதிரி, தென்மாவட்டத்துல ஸ்டெர்லைட் விவகாரத்துல அரசோட அணுகுமுறை நிம்மதியை தந்திருக்கு. மாநிலத்துல விரும்பாத திட்டங்களை புகுத்த நினைக்கிற மத்திய அரசு மீது எதிர்ப்புணர்வு வரணும்னு, ஒன்றிய அரசுங்கிற ஒற்றைச் சொல் மூலம், தமிழக மக்களை ஒன்றிணைத்த முதலமைச்சரோட அதிரடி சூப்பரா இருக்கு.

கலா: "எப்படி வேணும்னாலும் கொள்ளையடிக்கலாம் போல. ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவை மின்சாரக் கட்டணம்னா... அது சுமையா இருக்கும். மாதம்தோறும் மின்கட்டணம் செலுத்துற நடைமுறையை ஏற்படுத்துவோம்னு தி.மு.க. வாக்கு கொடுத்துச்சு. ஆட்சிக்கு வந்தபிறகு, மின்சார கணக்கே எடுக்குறதில்ல. திடுமென கணக்கெடுத்து 16 மடங்கு கூடுதலா வசூலிக்கிறாங்க. முன்னாடி, ரெண்டு மாசத்துல குறைவான கட்டணம் கட்டிட்டு வந்த நான், இந்த தடவை ரூ.1600 கட்ட வேண்டியதாச்சு. இதுல புகார் தெரிவிக்கிறதுக்கு நம்பர் வேறு. போதும்ப்பா உங்க பொங்கச் சோறு.

www.nakkheeran.in

நக்கீரன்

14 Aug-2021



அசார்: "கவர்மெண்ட் ஸ்கூல்ல மாணவர் சேர்க்கைக்கு டி.சி. அவசியமில்லைங்கிற அரசோட உத்தரவுக்கு மக்கள் மத்தியில நல்ல வரவேற்பு இருக்கு. பொருளாதார நெருக்கடில இருந்து மக்களை மீட்டிருக்கு. ஆயிரக்கணக்கான அரசுப் பள்ளிகளையும் வாழ வச்சிருக்கு. படிப்படியா அரசுப் பள்ளிகளை மூடும் அபாய சூழல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கு.

தமிழ்ச்செல்வன்: "எந்த துறைக்கு போனாலும் மக்களை அலைக்கழிப்பதும் பணம் கேட்கிறதும் தொடர்ந்துட்டே இருக்கு. அரசு ஊழியர்கள் மூணு வருஷம் முடிஞ்சும்கூட, தொடர்ந்து அவங்கவங்க மாவட்டத்துக்குள்ளேயே பணியிடங்களை மாற்றிக்கிட்டு, அவங்களை வளர்த்துக்கிறதுல ஆர்வம் காட்டுறாங்களே தவிர, மக்களுக்கு நல்லது செய்யுறது இல்ல. இந்த மாதிரி அதிகாரிகளை களை எடுத்தால்தான், மக்களுக்கு அரசாங்கம் மேல ஒரு நம்பிக்கை வரும். தி.மு.க. ஆட்சிக்கு வந்துட்டாலே கந்துவட்டி தலைதூக்கும்னு சொல்லுவாங்க. அங்கங்கே கந்துவட்டிக்காரங்க தலைதூக்க ஆரம்பிச்சிட்டாங்க. மொதல்ல இதை ஒடுக்கணும். கொரோனா காலத்துல வாங்கிய கடனை கட்ட முடியாம மக்கள் தவிக்கிறாங்க. அதைச் சாதகமாக்கிட்டு, வங்கிகளும் தனியார் பைனான்ஸ் நிறுவனங்களும், கடன் வாங்குனவங்க சொத்துகளை அடிமாட்டு விலைக்கு விற்று கடனை அடைக்கச் சொல்லி டார்ச்சர் பண்ணுறாங்க. இந்த விஷயத்துல அரசாங்கம் கவனம் செலுத்தி மக்களைக் காப்பாத்தணும்.

காயத்ரி: 'நிலக்கோட்டையை பொறுத்தமட்டிலும் 5000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பூ வியாபாரத்த நம்பித்தான் வாழுது. இங்கே தோட்டம், காடுகள்ல விளையக்கூடிய பூக்களை நிலக்கோட்டை மார்க்கெட்டுக்கு ஆண்கள்தான் கொண்டு வருவாங்க. அப்ப, பஸ் செலவே 50 ரூபா ஆகிரும். இப்ப பெண்களுக்கு பஸ்ல இலவசம்கிறதுனால, பூ மார்க்கெட்டுக்கு பெண்கள் பூ கொண்டு வர்றாங்க. அதுவும், ஒரு நாளைல ரெண்டு மூணு தடவை வந்துட்டு போயிட்டு, கொஞ்சம் கொஞ்சமா பூ கொண்டுவந்து விற்கிறாங்க. இதுனால, மாசத்துக்கு மூவாயிரம்வரை மிச்சமாகுது.

சசிகுமார்: "அரச மரத்தை சுற்றி வந்தால் பிள்ளை பிறக்கும்கிற நம்பிக்கை இருக்கு. அதுக்காக, அரச மரத்தை ஒருமுறை சுற்றிவிட்டு, அடிவயிற்றை தடவிப் பார்த்தால் எப்படி? எந்தவொரு அரசாங்கத்தாலும் அறிவிச்ச திட்டங்கள் எல்லாத்தயும் ஒரே நேரத்துல நிறைவேற்ற முடியாது. மக்களுக்கு நம்பிக்கையும், ஆட்சி மேல எதிர்பார்ப்பும் கூடியிருக்கு. அடுத்து வர்ற பட்ஜெட்டுக்கு பிறகு, தேர்தல் நேரத்துல சொன்னத எல்லாம் ஸ்டாலின் செய்வாருங்கிற நம்பிக்கை இருக்கு. இதுல, காலம் தாழ்த்தி மக்களை அவர் ஏமாற்றிவிடக்கூடாது.

தி.மு.க. ஆட்சி குறித்த நடுநிலையாளர்களின் பார்வை இது.

'தி.மு.க. ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் தானே கடந்திருக்கின்றன? இன்னும் 57 மாதங்கள் இருக்கின்றனவே? 100 நாள் ஆட்சியில், ஆட்சியாளர்கள் சரியான திசையில் பயணித்தாலும், நல்லாட்சி; சிறந்த முதல்வர் என அவசரப்பட்டு சான்றளித்துவிட முடியாது. வெள்ளை அறிக்கை தமிழக அரசின் நிதி நிலையை வெளிச்சம்போட்டுக் காட்டியிருக்கிறது. மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் எகிறிக் கிடக்கின்றன. தி.மு.க. அரசாங்கம் என்ன சாதிக்கப் போகிறதோ? போகப்போகத்தானே தெரியும்!'

-ராம்கி, சக்தி, அண்ணல், மணிகண்டன், நாகேந்திரன், ராம்குமார்

நக்கீரன்

14 Aug-2021

மீண்டும் தொழில்வளம் காணுமா தமிழகம்?

ஆட்சியின் நூறு நாளை குறித்து, இந்திய சிறுதொழில் சங்கங்கள் கூட்டமைப்பின் தென்னிந்திய வட்டார செயலாளரும், வேலூர் மாவட்ட சிறுகுறு தொழில் முனைவோர் சங்க தலைவருமான எம்.வி. சுவாமிநாதன் நம்மிடம், "சிறுதொழில் முதலீட்டாளர்கள் கொரோனா காலத்தில் தொழில்களை நடத்த முடியாமல் முடங்கிப்போயினர். முடங்கியுள்ள தொழில்துறையை மேம்படுத்த தொழில்துறையின் மூலம் சிறு, குறு தொழில்களுக்கு வழங்கப்படும் மூலதன மானியம் மூன்று தவணைகளாக வழங்குவதற்குப் பதிலாக ஒரே தவணையாக வழங்க ஆணையிட்டார். அதேபோல் தொழில்முனைவோர் வங்கிகளில் வாங்கியுள்ள கடனை திரும்ப செலுத்தும் தவணைக் காலத்தை தள்ளி வைக்கவேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தினார். தொழில் முனைவோர் வங்கியில் கடன் வாங்கும்போது, அதற்குப் பணயமாக சொத்தை வங்கிக்கு பதிவு செய்து கொடுப்பதற்கான பதிவுக் கட்டணத்திலிருந்தும், தொழில் நிறுவனங்களுக்கு 2021 செப்டம்பரில் காலாவதியாகவுள்ள மாசு கட்டுப்பாட்டு வாரியம், நியமனப்புத் துறை, தொழிலாளர் துறை, தொழில் பாதுகாப்பு துறை, வணிக உரிமம் உள்ளிட்ட சட்டபூர்வமான உரிமங்களை 2021 டிசம்பர் வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார். கடன் உத்தரவாத நிதி ஆதார திட்டம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பெறப்பட்ட கடனுக்கு, தமிழக அரசு வழங்கும் 5 விழுக்காடு பின்முனை வட்டி மானியம், நிறுவனங்களுக்கு உடனடியாக விடுவிக்கப்படும் என அறிவித்துள்ளார்.

சிறுகுறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விரிவாக்கத்திற்கான முதலீட்டு மானியம் பெறுவதற்கு விற்று முதல் 25 விழுக்காடு அதிகரிக்கவேண்டும் என்ற விதிமுறையிலிருந்து விலக்கு அளிப்பதை 2021 டிசம்பர்வரை நீட்டித்துள்ளார். அதேபோல், சிட்கோ நிறுவனத்திற்கு செலுத்தவேண்டிய தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில்மனைகளுக்கான விலை, தவணைத் தொகை மற்றும் தொழிற்கூடங்களுக்கான வாடகை போன்றவற்றை செலுத்துவதற்கு மேலும் 6 மாதகால அவகாசம் நீட்டித்து உத்தரவிட்டுள்ளார். உற்பத்திகள் நடக்காமல்

ஸ்டாலின் 100 நாள்

முடங்கியதால் மின்வாரியத்துக்கு நாங்கள் செலுத்தவேண்டிய கட்டணத்தைக்கூட செலுத்த முடியாத நிலையை முதலமைச்சரிடம் தொழில் துறை அமைச்சர் தெரிவித்ததும் எங்களுக்கு கால அவகாசம் வழங்கினார்.

சிறுதொழில் முதலீட்டாளர்கள் தொழில் தொடங்கும்போது மின்வசதி பெற, வருவாய்த் துறை, நியமனைப்புத்துறை, உள்ளாட்சித்துறை, சுற்றுச்சூழல் துறையென பலதுறைகளின் அனுமதி பெறுவது பெரும் சிரமமாக இருந்தது. இதற்கு ஒற்றைச்சாளர அனுமதி முறையை கடந்த ஆட்சியில் கொண்டுவந்திருந்தாலும் அதில் சில சிக்கல்கள் இருந்தது. அதை சரி செய்யவில்லை. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் முதலமைச்சரை நேரில் சந்தித்து அதுபற்றி கூறியபோது ஒரேவாரத்தில் ஒரு குழு அமைத்து அனுமதி வழங்குவதை எளிமையாக்கியுள்ளார். அனைத்து மாவட்டங்களிலும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் 45 வயதிற்கு மேற்பட்ட சுமார் ஒரு லட்சத் திற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே கொரோனா தடுப்பூசி போட உத்தரவிட்டு ஊசி போடப் பட்டுவருவதை சாதனையாகப் பார்க்கிறேன்" என்றார்.

திருவண்ணாமலை சமூகசெயல்பாட்டாளர் மதன் நம்மிடம், "நான் 3 விஷயங்களை இந்த அரசின் சாதனையாகப் பார்க்கிறன். ஒன்று முந்தைய ஆட்சியில் திறமையான, நேர்மையான அதிகாரிகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களை அழைத்து தகுதியான பதவிகளைத் தந்திருப்பது பாராட்டுக்குரியது. இரண்டாவது, கொரோனா இரண்டாம் அலையை பெரியளவில் பாதிப்பு இல்லாமல் கட்டுக்குள் கொண்டுவந்தது. இன்றுவரை மலேசியா, நேபாளம் போன்ற நாடுகளில் ஆக்ஸிஜன் பற்றாக்குறை நிலவு கிறது.

தமிழகத்தில் ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்பட்டபோது உலகத்தின் பல நாடுகளில் இருந்து ஆக்ஸிஜன் சிலிண்டர்களை கொண்டு வந்தது. ஆக்ஸிஜன் இறக்குமதி எனச் செய்து பற்றாக் குறையை தீர்த்தது. தொழில்துறை அமைச்சரால் இவ்வளவு செய்யமுடியுமா என்பதை தமிழகம் ஆச்சர்யத்தோடு பார்த்தது. மூன்றாவது இந்துசமய அறநிலையத்துறை மூலம் கல்லூரிகள் அமைக்கப்படும் என்கிற உத்தரவு நிச்சயம் பெரும் வரவேற்புக்குரியது. அண்ணாமலையார் கோயிலுக்கு கோடி களில் வருமானம் வருகிறது. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ளது. அதில் மகளிர் கல்லூரி கட்ட வேண்டும் என கோரிக்கை வைத்துவந்தேன், யாரும் கண்டுகொள்ளவில்லை. அறநிலையத்துறை சார் பில் கோயில் இடங்களில் கல்லூரிகள் தொடங்கப்படும் என அறிவித்திருப்பது மகிழ்ச்சியை தருகிறது.

குடியாத்தம் கல்வி யாளர் சபிதாகுமாரி, "நீட் தேர்வுக்கு எதிராக தொடர்ச்சியாக தி.மு.க. போராட்டம் நடத்திவந்தது. ஆட்சிக்கு வந்தால் நீட் ரத்து செய்யப்படும் என வாக்குறுதி தந்திருந்தது. அந்த வாக் குறுதியை நிறைவேற்றும் பொருட்டு நீட் பாதிப்புகள் அறிய ராஜன் தலைமையி லான ஒருநபர் கமிட்டி அமைத்தது. பள்ளி, கல்லூரி களில் நூலகம் என்பது காட்சிப்பொருளாகவே இருக்கும். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பள்ளிகளுக்கு நேரடி விசிட் போவதோடு, நூலகத்தின் தேவையை வலியுறுத்தி அதனை உயிர்ப்பிப்பது, அரசுப் பள்ளியில் பயிலு பவர்களுக்கு அரசுப் பணியில் முன்னுரிமை வழங்கியிருப்பது போன்றவை இந்த ஆட்சியின் கிரீடத்தில் மணிமகுடம்" என்றார்.

-து.ராஜா

சுவாமிநாதன்

சபிதாகுமாரி

மதன்

கொரோனா ஆய்வுப் பணியில் முதல்வர் ஸ்டாலின், மா.சு.

ஸ்டாலின் ஆட்சி 100 நாட்கள்

எந்தெந்த துறைகளில் சாதித்தது... சமாளித்தது... சறுக்கியது?

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி பெற்றதும் மக்களுக்கு செய்தி சொல்ல மீடியாக்களை சந்தித்த மு.க.ஸ்டாலின், "எங்களுக்கு வாக்களித்தவர்களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்தே பணி செய்வேன். வாக்களித்தவர்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் வாக்களிக்காதவர்கள் இவர்களுக்கு வாக்களிக்கவில்லையே என வருத்தப்படும் படியும் எனது ஆட்சி இருக்கும். தேர்தலில் சொன்ன வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றுவோம்" என்று தனது உணர்வுகளை வெளிப்படுத்தினார். அதுவே ஸ்டாலினின் அரசாளுமையை மக்களுக்கு உணர்த்தியது.

மே 7-ந் தேதி முதல்வராக பதவிப் பிரமாணம் ஏற்கும்போது, 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்ற அந்த கம்பீரம் ஸ்டாலினின் ஆட்சி எப்படிப் பட்டதாக அமையும் என்பதற்கு கட்டியம் கூறியது. அவரது தலைமையில் 32 அமைச்சர்கள் பதவியேற்றனர்.



கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் அரசின் நிதி நிலைமை மிக மோசமானது. அரசு கஜானாவை சுத்தமாக சுரண்டியிருந்தனர். கடன் சுமையும் நிதி இழப்பும் ஜீரணிக்க முடியாத அளவிற்கு அதிகரித்திருந்தன. சமீபத்தில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை இதனை பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தியது.

நிதி நெருக்கடியும் கொரோனா கொள்ளை நோயும் உச்சத்தில் இருந்த போது ஆட்சிப் பொறுப்பேற்ற மு.க. ஸ்டாலினுக்கு மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவது மிகப்பெரிய சவாலாக இருக்கும் என்ற விமர்சனங்கள் எதிரொலித்தன. அதேசமயம், இத்தகைய நெருக்கடிகளை சமாளிக்க முடியாமல் மத்திய அரசிடம் ஸ்டாலின் சரணடைவார் என்றும் ரசித்து ஆருடம் சொன்னார்கள். ஆனால், அவை எல்லாவற்றையும் பொய்யாக்கி 100 நாட்களை கடந்து நிற்கிறது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆட்சி. முதல்வராக

www.nakkheeran.in

நக்கீரன்

14 Aug-2021

மக்களைத் தேடி மருத்துவம் துவக்க விழாவில்...

பொறுப்பேற்றதும் தலைமைச் செயலகம் வந்த மு.க.ஸ்டாலின், கொரோனா கொள்ளை நோயால் வாழ்வாதாரம் இழந்த குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 4,000 ரூபாய் நிதி உதவி; ஆவின் பால் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு; நகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பெண்கள் பயணித்தல்; தனியார் மருத்துவமனைகளில் கொரோனா நோயாளிகளின் சிகிச்சைக் கட்டணத்தை அரசே ஏற்கும்; தேர்தல் காலத்தில் மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது 100 நாட்களில் தீர்வு காணும் திட்டத்தை செயல்படுத்த தனி துறை அமைத்தல் ஆகிய 5 அறிவிப்புகளில் கையெழுத் திட்டதில் தொடங்கி, கொரோனா பரவலை கட்டுக்குள் கொண்டுவந்தது வரை அவரது உழைப்பும் ஆட்சித் திறனும் வியக்க வைக்கிறது.

'ஸ்டாலின் தலைமையிலான 100 நாள் ஆட்சியில் மக்களோடு இணைந்த முக்கிய துறைகளில் சாதித்தது என்ன? சமாளித்தது என்ன? சறுக்கியது என்ன?' முக்கிய துறைகள் வாரியாகப் பார்ப்போம்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை!

கொரோனா பரவலின் இரண்டாவது அலை மிக உச்சத்தில் இருந்த சூழலில்... துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றார் மா.சுப்பிரமணியன். பலருக்கு ஆச்சரியம்; பலருக்கு அதிர்ச்சி! அமைச்சரவைக்குப் புதியவர் என்பதால், மக்களின் உயிரோடு விளையாடும் கொரோனா தாக்குதல் மிகக்கொடூரமாக இருக்கும் நிலையில்... இந்தத் துறைக்கு சீனியர் ஒருவரை அமைச்சராக்காமல் ஜூனியரை நியமித்திருப்பது எதிர்மறை விமர்சனங்களை உருவாக்கியது. அந்த விமர்சனங்களோடே முதல்வர் ஸ்டாலினை சந்தித்தார் மா.சுப்பிரமணியன்.

அவரது முதுகில் தட்டிக்கொடுத்து, "உங்கள் மீது நம்பிக்கை இருக்கிறது; சிறப்பாக செயலாற்றுங்கள். மாநகராட்சி மேயராக இருந்த அனுபவம் உங்களுக்கு வழி காட்டும். கொரோனா நோய் என்பது கட்டுக்குள் கொண்டுவர முடியாத வைரஸ் அல்ல" என்று உற்சாகப் படுத்தினார். அமைச்சராக மா.சுப்பிரமணியன் பொறுப் பேற்றபோது, தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 25,465. அடுத்த 14 நாட்களில் 36,184 ஆக வெகுவேகமாக அதிகரித்தது இதுதான் தமிழகத் தில் உச்சம்! அதேபோல, ஆக்சிஜன் கையிருப்போ 230 மெட்ரிக் டன். ஆனால் தேவையோ 400 மெட்ரிக் டன்.

மு.க.ஸ்டாலின், மா.சுப்பிரமணியன் மற்றும் சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட உயரதிகாரிகள் ஆகியோரை 24 மணி நேரமும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை டாக்டர்கள் தொடர்புகொண்டபடியே இருந்தனர். 'ஆக்சிஜன் இல்லாமல் 200 பேர் தவிக்கிறார்கள், பெட் கிடைக்காமல் 350 பேர் ஹாஸ்பிட்டல் வராண்டாக்களில் கிடக்கிறார்கள். ஆக்சிஜன் சிலிண்டர்களை அனுப்புங்கள். படுக்கைகளை ஏற்பாடு செய்யுங்கள்... இல்லையெனில் கொத்துக் கொத்தாக மரணம் நிகழ்வதை தடுக்க முடியாது' என்று மருத்துவர்கள் சொல்ல,

நக்கீரன்

14 Aug-2021

போனை எடுக்கவே அமைச்சரும் அதிகாரிகளும் பயந்தனர். எனினும், மனம் தளரவில்லை.

ஆக்சிஜன் பற்றாக்குறையைப் போக்க மேற்குவங்கம், ஒடிசா மாநிலங்களில் தொடர்ந்து பேசி, ஆக்சிஜன் சிலிண்டர்களை விமானங்களிலும் கப்பல்களிலும் கொண்டுவர நடவடிக்கை எடுத்தார் ஸ்டாலின். இது ஒருபுறமிருக்க, ஆக்சிஜன் தயாரிக்கும் தனியார்களிடமிருந்து இருப்பதையெல்லாம் கொள்முதல் செய்யும் பணிகளை முடுக்கிவிட்டார் மா.சுப்பிரமணியன். மற்றொரு புறம் ஆக்சிஜன் செறியூட்டிகளையும் ஜெனரேட்டர்களையும் பெறுவதற்கு தனி மையம் போடப்பட்டு, அவர்களையும் வேகப்படுத்தினர். இப்படி துரிதமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் ஆக்சிஜன் கையிருப்பை 500 மெட்ரிக் டன்னாக உயர்த்தினர். ஆக்சிஜன் இல்லையென ஒருவர் கூட தமிழகத்தில் மரணமடையாமல் பார்த்துக்கொண்டது திமுக அரசு.

இது குறித்து பேசும் அமைச்சர் மா.சுப்பிரமணியன், "அந்த நாட்களை நினைத்தால் இப்போதும்கூட குலை நடுங்குகிறது. தொடர்ச்சியாக 5 நாட்கள் தூங்கா இரவுகள்தான். ஆக்சிஜன் சிலிண்டர்கள் பொருத்தப்பட்ட மருத்துவப் படுக்கைகள், கொரோனா பரிசோதனைகளின் எண்ணிக்கை ஆகியவைகளை அதிகரித்தல், ஆங்கில மருத்துவத்துடன் தமிழ் பாரம்பரிய மருத்துவத்தையும் இணைத்து சிகிச்சை அளித்தல், தடுப்பூசி பணிகளை விரைவுபடுத்துதல் என இடைவிடாமல் எடுத்த நடவடிக்கைகளால் கொரோனாவின் பரவல் கட்டுப்படுத்தப்பட்டது. இதனால் பாசிட்டிவ் கேஸ்களின் எண்ணிக்கை குறைந்ததுடன், குணமடைந்து வீடு திரும்புபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இன்றைக்கு கட்டுக்குள் இருக்கிறது கொரோனா.

முதல்வரின் ஊக்கமும் மருத்துவர்களின் ஒத்துழைப்பாலும்தான் சாதிக்க முடிந்தது. மூன்றாவது அலை வரும் என்கிறார்கள். வரக்கூடாது; வந்தாலும் அதனை எதிர்கொள்ளும் கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறோம். மூன்றாவது அலையை எதிர்கொள்ள ஆக்சிஜன் சிலிண்டர்கள் இணைக்கப்பட்ட 1 லட்சம் படுக்கை வசதிகள், 1000 மெட்ரிக் டன் ஆக்சிஜன் சிலிண்டர்கள், குழந்தைகளுக்கென தமிழக முழுவதும் சிறப்பு மையங்கள், கறுப்பு பூஞ்சைக்கான 7,500 படுக்கைகள் கொண்ட சிறப்பு வார்டுகள் என அனைத்து கட்டமைப்புகளையும் ஏற்படுத்தியிருக்கிறோம்" என்கிறார் பெருமிதமாக.

கடந்த ஆட்சியின்போது டாக்டர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவ பணியாளர்களுக்காக ஒரு நாளைக்கு ஒரு நபருக்கான சாப்பாடு 600 ரூபாயும், தங்கும் அறைக்கு ஒரு நாளைக்கு 2,500 ரூபாயும் தந்திருக்கிறது எடப்பாடி அரசு. அதே ஹோட்டல் நிர்வாகத்தில் சாப்பாட்டிற்கு 150 ரூபாயும், தங்கும் அறைக்காக 500 ரூபாயும் குறைத்து பேசி முடித்திருக்கிறார் மா.சுப்பிரமணியன். இதன்மூலம் கடந்த 2 மாதத்தில் மட்டும் 20 கோடி ரூபாய் சுகாதாரத்துறைக்கு மிச்சம். கடந்த ஆட்சியின் ஒன்றரை வருடங்களில் இவற்றில் மட்டுமே 1 கோடியே 80 லட்சம் ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது.

அதேபோல 350 ரூபாய்க்கு அதிமுக ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்ட கவச உடைகளை அதே நிறுவனத்துடன் பேசி 120 ரூபாய்க்கு கொள்முதல் செய்திருக்கிறது திமுக ஆட்சி. 'என்-95' முக கவசங்களை 80 ரூபாய்க்கு அதிமுக அரசு வாங்கிய நிலையில், அதை திமுக அரசு 22 ரூபாய்க்கு வாங்குகிறது. இதன் எண்ணிக்கை 9 லட்சம். இவைகளை கணக்கிட்டால் 11 கோடியே 70 லட்சம் ரூபாய் கவச உடைகளிலும், 5 கோடியே 22 லட்சம் ரூபாய் முககவசங்களிலும் மிச்சப்படுத்தியிருக்கிறது திமுக அரசு. அந்தவகையில் இவற்றில் மட்டுமே கடந்த ஒன்றரை வருடங்களில் சுமார் 250 கோடி ரூபாய் ஊழலை நடத்தியிருக்கிறது அதிமுக அரசு. அவை இந்த ஆட்சியில் தடுக்கப்பட்டிருக்கின்றன.

திமுக அரசின் சுகாதாரத்துறையில் தற்போது மகத்தான திட்டமாக அனைவராலும் பாராட்டும்படி இருப்பது மக்களை தேடி மருத்துவம். இந்த திட்டத்தை முதல்வர் ஸ்டாலினிடம் மா.சு விவரித்தபோது, 'உடனடியாக நிறைவேற்றுங்கள்' என அனுமதி தந்ததுடன், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதனை துவக்கிவைத்து தமிழகம் முழுவதும் நடந்துவருகிறது.

திட்டம் துவக்கப்பட்ட முதல் 3 நாட்களில் மட்டும் 25,617 பேர் பயனடைந்துள்ளனர். இத்தகைய நோயால் தாக்கப்பட்டவர்கள் என தமிழகத்தில் தற்போது 20 லட்சம் பேர் கண்டறியப்பட்டுள்ளனர். இந்த திட்டத்தால் வருடத்துக்கு 5 லட்சம் பேரை மரணத்திலிருந்து காப்பாற்ற முடியும். மேலும் இறப்பு சதவீதத்தை 50 சதவீதம் தள்ளிப்போடவும் தவிர்க்கவும் முடியும்.

டாக்டரல்லாத ஒருவர் மருத்துவத்துறைக்கு அமைச்சராகி, முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவது, அந்தத் துறையில் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. இந்தியத் தலைநகர் டெல்லியிலேயே ஆக்சிஜன் தட்டுப்பாட்டால் மரணங்கள் ஏற்பட்ட நிலையில், தமிழ்நாட்டில் அத்தகைய நெருக்கடியான நிலை நீடிக்காதபடி உடனடியாகத் தடுத்தது மருத்துவத்துறையின் முதல் வெற்றி.

அதே நேரத்தில், டாக்டர்கள் -செவிலியர்கள் உள்ளிட்டோரின் ஊதியம் தொடர்பான கோரிக்கைகள், காலி பணியிடங்களை நிரப்புவது போன்றவற்றில் முந்தைய அதிமுக ஆட்சி ஏற்படுத்தியுள்ள நெருக்கடிகள் நீடிக்கவே செய்கின்றன. அதுபோல 'மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொரோனாவுக்கு சிகிச்சை' என ஸ்டாலின் அரசு அறிவித்தபோதும், அதனைப் பெறுவதில் பொதுமக்களுக்கு நிறைய இடர்ப்பாடுகள் இருந்தன. இந்த சவால்களையும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் எதிர்கொண்டாக வேண்டும்.

விவசாயம் காப்போம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, தமிழக வரலாற்றிலேயே முதல்முறையாக நேற்று வேளாண் பட்ஜெட்டை சட்டப்பேரவையில் தாக்கல் செய்துள்ளது.

வேளாண் பட்ஜெட்டில், நெல் கொள்முதல் விலை ஒரு குவிண்டாலுக்கு சன்ன ரக நெல் ₹2,060, சாதாரண ரகம் ₹2,015 ஆகவும், கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ₹42.50, கூடுதல் சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ₹150 வழங்கவும் ₹178.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பல லட்சம் விவசாயிகள் பலன் பெறுவார்கள். மேலும், பாரம்பரிய நெல் ரகங்களின் பாதுகாப்புக்காக ₹25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாப்பதில் பனை மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதனை கருத்தில் கொண்டு 76 லட்சம் பனை விதைகளை மானியத்தில் வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கெல்லாம் ஹைலைட்டாக, பனை மரங்களை வெட்ட மாவட்ட கலெக்டரின் அனுமதி கட்டாயம்; ரேஷன் கடைகளில் பனை பொருட்கள் விற்பனை செய்ய நடவடிக்கை உள்ளிட்ட அறிவிப்புகள், வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் பனை விவசாயிகள் வயிற்றில் பாலை வார்த்துள்ளது. கடந்த ஆட்சியின் போது தமிழகத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட சூழலை தவிர்க்க, விவசாயிகள் பிரச்னைகளுக்கு தீர்வு காண தலைமைச்செயலாளர் தலைமையில் மாநில அளவிலான வேளாண் உயர்நிலைக்குழு; சென்னையில் வேளாண் அருங்காட்சியகம், தஞ்சையில் தென்னை மதிப்பு கூட்டு மையம் , தேனி, திண்டுக்கல், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட இடங்களில் சிறுதானிய இயக்கம் அமைக்கும் திட்டங்கள் வரவேற்பிற்குரியவை.

மேலும், தமிழகம் உணவு தானியங்கள், தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு உள்ளிட்ட பணப்பயிர்கள் சாகுபடியில் முதல் 3 இடங்களை பிடிக்கவும், இதற்காக நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2,500 கிராமங்களில் நீராதாரங்களை உருவாக்கி சாகுபடி பரப்பை உயர்த்தவும், வேளாண் படிப்பு முடித்தவர்கள் விவசாய பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்க திறன் மேம்பாட்டு பயிற்சி, ஏழை விவசாயிகளுக்கு உபகரணங்கள், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மரக்கன்றுகள், மூலிகைச்செடிகளை நட்டு பராமரிக்கவும், முருங்கை ஏற்றுமதி மண்டலம், பலா சிறப்பு மையம், குளிர் பதன கிடங்குகள், உலர்களத்துடன் கூடிய பதப்படுத்தும் மையங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் வேளாண் திருத்த சட்டங்களால் விவசாயிகள் குரல்வளை நசுக்கப்படும் அதே நேரத்தில், ஒட்டுமொத்த தமிழக விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, திமுக அரசு தனி பட்ஜெட் தாக்கல் செய்துள்ளதை விவசாயிகள், பொதுமக்கள் வெகுவாக வரவேற்றுள்ளனர்.

மாலை மலர்

15 Aug-2021

பெரியார், அண்ணா, கலைஞர்

முப்பெரும் தலைவர்களின் வடிவில் மு.க.ஸ்டாலின் செயல்படுகிறார்

கோவைதங்கம் பாராட்டு

சென்னை, ஆக.15–

முன்னாள் எம்.எல்.ஏ. கோவை தங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

பெருமை மிக்க சுதந்திர தினத்தில் பெருமைக்குரிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோட்டை கொத்தளத்தில் தேசிய கொடியை ஏற்றி உள்ளார்.

சும்மா வந்ததில்லை சுதந்திரம்' என்பதைப்போல் மு.க.ஸ்டாலினுக்கும் இந்த கவுரவம் சும்மா கிடைத்து விடவில்லை. சிறு வயதில் இருந்தே கடுமையாக உழைத்தே இந்த உயர்ந்த இடத்துக்கு வந்துள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க 75–வது சுதந்திர தினத்தில் வரலாற்று சிறப்புமிக்க வேளாண் பட்ஜெட்டையும் அறிமுகப்படுத்தி இருக்கிறார். நாட்டின் முதுகெலும் பாக கருதப்படும் வேளாண் மையை பாதுகாக்கும் திட்டத்தால் சரிவில் இருந்து விவசாயம் மீண்டு எழும்.

சமூக நீதியில் நாட்டுக்கே வழிகாட்டியாக திகழும் தமிழகத்தில் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் கட்டிக்காத்து வந்த அனைவருக்கும் சமநீதி என்ற கொள்கையில் இம்மி யளவும் பிசகாமல் தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அந்த மூன்று தலைவர்களையும் நினைவு படுத்துகிறார்.

தமிழில் அர்ச்சனை என்பது மட்டுமல்லாமல் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை உறுதிப்படுத்தி 58 பேருக்கு பணிகளும் வழங்கி இருக்கிறார். இதன் மூலம் அந்த 3 தலைவர்களின் வடிவமாக இன்று மு.க.ஸ் டாலின் காட்சியளிக்கிறார். கடனில் மூழ்கடிக்கப்பட்ட தமிழகத்தை மீட்கும் முயற்சி யில் நிச்சயம் வெற்றி பெறுவார். 100 நாட்கள் ஆட்சியில் தன்னால் முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி அனைத்து தரப்பினரின் பாராட்டையும் பெற்றுள் ளார்.

வளமான தமிழகம் காண வலிமையான அவரது ஆட்சியும், திறமையும் துணை நிற்கும். நான் அல்ல நாடு என்று பாடுபடும் அவரது பணிக்கு நாமும் துணை நிற்போம். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

முரசொலி

15 Aug-2021

எதிர்பார்ப்புகளுக்கு மேலே

உயர்ந்துவிட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

‘இந்து’ என்.ராம் புகழாரம்!

சென்னை, ஆக. 15–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான கழக அரசின் நூறு நாள் சாதனைகளைப் புகழ்ந்து இந்து என்.ராம் சன்நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது–

இது ஒரு சிறந்த ஆரம்பம் என்று நான் நினைக்கிறேன். கிரிக்கெட்டில் வீரேந்திர ஷேவாக் ஆடுவதை போல ஒரு நேர்மையாக மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு செயல்பட்டார்கள் என்று சொல்லலாம். எங்கே கேட்டாலும் மக்கள் சொல்கிறார்கள். எங்களுக்கு நம்பிக்கை வந்து விட்டது. எதிர்பார்ப்பும் உயர்வாக வந்து விட்டது. அது எதனால் வந்தது என்றால், மக்கள் பிரச்சினையில் இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து பணியாற்றினார்கள். சரியான நிலையில் திட்டமிட்டு பணியாற்றினார்கள். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. ஆட்சி மிகுந்த நெருக்கடியான காலத்தில் அமைந்தாலும் இரண்டாவது அலையை அவர்கள் நிதானமாக விஞ்ஞான ரீதியாக செயல்பட்டார்கள் என்று சொல்ல முடியும்.

கொரோனா பெருந்தொற்றிலிருந்து மக்களை காக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு அமைச்சர்களை அனுப்பி கண்காணிக்க வைத்தார்கள். உங்கள் பொறுப்பில் உள்ள மாவட்டங்களில் நோய்

தொற்றை குறைத்து, உயிரிழப்பை குறைக்க வேண்டும். உண்மையான நிலவரத்தை மக்களுக்கு சொல்ல வேண்டும் என்று செயல்பட்டார்கள். கொரோனா தொற்று குறித்து உண்மையை சொன்னார்கள். அது மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

மக்களைத் தேடி மருத்துவம் என்கிற திட்டம் மிகவும் அற்புதமான திட்டம். இத்திட்டம் கேரளாவில் ஓரளவுக்கு இருந்தது. தமிழ்நாட்டில உட்கட்டமைப்பு இருந்தது. எந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு மாவட்டத்திற்கு இருக்கக்கூடிய சுகாதார அடிப்படை வசதிகள் வேறு எங்கும் கிடையாது. மருத்துவக் கல்லூரி ஒவ்வொரு மாவட்டத்திலும் வந்து விட்டது. அதை எல்லாம் மேம்படுத்த வேண்டும். இப்போது கூட ஒரு குழந்தைகள் நல வார்டை ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஆரம்பித்தார்கள். இதில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கை தாரம், சுகாதாரம், ஆரோக்கியம் என்ற ஒரு உணர்வோடு வந்து இருக்கிற ஒரு அரசாங்கமாக தி.மு.க. அரசாங்கம் திகழ்கிறது. இதுதான் முதல் சவால். மோதல் போக்கு எங்கும் இல்லை. கொள்கையை ஆரம்பமாக வைத்திருக்கிறார்கள். தி.மு.க. அடிப்படை கொள்கையை கோரிக்கையாக வைத்து மாநில உரிமைக்காக போராடினார்கள். மத்திய அரசும், தமிழக அரசுக்கு ஒத்துழைப்பு தந்து இருக்கிறது. உதாரணமாக தடுப்பூசி தேவை என்றவுடன் கொடுக்கிறது. ஒரு குறிப்பிடத்தக்க விஷயம் இந்து சமய அறநிலையத் துறையை குறித்து அவதூறுகள் எல்லாம் இருந்தது. இப்போதெல்லாம் கோயில் நிலங்கள் எல்லாம் பராமரித்து வருகின்றது. யாரெல்லாம் கோயில் நிலங்களை வைத்திருந்தார்களோ அவர்களிடம் இருந்து நிலங்களை மீட்டு கொண்டு வந்திருக்கிறார்கள்.

கலைஞர் அவர்கள் நல்ல நூலகங்களை உருவாக்கி தந்துள்ளார். அதையெல்லாம் நிறைவு செய்ய வேண்டும். இன்னும் நிறைய பணிகள் இருக்கிறது. அதை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றும் என்று நம்புகிறேன். தென் மாநிலங்களில் தமிழ்நாட்டை ஒரு முன்மாதிரி மாநிலமாக கொண்டு வர முடியும் என்று நம்புகிறேன். இந்த அரசுக்கு நான் முன்னரே சொன்னபடி நூற்றுக்கு நூறு மார்க் கொடுக்கலாம். சில ஏதாவது குறைகள் ஆங்காங்கே இருக்கலாம். ஆனால் என் கண்ணில் படவில்லை. முக்கியமாக கொரோனா பெருந்தொற்றிலிருந்து மக்களை காக்கவும் சிறந்த நிர்வாகத்தை வழங்கவும் உயிரிழப்பை குறைக்கவும் நோய்த் தொற்றிலிருந்து மக்களை காக்கவும் இந்த அரசு பாடுபடுகிறது. ஆக்சிஜன் பற்றாக்குறை இருந்தது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசோடு தொடர்பு கொண்டு தடுப்பூசி தட்டுப்பாடு இல்லாத நிலையை முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். இடையில் ஒன்றிய அரசு கூட தடுப்பூசி வழங்குவதில் தாமதப்படுத்தியது. உடனடியாக தடுப்பூசி எளிதில் கிடைக்க ஒன்றிய அரசின் அமைச்சர்களோடும், பிரதமரோடும் பேசி சுலபமாக கிடைக்க வழிவகை கண்டார்.

இந்த அரசு சரியான முறையில் சிறந்த நிர்வாகத்தோடு நடந்து கொண்டிருக்கிறது. இந்த அரசை போல வேறு எந்த அரசும் செயல்பட்டு இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். எதிர்பார்ப்புகளுக்கு மேலே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பாக செயல்படுகிறார்.

இவ்வாறு ‘இந்து’ என்.ராம் அவர்கள் சன் டிவி விவாத மேடையில் பேட்டியளித்தார்.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

15 Aug-2021

'A half-a-century-old dream'

People welcome the govt.'s move on appointing 'archakas'

SPECIAL CORRESPONDENT
CHENNAI

Social media users on Saturday welcomed the appointment of archakas from all castes to temples governed by *agamas* and managed by the HR & CE Department. Many termed it a victory of Dravidian ideology.

A "half-a-century old dream come true" is how MP D. Ravikumar termed the appointment of 'archakas' from all castes. "Periyar strongly fought for the appointment of those wanting to be priests. Then it was *Kalaignar* who facilitated it by passing a G.O., amending the Hindu Religious and Charitable Endowments Act and waging several legal battles. Since there is no rule against the appointment of women as priests, they too should be permitted to do so," he said.

G. Babu Jayakumar, the author of a recent book on Periyar, said, "Periyar organised a meeting on the issue a week before he died. This has been a long battle, to see persons of all castes in the sanctum sanctorum."

Struggle for inclusion

1970: Former Chief Minister M. Karunanidhi amended the HR&CE Act to permit people from all castes to become priests. Several cases were filed against the move

1972: A five-judge Bench of the Supreme Court said 'archakas' had never been regarded as the spiritual head of any institution. He may be an accomplished person, well versed in the 'agamas' and rituals that need to be performed in a temple but he does not have the status of a spiritual head. The Supreme Court upheld the principle in several cases, including that the appointment of an 'archaka' is a secular act. The court also upheld a government order that said the post of 'archaka' was not a hereditary right in Seshammal & Ors, etc. vs State Of Tamil Nadu

2006: Karunanidhi issued a G.O. to permit people from all castes to be appointed priests. Then too, many went to the Supreme Court. The court said the exclusion of some and inclusion of a particular segment or denomination for appointment as 'archakas' does not violate Article 14, so long as such inclusion/exclusion is not based on caste, birth or any other Constitutionally unacceptable parameter

2018: First non-Brahmin 'archaka' was appointed to an HR&CE temple



2020: Second person appointed

2021: 24 persons appointed — five from the Scheduled Castes, six from the Most Backward Classes, 12 from the Backward Classes and one from other communities

DECCAN
Chronicle

15 Aug-2021

100 DAYS OF STALIN GOVT

DECCAN CHRONICLE | SUNDAY | 15 AUGUST 2021 | CHENNAI

Balancing a 100 year tradition with modern growth

G. BABU JAYAKUMAR | DC
CHENNAI, AUG. 14

No other Chief Minister in the history of Tamil Nadu would have faced such an arduous task in balancing various aspects of governance as M. K. Stalin had in the first 100 days of rule. Though he took charge at a time when the state, nay the nation, was reeling under the severe impact of the third wave of the coronavirus pandemic with the economy already in the dumps, he was expected to perform a miracle by putting the state back on track.

And the miracle he did perform by winning over the hearts of the people through a plethora of measures. First and foremost, he restored faith in democracy among people and through his first tranche of welfare measures instilled a confidence in the minds of the people that the political tradition that he had inherited from the Dravidian movement would continue.

On the lines of the previous DMK governments that laid emphasis on formulating schemes that would help the depressed and distressed sections, Stalin made travel free for women in government buses - a privilege that was extended to transgendered persons and people with disabilities later on. It was a revolutionary measure that gave unlimited mobility to women from the poor sections of society with many of them reportedly travelling long distances in search of employment in rural areas.

Similarly, the reduction of Aavin milk prices came as a boon to many with even some private milk sellers slashing rates and thus helping in improving the nutrition of children in particular. The payment of ₹4000, in two instalments, for each of the 2,07,67,000 family card-holders came as a relief to many people struggling to tide over indigence caused by the lockdown and loss of livelihood.

Then at a micro level, a plethora of issues were sorted out across the state, enabling lakhs of people to heave a sigh of relief as the 'Chief Minister in Your Constituency' scheme was formalised with officials appointed to look into specific complaints and demands made by ordinary people. This endeared the Chief Minister to the people as they felt that at last there was a way to redress their personal and common grievances.

By hobnobbing with the common people, be it posing for selfies as his rode his bicycle on ECR or handing over relief to common people and interacting with them or inspecting rations shops, Stalin made the people feel that they have at last found a Chief Minister who understood their problems and was prepared to solve them. Particularly the vignette of a Chief Minister in a PPE kit inside a Covid-19 ward to personally enquire about the health of infected persons drew gasps from the people of the state who went on to urge him not to repeat such risky acts.

It was an exercise that inspired the medical fraternity to put in their best in the care of Covid-19 patients, though they had been doing it without fail even then. The Chief Minister also sent across the message to all medical professionals that the government acknowledged their dedication and commitment to the profession by announcing a relief of ₹25 lakh to the families of doctors who succumbed to coronavirus.

Beyond the pandemic, too much happened. A resolution was found for the long-pending demand of compensation for those who suffered injuries and the families of those killed in what has come to be known as the Thoothukudi massacre of May 22, 2018. Not only were the plethora of cases filed against the protesters in Thoothukudi by the previous government withdrawn but the families that

Tackling Covid and inoculating people

Chennai, Aug 14: On the Covid-19 front, the steps taken by Stalin to take care of children left without parents went down well with the people. A slew of measures like compensation that will be deposited in the name of the child and then paid with interest when the beneficiary attained 18 years of age, other concessions in government hostels and so on were seen as visionary ideas that only a government with compassion could come up with.

By addressing the vaccination shortage in the state immediately after taking over, Stalin earned accolades from various quarters.

His demands with the Centre for adequate supply of vaccines, his attempts to buy vaccines from the international market and organizing camps to enable the inoculation of more people against the virus were all well received. Taking into consideration the financial position of the state, Stalin mobilised funds for fighting the pandemic through a call for donations for the Chief Minister's Public Relief Fund. Individuals and institutions chipped in to lend the helping hand to the government, which was judicious in use of funds.

Rising to the occasion when the state was about to run short of hospital beds to treat Covid-19 patients, Stalin took a plethora of steps to increase facilities in government and private hospitals. He also expanded the scope of the Chief Minister's Insurance Scheme to cover medical expenses incurred in private hospitals for coronavirus treatment, which came as a boon for many who had to admit themselves to private facilities.



Deccan Chronicle

15 Aug-2021

100 DAYS OF STALIN GOVT

Balancing a 100 year tradition with modern growth

lost their loved ones and persons injured in the police firing were compensated.

As far as the question of reopening Sterlite, the company against which the protests were held, was concerned, Stalin respected the sentiments of the people and did not allow the firm to extend the process of oxygen manufacturing, which was started to meet the then increased demand from hospitals treating Covid-19 infected persons. Though DMK had agreed to permit Sterlite to manufacture and supply oxygen before the party took charge, it did not allow that to continue once the oxygen shortage was over.

Assertive of the state's rights, the Chief Minister placed 25 demands to the Prime Minister when he visited him in New Delhi. Be it preventing Karnataka from building a dam across River Cauvery at Mekedatu or seeking cancellation of Neet for the state or protesting the National Educational Policy or reiterating the demand for linking of rivers, Stalin proved his mettle as a fighter for upholding the state's rights.

On the social justice front, too, he put pressure on the Centre that led to the provision of OBC reservation in the all India quota for medical admissions. He also ensured that the State's right to decide which castes formed the OBC was restored despite the Supreme Court handing it over to the President. Besides, he announced that native Tamils, particularly those who studied in Tamil medium schools, would be given preference in jobs in the state.

Establishing himself as a champion of the freedom of the press – at a time when governments elsewhere are throttling the media – Stalin withdrew 90 cases pending against various publications and media houses for the past 10 years. The gesture was reminiscent of former Chief Minister M. Karunanidhi withdrawing a slew of cases against newspapers after assuming office in 1996. All those cases were filed by the previous AIADMK government in power between 1991 and 96.

Many other moves by Stalin too reminded people of Karunanidhi's policies. One example is the stress on developing business in the state. At the Investors First event Stalin ensured the inflow of ₹28,508 crore investments and job opportunities for 83,482 persons. The other example is the encouragement he showed to sportspersons from the State, who were selected to represent India at the Olympics.

Not forgetting the love for Tamil that Karunanidhi had all through his life, Stalin announced many measures. One of them is the 'Thakaisal Tamilar' award for an eminent Tamil, which would carry a purse of ₹10 lakh and a citation. By picking veteran Communist leader N. Sankaraiah as the first recipient of the award, he also showed the respect he had for alliance partners, which was also proved through the selection of Peter Alphonse of the Congress as the chairman of the State Minorities Commission.

To put it in a nutshell, Stalin's all round performance in the first 100 days in office has not only been remarkable but also raised the hope that the state was being led on the right path to more glory and success.

(AP Shreedhar is a renowned artist for more than two decades. He is known for his portrayals of various prominent personalities and celebrities. Shreedhar has rendered these portraits of Chief Minister M K Stalin exclusively for *Deccan Chronicle* with much texture and details.)

THE COVAI MAIL

15 Aug-2021

சதம்... சரித்திரம்!

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அக்கறை!

- பி.ஆர்.நடராஜன், கோவை மக்களவை தொகுதி, நாடாளுமன்ற உறுப்பினர்

THE COVAI MAIL

15 Aug-2021

திமுக அரசு மீதான எதிர்பார்ப்பு அதிகம்!

- இரா.முத்தரசன், மாநில செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆட்சி அமைந்து 100 நாட்கள் ஆகிவிட்டது. ஆட்சிக்கு வந்த உடனே எதிர்கொள்ள வேண்டிய முக்கியமான பிரச்சனையாக கொரோனா இரண்டாம் அலை இருந்தது. அந்த சிக்கலான பிரச்சனையை எதிர்கொண்டு மக்களை காப்பாற்றுவதில் பெரிய இழப்பு எதுவும் ஏற்படாமல் முதலமைச்சரும், அவருடைய சக அமைச்சர்களும் பெரும் முயற்சி எடுத்தனர். கொரோனாவில் இருந்து பாதுகாப்பதற்கு அனைத்து மாவட்டங்களுக்கும் தனி அமைச்சர்களை நியமித்து, பொறுப்பு கொடுத்து கவனம் செலுத்தியது பாராட்டுதலுக்குரியது.

வெள்ளை அறிக்கையின் மூலம் கடுமையான நிதி நெருக்கடியை சந்திக்க வேண்டிய கட்டாயமும், நிர்பந்தமும் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டு இருக்கிறது. இதன் மூலம் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை எல்லாம் குறிப்பிட்ட அதே வேளையில், இப்படிப்பட்ட நெருக்கடி நிலையிலும் கொடுத்த வாக்குறுதிகளை 5 ஆண்டு காலத்தில் நிறைவேற்றுவோம் என்ற உறுதிபாட்டோடு தமிழக அரசு செயல்படுகிறது.

வெள்ளை அறிக்கையின் மூலமாக ஒரு நல்ல படிப்பினையையும், கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள தவறுகளையும் அரசு உணர்ந்து, அதை மக்களுக்கு வெளிப் படையாக அறிவித்துள்ளனர். அரசாங்கம் இத்தகைய வெளிப்படைத் தன்மையுடனும், ஜனநாயகப் பூர்வமாகவும் செயல் படுவது வரவேற்கத்தக்கது.

மேகதாது அணை பிரச்சனையில் அனைத்துக் கட்சி கூட்டத்தையும் கூட்டி அவர்களின் கருத்தினையும் கேட்டு அதனடிப்படையில், தமிழக நீர்வளத்துறை அமைச்சர் தலைமையில் அனைத்து கட்சித் தலைவர்களும் டெல்லி சென்று மத்திய நீர்வளத்துறை அமைச்சரை சந்தித்தனர். இது போன்ற செயல்கள் சிறந்த ஜனநாயகத்தைக் காட்டுகிறது.

மக்களிடம் திமுக அரசு மீதான எதிர்பார்ப்பு அதிகம் உள்ளது. அதை கவனத்தில் கொண்டு அரசு செயல்பட வேண்டும்.

100 நாளில் 100க்கும் மேற்பட்ட சாதனைகள்!

- நா.கார்த்திக், பொறுப்பாளர், கோவை மாநகர் கிழக்கு மாவட்டம், திமுக

மே 7ம் தேதியில் தொடங்கி, பதவியேற்ற இந்த 100 நாட்களில் 100 க்கும் மேற்பட்ட சாதனைகளை தமிழகத்தில் படைத்து இருக்கக் கூடிய முதல்வர் ஸ்டாலினுக்கு என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் கோவை மாநகர மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்களின் பிரச்சனைகளை நேரடியாக உணர்ந்து, மக்களுக்கு என்ன மாதிரியான திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என அறிந்து அவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறார். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை புரிந்து அதற்கேற்றவாறு தன் பணிகளை செய்து வருகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பின்பு கொரோனா அதிகளவில் இருந்தது அதை பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக கட்டுப்படுத்தினார். பொதுமக்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் சார்ந்த

பிரச்சனைகளுக்கு முக்கியத் துவமும், முன்னுரிமையும் அளிக்கிறார்.

தேர்தலுக்கு முன்பு உங்கள் தொகுதியில் ஸ்டாலின் கூட்டங்களில் கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணும் வகையில் முதலமைச்சராக பொறுப்பேற்ற உடனேயே அதற்கென்று ஒரு தனி துறையை ஏற்படுத்தி மக்களின் குறைகளை சரிசெய்து வருகிறார்.

கோவையில் உள்ள பல ஏழை எளிய மக்கள் வீடு, வேலைவாய்ப்பு போன்றவை வேண்டும் எனக் கேட்டு அக்கூட்டங்களில் மனு அளித்திருந்தனர். மனு கொடுத்தவர்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடியாக தொடர்பு கொண்டு அந்த மக்களுடைய பிரச்சனைக்கு நடவடிக்கை எடுக்கின்றனர்.

தமிழ்நாட்டு மக்களுக்காக இரவு பகல் பாராமல் பணியாற்றி இந்த 100 நாட்களில் அரிய பல சாதனைகளை செய்த முதல்வர் அவர்களுக்கும், முதல்வருடன் இணைந்து பணியாற்றிய அமைச்சர்களுக்கும் என் வாழ்த்துகள்.

வரலாறு காணாத வகையில் ஒன்றரை மாதத்திற்குள்ளாக கொரோனாவை கட்டுக்குள் கொண்டு வந்து, தமிழ்நாட்டை இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக திகழச் செய்துள்ளார்.

THE COVAI MAIL

15 Aug-2021

சமூக நீதி கொண்ட ஆட்சி!

– மயூரா ஜெயக்குமார்,
செயல் தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி

திமுக தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆட்சி முதல் நூறு நாட்களை எட்டியிருக்கிறது.

இந்த நூறு நாட்களில் மக்களுக்கு ஆக்கபூர்வமான பல நல்ல திட்டங்களை வழங்கியிருக்கிறார்கள் என கருதுகிறேன். குறிப்பாக கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு நிறைவேற்ற முயன்றுள்ளனர்.

இந்த பட்ஜெட்டில் பெட்ரோல் 3 ரூபாய் குறைத்திருப்பது பெரிய விஷயம். இதற்கு முன்பு இருந்த அரசின் ஆட்சியில் பெட்ரோல் லிட்டர் 100 ரூபாய்க்கு மேல் சென்றும் அதை அவர்களால் குறைக்க முடியவில்லை, ஆனால் திமுக ஆட்சியில் அதைக் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள். 3 ரூபாய் சிறு தொகைப் போல தெரிந்தாலும், அடித்தட்டு, நடுத்தர மக்களுக்கு இது பெரிய பலனை தரும் என்று நம்புகிறேன்.

பெண்கள் சுயநிதி குழுக்களின் கூட்டுறவு கடனைத் தள்ளுபடி செய்துள்ளனர். பெண்களுக்கு உதவும் நலத்திட்டங்களை இந்த அரசு அறிவித்து வருகிறது. இது பாராட்டிற்குரியது. இந்த பெருந்தொற்று காலத்தின் போது மத்திய அரசு எந்த பெரும் நிதி ஆதாரத்தை மாநில அரசிற்கு வழங்கிடாத போதும், இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்து நலத்திட்டங்களை வழங்கிவரும் நிர்வாகத்தின் சிறப்பை காட்டுவதாக பார்க்கிறேன்.

கூட்டணி கட்சியென்ற முறையிலே காங்கிரஸ் கட்சியின் முழு ஒத்துழைப்பும் திமுக ஆட்சிக்கு நிச்சயம் இருக்கும். இப்போது இருக்கும் ஆட்சி சமூக நீதி கொண்ட ஆட்சி, இதில் தமிழகம் ஒரு பெரும் வளர்ச்சியை எட்டி, இந்தியாவின் முதல் மாநிலமாக திகழும் என்று நம்புகிறேன்.

சிறிதளவும் குறையாத வேகம்!

– மருதமலை சேனாதிபதி,
கழக பொறுப்பாளர், கோவை கிழக்கு மாவட்டம், திமுக

முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டதில் இருந்து இன்று வரை மக்களுக்கான நற்பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதில் அவரின் வேகம் சிறிதளவும் குறையவில்லை. ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்.

கொரோனா நிவாரண நிதி வழங்கியது, மகளிருக்கான இலவச பேருந்து பயணம், பட்ஜெட் தாக்கலின் முக்கிய அம்சமாக பெட்ரோல் விலை 3 ரூபாய் குறைப்பு போன்றவை மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெருமளவு உதவக்கூடியது. இதுபோன்று முதலமைச்சரின் எண்ணற்ற திட்டங்களை விரிவாக கூறிக் கொண்டே செல்லலாம்.

கோவையைப் பொறுத்த வரை போக்குவரத்து நெரிசல் உள்ளது. அதனைத் தீர்க்கும் வகையில் புறவழிச்சாலைகளை முதல்வர் கோவைக்கு கூடிய விரைவில் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை உள்ளது.

மேலும், முதல்வரின் எதிர்பார்ப்பையும் அனைத்து அமைச்சர்களும் நிறைவேற்றி வருகிறார்கள்.

இந்த 100 நாட்கள் மட்டுமல்ல, 5 ஆண்டு காலம் மட்டுமல்ல, இன்னும் 20 வருட காலம் ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சி இதே வேகத்தில் செயல்பட வேண்டும் என வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நேர்மையான நிர்வாகம்

– சி.பாலசுப்பிரமணியன்,
தலைவர், இந்திய தொழில் வர்த்தக சபை, கோவை

100 நாட்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்து நன்றாக செயல்பட்டு வருகின்ற தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு இந்திய தொழில் வர்த்தக சபை சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக முதல்வர் ஸ்டாலின், தான் பதவியேற்ற உடனேயே மக்கள் நலனை கருத்தில் கொண்டு செயல்பட ஆரம்பித்து விட்டார்.



தலைமைச் செயலரின் தேர்வு முதல் அடிப்படை மிக்க கறைபடியாத துறை அதிகாரிகளை நியமித்தது வரை தேர்தல் வாக்குறுதியில் கூறியது போல நேர்மையான, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்கி வருகிறார்.

தமிழக முன்னேற்றத்திற்காக பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, தொழிற்சாலைகளின் மேம்பாட்டிற்காக தொழில் முனைவோர் சந்திப்புகளும் நடந்தன. ஜெயரஞ்சன் தலைமையில் தமிழக மாநில வளர்ச்சிக் குழு அமைக்கப்பட்டு மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது. விவசாயத்திற்கு என்றே ஒரு தனி நிதிநிலை அறிக்கை அளிப்பது, வெள்ளை அறிக்கை போன்றவை அரசின் செயல்படும் தன்மைக்கு ஒரு சான்றாகும்.

தொழில் துறைக்கு குறிப்பாக சிறு, குறு தொழில்களுக்கு சலுகை அளித்துள்ளது பாராட்டுக்குரியது. இயற்கையின் வளங்களை பாதுகாப்பதற்கு சுற்றுசூழல் மேம்பாட்டுக் குழு அமைத்துள்ளது சிறந்த செயல். மேலும், மகளிர் நலத்திட்டங்கள் பல அறிவித்து அவற்றை செயல்படுத்துவது வரவேற்கத்தக்கது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் விரைந்து செயல்பட்டு தொற்றைக் கட்டுக்குள் கொண்டு வந்ததோடு, மற்ற மாநிலங்கள் மூன்றாவது அலைக்கு முன்னேற்பாடுக்க வேண்டிய கட்டமைப்புகளை செய்ய முன்வராதபோது தமிழகம் ஏற்கனவே உள்ள இரண்டாவது அலை கட்டமைப்புகளை கலைக்காமல் மிகுந்த பொருட்செலவுடனும், கவனத்துடனும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அனைத்துத் துறைகளிலும் வெளிப்படையான, நேர்மையான நிர்வாகமாக இருப்பது தொழில் துறையினரான எங்களுக்கு ஒரு நம்பிக்கையை தருகிறது.

ஏற்றம் மிகு மக்கள் திட்டங்கள்

– ஐ.லியோனி,
தலைவர், தமிழ்நாடு பாடநூல் கழகம்

கலைஞர் பிறந்த நாளில் ரூ.4 ஆயிரம், பேருந்தில் மகளிருக்கு இலவச பயணம், ஆவின் பால் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு போன்ற புரட்சிகரமான திட்டங்களை இந்தியாவில் முதன்முறையாக நிறைவேற்றி மக்கள் முதல்வர் என்ற மாபெரும் பட்டத்தைப் பெற்றவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். 'இப்படியும் சாதிக்க முடியுமா' என்று எதிரிகள் வியக்கும் அளவிற்கு அவரது செயலாற்றல் உள்ளது.

'போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுபவர் தூற்றட்டும். ஏற்றம் மிகு மக்கள் திட்டங்கள் செயல்படுத்த எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்' என்று செயலாற்றும் முதல்வரின் 100 நாள் சாதனைகள் 100 ஆண்டு சாதனைகளாய் தொடரட்டும்.

தேர்தல் பிரச்சாரத்தில் நாள்தோறும் நேரடியாக மக்களைச் சந்தித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களின் கோரிக்கைகளைப் பெற்று பெட்டியில் சேகரித்தார். அத்துடன், ஆட்சிக்கு வந்ததும் பெற்ற 4 லட்சம் மனுக்களில் 3 லட்சம் கோரிக்கைகளுக்கு நடவடிக்கை எடுத்து சிறப்பாக செயலாற்றி வருகிறார். இத்தகைய சிறப்பான மக்கள் பணி செய்து வரும் முதல்வருக்கு என் வாழ்த்துகள்.

THE COVAI MAIL

15 Aug-2021

அரசு மீதான நம்பிக்கை கூடியுள்ளது!

- ரமேஷ் பாபு, தலைவர், கொடிசியா

முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு இந்த மூன்று மாதத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த குறுகிய காலத்தில் தொழிற்சங்க நிறுவனங்களுடன் பல ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தியுள்ளனர். அதோடு, தற்போதைய அரசு தொழில் நிறுவனங்களின் மீது அதிக கவனம் செலுத்தி அதன் குறைகளை கேட்டறிகின்றனர். இதன் மூலம் தமிழக அரசின் மீதான நம்பிக்கை கூடியுள்ளது.

கோவையில் ராணுவ தளவாடங்கள் தொழில் பேட்டை திட்டம் அறிவிக்கப்பட்டது. ஆனால் அது இன்னும் சூடுபிடிக்கவில்லை. அதற்கான பணிகளை துரிதப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் அத்துறை சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு உதவியாக இருக்கும்.

கோவையில் விமான நிலைய விரிவாக்கம் கடந்த 25 ஆண்டுகளாக கிடப்பிலேயே உள்ளது. அரசு இதற்காக 1000 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது என்று கேள்விப்பட்டோம். ஆனால் அது போதுமானதாக இருக்காது. கூடுதலாக மேலும் 500 கோடியை ஒதுக்க வேண்டும். விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளை முடித்து மத்திய அரசிடம் ஒப்படைத்து விட்டால் இதற்கான வேலைகள் தொடங்கிவிடும். உடனடியாக இதை செய்தால் கோவைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

கோவை தொழில் நகரம் என்பதால் மின்சாரம் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும். தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை மின் வெட்டு இருக்கக் கூடாது என்பது எங்கள் கோரிக்கை.

ஒவ்வொரு தொழில் நிறுவனத்துக்கும் உற்பத்தி சார்ந்த மனித வளம் தேவைப்படுகிறது. அதற்காக இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி போன்றவற்றை அளிக்க வேண்டும்.

இந்த அரசு தனது முதல் 100 நாட்களை வெற்றிகரமாக முடித்துவிட்டது. அதற்கு எங்கள் வாழ்த்துகள். இனி வரக்கூடிய 5 ஆண்டுகளில் இன்னும் சிறப்பாக ஆட்சி புரிந்து தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னோடி மாநிலமாக உயர்த்த வேண்டும்.

பொன்னான 100 நாட்கள்!

- ஜெயக்குமார் ராம்தாஸ், தலைவர், கோ இந்தியா

தமிழக முதல்வராக பொறுப்பேற்று 100 நாட்களை நிறைவு செய்யும் ஸ்டாலின் அவர்களுக்கும், அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். எந்த அரசாங்கமும் பதவியேற்ற 100 நாளில் இவ்வளவு சாதனைகளை செய்ததில்லை. இதற்கு முன் எத்தனையோ ஆட்சிகள் வந்திருந்தாலும் இந்த 100 நாட்கள் என்பது ஒரு பொன்னான நாட்களாகவே தமிழ்நாட்டில் கருதப்படுகிறது.

தேர்தல் வாக்குறுதியின் போது என்ன சொன்னார்களோ அதைசெய்து வருகிறார்கள். இதுதவிர அறிவிக்காத பல நல்ல செயல்களையும் செய்துள்ளார்கள். முதல்வரிடம் இருந்து தொடங்கி மற்ற எந்த அமைச்சரானாலும் நேரடியாக பார்த்து பேசக்கூடிய வாய்ப்பை தொழில் துறையினரை சார்ந்தவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். ஒரு முதல்வரை அவ்வளவு எளிதாக சந்திக்க முடியாது. ஆனால், தற்போது அணுகும் முறை எளிதாக உள்ளது. இதுவே எங்களுக்கு பெரிய பாதுகாப்பாக உள்ளது. எங்களுக்கு எவ்விதமான பிரச்சனை ஏற்பட்டாலும் அதை அரசாங்கம் சரி செய்து விடும் என்ற நம்பிக்கை உள்ளது.

கொரோனாவை கட்டுக்குள் கொண்டுவந்து தடுப்பூசி செலுத்துவதை தீவிரப்படுத்தி உள்ளனர். இனி மூன்றாவது அலை வந்தால் கூட தமிழ்நாடு பெரிதளவு பாதிக்காது என்ற நம்பிக்கை உள்ளது.

சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மஹாராஷ்டிராவை அடுத்து தமிழகத்தில் தான் அதிகளவில் உள்ளது. சிறு தொழில் நிறுவனங்கள் இந்த பெருந்தொற்று காலத்தில் பொருளாதார ரீதியாக பல சிக்கல்களை சந்தித்து வருகின்றன. சிறு தொழில் நிறுவனங்கள் தங்கள் கடனை திரும்ப செலுத்துவதற்கான கால அவகாசத்தை மத்திய அரசு வழங்கி இருந்தது. ஆனால் இப்பொழுது அந்த அவகாசத்தை வழங்கவில்லை. கடனை திருப்பி செலுத்துவதற்கான கால அவகாசத்தை வழங்க மத்திய அரசிடம் மாநில அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக, காற்றாலைகளின் மூலம் தமிழகத்திற்கு கிடைத்து வந்த முதலீடுகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதை சரி செய்ய வேண்டும். இந்த இரண்டு கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்றி தரவேண்டும்.

THE COVAI MAIL

15 Aug-2021

துரிதமான செயல்பாடுகள்

– கே.வி.கார்த்திக், தலைவர், தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர் சங்கம் (சீமா)

முதல்வராக பொறுப்பேற்று 100 நாட்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சீமா சார்பாக எங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 100 நாட்களில் அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மிக துரிதமாக நடைபெற்றது. கொரோனாவின் தாக்கம் உச்சத்தில் இருந்து அதிகளவில் ஆக்சிஜன் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, மற்ற மாநிலங்களை விட அதற்குத் தேவையான நடவடிக்கையை விரைவில் எடுத்து ஆக்சிஜன் தட்டுப்பாடே இல்லாத சூழ்நிலையை உருவாக்கியுள்ளனர்.

எந்த மாநிலமும் செய்யாத முயற்சியாக உலக பொருளாதார மேதைகளை உள்ளடக்கிய பொருளாதார ஆலோசனைக் குழுவை உருவாக்கி இருப்பது வரவேற்கத்தக்கது. சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக ஆலோசனைக் குழு ஏற்படுத்தி அதன் அடிப்படையில் புதிய திட்டங்களை செயல்படுத்த முனைகின்றனர். தொழில் நிறுவனங்கள் கொரோனா தாக்கத்தில் இருந்து எவ்வாறு மீள்வது என்றிருந்த போது அவர்களுக்கு ஒரு நம்பிக்கையை அரசு ஏற்படுத்தியுள்ளது.

பம்ப்செட் உற்பத்தி செய்வதில் கோவை பெயர் பெற்றது என்பதை நாம் அறிவோம். ஒரு கால கட்டத்தில் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற 80% பம்ப்செட்கள் கோவையில் உற்பத்தியாகின. அது காலப்போக்கில் மாறி 50% என குறைந்து விட்டது. இதை மீண்டும் 80% ஆக உயர்த்துவதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த அரசு மேலும் வெற்றி பெற்று நாட்டின் முன்மாதிரியான அரசாக விளங்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

5 வருடத்திற்கான குறியீடே 100 நாள்!

– ஆர்.கே. ராதாகிருஷ்ணன், பத்திரிகையாளர்

பதவியேற்று 100 நாட்களை நிறைவு செய்யும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கும், திமுக ஆட்சிக்கும் என்னுடைய வாழ்த்துகள். அரசின் முதல் 100 நாள் அத்தியாயம் என்பது அடுத்த 5 வருட காலத்தில் நடக்கக் கூடிய மக்கள் பணிகளின் குறியீடாக இருக்கும். 100 நாள் என்பது ஒரு பெரிய கால அளவாக இல்லாவிட்டாலும் கூட, அரசாங்கம் அடுத்த 5 வருட காலம் மக்களுக்கு என்ன மாதிரியான பணிகளை செய்யும் என்பதற்கு உதாரணமாக அமையும்.

குறிப்பாக, மத்திய அரசு என்ற வார்த்தைக்கு பதிலாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஒன்றிய அரசு என்ற வார்த்தையே சரியானது என்று அதை வழக்கத்தில் பயன்படுத்தி வருகின்றனர்.

கொரோனா இரண்டாம் அலையை எதிர்கொண்டதில் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் நடவடிக்கைகள் அனைத்தும்

துரிதமாக இருந்தது. அரசாங்கம் எப்படி செயல்பட வேண்டுமோ, அமைச்சர்கள் எவ்வாறு செயல்பட வேண்டுமோ அதற்கு ஏற்றவாறு செயல்படுகிறார்கள்.

தேர்தல் வாக்குறுதியில் கூறியது போல, நீட் தேர்வு ரத்து மற்றும் பெட்ரோல் விலை குறைப்பு போன்ற வாக்குறுதிகளை எத்தனை நிறைவேற்ற முடியும் என்பதில் பெரிய பிரச்சனை இருக்கிறது. நீட் தேர்வைப் பொறுத்தவரை, ஒன்றிய அரசை நாடக்கூடிய சூழல் உள்ளது. நீட் தேர்வு தமிழகத்தில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து அறிய ஒரு குழுவை அமைத்து ஆய்வு செய்துள்ளார்கள். இந்த முடிவுகளை வைத்து உயர் நீதிமன்றத்தை அணுகும் வாய்ப்புள்ளது.

தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதியினை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவதோடு, அனைத்து வாக்குறுதிகளையும் செயல்படுத்த வேண்டும் என முயற்சி எடுப்பது மகிழ்ச்சிக்குரியது. கொரோனா நிவாரண நிதியாக வழங்கிய தொகையை தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல் இங்குள்ள இலங்கை அகதிகளுக்கும் வழங்கியதை தமிழக அரசின் சிறந்த செயலாக கருதுகிறேன்.

திமுக ஆட்சி அமைத்து இந்த 100 நாட்களில் நடந்த பல நிகழ்வுகளை பார்க்கும்போது தமிழகத்திற்கு பெரிய நம்பிக்கையை அளிப்பதாகப் பார்க்கிறேன்.

THE COVAI MAIL

15 Aug-2021

SIMA welcomes State's innovative policy announcements

The Covai Mail

Ashwin Chandran, Chairman, The Southern India Mills' Association (SIMA) has thanked the Chief Minister, M.K.Stalin for considering several recommendations made by the Association and the textile industry and making several announcements in the budget.

He welcomed the announcement of creating a separate department for textiles, considering the huge business size and also its growth in the coming decade. SIMA Chairman hailed the

announcement of establishing textile parks and SIPCOT facilities that would attract huge investments across the value chain of the industry. He thanked the Government for announcing Amnesty Scheme for settling the disputes of older cases of Value Added Tax. He said that this would create a win-win strategy both for the Government and the industry.

Ashwin appreciated the announcement of establishing new Common Effluent Treatment Plants (CETPs) for the benefit of existing processing segments in Erode and Namakkal districts. Creating new infrastructure for the development of technical textiles in Tamilnadu is yet another announcement made for the textile industry says, Ashwin. He also welcomed the various infrastructure and other announcements made for the growth of the industry in Tamilnadu.

தினமணி

16 Aug-2021

சதத்தைத் தொட்ட அரசின் சாதனைகள்

தமிழக பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி அமோக வெற்றி பெற்று 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. மே 7-இல் ஆளுநர் மாளிகையில் உள்ள திறந்தவெளி மைதானத்தில் முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றார்.

அன்றைய தினமே தலைமைச் செயலகத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டு தவணைகளாக தலா ரூ.2000 நிவாரணம், 14 மளிகைப் பொருள்கள் தொகுப்பு 2.07 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.4,000 நிவாரண நிதி வழங்கப்பட்டது. ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்பட்டது.

இடஒதுக்கீடு: அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, வன்னியர்கள், சீர்மரபினர் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 10.5 சதவீதம் சிறப்பு ஒதுக்கீடு வழங்கும் சட்டத் திருத்த அங்கீகாரம், தொழில்கல்வி படிப்புகளில் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க 7.5 சதவீத ஒதுக்கீடு என பல தனித்துவம் வாய்ந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மதுரையில் நவீன நூலகம்: மதுரையில் கலைஞர் நினைவு நூலகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

விருதுகள்: எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில் 'இலக்கிய மாமணி' விருது. தமிழ் இலக்கியத்துக்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் 3 பேருக்கு ஆண்டுதோறும் விருது, பாராட்டுப் பத்திரம் மற்றும் ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசு ஆகியன வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

தமிழக எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்திய அகாதெமி விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், பெற்றவர்களுக்கு மாநில அரசு தரப்பில் வீடு என்ற அறிவிப்பையும் வெளியிட்டார்.

தமிழ்நாட்டிற்கும் தமிழினத்திற்கும் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றியவர்களை பெருமைப்படுத்தும் வகையில் 'தகைசால் தமிழர்' விருது அறிவிக்கப்பட்டது. அந்த முதல் விருதுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் நூற்றாண்டை கொண்டாடியவருமான என். சங்கரய்யா தேர்வு செய்யப்பட்டார். அவரது உடல்நலத்தை கருத்தில்கொண்டு இல்லத்திற்கே சென்று வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருப்பது மிகச்சிறந்த கௌரவமாகும்.

கல்வி, இலக்கியம் மட்டுமின்றி விளையாட்டிலும் ஊக்கம் அளிக்கும் வகையில், டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற தமிழக வீரர்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கப்பட்டது.

பேரவை மணிமகுடத்தில் வைரக்கல்: தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை காகிதம் வழியே அல்லாது, கணினி வழியாக தாக்கல் செய்யப்படுகிறது. தமிழக சட்டப் பேரவை வரலாற்றிலேயே காகிதமில்லாத முதல் நிதிநிலை அறிக்கை இதுவாகும்.

கலைவாணர் அரங்கில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மேஜைக்கணினி பொருத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.1 கோடி வரை மிச்சமாகும் என்பதுடன், பல ஆயிரக்கணக்கான மரங்களும் பாதுகாக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

தற்போது, உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் இருக்கை முன் உள்ள மேஜையில் கணினி பொருத்தப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் மட்டுமின்றி பேரவைத்தலைவர், அதிகாரிகள் இருக்கைகள் என அனைத்திலும் இந்த கணினி பொருத்தப்பட்டுள்ளது. இம்முயற்சி பேரவை மணிமகுடத்தில் ஒரு வைரக்கல்லாக ஜொலிக்கும்.

பெண்களுக்கு இலவசப் பயணம்: சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசம் என்னும் திட்டத்தை அறிவித்ததோடு நில்லாமல், அடுத்தடுத்து திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் அவரது உதவியாளர்கள் என திட்டத்தை விரிவுபடுத்தியதோடு, அத்தகைய பேருந்து சேவையையும் படிப்படியாக அதிகரித்திருப்பது சாமானியர்களிடையே முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசுக்கு மிகப்பெரிய மதிப்பை உருவாக்கித் தந்துள்ளது.

முதல் கையெழுத்து: தமிழகம் முழுவதும் உள்ள 8 போக்குவரத்துக் கழகங்களின் கட்டுப்பாட்டில் 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் நாள்தோறும் லட்சக் கணக்கானோர் பயணித்து வரும் நிலையில், பெண்களுக்கு இலவச பயணம் என்ற திட்டத்தை திமுக தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தது.

இதைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்று முதல்வராகப் பதவி ஏற்ற மு.க.ஸ்டாலின் 5 திட்டங்கள் அடங்கிய கோப்பில் முதல் கையெழுத்திட்டார்.

அதில் முக்கிய இடம் பிடித்திருந்தது சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயண திட்டம்.

அடுத்த நாளே திட்டம் அமலானது.

அரசு சார்பில் புதிதாக ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதற்கான சிறு ஆர்ப்பாட்டமுமின்றி, மே 8-ஆம் தேதி காலை முதலே சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கத் தொடங்கினர். திட்டத்துக்கு மிகுந்த வரவேற்பு கிடைத்தது. குறிப்பாக கரோனா பொதுமுடக்கம் அனைவரது பொருளாதாரத்தையும் புரட்டிப் போட்டிருந்த நேரத்தில், அறிமுகமானதால் சாமானிய பெண்களுக்கு பேருதவியாக இருந்ததாக அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

10 கோடி பெண்கள் பயணம்: தற்போதைய நிலவரப்படி, நாளொன்றுக்கு சுமார் 30 லட்சம் பெண்கள் கட்டணமில்லாமல் பயணிக்கின்றனர்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்: பொது மக்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளைச் செய்தல், தேவைப்படும் மருந்துகளை வழங்குதல், இயன்முறை சிகிச்சை, இயலா நோயாளிகளுக்கு வலி நிவாரணம், ஆதரவு சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கிய 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாட்சி ஒன்றியம், சாமனப்பள்ளி கிராமத்தில், பொதுமக்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று மருந்துகளை வழங்கிய தமிழக முதல்வர் 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தை கடந்த ஆக. 5-இல் தொடங்கி வைத்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், தொற்றா நோயாளிகளின் இல்லங்களுக்கே சென்று சில அத்தியாவசியமான சுகாதாரச் சேவைகள் வழங்கப்படும். இத்திட்ட

> தமிழகம் முழுவதும் 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் நாள்தோறும் லட்சக் கணக்கானோர் பயணித்து வரும் நிலையில், பெண்களுக்கு இலவச பயணம் என்ற திட்டத்தை திமுக தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தது. இதைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்று முதல்வராகப் பதவி ஏற்ற மு.க.ஸ்டாலின் 5 திட்டங்கள் அடங்கிய கோப்பில் முதல் கையெழுத்திட்டார்.

விவசாயிகளுக்கு ஏற்றம் தரும் வேளாண்மை பட்ஜெட்!

ஒவ்வொரு மதத்துக்கும் அந்த மதத்தின் புனித நூலே வழிகாட்டும். அதுபோல மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சிக்கு, தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே, வழிகாட்டும் ஒளி விளக்காக திகழ்கிறது. அந்தவகையில், தேர்தல் அறிக்கையில், வேளாண் உற்பத்தியை பெருக்கிடும் வகையிலும், விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையிலும் வேளாண்மைக்கென தனி நிதிநிலை தாக்கல் செய்யப்பட்டு, வேளாண் பணிகள் மேம்படுத்தப்படும் என்று கூறப்பட்டிருந்தது. அதற்கு முன்னோடியாக வேளாண்மை துறையை வேளாண்மை-உழவர் நலத்துறை என்று மு.க.ஸ்டாலின் பெயர் மாற்றம் செய்தார்.

தி.மு.க. ஆட்சி அமைந்து, 100-வது நாள் ஆன நாளில் வேளாண்மைக்கான முதல் தனி நிதிநிலை அறிக்கையை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். இந்த நிதிநிலை அறிக்கையில், பெரும்பாலான அறிவிப்புகள் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலேயே

அமைந்துள்ளது. மு.க.ஸ்டாலின் கடந்த மார்ச் 7-ந்தேதி திருச்சியில் நடந்த தி.மு.க. பொதுக்கூட்டத்தில் தமிழ்நாட்டின் நிகர பயிரிடும் பரப்பு இப்போது 60 சதவீதமாக இருக்கிறது. இதனை 75 சதவீதமாக உயர்த்தும் இலக்கை 10 ஆண்டுகளுக்குள் எட்ட இருக்கிறோம் என்று தெரிவித்தார். தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 லட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்து, அதை நிறைவேற்றும் அறிவிப்புதான் முதல் அறிவிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தற்போதுள்ள 12 ஆயிரத்து 524 கிராம பஞ்சாயத்துக்களிலும் ஆண்டுக்கு 5-ல் ஒரு பங்கு என்ற விகிதத்தில் பல்வேறு முன்னேற்ற திட்டங்களை நிறைவேற்றி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேளாண் பட்டதாரிகளை தொழில்முனைவோராக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுக்குரியது. ஒரு லட்சத்து 10 ஆயிரம் விவசாயிகளை ஒருங்கிணைத்து, 1,120 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்து வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ஒரு குழுவுக்கு ரூ.5 லட்சம் வீதம் மூலதனநிதி வழங்கப்படுவது வரவேற்புக்குரியது. இவ்வளவு நாளும் தமிழ்நாட்டில் பனை மரத்தின் சிறப்பை எல்லோரும் கூறிக்கொண்டிருந்தநிலையில், பனை மர் பரப்பை அதிகரிக்க 30 மாவட்டங்களில் 76 லட்சம் பனை விதைகளையும், 1 லட்சம் பனங்கன்றுகளையும் முழு மானியத்தோடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பனை வெல்லத்தை நியாயவிலை கடைகள் மூலம் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரகடனப்படுத்தியிருப்பது பனை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க நிச்சயம் உதவும். பனை மரத்தை வெட்டுவதற்கு தடை விதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நெல் விவசாயிகளின் கொள்முதல் விலையை, சன்ன ரக நெல்லுக்கு ரூ.2,060 ஆகவும், சாதாரண ரக நெல்லுக்கு ரூ.2,015 ஆகவும் உயர்த்தும் வகையில் ஊக்கத்தொகை அதிகரிக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதேபோல துவரை, உளுந்து, பச்சைப்பயிறு போன்ற பயிறு வகைகளை குறைந்தபட்ச ஆதார விலையுடன் 61 ஆயிரம் டன் அளவுக்கு கொள்முதல் செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதுபோல படிப்படியாக அனைத்து விளைபொருட்களையும் அரசே கொள்முதல் செய்யவேண்டும் என்பதும் விவசாயிகளின் கோரிக்கையாக இருக்கிறது. தென்னை சாகுபடி பரப்பை அதிகரிக்க 17 லட்சம் தரமான தென்னங்கன்றுகள் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் சிறப்பு ஊக்கத்தொகையாக ஒரு டன்னுக்கு ரூ.150 வழங்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதுபோல காய்கறி சாகுபடியை உயர்த்த திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. வேளாண்மையில் மகளிருக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. விவசாயிகளை பொறுத்தமட்டில் தங்களுடைய வருமானம் உயரவேண்டும் என்பதே பெரும் நோக்கமாக இருக்கிறது. அந்தவகையில், இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகளையெல்லாம் நிறைவேற்றினால் விவசாயிகளின் வருமானம் பெருகும், வாழ்க்கை தரம் உயரும், வாழ்வு ஏற்றம் பெறும். கிராமப்புற இளைஞர்கள் வேலைதேடி நகரங்களுக்கு செல்லாத நிலையை உருவாக்கும்.

தினகரன்
16 Aug-2021

வெற்றிக்கொடி பறக்கட்டும்

தமிழகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி 100 நாட்களை கடந்து விட்டது. நாடே போற்றும் இந்த நல்லாட்சி தமிழகத்தில் ஒரு நெருக்கடி காலக்கட்டத்தில் உருவாகியது. கொரோனா இரண்டாம் கட்ட அலை இந்தியாவை உலுக்கிக் கொண்டிருக்க, சட்டசபை தேர்தல் காரணமாக தமிழகமும் அதில் பாதிக்கப்பட்டிருந்தது. இச்சூழலில் பதவியேற்ற முதல்வர் ஸ்டாலின் கொரோனா தொற்றில் இருந்து மக்களை பாதுகாப்பதை முதல் பணியாக மேற்கொண்டார். அவரும், அவரது அமைச்சரவை சகாக்களும் மாவட்டம் தோறும் ஆய்வு நடத்தி கொரோனாவை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

புதிய அரசுகள் பதவியேற்கும்போது, தேர்தல் அறிக்கைகளை நிதி நெருக்கடியை காரணம் காட்டி காலம் கடத்தி விடுவர். ஆனால் முதல்வர் ஸ்டாலின் தேர்தல் அறிக்கைகளை நிறைவேற்றுவதில் முழுக்கவனம் செலுத்தினார். மகளிருக்கு நகர பேருந்துகளில் இலவச பயணம், பால் விலை லிட்டருக்கு ₹3 குறைப்பு, பெட்ரோல் விலை லிட்டருக்கு ₹3 குறைப்பு என கொடுத்த வாக்குறுதிகளை 100 நாட்களுக்குள் நிறைவேற்றி கொடுத்தார். குடும்ப தலைவிகளுக்கு மாதம் ₹1000 வழங்கிட பயனாளிகள் தேர்வு, உழவர்சந்தை, நமக்கு நாமே திட்டங்களுக்கு புத்துணர்ச்சி என அடுத்து வருபவை கூட நமக்கு நம்பிக்கையை விதைக்கின்றன.

உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்கிற நிகழ்ச்சி மூலம் பெற்ற மனுக்களுக்கு தனி அதிகாரி நியமித்து பல்வேறு மனுக்களுக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளன. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற கனவையும் தமிழகம் இப்போது எட்டி விட்டது. திமுக அரசு பட்ஜெட் தாக்கல் செய்வதிலும் புதிய பரிணாமங்களை எட்டியது. பொது பட்ஜெட் தாக்கல் செய்த மறுநாளே, வேளாண்மைக்கு தனி பட்ஜெட் வாசித்து சொன்னதை செய்து காட்டியது. வரிகள் இல்லாத பொது பட்ஜெட், வேளாண் பட்ஜெட்டில் நெல்லுக்கு ஆதாரவிலை அதிகரிப்பு என இரு பட்ஜெட்டும் தமிழக மக்கள் பாராட்டும்படி உள்ளது. பனை மரம் வெட்ட தடை, ரேஷனில் கருப்பட்டி வழங்கும் திட்டம் ஆகியவை மாநில மரமான பனை மரத்தையும் அதைச் சார்ந்து வாழும் மக்களின் மீதான கரிசனத்தை காட்டுகிறது.

நிதிநிலை அறிக்கை தொடர்பான வெள்ளை அறிக்கை கூட வெளியிட்டு காட்டியது இந்த அரசு. தேர்தலுக்கு முன்பு கொடுத்த வாக்குறுதிகளில் 40 சதவீதத்தை 100 நாட்களுக்குள் முதல்வர் ஸ்டாலின் நிறைவேற்றியிருப்பது இந்தியாவின் மிகச்சிறந்த முதல்வராக அவரை அடையாளம் காட்டுகிறது. நூறாண்டு பேசும் அளவுக்கு இந்த நூறு நாட்கள் சாதனை அமைந்துள்ளது. 2.6 கோடி மக்களுக்கு கொரோனா தடுப்பூசி, மக்களை தேடி மருத்துவம், வீடுகளுக்கு சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை என அரசின் பல திட்டங்கள் வீடு தேடி செல்கின்றன. இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாக தமிழகம் இப்போது திகழ்கிறது.

வாக்களித்த மக்களுக்கு மகிழ்ச்சியை பரிசாக அளித்துவிட்டு 100 தினங்களுக்கு பின்னர் நேற்று கோட்டையில் முதல்வர் ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றியுள்ளார். பட்டொளி வீசி பறந்த தேசிய கொடிக்கு அவர் மரியாதை செலுத்தினார். ஆட்சியை பொறுத்தவரை அவரது வெற்றிக்கொடி தொடர்ந்து பட்டொளி வீசட்டும்.

தினமணி

16 Aug-2021

சதத்தைத் தொட்ட அரசின் சாதனைகள்

தின் மூலம் பரிசோதனை செய்து பட்டியலிடப்பட்ட நோயாளிகளில் 45 வயதுக்கு மேற்பட்டவர்கள், இயலாமையில் உள்ளவர்களுக்கு உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய்க்கான மருந்துகளை களப்பணியாளர்கள் இல்லங்களுக்கே சென்று வழங்குவர்.

தவிர, நோய் ஆதரவு சேவைகள், இயன்முறை (பிசியோதெரபி) மருத்துவ சேவைகள், சிறுநீரக நோயாளிகளைப் பராமரித்தல், அத்தியாவசிய மருத்துவ சேவைகளுக்கான பரிந்துரை, குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிந்து தெரிவித்தல் போன்ற ஒரு குடும்பத்துக்குத் தேவையான அனைத்து சுகாதாரத் தேவைகளையும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சமுதாய நலப் பதிவேட்டில் ஒவ்வொரு நோயாளியையும் பதிவு செய்து தொடர்ந்து கண்காணித்து வகைப்படுத்தப்படுகிறார்கள்.

இத்திட்டத்தின் முதல்கட்ட இலக்காக, 30 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஒரு கோடி மக்கள் பயன்பெறுவர் என தமிழக அரசு கூறியுள்ளது.

தொழில் வளர்ச்சியை நோக்கி தமிழகம்: சீரான வளர்ச்சி, நிலையான வளர்ச்சியை தமிழ்நாடு அடைய வேண்டும். அதுதான் குறிக்கோள் என்று மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் முதல் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். அவரது இந்தக் கருத்தைத் தொடர்ந்து, சென்னையில் தமிழ்நாடு அரசின் தொழில் துறை சார்பில் முதலீட்டாளர்களின் முதல் முகவரி-தமிழ்நாடு என்ற பிரமாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது, புதிய தொழில்களை ஊக்குவிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், புதிய திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்குமான நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியில் பேசிய தொழில் துறையினர் அனைவரும் கரோனா காலகட்டத்திலும் தொழில் முதலீடுகளை ஈர்க்க தமிழ்நாடு அரசு காட்டி வரும் ஆர்வம் பாராட்டத்தக்கது என்றனர்.

டிவிஎஸ். நிறுவனத்தின் சார்பில் பேசிய என்.கணபதி சுப்பிரமணியம், தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாடுகளால் கரோனா காலத்திலும் புதிதாக அலுவலகங்களைத் திறக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். ஊழியர்களை அலுவலகத்துக்கு வரவழைத்தும் பணிகளை அளிக்கிறோம் என்றார். அவரது பேச்சு உள்பட அங்கிருந்த அனைவரும் கருத்தும், கரோனா நோய்த் தொற்று காலத்தில் இருந்து தமிழகமும், தொழில் துறையும் நிச்சயம் மீளும் என்பதேயாகும்.

இதற்கு மிக முக்கிய காரணியாக அவர்கள் குறிப்பிடுவது தொழில் தொடங்குவதற்கான வெளிப்படைத்தன்மையைத் தான். தொழில் முதலீட்டுக்கு முதலில் தேவையானது அரசிடம் இருந்து உரிய அனுமதிகள். சிறியது முதல் பன்னாட்டு நிறுவனங்கள் வரையிலும் ஒரு மாநிலத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு அந்த மாநில அரசின் அனுமதி தேவை. இந்த அனுமதிகளுக்காக ஒவ்வொரு துறையின் கதவையும் தட்டி அது திறப்பதற்குள் தொழில் நிறுவனங்களுக்கு வியர்த்து விடும் அல்லது வெளியேறி விடுவார்கள். இந்த நிலையைப் போக்கவே, மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையதளத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கினார். இந்த இணையதளத்தின் மூலமாக தொழில் துறைக்குத் தேவைப்படும் அனைத்து அனுமதிகளையும் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, 24 துறைகளின் 100 சேவைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையதளமாக அது விளங்கி வருகிறது.

இந்த இணையதளம் இயங்கும் முறையே தொழில் முதலீட்டாளர்களை பெரிதும் ஈர்த்து வருகிறது. இணைய முறையில் அளிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். பின்னர், அவை உரிய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். சம்பந்தப்பட்ட துறைகளுடன் காணொலி மூலமாகச் சந்திப்புகள் நடத்தப்படும். செயற்கை நுண்ணறிவு உதவியுடன் வாடிக்கையாளர்களுடன் உடனடி உரையாடல்கள் நடத்தப்படும். இந்த வசதிகள் அனைத்தும் மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையதளத்தில் இருக்கின்றன. இவற்றுடன் கூடுதலாக 210 சேவைகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் அளிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே அறிவித்துள்ளார். பெயரளவிலும், காகித அளவிலும் என்று இல்லாமல், திறம்படச் செயல்படும் அமைப்பாக அந்த இணையதளம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், அதன் செயல்பாட்டை தானே கண்காணிக்கப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார். தமிழ்நாடு அரசின் இதுபோன்ற செயல்பாடுகள் மூலமாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு போன்ற வட மாவட்டங்கள் மட்டுமின்றி தென் மாவட்டங்களிலும் தொழில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக, முதலீட்டாளர்களின் முதல் முகவரி-தமிழ்நாடு என்ற நிகழ்வின் போது, தென் மாவட்டங்களில் தொழில் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தப்பட்டன. 5 ஆயிரத்து 595 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.4,415 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. காற்றாலை மின் உற்பத்தி, தொழில் பூங்கா, காகித அட்டை மற்றும் பெட்டிகள் தயாரிப்பு, பருத்தி நூல் உற்பத்தி என தென் மாவட்டங்களின் சூழ்நிலைக்கு ஏற்றார் போன்ற தொழில் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. மேலும், தென் மாவட்டங்களில் தொழில் தொடங்குவதற்கான நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளதாக அரசின் தொழில் துறையினர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதுபோன்ற செயல்பாடுகள் மூலமாக, சீரான வளர்ச்சி, நிலையான வளர்ச்சியை தமிழ்நாடு அடைய வேண்டுமென கொள்கை வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. கரோனாவின் கோர தாண்டவத்துக்கு மத்தியில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து 100 நாள்கள் நிறைவு செய்துள்ள அரசு, தமிழ்நாட்டை சீரான, நிலையான வளர்ச்சியை வருங்காலத்தில் எட்டச் செய்யும் என்பதே அனைவரின் நம்பிக்கை.

வளரட்டும் காந்திய சிந்தனைகள்!

இந்தியாவின் 75–வது சுதந்திர தின விழா நேற்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி தேசியக்கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். அந்தந்த மாநிலங்களில் மாநில முதலமைச்சர்கள் அம்மாநில தலைமைச்செயலகங்களில் தேசியக் கொடி ஏற்றி வைத்து சுதந்திர தினவிழாவை கொண்டாடினார்கள். சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முதல் முறையாக தேசியக்கொடியை ஏற்றி வைத்து, மக்களுக்கு உரை நிகழ்த்தினார். சுதந்திர தினத்தன்று யார் முதல்வராக இருக்கிறார்களோ அவர்கள் தான் கொடியேற்ற வேண்டும் என்ற சுதந்திரத்தை மறைந்த முதல்வர் கருணாநிதிதான் பெற்றுத்தந்தார் என்ற தகவலை பதிவு செய்யவும் மு.க.ஸ்டாலின் மறக்கவில்லை.

இந்திய விடுதலைப்போராட்டத்துக்கு தமிழகம் அளித்த பங்களிப்பு குறித்த முழுமையான ஆவணம் ஒன்றைத் தயாரித்து தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடும் முயற்சியை அரசு உறுதியாக செய்யும் என்று தெரிவித்த முதல்வர் ஸ்டாலின், விடுதலைப்போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை ரூ.17 ஆயிரத்தில் இருந்து ரூ.18ஆயிரமாகவும், குடும்ப ஓய்வூதிய தொகை ரூ.8,500 ல் இருந்து 9 ஆயிரமாகவும் உயர்த்தப்படும் என்ற அறிவிப்பையும் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார். மேலும் வ.உ.சி.யின் 150–வது பிறந்த நாளை அரசு விழாவாக எழுச்சியோடும், உணர்ச்சியோடும் கொண்டாட திட்டமிடப்பட்டிருக்கும் தகவலையும் தெரிவித்திருக்கிறார்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற திசை நோக்கி செல்லட்டும் இந்த வையம் என்பதைப் போன்ற பொற்காலத்தை உருவாக்க அரசு உறுதி பூண்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். கொரோனா என்ற பெருந் தொற்று காலமானது நமக்கு ஏராளமான படிப்பினைகளை கொடுத்துள்ளது. பல்வேறு நெருக்கடிகளில் இருந்து மக்களை பாதுகாக்க தமிழக அரசு பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறது. இதற்கு அடித்தளமாக திகழ்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோரையும் பாராட்ட ஸ்டாலின் மறக்க வில்லை.

முதல்வராக பொறுப்பேற்றதில் இருந்து 101–வது நாள் பெட்ரோல் விலை ரூ.3 குறைப்பு, கோயில்களில் அன்னைத்தமிழில் அர்ச்சனை, அனைத்து சாதியினரும் அர்ச்சகராக நியமனம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிஇருப்பதையும்ஸ்டாலின்சுட்டிக்காட்டினார். 3 கோடி மக்களுக்கு தடுப்பூசி செலுத்தி இந்தியாவுக்கே முன் மாதிரியாக தமிழகத்தை மாற்றி இருக்கிறோம் என்பதையும் உறுதிப்படுத்தினார் ஸ்டாலின்.

100 ஆண்டுகளுக்கு முன்பு மதுரை வந்த காந்தியை மேலாடைதுறந்தமகாத்மாவாகதமிழகம்வழியனுப்பியது. அதை நினைவு கூரும் வகையில் மகாத்மா குறித்த அரிய கலைப்பொருட்களை கொண்ட மதுரை காந்தி அருங்காட்சியகம் பொதுமக்களையும், இளைய தலைமுறையினரையும் ஈர்க்கும் வகையில் ரூ.6 கோடியில் நவீன முறையில் புதுப்பிக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார். ஆட்சிப்பொறுப்புக்கு வந்த நாள் முதல் முதல்வர் ஸ்டாலின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். இவை அனைத்தும் ஏழை எளிய சாமானிய மக்களுக்கு பயன்படும் திட்டங்களாகவே இருக்கின்றன. அரசுப் பேருந்துகளில் கட்டணம் இல்லாமல் மகளிர் பயணம் செய்ய அனுமதித்திருப்பது, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியான திட்டம் ஆகும். சாதாரண ஏழை எளிய மகளிர் தாராளமாக தங்கள் வேலையை தடையின்றி செய்வதற்கு இந்த திட்டம் பெரும் பயன் உள்ள திட்டமாக உள்ளது. இதற்காக தமிழக மகளிர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி கடன் பட்டிருக்கிறார்கள்.

இது மகாத்மா காந்திக்கு இந்த அரசு செய்கிற மிகப்பெரிய மரியாதையாகும். சாதி, மதம், இனம் குறித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கும் இந்திய நாட்டை வழிநடத்த கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்திய சிந்தனைகள் என்றும் கருத்தை இளைஞர்கள் மனதில் ஆழமாகபதியவைக்கஞுரைப்போம்என்றசபதத்தையும் ஸ்டாலின் ஏற்றார். ஆகவே தமிழகத்தில் வளரட்டும் காந்திய சிந்தனைகள். தமிழக அரசின் 100 நாள் சாதனை போல் மேலும் பல்வேறு சாதனைகளை முதல்வர் ஸ்டாலின் நிகழ்த்திக் காட்டுவார் என்ற நம்பிக்கை தமிழர்கள்மத்தியில்பூரணநிலவாகஇடம்பெற்றிருக்கிறது என்றால் அதில் மிகை இல்லை.

விடுதலை

16 Aug-2021

நூறு நாள் சாதனைகள்

மாண்புமிகு மாண்புமிகு தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமைந்த தமிழ்நாடு அரசு - நூறு நாளைக் கடந்திருக்கிறது.

இந்தக் கால கட்டத்தில் இந்த ஆட்சியின் சாதனை என்ன என்று கேட்பதே கூட நியாயம் ஆகுமா?

தி.மு.க. ஆட்சி தொடங்கப்பட்ட காலச் சூழல் எப்படி இருந்தது? எத்தகைய சவால்களை அரசு எதிர் நோக்கும் நிலை இருந்தது என்பதை ஒரே ஒரு கணம் கவலையோடும், பொறுப்புணர்ச்சியோடும் நிதானமாக சிந்திப்பவர்கள் - எவருக்கும் இந்தக் கேள்வி எழவே செய்யும்.

தீயில் விழுந்த ஒரு குழந்தையைத் தூக்கும்போது குழந்தையைக் காயமில்லாமல் தூக்காதது ஏன்? என்று கேள்வி கேட்பது போன்றதாகும்.

தி.மு.க. முதலில் 1967இல் ஆட்சிக்கு வந்த கால கட்டத்தில் அரசியலில் ஆழ்ந்த அனுபவச் செறிவு மிகுந்த காமராசர் அவர்கள் தி.மு.க. ஆட்சியை ஆறு மாத காலத்திற்கு விமர்சிக்க மாட்டேன் என்று சொன்னது அவரின் முதிர்ச்சிக்கான முத்திரை.

எதிர்க்கட்சிகள் என்பது வேறு - எதிரிக் கட்சிகள் என்பது வேறு; தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரண்டாவது நிலையில்தான் சில உள்ளன.

அய்ந்து லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கடன் சுமையை வைத்துச் சென்றவர்கள் நூறு நாளில், அதைச் சாதித்தீர்களா? இதைச் சாதித்தீர்களா? என்று கேட்பது அசல் சிறுபிள்ளைத்தனமே!

அதே நேரத்தில் இந்த நூறு நாள்களுக்குள் தி.மு.க. ஆட்சி சாதித்து இருப்பது அசாதாரணமானதே!

கரோனா தொற்று மிக உக்கிரமாக இருந்த கால கட்டத்தில் அதனைச் சந்தித்து மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டிய இந்த ஒரு சாதனை போதுமே - இந்த ஆட்சியின் சாதனை மணிமகுடத்திற்கு!

தமிழ்நாட்டில் கடைசி மூன்று மாதத்தில் ஆட்சி என்று ஒன்று இருந்ததாகவே தெரியவில்லை - அந்த அளவுக்கு அ.தி.மு.க. ஆட்சி சோம்பல் முறித்துக் கிடந்தது என்பதுதான் உண்மை.

கரோனா கொள்ளை நோய் கொலை வெறித்தனமாகத் துள்ளிய பொல்லாத கால கட்டத்தில் அ.தி.மு.க. அரசு மக்களைக் கைவிடவில்லையா?

தேர்தலில் முழுக் கவனம் செலுத்தப்பட்டதே தவிர, மாண்டு மடியும் மக்களின் உயிர் பற்றி அக்கறை கொள்ளாதது மிகப் பெரிய அவலமே!

அத்தகு கால கட்டத்தில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று - போர்க் கால வேகத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மக்கள் நிம்மதிப் பெரு மூச்சுவிடும் நிலை ஏற்பட்டதா இல்லையா? திறந்த மனத்தோடு அணுகுபவர்கள் இந்த உண்மையை ஒப்புக் கொள்ளவே செய்வார்கள்.

ஆட்சி ஏற்ற அன்றே அவர் கையெழுத்திட்ட கோப்புகள் - அடித்தட்டு மக்களுக்கான காப்புரிமைகளாகும்.

நகரப் பேருந்துகளில் இலவசமாகப் பெண்கள் பயணம், பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய்க் குறைப்பு, கரோனா நிவாரண நிதியாக ரூ.4000 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குதல்; ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 13 மளிகைப் பொருட்கள். இவையெல்லாம் தி.மு.க. ஆட்சி யாருக்கானது என்பதற்கான அருமையான அடையாளங்களாகும்.

'நீட்' - ஒடுக்கப்பட்ட மக்களின் தலையில் மரண அடி கொடுக்கும் உயர் ஜாதி ஆதிக்க பார்ப்பன ஆயுதமே! அதை ஒழிக்க ஆக்க ரீதியான முறையில் திட்டவட்டமான சட்டப் போராட்டம் - முறைப்படி நீதிபதியின் தலைமையில் குழு அமைத்து மக்களின் உணர்வைப் பிரதிபலிக்கச் செய்திருப்பது இவ்வாட்சியே!

மருத்துவக் கல்வியில் அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அறவே இடஒதுக்கீடு கிடையாது என்ற அடம் பிடித்த ஒன்றிய அரசின் போக்குக்கு - தமிழ்நாட்டு மக்கள் தலைவர்களின் இயக்கத்தின் ஒத்துழைப்போடு சுடிவாளம் போட்டு, தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல - இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு முதற்கட்டமாக 27 விழுக்காடு கிடைக்கச் செய்த சாதனை சாதாரணமானதா?

ஜாதி, தீண்டாமை ஒழிப்புப் பாதையில் - தந்தை பெரியார் இறுதியாக அறிவித்து களத்தில் நின்ற அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமையில் வெற்றி முத்திரையைப் பொறித்த பொன்னேட்டுக்குச் சொந்தமானது இவ்வாட்சி.

தந்தை பெரியாரை நெஞ்சில் தைத்த முள்ளோடு புதைத்து விட்டோமே என்று கண்ணீர் வடித்தார் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

அந்த முள்ளை அகற்றிச் சாதனைச் சிகரத்தின் உச்சிக்குச் சென்றார் - கலைஞரின் மைந்தர் மாண்மிகு மு.க. ஸ்டாலின். இதற்கு இணையாக எதைச் சொல்லப் போகிறார்கள்?

ஆறு மாதத்துக்கான நிதி நிலை அறிக்கை நின்று பேசக் கூடியதே - வேளாண்மைக்குத் தனி நிதி நிலை அறிக்கை - இந்தியத் துணைக் கண்டத்தையே திரும்பிப் பார்க்கச் செய்திருக்கிறது.

வெகு மக்கள் பாராட்டு வெள்ளத்தில் மிதக்கிறார் நமது முதலமைச்சர். இந்தக் குறுகிய காலத்திலேயே இந்தியாவின் தலை சிறந்த முதலமைச்சர் என்ற நிலையை எட்டியுள்ளாரே!

நூறு நாட்களுக்குள்ளேயே இவ்வளவு என்றால், எஞ்சிய காலம் ஈடு இணையற்ற பொற் காலமாக ஜொலிக்கும் என்பதில் அய்யமில்லை.

பாராட்டுகள் - வாழ்த்துகள்!

முரசொலி

16 Aug-2021

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்களாக நியமனம்!

ஆட்சிப் பொறுப்பேற்ற நூறாவது நாளில் புரட்சிகர வரலாற்றுச் சாதனை!

தமிழ்நாடு முதலமைச்சருக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. பாராட்டு!

சென்னை ஆக.16-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. அறிக்கை வருமாறு :-

அர்ச்சகர் பயிற்சி பெற்ற பிராமணரல்லாத பல்வேறு சாதிகளைச் சேர்ந்த 58 பேரை அர்ச்சகர்களாக நியமனம் செய்து அதற்கான ஆணையை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கியிருக்கிறார். அவர்களில் 6 பேர் ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள் ஆக வேண்டும் என்ற பகுத்தறிவு பகலவன் பெரியாரின் கனவு மெய்ப்பட்டு இன்று அவரது நெஞ்சில் தைத்த முள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் களையப்பட்டிருக்கிறது.

இந்த வரலாற்றுச் சாதனையைச் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருக்கும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களையும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டுகிறோம்.

சமத்துவப் பெரியார் கலைஞர்

இந்திய ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட எல்.இளையபெருமாள் கமிட்டி 1969 இல் சமர்ப்பித்த தனது அறிக்கையில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது. அதனடிப்படையில் 1970ஆம் ஆண்டு 'சமத்துவப் பெரியார்' கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசு, இந்து அறநிலையத்துறை சட்டம் 1959 இல் திருத்தம் கொண்டு வந்தது. அதை எதிர்த்து சில சனாதன வாதிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர்.

அர்ச்சகர் என்பவர் சமயத் தலைவருக்கு ஒப்பானவர் என்று அங்கு வாதிட்டனர். ஆனால் உச்சநீதிமன்றம் அதை ஏற்கவில்லை. அவர் அறங்காவலர்களால் நியமிக்கப்படும் ஒரு ஊழியர் மட்டும் தான் என்று அது தீர்ப்பளித்தது. ஆனால் ஆகம விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ள கோவில்களில் அந்த முறையின்படி தான் அர்ச்சகர் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் அது தெரிவித்தது. அதனால் ஆகம விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ள பெரிய கோவில்களில் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிக்க முடியாத நிலை இருந்தது.

அர்ச்சகர் பயிற்சி நிறுவனங்கள்

2006ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் மீண்டும் ஆட்சியதிகாரத்தைப் பெற்றபோது அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதற்கான சட்டத் திருத்தத்தை மீண்டும் கொண்டு வந்தார். அப்படி நியமனம் செய்வதற்கென அர்ச்சகர் பயிற்சி அளிப்பதற்கென்று 2007ஆம் ஆண்டு மே மாதம் தமிழகத்தின் 6 பகுதிகளில் அர்ச்சகர் பயிற்சி நிறுவனங்களைத் தமிழக அரசு நிறுவியது.

2006 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டத்தை எதிர்த்து சனாதனிகள் உச்சநீதிமன்றத்துக்குச் சென்றார்கள். அதனால் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்ற 206 பேரை திருக்கோவில்களில் அர்ச்சகர்களாக நியமிக்க முடியாத நிலை உண்டானது.

இதனிடையே 2015ஆம் ஆண்டு அந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது. ஆகம விதிகளுக்கு உட்பட்ட கோவில்களில் அந்த முறைப்படி தான் அர்ச்சகர் நியமிக்கப்பட வேண்டும் என்று உறுதி செய்தது. ஆனால் அந்த நியமனம் அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 14 இல் உறுதி அளிக்கப்பட்டுள்ள சமத்துவம் என்ற கோட்பாட்டுக்கு முரணானதாக இருக்கக்கூடாது. அந்த நியமனம் பிறப்பின் அடிப்படையில் எவரையும் பாகுபடுத்துவதாக அமையக்கூடாது' என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பில் தெளிவுபடுத்தியது.

கலைஞரின் இலட்சியத் திட்டம்

இதனால் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக நியமிப்பதற்கு அதுவரை இருந்துவந்த தடை முழுமையாக நீங்கியது. ஆனால் அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்குவதற்கு அப்போதிருந்த அ.தி.மு.க. அரசு ஆர்வம் காட்டவில்லை. இப்போது மீண்டும் தி.மு.க. ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ள நிலையில் அதன் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இலட்சியத் திட்டத்தை நிறைவேற்றும் விதமாக அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமித்து சாதனை படைத்துள்ளார்.

ஆட்சிப் பொறுப்பேற்று 100 ஆவது நாளில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2015ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் அரசியலமைப்புச் சட்ட உறுப்பு-14 ஐக் குறிப்பிட்டு 'அர்ச்சகர் நியமனத்தில் சமத்துவம் பேணப்பட வேண்டும்' என்று தெளிவுபடுத்தி இருப்பதால், ஆகம விதிகளுக்கு உட்பட்ட கோவில்களில் ஒரு குறிப்பிட்ட சாதியினரை மட்டுமே அர்ச்சகர்களாக நியமித்தால் அது நீதிமன்றத்தை அவமதித்ததாகிவிடும். எனவே ஆகமக் கோவில்களிலும் அனைத்து சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிக்கத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அர்ச்சகர் பயிற்சிப் பெற்ற மற்றவர்களையும் அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

முரசொலி

16 Aug-2021

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தால்

தமிழக முதல்வரை ஆன்மிக உள்ளங்கள் வாழ்த்தும்!

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேச்சு!

சென்னை, ஆக.16- சென்னையில் திருக்கோவில்களில் பணிபுரிய புதிய பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசுகையில் "அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் மூலம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஆன் மிக உள்ளங்கள் வாழ்த்தும்" என்று புகழாரம் சூட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.08.2021) சென்னை, அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அற நிலையத்துறையின் சார்பில் திருக்கோவில்களில் புதிய பணியாளர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கினார்கள். இதில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் பேசியதாவது:

ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கின்ற பட்ஜெட்!

'இந்து சமய அறநிலையத்துறையின் சார்பாக திருக்கோவில்களில் புதிய பணியாளர்களுக்குப் பணி நியமன ஆணையை வழங்குகிற இந்த அற்புதமான விழாவினை மிகச்சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிற, இன்றைக்கு தமிழக அரசில் காகிதம் இல்லாத பட்ஜெட் மட்டுமல்ல, ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கிற பட்ஜெட்டை தாக்கல் செய்துவிட்டு, முழுமையிற் காணாதார், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வில் சுவை காணோர், வறியோரின் பசுமைக் கரங்கள், ஒடப்பர் இவர்களெல்லாம் உயர்வோராக மாறுவதற்கு தன்னுடைய பணியை மிகச் சிறப்பாக ஆற்றிக் கொண்டிருக்கிற, நமது பேரன்பிற்குரிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிடுவார்கள். 'நம்முடைய மகாசந்நிதானம், சட்ட மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டபோது, இதைப் போல் ஆதீனங்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞருக்குப் பாராட்டு விழா மயிலாப்பூரில் நடத்தினார்கள். அந்த விழாவின் நிறைவுரையாற்றுகிறபோது சொன்னார்கள். நான் கடவுளை ஏற்றுக்கொள்கிறேனோ இல்லையோ, கடவுள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் நான் செயல்படுகிறேனா என்பது தான் முக்கியம் என்றார்கள்.

அந்த வகையில் இன்றைக்கும் கடவுளும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் செயல்படுகிற இன்றைய நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை நாம் நெஞ்சாரப் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறோம். இது இந்து சமய அறநிலையத் துறையின் சீரிய பணிகள், மிகச் சிறப்பான பணிகள், சுருக்கமாகச் சொன்னால் அப்பன் ஆதம் என்பவன் ஆண்டவனை மிகச் சிறப்பாக நேசிப்பவன். ஆண்டவன் நேசிப்பவன் மட்டுமல்ல, மக்களையும் நேசிப்பவன். ஒருமுறை தேவதை கனவில் தோன்றியது. தங்கத் தகட்டில் ஏதோ எழுதியது. தேவதையிடம் அப்பன் ஆதம் கேட்டான்... 'என்ன எழுதுகிறாய்? தேவதை சொன்னது 'யாரெல்லாம் கடவுளை சிறப்பாகப் பூஜிக்கிறார்கள் என்ற பட்டியலை தயார் செய்கிறேன். அப்பன் ஆதம் ஏக்கமாகக் கேட்டான். அதில் என் பெயர் இருக்கிறதா என்று?' உன் பெயர் இல்லை என்று தேவதை சொன்னது. ஏமாற்ற மடைந்தான். மறுநாளும் தேவதை கனவில் தோன்றியது. தங்கத் தகட்டில் எழுதியது என்ன எழுதுகிறாய் என்று இவன் கேட்கவில்லை. தேவதை சொன்னது 'யாரையெல்லாம் கடவுள் சிறப்பாக நேசிக்கிறார் என்ற பட்டியலை தயார் செய்கிறேன். அதில் உன் பெயர்தான் முதலிடத்தில் இருக்கிறது என்று

எல்லாப் பணிகளும் செம்மையாக சிறப்பாக நடைபெறுகிறது!

அப்படித்தான் இறைப் பணியை அறநிலையத் துறை சிறப்பாக செயலாற்றுவதற்கு இறைவன் ஏற்றுக் கொள்ளும் வகையில் தமிழக முதல்வர் அவர்களை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். சுருக்கமாகச் சொன்னால், நிறைவாகச் சொன்னால், இன்றைக்கு எல்லாப் பணிகளும் செம்மையாகவும், சிறப்பாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அறநிலையத்துறையின் பணிகள் இந்த நெருக்கடியான நேரத்தில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பாக செயலாற்றுவதற்கு பாராட்டுதல்களை, வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். அனைத்து ஆதீனப் பெருமக்களும், அருளாளர்களும் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறோம். இன்றைக்கு அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம். நீதியரசர் ஏ.கே. ராஜன் கமிட்டியில் நானும், பேரூர் அடிகள் பெருந்தகையும் இணைந்து பணியாற்றினோம்.

2000இல் தொடங்கப்பட்ட நிலையில், அந்தக் கனவு இன்றைக்கு நனவாகி இருக்கிறது. அதற்கு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் மட்டுமல்ல, தமிழகத்தின் ஆன்மீக உள்ளங்கள் ஆன்மிக நலம் நன்றி தெரிவிக்கிறது இது ஆன்மிகத் தலத்தின் பிரார்த்தனை. சாத்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர் என்று கேட்டவர் அப்பர் பெருமான். நம்முடைய சிவகங்கை மாவட்டம் திருக்கோட்டியூரின் திருக்கோயிலின் திருமதில் மேல் ஏறிநின்ற பெருந்தகையார் எல்லா மக்களுக்கும் மந்திரங்கள் வாரி வழங்கினார்.

அவருடைய குருநாதர் சொன்னார், 'சொல்லக்கூடாத மக்களுக்கு மந்திரத்தைச் சொல்கிறாயே. கேட்கக் கூடாத மக்கள் இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே... இதன் பயனாய் நீ நரகத்திற்குத் தான் போவாய்... என்றதற்கு. அப்போது அவன் அடக்கமாய்க் கேட்டான். 'இந்த மந்திரத்தைக் கேட்கிற கோடானு கோடி மக்கள் எங்கே போவார்கள்?' என்று. இந்த மந்திரத்தின் கேட்டதன் பயனாய் கோடானு கோடி மக்கள் வைகுண்ட வாசற் கதவைத் திறந்து கொண்டு பரமபதம் செல்வார்கள் என்றார். அதற்கு அவன், இங்கு கோடானுகோடி மக்கள் வைகுண்ட வாசற் கதவைத் திறந்துகொண்டு பரமபதம் செல்ல, நான் ஒருவன் நரகம் சென்றால் பரவாயில்லை என்று சொன்ன புரட்சிப்புத்த இராமானுஜர் உலா வந்த ஆன்மீகத் தலம்தான் வலிமைப்பட்டிருக்கிறது. அந்த வழியில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டம். அப்பர் பெருமான் எண்ணிய கனவு. இராமானுஜர் எண்ணிய கனவு. தமிழ்நாட்டின் ஆன்மிக உள்ளங்கள், குன்றக்குடி அடிகள் எண்ணிய கனவு நனவாகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

முரசொலி

16 Aug-2021

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என

முதல்வர் பணிநியமன ஆணை வழங்கியது மகிழ்ச்சிக்குரியது!

தவத்திரு குமரகுருபர ஆதீனம் பாராட்டு!

சென்னை ஆக.16–

சென்னை, மயிலாப்பூரில், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வகையில் 15 ஆம் தேதி அன்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அர்ச்சகராக பயிற்சி பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கிப் பாராட்டினார். இதனை வரவேற்று தவத்திரு குமரகுருபர ஆதீனம் அவர்கள் கூறுகையில், முதல்வர் பணி நியமன ஆணை வழங்கியது மகிழ்ச் சிக்குரியது, வரவேற்கத் தக்கது, பாராட்டுக் குரியது என்று கூறினார்.

இதுகுறித்து தவத்திரு குமர குருபர ஆதீனம் அவர்கள் வரவேற்றுக் கூறியதாவது:–



இன்று திருக்கோவில் களில் ஓதுவார்கள், அர்ச்சகர்கள் என்று எல்லோரும் அர்ச்சகராகலாம் என்பதன் அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டிருக் கிறது.

தமிழக முதல்வர் அவர்கள் இன்று பணி நியமன ஆணை வழங் கித் தொடங்கி வைத்திருக்கிறார். இது பக்தர்களின் நீண்ட கால எண்ணமாக இருந்தது. இது மகிழ்ச் சிக்குரியதாக இருக்கின்றது.

ஏனென்றால் இந்தியாவில் நம்முடைய தமிழகத்தில்தான் மிக அதிகமாக திருக்கோவில்கள் இருக்கின்றன.

நாயன்மார்களும், ஆழ்வார் களும் தமிழில் பாடியது சிறப்புக் குரியதாக இருக் கிறது. ஆகவே, தமிழில் அர்ச்சனைகள் நடைபெற வேண்டும் என்று பல ஆண்டு காலமாகவே அடியார் பெருமக் களும், ஆதீனமும் கேட்டு வந்தார் கள். அந்த வகை யில் இன்றைய அரசானது அதனை செயல் படுத்தி இருப்பது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின்றது.

இதில் அவர்கள் முறையாகப் பயிற்சி பெற்று மேலும் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் அவர்களுக் கெல்லாம் நம்முடைய அன்பான மகிழ்ச்சியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தவத்திரு குமர குருபர ஆதீனம் அவர்கள் கூறினார்.

பயிற்சி முடித்த அர்ச்சகர்களுக்கு

பணி நியமன ஆணையை முதல்வர் வழங்கியது மகிழ்ச்சிக்குரியது!

பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் வாழ்த்து!

சென்னை, ஆக. 16–

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற அடிப்படையில் நியமன ஆணை வழங்கப்பட்டதை பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் வரவேற்றுப் பேசியதாவது:–



தமிழக முதல்வர் அவர்கள் மிகச்சிறப்பான ஒரு திட்டத்தை மீண்டும் தொடங்கி இருக்கிறார். நம்முடைய பக்தி இலக்கிய காலம் தொடங்கி அனைவரும் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்த சான்றுகள் நம்முடைய இலக்கியங்களில் உள்ளன.

இடைக்காலத்தில் அது தடைபட்டது. மீண்டும் அது நடைமுறைக்கு வந்து இருக்கின்றது. கோயிலுக்குள் சென்று திருமேனி வழிபாடு செய்ய வேண்டும். தகுதியுடைய அனைவரும் அர்ச்சகராக வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் குன்றக்குடிகளார், பேரூர் ஆதீனம் மற்றும் சிவாச்சாரியார்கள் அனைவரையும் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் மூலம் 6 இடங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு இன்று பணி நியமன ஆணை வழங்குவது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது.

காலத்தில் சற்று தள்ளிப் போனாலும் கூட மிகவும் மகிழக் கூடியது. இதேபோன்று இன்னும் வரக்கூடிய காலங்களில் நிறைய பயிற்சி மையங்கள் உருவாக வேண்டும். நிறைய பேர் திருக்கோயில்களில் இதேபோன்று பணி ஆணைகள் பெற்றுப் பணியாற்ற வேண்டும். அதற்கு இறைவன் எல்லா நலன்களும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரூர் ஆதீனம் பேசினார்.

அரை நூற்றாண்டு காலம் கடந்து

அந்த அதிசயம் நடைபெற்றிருக்கிறது!

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பாராட்டு!



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள், 'ஒரு நிமிடச் செய்தி' எனும் தலைப்பில் அன்றாடம் ஆற்றிடும் உரை வலைதளங்களில் மிகவும் புகழ் பெற்றதாகும்.

நேற்றைய தினம், "நீக்கப்பட்டது முள்" எனும் தலைப்பில் அவர் ஆற்றிய ஒரு நிமிடச் செய்தி வருமாறு :–

"1970 டிசம்பர் 2ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள், "அறநிலையத்துறை சட்டத் திருத்த மசோதா" ஒன்றை முன்மொழிந்தார் . அதில் இரண்டு திருத்தங்களைக் கொண்டு வந்தார்.

முதல் திருத்தம் – "ஆகமங்களை முறையாகப் பயின்ற யார் வேண்டு மானாலும் , எந்தச் சாதியைச் சார்ந்தவராக இருந்தாலும் அர்ச்சகர் ஆக லாம்" என்பது.

இரண்டாவது திருத்தம் – "ஒவ்வொரு கோயிலின் அறங்காவலர் குழுவிலும் பட்டியல் இனத்தைச் சார்ந்த ஒருவர் கண்டிப்பாக உறுப்பினராக இருக்க வேண்டும்" என்பது.

ஆனால் 1972 மார்ச் மாதம் 4 ஆம் தேதி உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் காரணமாக, "அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்" என்பது நடைமுறைக்கு வராமலே போய்விட்டது.

"அய்யா பெரியார் அவர்களை, ஒரு முள்ளோடுதான் நாம் மண்ணில் புதைத்திருக்கிறோம்" என்று தலைவர் மணியம்மையார் ஒருமுறை சொன்னார். அந்த முள், அரை நூற்றாண்டுக்குப் பிறகு நேற்று காலை நீக்கப்பட்டிருக்கிறது.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகியிருக்கிறார்கள்.

இவ்வாறு அவ்வுரையில் சுப.வீரபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டார்.

முரசொலி

16 Aug-2021

தாய்மொழியில் அர்ச்சனை செய்வதே சரியானது!

அனைத்து சாதிகளிலிருந்தும் அர்ச்சகர்கள் வரவேண்டும்!

முதல்வர் பணிநியமன ஆணையை வரவேற்று ஆன்மிக சொற்பொழிவாளர் சுகிசிவம் கருத்து!

சென்னை ஆக.16–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதன் அடிப்படையில் மயிலாப்பூரில் நடைபெற்ற விழாவில் பயிற்சி முடித்த அர்ச்சகர்களுக்கு கடந்த 15ஆம் தேதி பணி நியமன ஆணை வழங்கினார். இதனை வரவேற்று ஆன்மிக சொற்பொழிவாளர் சுகி சிவம் கூறுகையில், இந்து மதம் வளர. வேண்டும் என்றால் அனைத்து சாதியினரும் குருமார்களாக (அர்ச்சகர்களாக) வரவேண்டும் என்று கூறினார்.

இதுகுறித்து ஆன்மிக சொற்பொழிவாளர் சுகிசிவம் கூறியதாவது :–

இந்தியாவில் மதங்களின் வளர்ச்சியை நீங்கள் கூர்ந்து பாருங்கள்' எல்லா சாதிகளிலிருந்தும் குருமார்கள் வருகிறார்கள். அப்போது குரு பீடத்திற்கு வருவதற்கு ஒரு குறிப்பிட்ட சாதிதான் வர வேண்டும் என்பதற்கு தடை வைத்து இருந்தால்; இந்தியாவில் சாதி இருக்குமே தவிர இந்து மதம் இருக்க முடியாது.

இந்து மதத்திற்கு வேறு வகையான சமூகத்திலிருந்தும் குருமார்கள் வரவேண்டும்.

இராமகிருஷ்ணரின் புரட்சி!

நான் ஒரு புரட்சி வரலாறு சொல்கிறேன். இராமகிருஷ்ணர் தன்னுடைய சாதியில் இருந்தா வாரிசைக் காட்டினார்? இல்லையே. இராமகிருஷ்ணர் சத்திரிய வம்சத்தைச் சேர்ந்த விவேகானந்தரை வாரிசாக எடுத்தார்.

தாய்மொழியில்தான் வழிபாடு!

உலகம் முழுவதும் இந்து மதம் போய் சேர்ந்ததா இல்லையா? அதே மாதிரி எல்லா சமூகத்தினரும் வருகிற போது தான் இந்து மதம் பலமடையும்; வளமடையும் என்பது என்னுடைய தீர்க்கமான கொள்கை. இது வரவேற்கத்தக்க ஒன்று. ஏனென்றால் தாய்மொழியில் ஒருவர் உருக்கமாகவும், நெருக்கமாகவும் கடவுளை நெருங்குவது மாதிரி வேறு மொழியில் நெருங்க முடியாது.

நான் உதாரணமாக சொல்வதுண்டு. தியாகராயர் தெலுங்கு பாடுகிறவர். தமிழ் நாட்டில் அது ஏன்? தெலுங்கு அவருடைய தாய்மொழி! தாய்மொழி தான் கடவுளிடம் ஒருவன் நெருக்கமாக பேச முடியும் என்பதை அவர் கண்டிருக்கிறார். தஞ்சாவூரில் இருக்கிறார், திருவையாறில் இருக்கிறார், தமிழர்களுக்கு மத்தியில் இருக்கிறார். ஆனால் தெலுங்கில் பாடுகிறார் என்றால் அது ஏன்?

நான் இதனை எதிர்க்கவில்லை. அதனை ஆதரிக்கிறேன். ஏனென்றால் தாய்மொழியில் பாடினால்தான் கடவுளிடம் அன்பும், நெருக்கமும் ஏற்படும் என்று தியாகராயர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

அதேமாதிரி தாய்மொழியில் கடவுளிடம் பேசிப் பாடுங்கள், திருவாசகம் சொல்லுங்கள், தேவாரத்தைச் சொல்லுங்கள் உங்க மனசு எப்படி உருகுது. கடவுளிடம் எப்படி நெருங்கலாம் என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

எனவே, தாய்மொழியில் வழிபாடு செய்வது தான் சரியான அணுகுமுறை.

இவ்வாறு ஆன்மீக சொற்பொழிவாளர் சுகிசிவம் கூறினார்.

பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிய

வரலாற்றுச் சாதனையாளர் முதல்வர் மு.க.ஸ்டாலின்

வைகோ பாராட்டு

சென்னை, ஆக.16-
பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிய வரலாற்றுச் சாதனையாளர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: அனைத்துச் சாதிகளையும் சேர்ந்த 58 அர்ச்சகர்களுக்கு, பணி நியமன ஆணையை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிய காட்சி நம்மையெல்லாம் மகிழ்ச்சிப் பெருங்கடலில் மிதக்கச் செய்தது. மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலிலும், திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலிலும் தமிழ் அர்ச்சகர்கள் தமிழில் அர்ச்சனை செய்யும் காட்சியும், ஓதுவாராக பணி நியமனம் பெற்ற ஓர் சகோதரி "போற்றி, போற்றி" என்று தமிழில் வழிபாடு செய்யும் காட்சியும் நம்மை பெரிதும் பரவசம் கொள்ளச் செய்துவிட்டது.

அனைத்துச் சாதிகளையும் சேர்ந்த 216 பேருக்கு ஆலயங்களில் பணியாற்றும் அரிய வாய்ப்பினை இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் வழங்கும் சமத்துவச் சாதனையை, அமைதிப் புரட்சியை மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு நிகழ்த்தி இருக்கிறது.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்பதற்காக 1970ம் ஆண்டு குடியரசு தினத்தில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தப் போவதாக தந்தை பெரியார் அறிவித்தார். தமிழக முதல்வர் கலைஞர் பெரியாரைச் சந்தித்து, அதற்கான நடவடிக்கைகளை அரசு நிறைவேற்றும் என்று உறுதி அளித்ததை ஏற்று, பெரியார் அவர்கள் போராட்டத்தை ஒத்தி வைப்பதாக அறிவித்தார்.

தந்தை பெரியார் மறைந்தபோது, "இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரவில்லையே! என்ற கவலை பெரியாரின் நெஞ்சில் முள்ளாய் குத்தியது. அந்த முள்ளோடுதான் பெரியாரை புதைத்திருக்கிறோம்" என்று கண்ணீர்மல்க குறிப்பிட்டார் முதல்வர் கலைஞர். அந்த முள்ளை அகற்றும் அரும்பெரும் சாதனையைத் தான் இப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் வரலாற்றுச் சாதனையாக நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்.

அமைதிப் புரட்சியை, சமத்துவப் புரட்சியை, இரத்தம் சிந்தாப் புரட்சியை நிறைவேற்றி, நமது அரசு பொதுநல அரசு என்று அகிலத்திற்கு பறைசாற்றியுள்ள தமிழக முதல்வருக்கும், அறநிலையத்துறை அமைச்சர், அலுவலர்கள் முதலான அனைவருக்கும் இதயம் கனிந்த, இதயம் நிறைந்த இனிய வாழ்த்துகள்! பாராட்டுகள்!

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

THE NEW INDIAN EXPRESS
16 Aug-2021

WHY TAMIL NADU BUDGET IS A MODEL FOR OTHERS

The recently unveiled Tamil Nadu Budget borrows from a popular Rajnikant repartee: "*Naan late-aah vanthalum, latest-aah varuven*", roughly translated as "even if I come late, I'll be the latest (in style)". When it finally arrived, the much-awaited state Budget threw up several surprises. A spin-off agriculture Budget, which stressed on the state's distressed farmers and the woes inflicted on the farming community, has been the most important departure from the routine. As the first ever e-Budget in the state, it is also being hailed as a prelude to the government's efforts to make governance tech-driven and paperless.

Finance Minister Palanivel Thiaga Rajan, who released a White Paper on the state's precarious financial position early last week, had to shelve his plans to beef up revenue streams for the time being, citing the pandemic. On Chief Minister M K Stalin's instruction, the FM reduced the effective rate of tax on petrol by ₹3 per litre, primarily to help two-wheeler owners. It has effectively drilled a ₹1,160-crore hole in the state exchequer. The poll promise of ₹1,000 financial assistance for each family has to wait as the government revealed for the first time that the scheme is only for the poor and a mechanism will be formed first to identify eligible recipients. The current regime believes that the absence of adequate data on beneficiaries hampers its ability to efficiently implement welfare schemes and deliver social and economic justice. So, going forward, it is going to be another focus area.

Given the revenue fall in the revised estimates, the state may be staring at a ballooning public debt. The White Paper said the public debt was already high at ₹5,70,189 crore, quoting the interim budget estimates of FY22, which translates to ₹2,63,976 per family in the state. But the revised estimates suggest that the state's revenue deficit for FY22 will end up much higher, by ₹16,496 crore. It points to a further deteriorating condition. In a nutshell, bringing the state finances back on track will be a Herculean task ahead for the DMK government. But it has made a remarkable start by identifying the problems. It is a model that could be emulated by other states.

MINT MEDIA MARKETING INITIATIVE

STALIN SHOWS THE WAY

100 DAYS OF STRATEGIC GOVERNANCE

The landmark 100th day since Mr. Muthuvel Karunanidhi Stalin was sworn in as Honourable Chief Minister of Tamil Nadu on May 7, 2021 is approaching. Without losing time, Mr. Stalin meted out many strategic welfare and relief measures with due diligence in the face of a raging COVID-19 pandemic.
A medical emergency was declared in the state and a 'war room' was set up to monitor and administrate oxygen, vaccine, and other medical infrastructure requirements.
The Chief Minister's Public Relief Fund organized funds for deserving beneficiaries. The Supreme Court of India recognized Tamil Nadu as a state with 'better health infrastructure systems in the country'.
The landmark free travel in state-run buses for women, the differently-abled, and transwomen was announced.
Ration-card holders across the state benefited from Approximately Rs 977 crore funds allocated towards state civil supplies. In keeping with Mr. Stalin's 'CM in Your Constituency' plan, pleas on social security issues are being actioned.
TN Agriculture Department, renamed the Agriculture and Farmers' Welfare Department is working towards improving irrigation, agricultural equipment, warehousing, and direct farmer sales. The state announced two structured, dedicated budget schemes for agriculture, for the first time.
Various welfare schemes for members of Adidravida and scheduled tribe communities, Lankan Tamil refugees, transgenders, BC, MBC, and minority communities are enacted.
Approximately Rs 90 crore was meted out as relief for fishermen and their families in the state.
The state is working to upgrade infrastructure of government schools, and to improve admission opportunities for government school students across universities, colleges, and ITI facilities in Tamil Nadu.
Mr. Stalin has officiated the release of Rs 17,141 crore as funds towards new employment opportunities. 35 MoU for industrial investments, five new employment generation schemes, investment for nine new ventures are in place.
Thanks to Mr. Stalin, Tamil Nadu is progressing towards becoming a 10 billion USD economy by 2030.
The '100 temples, 100 tanks, 100 gardens' scheme, infrastructure and facility improvement of historic temples and listing of temple-owned land properties online to resolve illegal encroachments and mismanagement has been accomplished. Priests and employees received essentials COVID-support and relief. Also, the state will soon see implementation of appointing women priests in temples.
Support and relief for serving and retired state government employees such as those of the TNSTC by enabling settlement of terminal benefits that were long due was achieved. Besides driving incentivization and the appointment of personnel including women officers, Mr. Stalin inaugurated works for a counter-cybercrime training facility at Unamancheri, Vandalur.
Mr. Stalin honoured accomplished sportspersons with grants and funds, and is deliberating pension for retired sportspersons. He announced journalists and news media personnel as frontline.
Roadways, water supply, and other essential facilities and infrastructure improvements are underway. Water resource management has been prioritized across the state. Mr. Stalin is actively deliberating talks over issues concerning the Mekedatu dam and Mullaiperiyar dam.
The state government is now robustly driving vaccination campaigns and other preparatory measures to mitigate the risks of the third wave of the pandemic

The distance to walk the talk

Taking charge amid the devastating second wave, the DMK govt had to hit the ground running. Since then, the CM has delivered on some key promises & shown he has the will to undertake the 'drastic reforms' needed to fix TN's finances and power inclusive growth

EXPRESS NEWS SERVICE
@ Chennai

FROM containing the Corona infection, which was at the peak, to toning up the government machinery at all levels, from attracting new investments to finding quick solutions to emerging issues, 'high speed' has been the hallmark of the 100 days of the DMK government. Led by Chief Minister MK Stalin, the single motto of the government has been delivering services to the people at the earliest. In a nutshell, Stalin has proved his mettle.

Just two months after assuming power, while chairing the meeting of the Economic Advisory Council composed of world-renowned experts, Stalin made his ambitions very clear and indicated that he has the political will to take hard decisions to put the State economy back on track. "Employment opportunities should increase in Tamil Nadu. Per capita income should go up while the social status of the people should improve. The economic growth of the State should be inclusive. I know, these dreams cannot be realised through ordinary reforms. I know this would become possible only through complete and drastic reforms and I say Tamil Nadu is ready for drastic reforms," the Chief Minister had said.

The government led by him, released the white paper on State's finances within three months giving details about the precarious financial situation. Vowing to make Tamil Nadu the most investor-friendly State in entire South Asia, Stalin said the objective is to turn Tamil Nadu into an 'One Trillion Dollar Economy' by 2030. Despite the slowdown in global economy due to the pandemic, Stalin's government has signed 35 new industrial agreements with an investment of ₹17,141 crore.

He has also inaugurated five new ventures worth ₹7,117 crore and laid the foundation stone for nine industries worth ₹4,250 crore at the investors meet held in the city recently. These investments would create 83,000 new jobs. To support industrial growth, orders have been issued for the release of capital subsidies to self-financed projects in a single instalment instead of three.

The DMK government rolled out several initiatives to minimise the hardships faced by the people due to lockdown measures. Rice ration card holders were given 14 varieties of essential commodities and an estimated two crore cardholders got ₹4,000 as relief fund. Temple priests were given ₹4,000 by way of monetary assistance besides free essential commodities. The price of Aavin milk was cut by ₹3/litre while women passengers were allowed to travel free in city transport buses.

Those affected by Covid have been allowed treatment at private hospitals at government expense. Arrangements have been made for people to get the Corona vaccine through district health centres across the State. Stalin had allocated ₹25 crore to curb black fungus while ₹100 crore has been allocated to prevent the third wave. Under the 'Chief Minister in Your Constituency' scheme which has drawn appreciation from all quarters, all the 4,57,645 petitions received have been acted upon. After due field verification, 2,29,216 grievances have been positively redressed. Specific attention has been paid not just to the expeditious disposal of petitions but also to ensure that grievances are satisfactorily redressed.

One of the crucial issues that reemerged after the DMK government assumed office was Karnataka's adamant stand on building a dam across Cauvery at Mekedatu. Stalin has asserted that Tamil Nadu has full right over Cauvery and would not allow the project under any circumstances.

The Chief Minister had not only convened an all-party meeting to elicit the support of Opposition parties but also sent a delegation to the Union Government to stop the Mekedatu dam project. Union Jal Shakti Minister Gajendra Singh Shekhawat had assured the delegation that Karnataka cannot construct a dam at Mekedatu without the consent of the lower riparian State Tamil Nadu.

THE NEW INDIAN EXPRESS

16 Aug-2021

HIGHPOINTS OF THE DMK CABINET

1 FREE BUS RIDES
Free rides for all women, people with disabilities and transpersons in white board buses. For those hailing from poor economic backgrounds, and those who travel far for work, this scheme has come as a boon

2 UNGAL THOGUDHIYIL CM
Creation of the 'Chief Minister in your Constituency' department. Action already taken on 4,57,645 plea. Specific attention paid to expeditious disposal of petitions and satisfactory redressing of grievances

3 NON-BRAHMIN PRIESTS
Stalin fulfils his father's dream by implementing all-caste Archaka scheme. Initiated by M Karunanidhi, the scheme got caught in legal tangles for decades. On August 14, Stalin appointed 24 non-Brahmin priests

4 TAMIL ARCHANAI
Revival of Tamil Archanai Scheme in 47 key temples. Scholars have long been demanding that worship in temples should be held in Tamil. Though initiated by Karunanidhi, it fell by wayside during AIADMK rule

5 EXPERTS TO REVIVE ECONOMY
Economic Advisory Council comprising renowned experts, for advising the government on revival of the State economy is seen as one of the key moves of the government

6 NEW IMPETUS TO FARMING
Introducing an exclusive budget for agriculture, when the State Assembly is celebrating its centenary and farm sector is facing numerous challenges is one of the government's key moves

7 ₹17K CR-WORTH INVESTMENTS
Within just 100 days, the CM addressed an Investors Festival, wherein MoUs were signed for 35 business investments worth ₹17,141 crore, providing job opportunities for 55,054 people

8 RESERVATION FOR ALL BCs
The DMK has successfully persuaded the Union Government, through continued legal battle, to provide reservation in medical admissions for all the backward classes at the All India level

9 QUOTA FOR GOVT STUDENTS
The government has decided to extend 7.5 per cent reservation to government school students in professional courses. Legislation to this effect would be introduced during the ensuing Budget session

10 PETROL PRICE SLASHED
Petrol price reduction by ₹3 per litre would provide huge relief to the working class people in the State. It is estimated to lead to a ₹1,160 crore revenue loss to the government this year

Chief Minister MK Stalin inaugurating the 'Makkalai Thedi Maruthuvam' (Healthcare at Doorstep) scheme, which has been praised by many

TAMIL NADU TO REAP THE HARVEST

Achieving food security and nutritional security in the next 10 years

11.75L ha Steps to bring an additional area under net area sown

Steps to propel TN to the first three ranks at National level in productivity of food grains, coconut, sugarcane, cotton and sunflower by adoption of quality seeds and modern technologies

WELFARE FIRST

₹25 cr allotment from the CM's Public Relief Fund towards procurement of Amphotericin B drug and other medicines to treat black fungus patients

Rice ration card holders were given 14 varieties of essential commodities and an estimated two crore cardholders got **₹4,000** as relief fund

Makkalai Thedi Maruthuvam is being implemented with a cumulative allocation of **₹258 cr** and coverage target of 1 cr people from 30 lakh families

16 POINT MULTI-PRONGED STRATEGY TO ENSURE GROWTH OF AGRICULTURE IN TN

4.5LAKH PETITIONS RECEIVED UNDER THE 'CHIEF MINISTER IN YOUR CONSTITUENCY' SCHEME HAVE BEEN ACTED UPON

First-ever agri budget expected to give 'booster dose' to sector

EXPRESS NEWS SERVICE @Chennai

THE first ever exclusive budget for agriculture in Tamil Nadu will give a big boost to the farm sector in its entirety, including its allied sectors. With this, the DMK has fulfilled yet another electoral promise made to the people during the campaign for Assembly elections.

Rolling out visionary goals for overall development of the farm sector which includes achieving food security and nutritional security in the next 10 years, the budget laid special focus on the need for popularising organic farming in the State.

A grand project called 'Kalaignar All Villages Integrated Agriculture Growth' scheme will be implemented in a span of five years to ensure overall agricultural development and self sufficiency in all the villages of Tamil Nadu. The scheme will be implemented in 2,500 Village Panchayats in the current year i.e. 2021-22. In addition, schemes of agriculture and allied departments will be dovetailed with it.

Another important scheme announced in the agriculture budget is to train agriculture graduates as agriculture entrepreneurs. For this, capacity-building training will be imparted to students during their graduation with the help of agri business firms and alumni.

Further, steps will be taken to find out ways and means for preparation of organic manures, growing tree seedlings, nursery gardening, mushroom cultivation, construction of polygreen houses, distribution of fertilisers and pesticides, establishment of agri clinic, micro-irrigation service centres and product export etc.

The agriculture budget also rolled out a 16-point strategy to ensure growth of agriculture in the State. This multi-pronged strategy includes creating agricultural clusters at village level, dryland development, development of fallow land, strengthening rainwater harvesting structures to increase the area under irrigation and promotion of collective farming.

Helped TN put the worst of second wave behind it

EXPRESS NEWS SERVICE @Chennai

PERHAPS no other government in the State had assumed office amidst such a taxing crisis as the Covid pandemic. The government led by Chief Minister MK Stalin took over the reins on May 7, when the second wave was peaking, and with extraordinary speed the infection rate was contained to a great extent.

Burning the midnight oil even ahead of assuming office, Stalin held a series of meetings with health experts and officials, and initiated a slew of measures and action plans to mitigate the pandemic. On May 7, 26,465 Covid cases were reported in the State. Subsequently the second wave peaked at 36,184 new cases on May 20, before gradually weakening. Now the number of new cases hovers below 2,000 cases per day. State positivity rate has also fallen to below 2 per cent.

Stalin had declared that Tamil Nadu is facing a Medical Emergency, ordered the setting up of a War Room to monitor the requirement of oxygen, vaccine and hospital beds, and constituted the Chief Minister's Public Relief Fund to raise funds. When the DMK government assumed office, there was heavy demand for medical oxygen and people with Covid complications had to wait for hours in front of hospitals to find a bed. But due to the quick steps taken by the government to produce oxygen through private manufacturers and transport it from other States, the situation returned to normalcy in a few weeks. The Chief Minister had also taken up the issue with the Prime Minister. During the peak of Covid incidence, 3.13 lakh people were affected and the government took effective steps to provide 568.46 metric tonnes of oxygen per day with optimum utilisation.

Solace & solatium at the right time

EXPRESS NEWS SERVICE @Chennai

THE families of government servants, who sacrificed their lives during pandemic-related duties, were compensated with financial packages. Children, who lost both their parents to Covid, were provided a deposit of ₹5 lakh and their entire education and boarding expenses will be borne by the State government. Children, who lost either of their parents, were given a relief package of ₹3 lakh. Orphaned children, who are staying with their relatives or police personnel, will be paid ₹3,000 every month till they attain the age of 18 years.

Allotment of ₹25 crore from the Chief Minister's Public Relief Fund towards procurement of Amphotericin B drug and other medicines to treat black fungus-affected patients, was another significant step taken by the government.

Besides, the State Board Examinations for Class XII were cancelled this year to ensure the safety of students.

THE NEW INDIAN EXPRESS

16 Aug-2021

Despite the pandemic, Stalin has stayed busy meeting people and officials of various districts; the CM has led by example when it comes to wearing masks

Panacea developed for State's ailing hinterlands

EXPRESS NEWS SERVICE
@ Chennai

MAKKALAI Thedi Maruthuvam is assuredly one of the key initiatives of the DMK government during the past 100 days. The innovative initiative to provide healthcare services to the people at their doorstep was launched at Samanapalli village in Krishnagiri district by Chief Minister MK Stalin.

The scheme, also launched simultaneously in seven other districts – Thanjavur, Tirunelveli, Madurai, Tiruchi, Coimbatore, Chennai and Salem – in the first phase, aims to change the mode of preliminary healthcare delivery by taking it to the doorsteps of people. It is being implemented with a cumulative allocation of ₹258 crore and coverage target of 1 crore people from 30 lakh families.

Under the Makkalai Thedi Maruthuvam scheme, those above 45 years of age and others will be screened for infirmities through door-to-door checkup. Personnel, working for this scheme, will also detect non-communicable diseases that may lead to sudden deaths, or affect their health. Women public health workers, women health volunteers, physiotherapists, and nurses are also involved in scheme activities.

More than 1,200 health workers, 50 physiotherapists, and 50 nurses have been appointed to implement this scheme and the government is planning to implement the scheme across the State after inducting about 25,000 healthcare workers by the end of this year.

Through the scheme, people in rural areas would be screened for high blood pressure and diabetes, which go largely undetected in villages. The patients would be provided medicines every month.

வேளாண் பட்ஜெட்:

காங்கிரஸ் விவசாயப்பிரிவு பாராட்டு!

சென்னை.ஆக 17.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் விவசாய பிரிவு மாநில தலைவர் பவன்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

"தமிழ்நாட்டில் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் விவசாய பிரிவு தொடர்ந்து பல கோரிக்கையை முன்வைத்து வந்துள்ளது. அதில் பலவற்றை நிறைவேற்றும் வகையில் வேளாண்துறைக்கு தனியாக நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்து கொள்கிறோம். இந்த வேளாண் பட்ஜெட்டில் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்புகள் இடம் பெற்றிருந்தாலும் இயற்கை வேளாண்மை குறித்த அறிவிப்புகளை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுகிறோம்.

வேளாண் துறையில் புதுமைகளை புகுத்தி, வேளாண் தொழில் வளர்ச்சிக்கு வித்திடும் வகையிலும், விவசாயிகளின் ஏதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையிலும், வேளாண் தனி பட்ஜெட்டில், 34 ஆயிரத்து, 220 கோடி ஒதுக்கி இருப்பது பாராட்டுக்குரியது. இப்படி எண்ணற்ற நன்மைகளுடன் கூடிய வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதை, நல்ல தொடக்கமாக கருதலாம். முடிவு பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறோம். அறிவிப்புகள் அப்படியே செயல்வடிவத்திற்கு வந்தால் தமிழக விவசாயிகள் வாழ்க்கைத்தரம் கண்டிப்பாக கொஞ்சமாவது உயரும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

மாலை மலர்

17 Aug-2021

ஊக்கம் அளிக்கும் உயரிய விருது!

எத்தனை நாள் வாழ்ந்தோம்? என்பதை விட எப்படி வாழ்ந்தோம்? என்பதுதான் முக்கியம் என்பார்கள். அப்படி வாழ்பவர்களும், வாழ்ந்தவர்களும் சில பேர் தான். அந்த சில பேரின் தியாகமும், வாழ்க்கையும் வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்!

அப்படித்தான் இந்த ஆண்டு கல்பனா சாவ்லா விருது பெற்ற டாக்டர் சண்முகப்பிரியாவின் நினைவுகளும் நீங்காத நினைவுகளாக வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

செய்த பணிகளுக்குத்தான் விருது வழங்குகிறார்கள். ஆனால் அந்த விருதை வாங்க கூட அவர் இல்லை. அவரது கணவர் சண்முகப்பெருமாள் அந்த விருதை பெற்றுக்கொண்ட போது உற்றுக்கவனித்த ஒவ்வொருவர் நினைவிலும் நிச்சயம் சண்முகப்பிரியா வந்திருப்பார்.

மருத்துவப்பணி உயிர்காக்கும் பணி என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் தன் உயிரையே பணையம் வைத்து அந்த பணியை செய்பவர்கள் எத்தனை பேர்...!

அதைத்தான் சண்முகப்பிரியா செய்து முடித்து இருக்கிறார். அனைவரின் நினைவுகளிலும் நீங்காத இடத்தை பிடித்து சாதனை படைத்திருக்கிறார். இந்தியாவில் கொரோனா 2-வது அலை வந்து கோரதாண்டவம் ஆடிய காலக்கட்டத்தில் தமிழகத்திலும், தினசரி பாதிப்பு 30 ஆயிரம் பேர் என்ற ரீதியில் உயர்ந்தது.

தினமும் 500-க்கும் மேற்பட்ட உயிர்கள் பறிபோனது. கனவுகள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கையுடன் இருந்த பலரது உயிர்கள் மண்ணோடு மண்ணாகி விட்டன. வீட்டை விட்டு வெளியே செல்லவே மக்கள் நடுங்கிய நேரம்.

அந்த நேரத்திலும் துணிந்து நின்று மக்களை காக்க போராடியது முன்களப்பணியாளர்களான டாக்டர்களும், செவிலியர்களும் தான். அவர்களில் ஒருவர் தான் டாக்டர் சண்முகப்பிரியாவும்.

8 மாத கர்ப்பிணி. அடுத்த 2 மாதத்தில் தாயாகப்போகும் ஆனந்த கனவில் மிதந்திருப்பார். அந்த குடும்பத்தில் அடுத்த வாரிசை எதிர்பார்த்து ஆசை ஆசையாய் காத்திருந்தார்கள். வாயும், வயிறுமாக இருக்கும் இந்த தருணத்தில் கொரோனா பிட்டி பார்க்காதே என்று சக மருத்துவர்களே ஆலோசனை வழங்கினார்கள்.

ஆனாலும் நாளுக்கு நாள் அதிகரித்த கொரோனாவை பார்த்து விலகி நிற்க அந்த மனிதாபிமான மருத்துவரின் மனது இடம் கொடுக்கவில்லை. மதுரை அனுப்பானடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அப்போது மருத்துவராக இருந்தார் சண்முகப்பிரியா.

கர்ப்பக்காலத்தில் கவனம் தேவை. நன்றாக ஓய்வெடுக்க வேண்டும் என்று கர்ப்பிணிகளுக்கு சொல்லித்தரும் மருத்துவர். ஆனால் அவர் ஓய்வெடுக்கவில்லை. 582 காய்ச்சல் முகாம்கள் 10,962 பேரிடம் பரிசோதனை நடத்தப்பட்டதை நேரில் சென்று கண்காணித்தார்.

அதில் 302 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது. 52 பேர் தனிமைப்படுத்தப்பட்டு வீடுகளில் சிகிச்சை பெற்றனர். அவர்களின் வீடுகளுக்கே சென்று தொடர் சிகிச்சை அளித்து வந்தார். அந்த வீரமும், தைரியமும், துணிச்சலும் தான் அவருக்கு பெயர் தேடி கொடுத்துள்ளது கல்பனா சாவ்லாவாக அண்ணாந்து பார்க்க வைக்கிறது.

விருதை பெற்றுக்கொண்ட சண்முகப்பெருமாள் கூறும்போது, 'என் மனைவிக்கு ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகம். மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்பது அவரது ரத்தத்தில் ஊறி போனது. இந்த விருதை அவர்தான் வாங்கி யிருக்க வேண்டும். ஆனால் இன்று அவர் இல்லை. இப்போது வரை உயிரோடு இருந்து இருந்தால் பலரது உயிரையும் காப்பாற்றி இருப்பாள்' என்று கணவர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டு இருந்தார்.

உண்மை தான். அவரது ரத்தத்தில் ஊறிப்போனதால் தான் தன் வயிற்றில் வளர்ந்த குழந்தையையும் கண்டு கொள்ளாமல் மனித நேயத்துடன் கொரோனா பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி இருக்கிறார். அதனால் தான் உயிரையும் மாய்த்து எல்லோரது இதயங்களிலும் நிறைந்து நிற்கிறார்.

இப்படிப்பட்ட தகுதியான நபரை தேர்வு செய்து தகுதியான விருதையும் வழங்கியிருக்கும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் செயல்பாடு பாராட்டுக்குரியது. மேலும் இவர்களை போன்றவர்களின் தியாகம் தான் மனிதாபிமானத்தை மரணித்துப் போகவிடாமல் பாதுகாக்கிறது.

சண்முகப்பிரியாவை போல் அர்ப்பணிப்புடன் இந்த சமூகத்தில் பலர் உழைப்பதற்கு இந்த உயரிய விருது நிச்சயம் ஊக்கம் அளிக்கும்.

17 Aug-2021

ஜி.கே.இந்திரன்

புத்தகங்களை ஏன் கேட்டார் மு.க.ஸ்டாலின்..?

'ஒரு பள்ளி திறக்கப்பட்டால் 10 சிறைச்சாலைகள் மூடப்படும்' என்பது பிரெஞ்சு அறிஞர் விக்டர் ஹூகோ அருளிய வார்த்தை.

'டுடே ரீடர், டுமாரோ லீடர்' என்ற வார்த்தையும் மேலை நாடுகளில் உச்சரிக்கப்பட்ட ஒன்று.

பேச்சும், எழுத்தும் ஒரு நாட்டையே புரட்டிப்போடும் என்பது தமிழ்நாடே உலகிற்கு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டு. அந்த பேச்சுக்கும் எழுத்துக்கும் அடிப்படையானது வாசிப்பு.

ஒரு காலத்தில் தமிழ்நாட்டின் உயிர்த்துடிப்பாக இருந்த வாசிப்பு இப்போது சிக்கலாக மாறி வருகிறது.

இச்சூழலில் வாசிப்பு இயக்கம் மீண்டும் தமிழ்நாட்டில் மலர வேண்டும் என்பதை கருத்தில்கொண்டு, திமுக அரசு பயணிக்கத் தொடங்கி இருப்பதாகத் தோன்றுகிறது. அதை இன்னும் வலிமைப்படுத்தி பொலிவு செய்தல் முதன்மையானது.

'இனி சந்திக்கும் இடங்களில் எல்லாம் பொன்னாடை வேண்டாம், பூங்கொத்து வேண்டாம், புத்தகம் கொடுங்கள்' என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்ததன் வெளிப்பாடுதான். திமுக அரசு பயணிக்க போடப்பட்ட முதல் பாதை. அப்பாதை ஒரு வழிப்பாதையாக இருக்காமல், இருவழிப்பாதையாக உருப்பெற்று, தமிழ்நாட்டில் வாசிப்பு ஓர் சுவாசிப்பாக மாறுதல் கட்டாயம் என்பதே கட்டுரையின் நோக்கம்.

ஆறு இல்லாத ஊரில் இருக்க வேண்டாம், கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் - இப்படி எல்லாம் சொலவடைகள் உண்டு. ஆனால், நூலகம் இல்லாத வீடு பாழ் என எத்தனையோ அறிஞர்கள் சொல்லியும் இன்று வாசிப்பு என்பது அருகிவிட்டது.

இதற்கு காரணம், நம் நாட்டில் நிலவி வரும் பள்ளி கல்வித்திட்டங்களே. ஆம், மாணவர்களிடையே வாசிப்பு என்பதை தொலைக்க வைத்தது கல்வித்திட்டத்தின் கோளாறு அன்றி வேறு ஒன்றுமில்லை.

'மருத்துவ படிப்புக்கும், பொறியியல் படிப்புக்கும் தமிழ், ஆங்கிலத்தில் மதிப்பெண் முக்கியம் கிடையாது. எனவே

ரிப்போர்ட்டர்

17 Aug-2021

மற்ற பாடங்களில் கவனம் செலுத்தி படி' என பள்ளிகள் கொடுத்த அறிவுரைப்படி மாணவர்கள் பயணித்து வருகின்றனர்.

இதைவிட ஒரு கொடுமை என்ன தெரியுமா?

'நீட் தேர்வுக்கு பாடத்திட்டத்தை தூக்கிப்போட்டு, அதற்கான பயிற்சி வகுப்பில் படித்தால் போதும்' - இப்படியும் சில அரைவேக்காட்டு அதிமேதாவி, அரைவேக்காடு ஆசிரியர்கள் சொல்லி தங்கள் மாணவர்களை சிதைத்து வருகின்றனர்.

வாசிப்பு என்பது ஒரு தியானம்.

வாசிப்பு என்பது சுகானுபவம்.

வாசிப்பு என்பது சாதி, சமயமற்ற உலகம்.

வாசிப்பு என்பது வன்முறையற்ற சமூகம்.

ஆம். சிறைக்குச் சென்ற பலரும்கூட வாசிப்பு மூலம் தங்கள் வாழ்க்கைப் பாதையை மாற்றிக்கொண்டனர். அப்படிப் பட்ட வாசிப்பு பழக்கத்தை பள்ளி மாணவர்களிடையே விதைக்க கடந்த சில வருடங்களாக ஆட்சியாளர்கள், பள்ளிகள், ஆசிரியர்கள் தவறவிட்டுள்ளனர்.

அதை மேம்படுத்தவே தி.மு.க. அரசு முன்னெடுத்து இருக்கும் திட்டம் நூலகம். இனி நூலகத்துக்குத் தேவையான புத்தகங்களை முதல்வர் அலுவலகமே கொட்டிக் குவிக்கும் அளவுக்கு, போகுமிடங்கள் எல்லாம் புத்தகம் குவிகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பெற்றுக்கொள்வதோடு நிற்கவில்லை. தான் சந்திக்கும் அனைத்து விருப்பிகளுக்கும் புத்தகங்களையே பரிசாக கொடுத்து வருகிறார்.

இதை கவனத்தில்கொண்டு, இனி பள்ளி கல்வித்துறை செய்ய வேண்டியது என்ன என்பதை அலசி ஆராய்வதே சிறந்தது.

1. பள்ளிகளில் எப்படி மற்ற வகுப்புகள் நடத்தப்படுகிறதோ, அதேபோல் நூலக வகுப்பு என்ற கல்வி முறையை வாரத்துக்கு இரண்டு நாட்களாவது 5 முதல் 12ம் வகுப்பு வரை கட்டாயமாக்க வேண்டும்.

2. நூலக வகுப்பில் தமிழ், ஆங்கில நூல்கள் இரண்டும் கிடைக்கவும், படிக்கவும் வழிவகை செய்ய வேண்டும்.

வாசிப்புக்குப் பிறகு கட்டுரை எழுதவும், பேச்சுப் போட்டியில் பங்கேற்கவும் வைத்தல் கட்டாயமாக்க வேண்டும்.

3. கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி திறனாய்வு செய்து 10 மதிப்பெண்கள் வழங்கப்படும். இது மற்ற செய்முறைத் தேர்வுகளைப் போலவே நடத்தி தமிழ் மற்றும் ஆங்கில பாடத்தின் மதிப்பெண்களோடு சேர்க்கப்பட வேண்டும்.

4. மாவட்ட அளவில் எழுத்துப் போட்டி பேச்சுப் போட்டிகளில் பங்கேற்று முதல் மூன்று பரிசு பெறும் மாணவர்களுக்கு தமிழக கல்வித்துறை சார்பில் வெளிநாட்டு நூலகங்களை பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இப்படியான திட்டங்களை கொண்டுவந்தால், முதல்வர் மு.க.ஸ்டாலினின் 'அறிவிப்புக்கும், அவரது தொலைநோக்குத் திட்டத்துக்கும் நல்ல பலன் இருக்கும் என்பதில் கடுகளவும் மாற்றுக்கருத்து இருக்காது.

இவை தவிர, வாசகர் வட்டம் வாசிப்பு நாள், நூலக நாள் போன்றவையும் ஒரு விழாவாக கொண்டு வரப்பட வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கும் 3800 நூலகங்கள் முழுமையாக நிரம்பி வழிய செய்ய வேண்டும்.

பள்ளி, கல்லூரி மட்டுமின்றி பொதுச் சமூகம் படிப்பதற்கு நேரம் ஒதுக்கி, நூலகம் நோக்கி சாரை சாரையாக வரவழைக்க, பொது நூலகத் துறை முன்னெடுப்புகளை செய்ய வேண்டும்.

படிப்பதற்கு மொபைல் போன் போதும், டிஜிட்டல் கருவிகள் போதும் என்ற எண்ணம் இருந்தாலும், நூலகத்தில் வந்து படிப்பதால், பல சமூக மாற்றங்கள் உருவாகும். வெளி உலக தொடர்பு ஏற்படும். சிலர் பரிந்துரை செய்யும் நல்ல நூல்களை வாசிக்க வாய்ப்பு உருவாகும்.

'என்னதான் டிஜிட்டலில் படித்தாலும், புத்தகத்தை எடுத்து படித்தால்தான் புத்தகம் படித்தது போல உணர்வும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது' என்று மைக்ரோ சாஃப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் கூறியதை நினைவுகூர வேண்டும்.

> **படிப்பதற்கு மொபைல் போன் போதும், டிஜிட்டல் கருவிகள் போதும் என்ற எண்ணம் இருந்தாலும், நூலகத்தில் வந்து படிப்பதால், பல சமூக மாற்றங்கள் உருவாகும்.**

வீட்டு வரி செலுத்தும் ஒவ்வொரு நபரும் நூலக வரி ஒன்றையும் செலுத்தி வருகிறார்கள் என்பது, பெரும்பான்மையான வீட்டு உரிமையாளர்களுக்கு தெரியவே தெரியாது. 3 சதவிகிதமாக இருந்த நூலக வரி, இன்று 10 சதவீதமாக உயர்ந்திருப்பதும் அவர்களுக்குத் தெரியாது.

இப்படிப்பட்ட சமூகத்தை நூலகத்திற்கு வரவழைத்து, நூலக இயக்கமாக மாற்றக்கூடிய அளவுக்கு அரசின் கொள்கைகள் இருந்தால், தமிழ்நாட்டின் அடுத்த ஐந்து ஆண்டுகளில் வளர்ச்சி என்பது கல்வி வளர்ச்சியாக மட்டுமில்லாமல், நூலக வளர்ச்சியாக மட்டுமில்லாமல் மனித மேம்பாடும், கருங்கிப்போன மனிதாபிமானமும் உயரக் காரணமாக இருக்கும்.

எப்படி மகளிருக்கு இலவச பஸ் பயணம் என்று ஓர் உயரிய திட்டத்தை கொண்டு வந்திருக்கிற தி.மு.க. அரசு, மாணவ, மாணவர்களின் எதிர்கால நலனுக்கும் தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்த நலனுக்கும் இந்த நூலகக் கொள்கையை பள்ளி, கல்லூரிகளில் கட்டாயமாக்குதல் அவசியம்.

இச்சமூகத்தில் பெண்கள், குழந்தைகள் மேம்பாடு அடைய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அரசு பயணிக்க வேண்டும். அப்படித்தான் திமுக அரசு 'புத்தக அன்பளிப்பை' கொண்டு வந்திருக்க வேண்டும்.

இது ஒரு சம்பிரதாயமாக மாறக்கூடாது என்பதற்குத்தான், குழந்தைகளின் ஆழ் மனத்தில் மீண்டும் வாசிப்பு என்பதை விதைக்க வேண்டும். ஆழ்ந்து கற்றல் பள்ளிப்படிப்பிலும், அகன்று படித்தல் மேற்படிப்பிலும் வரவில்லை என்றால் அந்த மாணவனின் படிப்பு நிறைவானது அல்ல.

'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு'

என்ற குறளுக்கு 'பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருவது போன்று, நூலை படிக்கப் படிக்க மென்மேலும் இன்பம் தரும்' என்பதை பள்ளிகளில் விதைத்தால்தான் முதல்வர் மு.க.ஸ்டாலினின் கனவு மெய்ப்படும்.

கன்னிமாரா நூலகத்தில் பொழுதைக் கழித்த காஞ்சிபுரத்தின் முதுகலை மாணவன்தான், தமிழ்நாட்டின் முதுகெலும்பாக மாறி, இன்றைய ஆட்சிக்கு வித்திட்ட பேரறிஞர் அண்ணா என்பதை திமுக அரசு, தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொண்டு செல்ல நூலகத்தின் கொள்கையை வடிவமைக்க வேண்டும்.

எகிப்து மண்ணில் இன்றும் பூஜிக்கப்படும் மன்னன் பாரோ, தான் நேசித்த நூல்களை பாதுகாத்து வைத்து நூலகத்தை 'மன மருத்துவ நிலையம்' என்று பாராட்டி மகிழ்ந்தான் என்பது வரலாறு. இன்று தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான ஒன்று, நூலகம் மூலம் மன சிகிச்சை அளிக்கப்படுவதே. அந்த உயரிய நோக்கத்துக்காக நூலகக் கொள்கை விரிவுபடுத்தப்பட வேண்டும்.

'நல்ல புத்தகங்கள் நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உண்டாக்கும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்' என்ற இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாமின் கனவு மெய்ப்பட, அவர் இந்தியாவின் எதிர்காலமாக கருதி பள்ளிகளுக்குச் சென்று உற்சாகமூட்டிய மாணவ, மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்க, நூலகத்தின் பயன்பாட்டுக் கொள்கையை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் செயலாக்கத் தொடங்கினால்,

தமிழ்நாட்டின் வளமான எதிர்காலம் நிச்சயம் வளம் பெறும்!

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

18 Aug-2021

மோடியின் செல்வாக்கு ஓராண்டில் 42% சரிந்தது

நாட்டிலேயே மிகவும் பிரபலமான முதல்வர் மு.க.ஸ்டாலின்

ஆங்கில வார இதழ் கருத்துக் கணிப்பில் தகவல்

புதுடெல்லி, ஆக. 18: பிரதமர் மோடியின் செல்வாக்கு கடந்த ஓராண்டில் 42 சதவீதம் சரிந்துள்ளது. அதேநேரம், நாட்டிலேயே மிகவும் பிரபலமான முதல்வர்கள் பட்டியலில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முதலிடம் பெற்றுள்ளதாக ஆங்கில வார இதழ் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இந்தியா டுடே' ஆங்கில வார இதழ் சார்பில் 'நாட்டின் மனநிலை' என்ற தலைப்பில் மக்களிடம் கருத்து கணிப்பு நடத்தப்பட்டது. அதன்படி, நாட்டின் அடுத்த பிரதமராக மோடிக்கு 24 சதவீதம் பேர் (ஆகஸ்ட்) ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால், கடந்தாண்டு 66 சதவீதம் வரை (கடந்தாண்டு ஆகஸ்ட்) மோடிக்கு ஆதரவு இருந்தது. கிட்டதட்ட 42 சதவீதம் அளவிற்கு ஆதரவு விகிதம் சரிந்துள்ளது. தற்போது மோடியின் செல்வாக்கு சரிந்ததற்கு காரணம், கொரோனா இரண்டாவது அலையை கையாண்ட விதம் மற்றும் பொருளாதார பிரச்னைகள் என குறிப்பிடப்பட்டுள்ளன.

அடுத்த பிரதமருக்கான இரண்டாவது தேர்வாக உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கு 11 சதவீதம் பேர் (கடந்தாண்டு 3 சதவீதம்) ஆதரவு அளித்துள்ளனர். அடுத்த பிரதமருக்கான வாய்ப்பை யோகி ஆதித்ய நாத் அல்லது அமித் ஷாவுக்கு பாஜக தலைமை வழங்க வாய்ப்புள்ளது என்றும் கூறியுள்ளனர். மூன்றாவதாக, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு 10 சதவீதம் (கடந்தாண்டு 8 சதவீதம்) ஆதரவு அதிகரித்துள்ளது. மாநில அளவிலான சிறந்த முதல்வர்கள் தரவரிசை பட்டியலில் திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் 42 சதவீத வாக்குகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

கடந்த 100 நாட்களில் கொரோனாவை கையாண்ட விதம், மரணத்தை குறைத்தது, மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் அதேநேரத்தில் நிதி சுமையை சீரமைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் என அனைத்து தரப்பினரிடமும் ஆதரவு பெருகுகிறது. நிர்வாகமும் செம்மையாகவும், திறமையாகவும் கையாளப்பட்டு வருகிறது. இதனால் நாட்டிலேயே முதல் இடத்தை மு.க.ஸ்டாலின் பிடித்துள்ளார். 2வது இடத்தில் உள்ள ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கை விட அதற்கடுத்த 4 சதவீதம் அதிகம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மு.க.ஸ்டாலினுக்குப் பிறகு 2வது இடத்தில் ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் (38%), அதற்கு அடுத்த இடங்களில் கேரளா முதல்வர் பினராயி விஜயன் (35%), மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே (31%), மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி (30%), அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா (29), உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் (29%), ராஜஸ்தான் முதல்வர் அசோக்கெலாட் (22%), டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் (22%), ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் (19%), சட்டீஸ்கர் முதல்வர் பூபேஸ் பாகல் (19%) என்ற அளவில் முன்னிலையில் உள்ளனர்.

இவர்களில் ஹிமந்தா பிஸ்வா சர்மா மற்றும் யோகி ஆதித்யநாத் ஆகிய பாஜக முதல்வர்கள் முதல் 10 இடங்களில் உள்ளனர். மற்ற மாநில பாஜக முதல்வர்கள் 10 இடங்களுக்குள் இல்லை. பணவீக்கம் மற்றும் வேலையின்மை போன்ற பிரச்னைகளுக்கு மத்தியில், நாட்டின் பொருளாதாரம் குறித்து 32 சதவீத மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். மோடி பிரதமரானதற்கு பின் தங்களது பொருளாதார நிலைமை மேம்பட்டுள்ளதாக 28 சதவீம் பேர் மட்டுமே தெரிவித்துள்ளனர். கிட்டதிட்ட 60 சதவீதம் பேர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கொரோனா குறித்த கேள்விகளில் கிட்டதட்ட 71 சதவீதம் பேர், கொரோனா புள்ளி விபரங்களை அரசு மறைத்துள்ளதாக கூறியுள்ளனர். மேலும், இரண்டாவது அலை பரவுவதற்கு காரணம் பெரிய கூட்டங்கள் தான் காரணம் என்று 27 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். இரண்டாவது அலைக்கு காரணம் மாநில அரசுகள் தான் என்று 10 சதவீதம் பேரும், 13 சதவீதம் பேர் ஒன்றிய அரசே காரணம் என்று குற்றம் சாட்டுகின்றனர். ஆனால், 44 சதவீதம் பேர் ஒன்றிய, மாநில அரசுகளை குற்றம்சாட்டி உள்ளதாக கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

THE TIMES OF INDIA

18 Aug-2021

CM's Appointment Of Priests From All Communities A Triumph Of Dravidian Movement

State temples open up by shutting door on caste bias

N Ravikumar

When Tamil Nadu chief minister M K Stalin distributed the appointment orders for priests in the state temples, a day before Independence Day, it was described as the fulfilment of more than an eight-decade dream of Dravidian movement's founder EVR Periyar, who raised the demand in his daily 'Kudiarasu' on August 8, 1937. The move evoked widespread celebrations among Periyarists as it was considered a much awaited legislation to free Hindu temples from brahmin domination, an objective of the Dravidian movement.

Paradoxically, the move fulfils the principles of Hindu saints like Sri Ramanuja Acharya and Swami Vivekananda who also wanted to ensure temple worship for all communities. This also removes a major ground cited for conversion from Hinduism

AFTER KERALA, TAMIL NADU HAS BECOME THE SECOND STATE TO IMPLEMENT SUCH A REFORM

to other religions like Christianity and Islam which allows people from all communities practising the faith to become priests.

The government's step does not indicate a change or deviation of existing religious practice, but only a restoration of tradition, said Saivaite scholar M P Sathyavel Muruganar. The practice of nominating only brahmins as priests was imposed by the Vijaynagar emperors, who captured Tamil Nadu in the 16th century. There was no such discrimination before he asserted, and denied that there was any 'agama' stating that brahmins alone could be made temple priests. "Anyone who attains 'theetchai' from a Sivacharya could be a priest and caste is not a qualification," he said. Citing an example from Thiruvilaiyadarpuranam, a much revered Saivaite work narrating the history of 63 revered saints of Saivaite faith, he said "Appoodhi adigal, a Sivacharya by birth was given 'theetchai' by Saint Thirunavukkarasar, belonging to the Saiva Velalar community".

The classical Sangam-age poems describe the priest in Muruga temples performing a ritual called 'Velan Veriyaattam'. The priest performed 'mari aruththal' (goat sacrifice) and 'kuruthi thooval' (sprinkle its blood). The non-vegetarian priest of those days bear no resemblance to the brahmin priests of the six abodes of the same deity in Tamil Nadu.

The first attempt to appoint temple priests from all castes was made in 1970 by chief minister M Karunanidhi, but it fell through following a Supreme Court verdict. But, an apex court judgment, by a bench comprising Justice Ranjan Gogoi and Justice N V Ramana in 2015, gave a new lease of life to the much awaited temple reform when it observed that inclusion or exclusion as per the 'agama shastras' should not be based on the criteria of caste, birth or any other Constitutionally unacceptable barometers.

Following the verdict, the Kerala government overtook the Tamil Nadu government in appointing priests from all castes including dalits. Tamil Nadu becomes the second state to implement the reform, but this progressive legislation has been challenged in the Madras high court on the basis that appointment of priests should be done only on the basis of rules in the agama governing the temples. Advocate C Raju differs, he says only rituals can be governed by agama rules. "The appointment of priests by the government must be based on the law which ensures equality and there can be no discrimination based on caste or birth," he said.

The DMK government's Archaka Act, is a queer case of rationalists fulfilling the teachings of a revered Hindu saint Ramanuja, who offered 'theetchai' to all communities. Not a single political party including the major opposition AIADMK had opposed the move. It was the AIADMK founder M G Ramachandran, who appointed the Maharajan commission, which recommended that people from all castes be appointed as archakas. The BJP, too, welcomed the appointment of trained priests to the temples.

However, a section of priests had approached the Madras high court. Reacting to the opposition, Kolathur Mani, founder of the Dravidar Viduthalai Kazhagam said, "Aagamas bar 'smarthas' from entering some of the famous temples like Nellaiappar temple, but they are working as priests in some of the temples, which bar their entry."

The opposition to reforms in Hinduism must have been more intense during the times of Vivekananda since he had said, "Fleshless and bloodless skeletons of the dead body of past India, ... on your bony fingers are some priceless rings of jewel, treasured up by your ancestors, and within the embrace of your stinking corpses are preserved a good many ancient treasure-chests. Up to now you have not had the opportunity to hand them over. Skeletons of the past, there, before you, are your successors, the India that is to be. Throw those treasure-chests of yours and those jewelled rings among them .... No sooner will you disappear than you will hear the inaugural shout of Renaissant India."

(The writer is a freelance journalist)

Email your feedback to southpole.toi@timesgroup.com



LONG WAIT FOR EQUALITY

August 8, 1934 | E V Ramasamy Periyar as part of the Self-Respect movement calls for appointment of temple priests from all communities

1969 | As Dravidar Kazhagam leader Periyar announced a protest for temple priest appointments from all communities

1970 | M.Karunanidhi amended the Tamil Nadu Hindu Religious Endowments Act to abolish the concept of hereditary appointments for priests (archakas) in temples. He enacts a law to appointment temple priests from all communities

1972 | Supreme Court delivers verdict against the implementation of the legislation

1982 | CM M G Ramachandran constitutes Maharajan committee to study temple reforms

2006 | Karunanidhi passes a GO to form priest training schools and appoint trained candidates from all castes as priests; Supreme Court orders stay on the legislation

December 2016 | Supreme Court delivers land mark judgment saying temple priest appointments cannot be based on caste or birth

2017 | Based on Supreme Court judgment, Kerala government appoints 62 temple priests from all communities

August 14, 2021 | CM M K Stalin distributes orders for temple priest appointment to 58 people including dalits and backward classes

நக்கீரன்

18 Aug-2021

அனைத்து சாதியினரும் அர்ச்சகர்!

ஸ்டாலின் அரசின் செஞ்சுரி நாள் சிக்ஸர்!

கடவுளின் கருவறையிலேயே சாதி ஏற்றத்தாழ்வு கடைப்பிடிக்கப்படும் வழக்கத்தைத் தகர்த்து, அனைத்து சாதியினரும் அர்ச்சகர்களாக கருவறைக்குள் போகும் உரிமையை பெறவேண்டும் எனப் போராடியவர் பெரியார். அவர் இருக்கும்போதே அதற்கான சட்டத்தைக் கொண்டுவந்தார் அப்போதைய முதல்வர் கலைஞர். ஆனால், நீதிமன்றத் தடைகளால் அது நிறைவேறவில்லை. 'இது என் நெஞ்சில் குத்திய முள்ளாக இருக்கிறது' என்ற பெரியார் 1973-ல் மறைந்தார்.

அந்த முள்ளை எடுப்பதற்காக 2006-ல் முதல்வரான கலைஞர், நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் குழு அமைத்து, அதன் அறிக்கைப்படி, 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என்கிற அரசாணை வெளியிட்டு அதனை சட்டமாக்கினார். சைவ-வைணவ ஆகம முறைகளைக் கற்றுத் தருவதற்காக 6 இடங்களில் பயிற்சி மையங்கள் 2007 மே 11-ந் தேதி தொடங்கப்பட்டன. பல சாதிகளைச் சேர்ந்த 240 இளைஞர்கள் ஆர்வமாக சேர்ந்து படித்தனர். ஆகமங்கள் பயிற்றுவிக்கப்பட்டு எழுத்துத்தேர்வு, செயல்முறை தேர்வு நடந்து அதில் 206 பேர் தேர்ச்சி பெற்றபின் கருவறைக்குள் சென்று பூஜை செய்ய தீட்சை தந்தனர்.

2007-ஆம் ஆண்டு அனைத்து சாதியினருக்கான சட்டம், அரசாணையை எதிர்த்து மதுரை 'ஆதி சைவ சிவாச்சாரியார்கள் சங்கம்' உச்சநீதிமன்றத்தில் இடைக்காலத் தடை வாங்கியதால், பயிற்சி பெற்றவர்களை அர்ச்சகராக்க முடியவில்லை. 2015 டிசம்பரில் வழங்கப்பட்ட தீர்ப்பில், சில குழப்பங்கள் இருந்தாலும், அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் வாய்ப்பு

கபாலீஸ்வரர் கோயில் விழாவில்...

நக்கீரன்
18 Aug-2021

கிடைத்தது. ஜெயலலிதா அரசு அதைக் கண்டு கொள்ளவில்லை. அவர் மறைவுக்குப் பின் 2018-ஆம் ஆண்டு, மதுரை மீனாட்சியம்மன் கோவில் நிர்வாகத்துக்குட்பட்ட ஒரு கோயிலில் மாரிச்சாமி என்கிற அர்ச்சகர் பயிற்சிபெற்ற மாணவரையும், 2020-ஆம் ஆண்டு மதுரை நாகமலை பிள்ளையார் கோயிலில் தியாகராஜன் என்ற மாணவரையும் பெயரளவுக்கு பணி நியமனம் செய்தது எடப்பாடி பழனிசாமியின் அ.தி.மு.க. அரசாங்கம்.

அதேநேரத்தில், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஆகமப் பயிற்சி முடித்த அனைத்து சாதியினரும் அர்ச்சகராக்கப்படுவார்கள்' என்று வாக்குறுதி தந்தார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின். பதவிக்கு வந்து 100-வது நாளான ஆகஸ்ட் 14-ஆம் தேதியன்று, அர்ச்சர்கள், ஓதுவார்கள், வாத்தியங்களை இசைப்போர், மடப்பள்ளி, மற்ற பணியென 208 பேருக்கு பணி ஆணை வழங்கினார் ஸ்டாலின். சென்னை கபாலீஸ்வரர் கோயில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், திருப்போரூர் சாந்தலிங்க அடிகளார் கலந்துகொண்டனர்.

அரங்கநாதன்

முதல் பெண் ஓதுவார் சிவசுஹாஞ்சனா

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கிற அரசாணைப்படி, பட்டியலினத்தவர் 5 பேர், பிற்படுத்தப்பட்டோர் 12 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவை சேர்ந்த 6 பேர், பொதுப்பிரிவில் ஒருவர் என இங்கும் சமூகநீதி அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 58 பேரில் 24 அர்ச்சகர்கள் கலைஞர் அரசு கொண்டுவந்த ஆகமப்பயிற்சி பள்ளியில் பயின்றவர்கள். மீதி 34 பேர், தனியார் பயிற்சி பள்ளியில் பயின்றவர்கள். நியமிக்கப்பட்ட 19 ஓதுவார்களில் தமிழ்நாட்டின் முதல் பெண் ஓதுவார் சிவ.சுஹாஞ்சனா என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்சியின் செஞ்சுரி நாளில் ஸ்டாலின் அரசு அடித்த சிக்ஸராக இது அமைந்தது.

இதுகுறித்து அனைத்து சாதியினர் அர்ச்சகர் பயிற்சிபெற்ற மாணவர் சங்க தலைவரான அரங்கநாதனிடம் பேசியபோது, "தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதுபோல் கோயில்களில் பணி வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளார் முதலமைச்சர். பெரியாரின் இதயத்தில் இருந்த முள்ளை நீக்கி அவரின் துயரத்தைப் போக்கியுள்ளார். எனினும் இதனை முழுமையாக கொண்டாடவிடுவார்களா என்கிற ஏக்கமும் உள்ளது. காரணம், ஆகம விதிகள் அனைத்தும் அறிந்தவர்கள் என்பதாலே, பயிற்சிப் பள்ளியில் படித்தவர்களும் கோயில்களில் அர்ச்சகர் பணிக்கு விண்ணப்பிக்கலாம் என ஒவ்வொரு கோயில் சார்பிலும் விளம்பரம் தரப்பட்டது. சேலம், ஆத்தூர், திருப்பூர், திருச்செந்தூர், மதுரை, திருச்சி போன்ற கோயில்களில் அர்ச்சகர் பணிக்கு விண்ணப்பிக்கச் சென்ற பிராமணர் அல்லாத சாதியினரை அந்த கோயிலில் உள்ள பிராமண சாதியை சேர்ந்த அர்ச்சகர்கள் மிரட்டி துரத்தினர். போராடித்தான் விண்ணப்பிக்கச் செய்தோம். விளம்பரங்கள் வெளி வந்தபோதே ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, 'இருக்கும் நிலையே தொடரவேண்டும்' என்கிற உத்தரவு வாங்கி வைத்துள்ளார். அதை யெல்லாம் கடந்துதான் பணி நியமன ஆணை வழங்கியுள்ளார் முதலமைச்சர். எங்கள் கோரிக்கை யின்படி, ஆகம விதிகள் கடைப்பிடிக்கப்படும் நாகநாதசுவாமி கோயில், குமாரவயலூர் சுப்பிரமணியசாமி, மதுரை நாச்சடை கோயில்களிலும் பிற சாதியினரை அர்ச்சகராக்கி ஆணை வழங்கியுள்ளது அரசு. தடைகளையும் இடையூறுகளையும் முதல்வர் வெல்வார் என்கிற நம்பிக்கையுள்ளது" என்றார்.

'அர்ச்சகர் பயிற்சி பெற்றவர்களில் 35 வயதை கடந்தவர்கள் பலர் உள்ளனர். வயது தளர்வு வழங்கி அவர்களுக்கும் பணி வழங்கவேண்டும், பெண் அர்ச்சகர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்கிற வேண்டுகோள் பலதரப்பாலும் வைக்கப்படுகிறது.

பெரியாரின் நெஞ்சில் குத்திய முள்ளை கலைஞர் நீக்க முயன்று இறுதியில் மு.க.ஸ்டாலின் நீக்கி வெற்றி பெற்றுள்ளார்.

-து.ராஜா

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

19 Aug-2021

மோடிக்கும், மு.க.ஸ்டாலினுக்கும் கிடைத்த பெருமை!

"பாரத பூமி பழம்பெரும் பூமி. நீரதன் புதல்வர், இந் நினைவகற்றாதீர். பாரதநாடு பார்க்கெல்லாம் திலகம். நீரதன் புதல்வர், இந் நினைவகற்றாதீர்" என்று மகாகவி பாரதியார் பெருமைப்பட பாடிய புகழ்மிகு நாடு இந்தியா. சரித்திர காலந்தொட்டு தன்னிகரற்று விளங்கிய இந்தியாவை 190 ஆண்டுகள் ஆங்கிலேயர் ஆட்சி செய்து வந்தனர். வாரன் ஹேஸ்டிங்க்ஸ் தொடங்கி 42 கவர்னர் ஜெனரல்கள், வைஸ்ராய்கள் நாட்டை ஆண்டுக்கொண்டிருந்தனர். இந்த 190 ஆண்டுகளாக எண்ணற்ற சுதந்திர போராட்ட தியாகிகள் ரத்தம், வியர்வை சிந்தி, ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளை சந்தித்து, சிறைச்சாலைகளில் கொடுமை அனுபவித்து போராடியதின் விளைவாகத்தான் சுதந்திரம் கிடைத்தது. சும்மா கிடைத்ததல்ல இந்த சுதந்திரம்.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந்தேதி உலகமே உறங்கிக்கொண்டிருந்த நள்ளிரவில் இந்தியா மிக மகிழ்ச்சியோடு சுதந்திரத்தை பெற்றது. நாடு சுதந்திரம்

பெற்று 75 ஆண்டுகள் ஆகின்றன. 75-வது ஆண்டு விழா மகிழ்ச்சியோடு கொண்டாடப்பட்டது. இந்தியாவில் ஜனநாயக காற்று குளுமையாக வீசிக்கொண்டிருக்கிறது. டெல்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி இந்த நன்னாளில் தேசிய கொடியை ஏற்றும் பெருமையை பெற்றார். முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு சுதந்திரம் பெற்ற நாளின் நள்ளிரவில் பேசியதை குறிப்பிட்டு, புகழ்மிக்க நூற்றாண்டு கொண்டாடும் வகையில் எல்லோரும் உழைக்கவேண்டும் என்று மோடி பேசியிருக்கிறார். 'அனைவரும் ஒன்றாக இணைவோம். அனைவரும் உயர்வோம். அனைவரும் வளர்ச்சி அடைவோம். அனைவரும் முயற்சி செய்வோம்' என்று கூறியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் கோட்டை கொத்தளத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசிய கொடியை ஏற்றி வைத்திருக்கிறார். சுதந்திர தினத்தன்று தேசிய கொடியை முதல்-அமைச்சர்கள் ஏற்றும் உரிமையை பெற்றுத்தந்தது மறைந்த முதல்-அமைச்சர் கருணாநிதிதான். ஆகஸ்டு 15-ந்தேதி சுதந்திர நாளில் முதல்-அமைச்சரும், ஜனவரி 26-ந்தேதி குடியரசு தினத்தன்று கவர்னரும் கொடி ஏற்றலாம் என்ற கோரிக்கையை அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியிடம் வலியுறுத்தி, அவரையும் ஏற்றுக்கொள்ளச்செய்து, 1974-ம் ஆண்டு சுதந்திர தினம் முதல் தமிழகத்தில் மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களிலும் சுதந்திர தினத்தன்று முதல்-அமைச்சர்கள் கொடி ஏற்றும் வாய்ப்பை பெற்றுத்தந்தவர் கருணாநிதிதான் என்பது சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படத்தக்க ஒன்றாகும்.

As per an estimate, taxes of all types – the Goods & Services Tax, customs and excise duties – fetched the State about ₹1.6 lakh crore last year, about ₹3 lakh crore higher than the previous year. The value of subsidies on products such as food, fertiliser and petroleum, about ₹20,590 crore, was approximately ₹2,000 crore lower than that of 2019-20.

Growth chart

A look at the southern region's Gross State Domestic Product and rate of growth over the years



GSDP* - ₹ in crore

State/Union Territory	2016-17	2017-18	2018-19	2019-20	2020-21
Tamil Nadu	10,36,762 (7.15%)	11,25,793 (8.59%)	12,04,667 (7.01%)	12,78,559 (6.13%)	12,96,659 (1.42%)
Andhra Pradesh	5,40,212 (8.34%)	5,94,737 (10.09%)	6,23,732 (4.88%)	6,68,848 (7.23%)	6,51,624 (-2.58%)
Karnataka	9,41,774 (13.29%)	10,22,862 (8.61%)	10,89,271 (6.49%)	11,43,781 (5%)	11,13,818 (-2.62%)
Kerala	4,85,302 (7.56%)	5,16,190 (6.36%)	5,49,673 (6.49%)	5,68,636 (3.45%)	N.A
Puducherry	20,478 (7.44%)	22,308 (8.94%)	26,114 (17.06%)	26,202 (0.34%)	25,297 (-3.46%)
Telangana	5,07,946 (9.34%)	5,57,410 (9.74%)	6,12,148 (9.82%)	6,48,595 (5.95%)	6,44,599 (-0.62%)

* GSDP at constant (2011-12) prices; Base Year: 2011-12 | Figures given in brackets pertain to growth rate | N.A. - Not available

	2016-17	2017-18	2018-19	2019-20	2020-21
All-India**	1,23,08,193 (8.3%)	1,31,44,582 (6.8%)	1,40,03,316 (6.5%)	1,45,69,268 (4%)	1,35,12,740 (-7.3%)

**The all-India figures are called Gross Domestic Product (GDP) | The figures for 2018-19 pertain to Revised Estimates; 2019-20 Quick Estimates; and 2020-21 Advance Estimates

High & low performers in Tamil Nadu's economy during 2020-21***

Segment/Sector	Growth rate (%)
Agriculture	6.89
Livestock	5.34
Fisheries	4.56
PRIMARY	**4.84**
Manufacturing	0.45
Electricity, gas, water supply & other services	-2.34
Construction	0.37
SECONDARY	**0.36**
Trade, repair service, hotels & restaurants	-3.47
Transport, storage & communications	-2.31
Real estate, ownership of dwelling and business services	0.62
Financial services	10.83
SERVICES	**1.11**

***At constant (2011-12) prices
Note: Figures are based on Advance Estimates

தினமலர்
உண்மையின் உரைகல்
25 Aug-2021

நிறைவேறியது நீண்ட கால கோரிக்கை

தாம்பரம் பொதுமக்கள் மகிழ்ச்சி

தாம்பரம், ஆக. 25– தாம்பரம், அதை சுற்றியுள்ள பல்வேறு நிலை உள்ளாட்சிகளை ஒருங்கிணைத்து, புதிய மாநகராட்சி உருவாக்கப்படும் என, தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதன் மூலம், தாம்பரம் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் வசிக்கும் மக்களின், நீண்ட கால கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதால், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமான, சி.எம்.டி.ஏ., எல்லைக்குள், சென்னை மாநகராட்சியை தவிர்த்து, பிற பகுதிகள், வெவ்வேறு நிலை உள்ளாட்சிகளாக இருப்பதால், வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றுவதில், சிக்கல் உள்ளது.

புறநகர் பகுதிகளை ஒருங்கிணைத்து, தாம்பரம், அம்பத்துார் மாநகராட்சிகளை உருவாக்க, சி.எம்.டி.ஏ., துணை தலைவர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர், வருவாய் நிர்வாகத்துறையின் சிறப்பு ஆணையர் தலைமையில், சிறப்புக் குழுவை, தமிழக அரசு, 2007ல் அமைத்தது.

அக்குழு வாயிலாக, பொதுமக்கள் கருத்துகளை பெற்று, மூன்று வகையான மாதிரி திட்டங்களை, சி.எம்.டி.ஏ., உருவாக்கியது.

அதன்படி, 'மாநகராட்சியின் எல்லையை விரிவாக்குவது, தாம்பரம், ஆவடி அல்லது அம்பத்துாரை தலைமையிடமாக கொண்டு, மாநகராட்சி உருவாக்குவது' என, முடிவு செய்யப்பட்டது.

இதன் அடிப்படையில், சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டபோது, அம்பத்துார், அதனுடன் இணைக்கப்பட்டது; 2017ல் ஆவடி மற்றும் தாம்பரத்தை மாநகராட்சியாக அறிவிப்பதற்கான, நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்நிலையில், 2019ல் ஆவடி மாநகராட்சியாக, தரம் உயர்த்தப்பட்டது.

எனினும், தாம்பரம் மாநகராட்சி குறித்த அறிவிப்பு ஏதும் வெளியாகாததால், பொதுமக்கள் அதிருப்தி அடைந்தனர். சட்டசபை தேர்தல் முடிந்து, தமிழகத்தில் புதிய ஆட்சி மலர்ந்தது.

தி.மு.க., தலைமையில் ஆட்சி அமைந்து, 100 நாட்கள் கடந்த நிலையில், தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுவதாக நேற்று அறிவிப்பு வெளியானது.

தாம்பரம் மற்றும் அதை சுற்றியுள்ள பல்லாவரம், பம்மல், அனகாபுத்துார், செம்பாக்கம் நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் இணைக்கப்பட்டு, புதிய மாநகராட்சி உருவாக்கப்படும் என, தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது, அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அரசின் இந்த அறிவிப்புக்கு, பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

செம்பாக்கம் நகராட்சியில் உள்ள, அனைத்து நலச்சங்கங்கள் சார்பிலும், அரசின் அறிவிப்பை வரவேற்கிறோம். தாம்பரம் மாநகராட்சியானதால், சாலை, தெருவிளக்கு உட்பட, அடிப்படை வசதிகள் அனைத்தும் பூர்த்தியாகும். தாம்பரத்தை தலைமையிடமாக வைத்து, புதிய காவல் மாவட்டம் உருவாக்க வேண்டும்.

அதில், பரங்கிமலை காவல் மாவட்டத்தில் செயல்படும் புறநகர் காவல் நிலையங்களை இணைக்க வேண்டும். அதேபோல், சேலையூர் காவல் நிலையத்தை பிரித்து, மாடம்பாக்கத்தில், புதிய காவல் நிலையம் உருவாக்க வேண்டும்.

வெ.சீதாராமன், 66,
சத்திய சாய் நகர், ராஜகீழ்ப்பாக்கம், செம்பாக்கம்.

தாம்பரம் மாநகராட்சியாக தரம் உயர்ந்தது, 13 ஆண்டு கால போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி. இதன் மூலம், பாதாள சாக்கடை திட்டம் உட்பட, அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் எளிதில் கிடைக்கும். இந்த வசதிகளுக்காக, ஒவ்வொரு முறை அரசிடம் கோரிக்கை வைக்கும்போதெல்லாம், அந்தந்த உள்ளாட்சிகளுக்கேற்ப, நிதி மட்டும் ஒதுக்கி வரப்பட்டதால், பல இடங்களில், மக்களின் தேவைகள், பூர்த்தியாகவில்லை. தற்போதைய, அறிவிப்பு மக்களுக்கு, பெரும் நிம்மதியை அளிக்கும்.

டி.தாமோதரன், 50,
காப்பாளர், முடிச்சூர் குடியிருப்போர் நலச்சங்க கூட்டமைப்பு.

சிட்லபாக்கத்தில், போதிய குடிநீர் வசதியின்றி, இப்பகுதி மக்கள் தவித்து வருகின்றனர். இப்பிரச்னைக்கு, இன்று வரை, தீர்வு காணப்படவில்லை. தற்போதைய, மாநகராட்சி அறிவிப்பால், சிட்லபாக்கம் பகுதி மக்கள், தங்களுக்கான பாதாள சாக்கடை திட்டம், தரமான குடிநீர் வசதி உட்பட, அனைத்து தேவைகளும், கிடைக்கும் என, நம்பிக்கை அடைந்துள்ளனர்.

ஜெ.சுனில்ஜெயராம், 47,
சிட்லபாக்கம், சமூக ஆர்வலர்.

கலைஞரின் புகழ் நிலைக்கும்

80 ஆண்டு பொதுவாழ்க்கையில், 60 ஆண்டுகள் சட்ட மன்ற உறுப்பினர், சட்டமன்றத்திற்கு போட்டியிட்ட 13 தேர்தலிலும் வெற்றிவாகை சூடிய ஒரே தலைவர், 50 ஆண்டு காலம் மாபெரும் அரசியல் இயக்கத்தை கட்டிக்காத்த தனிப்பெரும் தலைவர், தமிழகத்தின் முதல்வராக 5 முறை ஆட்சி செய்த வித்தகர், முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூ.39 கோடி மதிப்பீட்டில் அண்ணா நினைவிட வளாகத்தில் நினைவிடம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை 110 வது விதியின் கீழ் தனது முதல் அறிவிப்பாக வெளியிட்டு பெருமை சேர்த்து இருக்கிறார் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்.

இதைவிட பெரும் பேறு என்ன வேண்டும். வாழ்நாள் முழுவதும் தமிழகத்தின் நலனுக்காக உழைத்தவர். தமிழகத்தின் முதல் உரிமைக்குரல். தமிழர்களுக்கு, தமிழுக்கு ஏதாவது ஒரு குறை என்றால் என்றும், எப்போதும், முதல் குரல் அவர் இருக்கும் வரை கலைஞருடையதாகத்தான் இருந்தது. மிகப்பெரிய போராளி.

திருக்குவளையில் எளிய குடும்பத்தில் பிறந்து தனது போராட்டமான வாழ்க்கை மூலம் தனக்கான இடத்தை, அங்கீகாரத்தை பெற்றவர். கடைசி வரை அவர் எளிய மக்கள் உரிமை பெற போராடியவர். அவர்களுக்காக உழைத்தவர். திட்டங்களை தீட்டியவர். தான் ஆட்சி கட்டிலில் இருந்தாலும் சரி, இல்லை என்றாலும் சரி தமிழக மக்களின் நலனுக்கான தனது போராட்டத்தை அவர் நிறுத்திக்கொண்டதும் இல்லை.

நிரந்தர ஓய்வுக்கு செல்லும் வரை தனது போராட்ட வாழ்வில் இருந்து அவர் ஓய்வு எடுத்துக்கொண்டதும் இல்லை. ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான் என்று தனது நினைவிடத்தில் எழுதச்சொன்னவர், தனது மூச்சுக்காற்றில் எப்போதும் கலந்து இருந்த அண்ணாவின் அருகில் நிரந்தர ஓய்வு எடுப்பதற்கான இடத்தையும் கூட போராடித்தான் பெற்றார் என்றால் கலைஞரின் போராட்ட வாழ்வின் பெருமையின் புகழ் வெளிச்சம் அனைவருக்கும் தெரியும்.

கலைஞர் ஒரு வரலாறு. எந்தநாளும் நிலைத்து நிற்கும் அவரது புகழ். இனிவரும் சந்ததிகள் கூட அவரது எழுச்சி மிக்க, பெருமை மிக்க வாழ்வின் வெற்றியை அறிந்து கொள்ள வேண்டும். அரசியல் எல்லைகளை கடந்து என்றும், எப்போதும் அனைத்து கட்சியினரும் மதிக்கத்தக்க பண்பாளர். மாற்று கட்சியினர் கருத்தையும் செயல்படுத்தும் நாணயம் மிக்கவர். துடிப்பான பத்திரிகையாளர். எழுத்தும், அவரும் என்றும் சோர்ந்தது இல்லை. பத்திரிகை ஆசிரியர்களுடன் எப்போதும் தொடர்பில் இருப்பவர். நிறையாக இருந்தாலும், குறையாக இருந்தாலும் அவர்களிடம் எடுத்துச்சொல்லும் உரிமை மிக்கவர்.

கலைஞர் இல்லாமல் தமிழக அரசியல் நகர்ந்தது இல்லை. இவர் இன்று இல்லை. ஆனாலும் தமிழக அரசியலின் இயக்கமாக இருப்பவர் கலைஞர். சூரியனின் ஒளியை யாராலும் மறைக்க முடியாது. அத்தகைய புகழ் மிக்கவருக்கு, பெருமை மிக்கவருக்கு நினைவிடம் அமைக்கும் வாய்ப்பு, பேறு, அவரது மகனும், முதல்வருமான மு.க.ஸ்டாலினுக்கு வாய்த்து இருக்கிறது. இது எத்தனை பெருமை.

குமுதம்

25 Aug-2021

நம்பிக்கையும் பொறுப்பும்!

பெரும் சுமையைப் போன்று கடன்கள் அழுத்திக் கொண்டிருக்கும் நிலையிலும், புதிய வரிகள் இல்லாமல், மக்கள் எதிர்பார்த்த திட்டங்களுடன் வெளிவந்திருக்கிறது தமிழக அரசின் பட்ஜெட்.

நவீன காலத்திற்கேற்றபடி, காகிதத்தில் பட்ஜெட் உரை வழங்கப்படாமல், கணினி மயமாக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க மாற்றம்.

பெட்ரோல் விலை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. கொரோனா நிவாரணத் தொகுப்புக்கு 9,370 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2,756 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட, இல்லத்தரசிகளுக்கான மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த, தகுதிவாய்ந்த குடும்பங்கள் கண்டறியப்படும் என்று அறிவித்திருப்பது, நம்பிக்கையை உண்டாக்குகிறது.

லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் தமிழகம் எங்கும் டைடல் பூங்காக்களும், சிப்காட் தொழில் பூங்காக்களும் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதும், தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை அமைக்கப்படுவதும் முன்னேற்றத்திற்கான அறிகுறிகள்.

கொரோனா பலருடைய பொருளாதாரத்தைச் சரித்திருக்கும் நிலையில், தமிழக மக்கள் அரசிடம் கூடுதல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அரசின் பொறுப்பும் அதிகரித்திருக்கிறது.

நக்கீரன்

25 Aug-2021

நக்கீரன் செய்தி



முதல்வர் அளித்த முதல்கட்ட உதவி!

–நக்கீரன் செய்தி எதிரொலி!



முதல்வர் மு.க.ஸ்டாலின்

அமைச்சர் தங்கம் தென்னரசு

கடந்த (ஆகஸ்ட் 18-20) இதழில் 'தமிழக முதல்வரின் பார்வைக்காக காத்திருக்கும் திராவிடப் பல்கலைக்கழகம்!' என்கிற தலைப்பில் ஆந்திரா, குப்பத்தில் உள்ள திராவிட பல்கலைக்கழகத்தின் தேவைகள் குறித்த செய்தியை வெளியிட்டிருந்தோம். அந்த இதழ் வெளிவந்த அன்றைய தினமே (ஆகஸ்ட் 17-ஆம் தேதி) காலை தமிழ் வளர்ச்சித்துறையின் செயலாளர் உடனடியாக திராவிட பல்கலைகழக துணைவேந்தர் தும்மல ராமகிருஷ்ணாவிடம் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய பல்கலைக்கழக அதிகாரிகள், "தமிழ்நாடு தலைமைச் செயலகத்திலிருந்து பேசுகிறார்கள் என்றதும் ஆச்சர்யம். உடனடியாக என்ன தேவை எனக் கேட்டார்கள். அதன்படி நூலகத்துக்குத் தேவையான புத்தகங்கள் வழங்க கோரிக்கை வைத்தோம். அதுபோல, மொழி மாற்ற அலுவலர் நியமனத்துக்கு தேவையான நிதியுதவி அளிக்கிறோம் என்றுகூறி அதற்கான அறிக்கையைக் கேட்டார்கள். துணைவேந்தர், பல்கலைக்கழக பதிவாளர் ஆகியோர் உடனடியாக கூடிப்பேசி அன்று மாலையே தயார்செய்து அனுப்பி வைத்தனர்.

தமிழ் வளர்ச்சித் துறை செயலாளர் பேசியதும் உடனடியாக தமிழ்த்துறை தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர்களை அழைத்த துணைவேந்தர் தும்மல ராமகிருஷ்ணா, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நன்றாகச் செயல்படுகிறார் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் புத்தகத்தில் வந்த ஒரு செய்தியைப் பார்த்தவுடனே நடவடிக்கை எடுத்தது ஆச்சர்யமாக இருக்கிறது துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவின் வேகமும் வியப்பூட்டுகிறது எனப் பாராட்டினார்" என்றனர்.

பல்கலைக்கழகத்துக்குத் தேவையானதைப் பெற ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தி தமிழக முதல்வரிடம் தேவையானதைப் பெற திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசின் வேகமான செயல்பாட்டுக்கு திராவிட பல்கலைக்கழக மாணவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

–து.ராஜா

நக்கீரன்

25 Aug-2021

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! பெயரல்ல... செயல்!

உதயநிதி ட்வீட்

திராவிட இயக்கம் பற்றியும் அதன் தலைவர்கள் பற்றியும் தொடர்ந்து புத்தகங்களை வெளியிட்டு வரும் நக்கீரன் பப்ளிகேஷன்ஸின் புதிய வெளியீடு இது.

தனது ஆட்சிக்காலத்தின் முதல் 100 நாட்களில் காட்டிய செயல்திறத்தால் மக்களின் நம்பிக்கைக்குரியவராய்-இந்திய அளவில் கவனம் பெற்றவராய்த் திகழும் முதல்வர் மு.க.ஸ்டாலினின் உழைப்பு-பொறுமை-அரசியல் பணிகள்-தலைமைப் பண்பு பற்றிய நிகழ்வுகளின் தொகுப்பு. இதனை எழுதியிருப்பவர் நக்கீரன் பொறுப்பாசிரியர் கோவி.லெனின்.



புத்தகத்தின் முதல் படியை நக்கீரன் ஆசிரியரும் பொறுப்பாசிரியரும் முதல்வரை அவரது முகாம் அலுவலகத்தில் சந்தித்து வழங்கினர். மகிழ்ச்சியுடன் அதனைப் பெற்றுக்கொண்டார் முதல்வர். தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி எம்.எல்.ஏ.வுமான உதயநிதியிடமும் இந்தப் புத்தகம் வழங்கப்பட்டது.

இது குறித்து உதயநிதி தனது ஃபேஸ்புக்-ட்விட்டர் பதிவுகளில், "திராவிட இயக்கத்தின் வரலாறை, சாதனையை அதன் தேவையை தன் எழுத்தால் இளைய தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் கோவி. லெனின் அவர்கள் நம் தலைவர் பற்றி எழுதியுள்ள 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பெயர் அல்ல_ செயல்' புத்தகத்தை பெற்றுக்கொண்டேன். அண்ணனுக்கு என் அன்பும், நன்றியும்" என குறிப்பிட்டுள்ளார்.

கவனத்தை ஈர்த்திருக்கும் இந்தப் புத்தகத்தை தி.மு.க. தொண்டர்களும் பொதுமக்களும் ஆர்வத்துடன் கேட்டு வாங்குகின்றனர். கலைஞரின் மகனாக இருந்தாலும் கட்சியில் ஒரு தொண்டனைப் போல கடும் பயணம் மேற்கொண்டே முதலமைச்சர் பொறுப்புக்கு வந்திருக்கிறார் மு.க.ஸ்டாலின். அவரது

நூலின் முதல் படியை பெற்றுக்கொள்ளும் முதல்வர்

பாதை, பயணம், சவால்கள், அவற்றைக் கடந்த சாதனை, பாடுகள் ஆகியவற்றை விளக்குகிறது இந்நூல்.

தரமான தயாரிப்பாக-ஆர்ட் பேப்பரில் 16 பக்க வண்ணப் படங்களுடன் நக்கீரன் பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டுள்ள இந்தப் புத்தகத்தின் விலை ரூ.200 இந்நூலை Nakkheeran Publications, 105 Jani Jahan Khan Road, Royapettah Chennai-600 014 என்ற முகவரியில் பெறலாம். புத்தகத்தை ஆன்லைனில் ஆர்டர் செய்ய: https://bit.ly/3D4MZwM G Pay மூலமும் வாங்க முடியும். தொடர்புக்கு: -044 43993000, 9677981373

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
26 Aug-2021

State govt. publication captures greatness of Cauvery delta

Coffee-table book also highlights measures taken by the present DMK regime in the last 100-odd days in the water sector



Celebrated British engineer Sir Arthur Thomas Cotton's description of the Grand Anicut forms part of the book.

SPECIAL CORRESPONDENT
CHENNAI

Nearly 190 years ago, Sir Arthur Thomas Cotton (1803-1899), a celebrated British irrigation engineer, called the idea of building an anicut across the Cauvery "visionary."

At that time, he was toying with the proposal of building, what is now called the Upper Anicut at Mukkombu, about 18 km from Tiruchi, after studying the Grand Anicut or 'Kallanai" in Tamil, which was said to have been built by Karikala Chola in the second century CE. In an account, he made a reference to the Grand Anicut by saying how it was done by "the natives hundreds of years ago" and "with their little science and poor means".

Completed in 1836, the Upper Anicut remains a vital structure to regulate the flow of Cauvery water in the delta. This description of Cotton on the Grand Anicut, drawn from a publication authored by his daughter Lady Hope, about him, forms part of a coffee-table book brought out recently by the Water Resources Department, which has been carved out of the Public Works Department.

The publication captures measures taken by the present DMK regime in the last 100-odd days in the water sector, especially the ₹65.1 crore project of removing silt in the Cauvery delta and safeguarding the State's interests of the Cauvery water.

Quotes of Chief Minister M.K. Stalin, Water Resources Minister Duraimurugan on the role of former Chief Minister M. Karunanidhi in defending the State's position on the Cauvery water issue and an account of the execution of various projects for dams, tanks, canals and other irrigation structures during different spells of the DMK regime (1967-76, 1989-91, 1996-2001 and 2006-11) figure in the publication.

Pictures of the Big Temples in Thanjavur and Gangaikonda Cholapuram of Ariyalur district besides a bird sanctuary in Vaduvoor of Thiruvarur district make the book more colourful.

ராணி

29 Aug-2021

தலையங்கம்

சாதனைகள் தொடர வாழ்த்துகள்!

தி.மு.க. அரசு ஆட்சி அமைத்து நூறு நாட்கள் நிறைவடைந்திருக்கும் நிலையில், இந்த அரசின் சாதனைகள் என்ன என்று கேட்டால், தேர்தல் அறிக்கையில் சொன்னதைச் செயல்படுத்தி வருவதே இதன் சாதனை என்று சொல்லிவிடலாம். பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கினார்கள் என்ற அவப்பெயர் இல்லாத வகையில், நூறு நாட்களில் பல திட்டங்களை நிறைவேற்றி, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது தமிழக அரசு.

கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுக்குள் கொண்டுவரும் கடினமான பணியை முதன்மையான பணியாகக் கருதி, அதற்கு முக்கியத்துவம் கொடுத்தது பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது. அவ்வப்போது போதிய கட்டுப்பாடுகளைப் பிறப்பித்து, தேவையான தளர்வுகளை அறிவித்து, சாமானிய மக்களின் வாழ்வாதாரமும் கெடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது தி.மு.க. அரசு.

அரசுப் பேருந்துகளில் மகளிர் இலவசமாகப் பயணிக்க வழி ஏற்படுத்தியது, பொதுமக்களின் குறைகளைத் தீர்க்கும் வகையில் தனிப் பிரிவை ஏற்படுத்தியது, தமிழகத்துக்குத் தேவையான கொரோனா தடுப்பூசிகளைப் பெற முயற்சி எடுத்தது, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தியது, இந்துசமய அறநிலையத் துறையின் கீழ் வரும் கோயில்களுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு நிலங்களைக் கைப்பற்ற நடவடிக்கை எடுத்து வருவது, நிதிநிலை பட்ஜெட்டுக்கு முன்பாக வெள்ளை அறிக்கை வெளியிட்டது, விவசாயிகளின் வாழ்வு மேம்பட வேளாண்மை பட்ஜெட் அறிவித்தது என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் இந்த அரசு இன்னும் பல புதிய திட்டங்களை செயல்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே இந்த நேரத்தில் தமிழக அரசுக்கு நாம் வைக்கும் கோரிக்கை. ஆரம்பமே அமர்க்களம்தான் என்று சொல்லப்படுவது, இறுதி வரைக்கும் தொடர வேண்டும்.

நூறு நாட்களைக் கடந்த தமிழக அரசுக்கு ஒரு பூங்கொத்து!

தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலினின் 100 நாள் ஆட்சி சாதனைகள்!

கேரள தனியார் தொலைக்காட்சி விவாதத்தில் பாராட்டு.

திருவனந்தபுரம், ஆக.30–

"100 நாள் ஆட்சி சாதனையாளர் கேரள முதலமைச்சர் பினராய் விஜயன் அல்ல; தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்'' என்று கேரளாவில் தனியார் தொலைக் காட்சி விவாதத்தில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கேரள தனியார் தொலைகாட்சி விவாதத்தில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டதாவது:–

தமிழ்நாட்டில் பல்வேறு மக்கள் நலத்திட்டப் பணிகளை நிறைவேற்றி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

கேரளாவில் தனியார் தொலைக் காட்சி நடத்திய விவாதத்தின் போது, பங்கேற்பாளர் ஒருவர், 2 கோடி குடும்ப அட்டை தாரர்களுக்கு 4000 ரூபாய் நிதி உதவி, கொரோனா சிகிச்சையின் போது உயிரிழந்த முன்களப் பணியாளர்களுக்கு இழப்பீடு தொகை, பெட்ரோல் விலை குறைப்பு உள்ளிட்ட மக்கள் பயன்பெறும் திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றியிருப்பதாக பாராட்டியுள்ளார். இந்த காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

2 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4000 கொரோனா நிதி உதவி வழங்கப்பட்டது.

2 கோடி குடும்பங்களுக்கு 14 பொருட்கள் அடங்கிய சிறப்புத் தொகுப்பு பை வினி யோகிக்கப் பட்டது.

பெட்ரோல் விலை தமிழ்நாட்டில் லிட்ட ருக்கு 3 ரூபாய் குறைக்கப் பட்டது.

பெண்கள் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிக்க அனுமதி வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளும் பேருந்தில் இலவசமாக பயணிக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

கொரோனா சேவையில் மருத்துவர்களுக்கு ரூ.30,000 ஊக்கத் தொகை செவிலியர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை. இதர மருத்துவப் பணியாளர்கள் ரூ.15,000 ஊக்கத்தொகை பத்திரிகையாளர்களை முன்களப்பணியாளர்களாக அங்கீகரித்து. கொரோனாவால் உயிரிழக்கும் பத்திரிகையாளர் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் இழப்பீடு கொரோ னாவை தடுக்க போராடி உயிரிழந்த முன்களப்பணியாளர்களுக்கு ரூ.30 லட்சம் வரை நிதி உதவி கொரோனா சிகிச்சைக்காக மட்டும் ரூ.4,508 கோடி நிதி ஒதுக்கீடு.

100 நாட்களில் இவைகள் ஒரு மாநில முதலமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கைகள்.

அவர் கேரள முதல மைச்சர் பினராயி விஜயன் அல்ல, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்.

கண்ணீர் துடைக்கும் அரசு!

கடல் கடந்து வந்த ஈழத்தமிழ் மக்களின் கண்ணீர் துடைக்கும் அரசாக திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுவதைப் பார்த்து, உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்து வருகிறார்கள்!

தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும் வாழ்க்கைக் கும் உறுதியளிக்கும் உன்னதமான திட்டங்களை கடந்த 27 ஆம் தேதி அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். ரூ.318 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள் முகாம்களில் தங்கி இருக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு நிறைவேற்றப்பட இருக்கின்றன. இதில் மிக முக்கியமானது; அவர்களுக் காக ரூ.231 கோடி செலவில் புதிதாக வீடுகள் கட்டித்தரப்பட உள்ளது என்பதுதான்.

வாழ வழியின்றி விரட்டி அடிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆறுதலாக இருந்தது தமிழ்நாடு. 1983 முதல் ஈழத்தில் இருந்து தமிழ் மக்கள் இங்கு வருவது தொடங்கியது. இவர்களுக்காக முகாம்கள் அமைக்கப்பட்டன. சிலர் வெளியிலும் தங்கி இருந்தார்கள். இந்த முகாம்களின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை உணர்ந்த அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், 1997 ஆம் ஆண்டு ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொடுத்தார்கள்.

1991–96 காலக்கட்டத்தில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா, ஈழ மக்கள் அனைவரையும் தீவிரவாதிகள் போலப் பார்த்து அவர்களுக்கான சலுகைகள், உரிமைகளைப் பறித்தார். அவர்களது கல்வி உரிமைகளைக் கூடப் பறித்தார். அதனை மனதில் வைத்தே 1997இல் முதல்வர் கலைஞர், முகாம்வாழ் தமிழர்க்கு ஏராளமான திட்டங்களைத் தீட்டினார். அதில் ஓரளவு அவர்கள் தன்னிறைவு அடைந்தார்கள். ஆனால் கடந்த பத்தாண்டு காலத்தில் அ.தி.மு.க. அரசு அவர்களுக்கான எந்த நன்மையும் செய்ய வில்லை. இந்த நிலையில் மீண்டும் இலங்கைத் தமிழர் நல்வாழ்வுத் திட்டங்களைத் தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

"கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால் கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்'' என்று பேரறிஞர் அண்ணாவின் வரிகளை மேற்கோள் காட்டிய முதலமைச்சர், அவர்களின் கண்ணீரைத் துடைக்கக் கூடிய வகையில் அறிவிப்புகளைச் செய்வதாகக் கூறினார். "இங்குள்ள தமிழர் களை மட்டுமல்ல, கடல் கடந்து வாழக்கூடிய தமிழர்களையும் காக்கும் அரசுதான் இந்த அரசு'' என்று சட்டமன்றத்தில் ஒலித்த குரல் என்பது உலகத் தமிழர்களின் உள்ளத்தில் உள்ள குரலாகும்.

இதை விட முக்கியமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்னொரு பிரகடனத்தையும் செய்துள்ளார். **"அவர்கள் அகதிகள் அல்ல, அநாதை கள் அல்ல, அவர்களுக்கு நாம் இருக்கிறோம். அகதிகள் முகாம் என்று இனி அவற்றை அழைக்க மாட்டோம். இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்றே அழைப்போம்''** என்று சொல்லி இருப்பதுதான் பேரறிஞர் அண்ணாவின் குரலாக, தமிழினத் தலைவர் கலைஞரின் குரலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மூலமாக வெளிப்பட்டது.

இலங்கையில் அழுகுரல் கேட்கத் தொடங்கிய காலம் முதல் அவர்களுக் காகக் குரல் கொடுத்து வந்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். 1956 ஆம் ஆண்டு சிங்களமே ஆட்சிமொழி என இலங்கையில் அறிவிக்கப் பட்டது. அதே ஆண்டு சிதம்பரத்தில் கூடிய தி.மு.க. பொதுக்குழுவில், ஈழத்தமிழர் உரிமைக்கான தீர்மானத்தை கலைஞர் அவர்கள் முன்மொழிந் தார்கள். பொன்னம்பலனார் வழிமொழிந்தார்.

அன்றைய ஈழத் தலைவரான சி.வன்னிய சிங்கம் சென்னைக்கு வந்து அண்ணாவைச் சந்தித்து ஈழத்தமிழர் நிலைமையை விளக்கினார். "இலங்கைச் சிக்கலை மிகச் சாதாரணமாக நினைக்காதீர்கள்'' என்று அப்போதே 'ஹோம் ரூல்' இதழில் எழுதியவர் அண்ணா.

1958 ஜுன் 22 ஆம் நாளை இலங்கைத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு நாளாக தி.மு.க. அறிவித்தது. ஐ.நா.மன்றம் இந்தப் பிரச்சினையில் தலையிட கோரிக்கை வைத்தார் அண்ணா. 1961 இலங்கைத் தூதரகத்தை நோக்கி அண்ணா தலைமையில் ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் உரிமைகள் கிடைக்காது என்று ஈழத் தந்தை செல்வா அவர்கள் முடிவெடுத்து அறிவித்தபோது, அவருக்கு முழு ஆதரவைத் தந்ததும் கழகமே. அதுதான் 1976 தி.மு.க. ஆட்சிக் கலைப் புக்கும் காரணமாகக் காட்டப்பட்டது.

அவசர நிலையை எதிர்த்ததோடு சேர்த்து இலங்கைத் தமிழர்க்கு ஆதரவாக நடந்ததையும் அன்றைய பிரதமர் இந்திரா, சென்னையில் அளித்த பேட்டியில் கூறினார்கள். 'இதுதான் காரணமென்றால் அதைவிட தி.மு.க.வுக்குப் பெருமை எதுவுமில்லை' என்றார் கலைஞர் அவர்கள். அதே சூழலை 1991 ஆம் ஆண்டு ஆட்சிக் கலைப்புக்கும் காரணமாகக் காட்டி னார்கள்.

தமிழினத் தலைவர் கலைஞரும், இனமானப் பேராசிரியரும் தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டே ஈழத்தமிழர் உரிமைக்காகத் துறந்தார்கள் என்பதும், தமிழீழ ஆதரவாளர் கூட்டமைப்பும், இலங்கைத் தமிழர் உரிமைக் கூட்டமைப்பு களும் தொடங்கி கால் நூற்றாண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் போராடியது என்பதும் தமிழ்நாடு அறிந்த வரலாறுகள் தான்.

அகில இந்தியத் தலைவர்கள் அனைவரையும் மதுரைக்கு வரவைத்து ஈழத் தமிழர் உரிமைக் குரலை, அவர்கள் மூலமாக ஒலிக்க வைத்ததும், டெல்லியில் பிரதமர் வி.பி.சிங் இல்லத்தில் 9 மாநில முதலமைச்சர் களையும் 12 அகில இந்தியக் கட்சித் தலைவர்களையும் கூட்டி 'ஈழப் பிரச்சினையை அவர்களுக்கு விளக்கிய தும் கலைஞரே என்பதும்' வரலாறு பதிய வைத்துள்ள வரலாறுகள்தான்.

இந்த வரலாற்றின் தொடர்ச்சியாகத்தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது அறிவிப்பையும் வரலாறு பதிவு செய்கிறது.

"அவர்கள் அநாதைகள் அல்ல, நாம் அவர்களுக்குத் துணையாக இருக் கிறோம்'' என்ற நம்பிக்கையே இன்று உலகத்தமிழர்கள் எதிர் பார்த்த குரலாகும். இதுவே இனவிடியல் குரலும் ஆகும்!

தமிழகத்தில் 100 நாள் சாதனை

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கேரள எம்எல்ஏ பாராட்டு

திருவனந்தபுரம், ஆக.30- தமிழக முதல்வரின் சாதனைகள் குறித்து மலையாள டிவியில் கேரள எம்எல்ஏ விஷ்ணுநாத் புகழ்ந்து பேசியது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

எம்எல்ஏ விஷ்ணுநாத்

கேரளாவில் உள்ள ஒரு மலையாள தொலைக்காட்சியில் கேரள அரசின் 100 நாள் சாதனை குறித்த விவாதம் நடந்தது. இதில் கண்டரா தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏ விஷ்ணுநாத் பங்கேற்றார். அப்போது, தமிழக அரசு 100 நாட்களில் கேரள அரசு செய்ததை விட பல மடங்கு சாதனைகளை செய்துள்ளது என்று புள்ளி விவரங்களுடன் புகழ்ந்து பேசினார். அனைவருக்கும் கொரோனா நிதியாக ரூ.4000 வழங்கியது, பஸ்களில் பெண்களுக்கு இலவச பயண திட்டம், பெட்ரோல் விலை குறைப்பு போன்ற பல்வேறு மக்கள் நல திட்டங்களை ஸ்டாலின் அரசு அமல்படுத்தி உள்ளது. ஆனால் கேரளாவில் பினராயி விஜயன் அரசு, இதுபோன்று எந்த மக்கள் நல திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவில்லை என்று கூறி தமிழக அரசை பாராட்டினார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

கிராமங்களை தேடி!

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதில் இருந்து மக்கள் நலன்சார்ந்த பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அவரின் அதிரடி திட்டம், அதிரடி அறிவிப்புகள் மக்களை வெகுவாக கவர்ந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக விவசாயத்துக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், இந்திய வரலாற்றில் முதல் முறையாக தமிழகத்தில் வேளாண்மைக்கு என்று தனி பட்ஜெட் அண்மையில் தாக்கல் செய்யப்பட்டது. அது மட்டுமல்லாமல் வேளாண்மைத் துறையின் பெயரினை, 'வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை' எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தொடர்ந்து நேற்று முன்தினம் கடந்த ஆண்டு ஒன்றிய அரசு விவசாயிகள் நலனுக்கு எதிராக கொண்டு வந்த விவசாயிகள் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வாணிபம் (ஊக்குவிப்பு மற்றும் உதவுதல்) சட்டம், விவசாயிகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாத்தல்) விலை உறுதி மற்றும் பண்ணை சேவைகள் ஒப்பந்தச் சட்டம், அத்தியாவசியப் பொருட்கள் (திருத்தம்) சட்டம் ஆகிய 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தீர்மானம் கொண்டு வந்தார். இது சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது. மேலும் வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராடியவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

தொடர்ந்து விவசாயிகளின் குறைகள், பிரச்னைகளை தீர்க்கும் வகையில் அதிரடி திட்டம் ஒன்றை மு.க.ஸ்டாலின் வகுத்துள்ளார். அதாவது, மாதம் ஒருநாள் கிராமங்களுக்கு செல்வோம் என்ற பெயரில் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 'விவசாயிகளிடம் ஒரு நாள்; மக்களிடம் செல்; அவர்களுடன் வாழ்; அவர்களிடமிருந்து கற்றுக்கொள்; அவர்களை நேசி; அவர்களுக்கு சேவை செய்' என்பது பேரறிஞர் அண்ணாவின் அறிவுரை. 'அவர் வகுத்துத் தந்த பாதையில் திமுக ஆட்சி பீடுநடை போடும் என்பதற்கு உறுதியேற்கிறேன்' என்று மு.க.ஸ்டாலின் அந்த புதிய திட்டத்துக்கு உறுதியேற்றிருக்கிறார்.

அண்ணாவின் அறிவுரையையேற்று, கிராமங்கள் தோறும் நேரடியாக சென்று விவசாயிகளிடம் பழகி, அவர்களுடைய பிரச்னைகளை மற்றும் குறைகளைக் கேட்டறிந்து அவற்றிற்குத் தீர்வு காணும் வகையில் அந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு பிரச்னையையும் தீர்க்கமாக ஆராய்ந்து, நடவடிக்கை எடுத்திட அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு நாள், ஒவ்வொரு கிராமமாகச் செல்ல வேண்டும். அங்கு அவர்களுடைய பிரச்னைகளைக் கேட்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருக்கிறார்.

மேலும் 'மக்களைச் சந்திக்க வேண்டும், விவசாயிகளைச் சந்திக்க வேண்டும்' என்று திட்டம் தீட்டியதோடு மட்டுமல்ல, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒரு திட்டத்தையும் மு.க.ஸ்டாலின் வகுத்திருக்கிறார். தமிழக சட்டப்பேரவை வருகிற 13ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த கூட்டம் முடிந்ததும் ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் கிராமங்களுக்கு சென்று விவசாயிகளை சந்தித்து பேசி அவர்களின் பிரச்னையை தீர்க்க உள்ளனர். இதற்கான முறையான அறிவிப்பை மு.க.ஸ்டாலின் விரைவில் வெளியிட உள்ளார்.

மாதம் ஒரு நாள் கிராமங்களுக்கு செல்வோம் என்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் வகுத்துள்ள புதிய திட்டத்தின் மூலம் விவசாயிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்க உள்ளது.

மகளிர் சுய உதவிக் குழு கடன்களுக்குக் குறைவான வட்டி: வரவேற்கத்தக்க முடிவு

தமிழ்நாட்டில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாங்கும் ரூ. 3 லட்சம் வரையிலான கடன்களுக்கான வட்டி வீதத்தை 12%-லிருந்து 7%ஆகக் குறைக்கத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்திருப்பது வரவேற்புக்குரியது. இந்த வட்டி வீதக் குறைப்பால், 3,63,881 குழுக்களைச் சேர்ந்த 43,39,780 பெண்கள் பயனடைவார்கள் என்று கூறப்பட்டாலும், அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களுமே கூட்டுறவுக் கடன் நிறுவனங்களுடன் இணைக்கப்படவில்லை என்பதும் பெரும்பாலான குழுக்கள் தேசிய வங்கிகள், நிதி நிறுவனங்களுடன்தான் இணைந்துள்ளன என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை. அனைத்து சுய உதவிக் குழுக்களையும் கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினராகச் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக அரசு கூறினாலும் தற்போதுள்ள நிதிநிலையில் அது அவ்வளவு எளிதில் சாத்தியமில்லை.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின்போது திமுக வெளியிட்டிருந்த தேர்தல் அறிக்கையில், சுய உதவிக் குழுக்கள் குறித்துத் தனி அத்தியாயமே இடம்பெற்றிருந்தது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்றிருந்த கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று திமுக சொன்னதன் பிறகே, அதிமுக ஆட்சியில் அவ்வாறு அறிவிக்கப்பட்டதாகக் கூறிய அந்த அறிக்கை, சுய உதவிக் குழுக்கள் பெற்றிருந்த கடன்கள் திமுக ஆட்சியில் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும் என்ற உறுதியை அளித்திருந்தது. நடப்பு நிதியாண்டுக்கான திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற ரூ.2,756 கோடி கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கரோனா காலச் சிறப்புக் கடனாக ரூ.5,500 கோடி உட்பட ரூ.20,000 கோடி வரையில் சிறப்புக் கடன் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களின் வாயிலாகப் பெண்களுக்கு வழங்கப்படும் நுண்கடன்களில் வாராக் கடன் விகிதம் மிகவும் குறைவு. சுயதொழில்களுக்கான வாய்ப்புகளையும் இந்தக் கடன்கள் ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளன. ஆனால், பெருந்தொற்றுக் காலத்தில் இந்தக் கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்த முடியாமல் பெண்கள் எதிர்கொண்ட துயரங்கள் ஏராளம். இயற்கைப் பேரிடர், பெருந்தொற்று போன்ற அசாதாரணச் சூழல்கள் ஏற்படும்போது கடன் தவணைகளைத் தள்ளிவைப்பதற்கான நெகிழ்வோடு நுண்கடன் விதிமுறைகளைத் திருத்தியமைக்க வேண்டியது அவசியம். மகளிர் சுய உதவிக் குழுக்கள் சீர்திருத்தப்பட்டு, அவற்றை நிர்வகிக்கத் தனித் துறை ஆரம்பிக்கப்படும் என்று தேர்தல் பிரச்சாரக் காலத்தில் மு.க.ஸ்டாலின் கூறினார். மகளிர் சுய உதவிக் குழுக்களைப் போல வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் சுய உதவிக் குழுக்கள் புதிதாகத் தொடங்கப்படும் என்றொரு அறிவிப்பையும் திமுக தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தது. கரோனா காரணமாக வேலைவாய்ப்புகள் குறைந்து, வேலையிழப்புகள் அதிகரித்துவரும் இந்நாட்களில் பெண்களைப் போல இளைஞர்களுக்கும் சுய தொழில்களுக்கான நுண்கடன் வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

OUTLOOK
THE WEEKLY NEWSMAGAZINE
30 Aug-2021

TAMIL NADU/DMK

Under Pressure

The first 100 days in office have been a challenge for new CM Stalin



PTI

G.C. Shekhar in Chennai

AMONG the many poll promises he had made, the one M.K. Stalin chose to implement on completing 100 days in power was the easiest to fulfill. He appointed 24 non-Brahmins as temple priests, meeting a long-pending popular demand.

While it met the optics of social equity, the new Tamil Nadu chief minister must have been acutely aware of the drain on the state's finances. But Stalin has other worries, as the rest of his election promises aren't as easy to implement. Faced with a humongous Rs 58,000 crore revenue deficit, his biggest challenge is to find the money to carry out his promises.

"We'll not renege on our promises. We may take a while to identify genuine beneficiaries and to stabilise our finances, but all our promises will be implemented," he assured the state assembly during the budget debate.

Stalin did implement three other poll pitches—free bus travel for women, and cutbacks in milk prices and state taxes on petrol—though the promised rollback in diesel prices was withheld. But others—Rs 1,000 allowance for housewives, writing off co-operative farm and jewel loans for farmers, and educational loans for students—have been put on hold. Not many are buying the excuse of delay for eliminating discrepancies in the beneficiaries' list.

The government has been efficient in other fronts. It took charge when the Covid-19 second wave was peaking, and managed to stymie the virus spread by deftly appointing right officials in the right posts, expanding health facilities and implementing a "sensible" lockdown. "As soon as we took charge, we were forced into a firefight. We couldn't even savour our victory," says health minister M. Subramaniam.

Stalin also made sure his campaign promise—of collecting and addressing complaints from each assembly constituency within 100 days—got top priority. He created a separate department—Chief Minister in your Constituency—and appointed an IAS officer to follow up on each of the 4.5 lakh petitions received. "We've resolved around 70 per cent of the complaints. The rest will be addressed by a month," said an officer at the CMO.

The government is also focused on agriculture, in which the state has slipped over the past decade. With a separate budget, it is aimed at improving food security and nutritional reach. "Our Integrated Village Growth Scheme will improve the rural economy and make villages self-sufficient," says agriculture minister M.R. Panneerselvam.

"Ultimately, Stalin's toughest task will be taking bitter economic decisions, like hiking power tariff, bus fares and property taxes, and imposing water cess. They may come after the local body elections, but can't be ignored if he wants to repair the economy. Public won't mind if he postpones some sops citing financial constraints," says chartered accountant P. Srinivasan.

For DMK, the slippery ground is in non-economic promises like scrapping NEET

But for DMK, the slippery ground is in non-economic promises. The government claims it realised after taking charge that the only way it can fulfill its promise to scrap NEET was if the Supreme Court reversed its earlier ruling. To buy time, the government appointed a committee to seek public opinion on the exam, which predictably reported that underprivileged students were unhappy. But BJP pounced on it by releasing figures showing that numbers of underprivileged students clearing NEET have been rising every year. The AIADMK government's quota for government school students has also made NEET less of a challenge for the underprivileged.

Another political quicksand is the issue of releasing seven convicts in the Rajiv Gandhi assassination case, in which DMK faces the same legal stalemate AIADMK encountered after its request to commute the life sentences of the convicts was forwarded to the President. "There's a yawning gap between Stalin's poll rhetoric and the post-poll reality. His government has been misleading students, who otherwise would have prepared sincerely for NEET. His own health minister is now advising students to prepare for the exam," says BJP spokesperson Narayanan Thirupathi, gleefully.

DECCAN Chronicle

30 Aug-2021

Subhani

INDIA TODAY

30 Aug-2021

THE PATHBREAKERS POLITICS

THE FEDERALIST

C.N. ANNADURAI (1909-1969)

An acclaimed writer and playwright, he founded a vibrant regional party in the Dravida Munnetra Kazhagam on September 17, 1949, and used Tamil cinema for effective propaganda

BY M.K. STALIN

INDIAN EXPRESS

Perarignar Anna was, and is, looked up to by millions as an elder brother who led Tamils to a new political dawn. That his name—Anna—reflects the deep fraternal bonding adds to the charm of this political colossus who bestrode the Dravidian landscape like no other.

On the day India became independent in 1947, Thanthai Periyar, the leader of the Dravidar Kazhagam, had announced that he would not celebrate independence for it did not signify the liberation of society from the ills of caste. In contrast, Anna reasoned that India's Independence Day signified political freedom and that we must continue to fight for social liberation and invoke the federal spirit.

Despite the vocal demand for a separate Dravida Nadu, Anna was a committed patriot at heart. In fact, during the lead-up to the 1962 Indo-China war, when Prime Minister Jawaharlal Nehru sought to bring together various political forces, Anna agreed to drop political agitations against the Union government. This, Anna said, was the time to strengthen the Union.

As a member of the House of States, Anna fought for linguistic equality and against centralisation of powers. When he was elected chief minister in 1967, Anna christened Madras State as Tamil Nadu, legalised 'Self-Respect Marriages', void of priests, and ensured supply of subsidised rice across the state.

A key ideological plank of the DMK is that of federalism. It is our sincere belief that a stronger Indian Union can only be built on the back of stronger states. To build stronger states, true and effective federalism is essential in every limb of our governance. Anna visualised that the future of India is inextricably linked to the rise of its states. Anna's socio-economic policies continue to guide Tamil Nadu and serve as a model for effective federal cooperation. His stirring line—'Go to the people, live with them and serve them'—is the takeaway I brought back after paying homage, on my first visit after becoming chief minister, from the Anna residence in Kanchipuram on June 30. ■

Anna visualised that the future of India is linked to the rise of the states

***Muthuvel Karunanidhi Stalin** is the chief minister of Tamil Nadu*

தினத் தந்தி
DAILY THANTHI
31 Aug-2021

கோவில்கள் தோறும் தலவிருட்சங்கள்!

இந்து மதம் ஒரு புனிதமான மதம். இயற்கையை கடவுளாக வணங்கியவர்கள் இந்துக்கள். ஆதிகாலத்திலேயே அறிவியலை ஆன்மிகமாக்கி, பலனடைய செய்த பெருமை இந்து மதத்தையே சாரும். நமது முன்னோர்கள், "கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று சொல்லி, ஒவ்வொரு ஊரிலும் விநாயகர் கோவில்கள், அம்மன் கோவில்கள், சிவன் கோவில்கள், வைணவ கோவில்கள் என்று தொடங்கி, ஒவ்வொரு ஊருக்கும் உள்ளூர் தெய்வங்கள் என்ற வகையில், சில கோவில்களையும் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு கோவிலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற 3 விஷயங்களால் சிறப்பு பெறுகிறது. மூர்த்தி என்பது மூல ஸ்தானத்தில் வீற்றிருக்கும் தெய்வத்தையும், தலம் என்பது தல விருட்சத்தையும் (மரம்), தீர்த்தம் என்பது கோவில் தெப்பக்குளத்தையும் குறிக்கும். தலவிருட்சம் என்பது கோவில் கட்டுவதற்கு முன்பு இறைவன் எழுந்தருளியிருந்த இடம் என்பதும், அதனால் தெய்வத்துக்கு ஒப்பான சக்தி அதற்கும் உண்டு என்பதும், நோய்களை தீர்க்கும் சக்தி அதற்கு உண்டு என்பதும் ஒரு ஐதீகம். கோவில் கருவறையிலுள்ள மூலவர் அருகில் செல்ல முடியாது என்பதால், தலவிருட்சம் அருகில் சென்று சுற்றிவருவதன் மூலம் மூலவரை அருகில் தரிசித்த பாக்கியத்தை பெறமுடியும் என்பதும் இந்துக்களின் நம்பிக்கையாக இருக்கிறது.

கோவில்கள் தோறும் ஏதேனும் ஒரு தலவிருட்சத்தை வைத்து இந்துக்கள் வழிபாடு செய்து வந்தார்கள். அதனால்தான், மாரியம்மனை வேப்பிலைக்காரி என்று பூஜித்து வந்தார்கள். சிவ சொரூபத்தை குறிப்பது அரசமரம். சக்தி சொரூபத்தை குறிப்பது வேம்பு மரம். இவை இரண்டும் இணைந்திருக்கும் இடங்கள் சிவசக்தி உறையும் இடங்களாக கருதப்பட்டு வழிபடுகிறார்கள். அரச மரத்தடியில் விநாயகரை வழிபடுகிறார்கள். கொன்றை, வில்வம், வன்னி, மகிழ், ஆல் போன்றவை சிவனுக்குரிய தலவிருட்சங்களாகவும், சந்தனமரம், அத்திமரம், விஷ்ணு பகவானுக்குரிய தல விருட்சமாகவும் விளங்குகிறது. இதுதவிர கடம்ப மரம், நெல்லிமரம், பலாமரம், மாமரம், பனை மரம், இலந்தை மரம், வேப்பமரம் போன்ற 121 மரங்கள் திருக்கோவில்களில் தல விருட்சங்களாக கருதப்படுகின்றன.

இந்தநிலையில், பல கோவில்களில் தலவிருட்சங்கள் இல்லாதநிலை பக்தர்களின் மனங்களை வெகுவாக காயப்படுத்தியது. இத்தகைய சூழ்நிலையில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சில நாட்களுக்கு முன்பு, இந்து சமய அறநிலையத்துறை வளாகத்தில் ஒரு லட்சம் தலவிருட்ச மரக்கன்றுகளை நடும் திட்டத்தை தொடங்கிவைத்தார். திருக்கோவில்களில், அந்தந்த கோவிலுக்குரிய தல விருட்சமரம் நட்டு பராமரிக்கப்படும், தேவை ஏற்படின் கூடுதல் மரக்கன்றுகள் வழங்கப்படும் என்று அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஆணையர் ஜெ.குமரகுருபரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். நிச்சயமாக இது பக்தர்களின் மனம் மகிழும் திட்டம். இந்த ஒரு லட்சம் மரக்கன்றுகளை வனத்துறையிடம் இருந்து இந்து சமய அறநிலையத்துறை பெற்று, ஒவ்வொரு கோவில் பிரகாரத்திலும் என்னென்ன தல விருட்ச மரங்கள் நடப்பட வேண்டுமோ, அந்தந்த தல விருட்ச மரக்கன்றுகளை நடுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் 36 ஆயிரத்து 612 கோவில்கள் இருக்கிறது. இந்த கோவில்களில் மட்டுமல்லாமல், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லாத லட்சக்கணக்கான கோவில்களில் தலவிருட்ச மரக்கன்றுகளை நடுவதற்குரிய ஏற்பாடுகளை அறநிலையத்துறையே மேற்கொள்ள முடியுமா?, அல்லது பக்தர்களின் துணையோடு உள்ளாட்சி அமைப்புகளே ஏற்றுக்கொள்ள முடியுமா? என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். மரக்கன்றுகளை நடுவதோடு மட்டும் பணி முடிந்துவிடவில்லை. அந்த மரக்கன்றுகள் தண்ணீர் ஊற்றி பராமரிக்கப்படவேண்டும். கோவில்களில் பக்தர்கள் தன்னார்வ அடிப்படையில் குழுக்களாக இணைந்து உழவாரப்பணியில் ஈடுபடுவதில் ஆர்வம்காட்டி வருகின்றனர். ஒவ்வொரு கோவில்களிலும் உழவாரப்பணிகளுக்கான குழு அமைக்கப்பட்டு, அந்த பக்தர்கள் தலவிருட்ச மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றி, உரமிட்டு பராமரிக்கும் பணிகளையும் மேற்கொள்ள செய்யவேண்டும் என்பது அரசின் முயற்சிக்கு துணைபோவதாக அமையும். அனைத்து கோவில்களிலும் தலவிருட்ச மரங்கள் தழைத்து வளர்ந்து பக்தர்களின் வாழ்வையும், மனதையும் மகிழச் செய்யட்டும், செழிக்கச்செய்யட்டும்.

மீண்டும் துளிர்விடும் அரசியல் நாகரீகம்!

அரசியல் என்பது தனி உலகம். மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே பலர் அரசியலுக்கு வந்த காலம் ஒன்று இருந்தது. பின்னர் அந்த நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. அரசியலுக்கு போனால் நாட்டை வளப்படுத்துவதாக கூறிக்கொண்டு தன்னை வளப்படுத்தும் சிலர் தலை தூக்க ஆரம்பித்தனர். பின்னர் அது தனது கட்சி தலைவரைப் பற்றி புகழ்பாடி தங்களை வளப்படுத்தும் முயற்சியாக மாறியது.

பெருந்தலைவர் காமராஜரின் ஆட்சி காலம் தமிழ்நாட்டின் பொற்காலம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. எளிமையான வாழ்க்கை வாழ்ந்த அவர் என்றுமே ஆடம்பரத்தை விரும்பியது இல்லை. தன்னைப் பற்றியோ தனது ஆட்சியைப் பற்றியோ விளம்பரப்படுத்திக் கொண்டதே இல்லை.

அதன் பிறகு தொடர்ந்த அரசியல், விளம்பரத்திலேயே கட்டமைக்கப்பட்டது. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களைப் புகழ்வதும், அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடுவதும் எழுதப்படாத சட்டமாகியது. அரசியல் என்றாலே இப்படித்தான் என்பது வழக்கமாகி, "அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா..." என்று மாறியது.

ஆளும் கட்சியை எதிர்க்கட்சி குறை சொல்வது அரசியல் என்றாலும், மனிதாபிமான அடிப்படையில் ஒருவருக்கு ஒருவர் நண்பராக இருக்க வேண்டும் என்பதுதான் அரசியல் நோக்கர்களின் விருப்பம். காமராஜர் தனது கடைசி காலம் வரை இதை கடைபிடித்தார். தனது எதிரியாக இருந்தாலும் அவர்களது இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். சமீப காலமாக தமிழக அரசியலில் இதுபோன்ற புதிய திருப்பம் மீண்டும் ஏற்பட்டுள்ளதை காண முடிகிறது.

சமீபத்தில் மரணம் அடைந்த அ.தி.மு.க. அவைத் தலைவர் மதுசூதனன் வீட்டுக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அஞ்சலி செலுத்தியதும், அப்போது எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரிடம் நேரில் இரங்கல் தெரிவித்ததும் முக்கிய சம்பவம். இது போல் அரசியல் கட்சியினரிடமும் ஒருவருக்கொருவர் எதிரி என்ற மனப்பான்மை சிறிது சிறிதாக மாறி வருகிறது.

ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், சமீபத்தில் சட்டசபையில் தமிழ்நாட்டின் நலன் கருதி தி.மு.க. கொண்டு வந்த அரசு பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வியில் 7.5 சதவீத இட ஒதுக்கீடு சட்டம், மேகதாது அணை விவகாரம், நீட் விலக்கு பெற ஆதரவு போன்றவற்றுக்கு அ.தி.மு.க. உள்பட அனைத்து கட்சிகளும் ஆதரவு அளித்து இருப்பது ஆரோக்கியமான அரசியலுக்கு எடுத்துக்காட்சி.

பேனர் கலாசாரத்தால் ஒரு அப்பாவி பெண்ணின் உயிர் பலியான பிறகு, பேனர் வைப்பது தடை செய்யப்பட்டது. என்றாலும், பழக்க தோஷம் பலரை இன்னும் விடவில்லை. இதற்கு உதாரணம் சமீபத்தில் பறிபோன ஒரு சிறுவனின் உயிர்.

பேனர், கட்-அவுட் வேண்டாம் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பலமுறை அறிவித்து விட்டார். தற்போது கடுமையாக எச்சரித்து இருக்கிறார். சமீபகாலமாக ஒன்னை யாரும் முன்னிலைப்படுத்த வேண்டாம் என்று முதல்வர் கூறி வருகிறார். கடந்த ஆட்சியில் தொடங்கிய அம்மா உணவகம், இலவச ஆடுமாடு வழங்கும் திட்டம் ஆகியவை தொடரும் என்று சொல்லி இருக்கிறார்.

கடந்த ஆட்சியில் அச்சிடப்பட்ட பள்ளி பாடப்புத்தகங்களில் இடம் பெற்று இருக்கும் ஜெயலலிதா, எடப்பாடி படங்களை மாற்ற வேண்டாம் என்று சொல்லி விட்டார். இது அரசியலில் தன்னை விளம்பரப்படுத்துவது முக்கியமல்ல என்ற முதல்வர் மு.க.ஸ்டாலினின் உறுதியான முடிவை வெளிப்படுத்தி இருக்கிறது.

முதல்வரை சந்திப்பது முயல்கொம்பு என்ற நிலைமாறி, சந்திக்க விரும்புவோரை தானே தேடிச் சென்று பார்ப்பதும் நேரில் வரவழைத்து சந்திப்பது என்ற புதிய முறையையும் முதல்வர் கடைபிடிப்பது மக்களின் பாராட்டை பெற்றிருக்கிறது. இணைய வழியில் அறியும் குறைகளையும் உடனடியாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதும் முக்கியத்துவம் பெறுகிறது.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தீவிர முயற்சி செய்வது வரும் முதல்வர் தன்னை முன்னிலைப்படுத்த வேண்டாம் என்பது இன்றைய அரசியல்வாதிகளில் இவர் வித்தியாசமானவர் என்பதை மக்கள் மனதில் பதிய வைத்திருக்கிறது.

சட்டசபையில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் பேசும்போது, தங்கள் கட்சி தலைவர்களின் பெருமையை எடுத்துச் சொல்வது நீண்டகால நடைமுறையாக இருந்து வருகிறது. அதுவும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. என்றால் முதல்-அமைச்சரின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்வது இதுவரை பெருமையாக கருதப்பட்டு வந்தது. அந்த நடைமுறைக்கும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தடை விதித்து இருக்கிறார்.

சமீபத்தில் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. சட்டசபையில் தன்னை புகழ்ந்து பேசியபோது குறுக்கிட்ட முதல்வர், என்னை புகழ வேண்டாம். மக்கள் பிரச்சினைகளைப் பற்றி மட்டும் பேசுங்கள் என்று கூறி இருக்கிறார். அத்துடன் விடவில்லை. இனி என்னை புகழ்ந்து பேசினால் நடவடிக்கை எடுப்பேன் என்றும் எச்சரித்தார்.

இது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் பெருந்தன்மையையும், மக்கள் நலனில் கொண்டுள்ள அக்கறையையும் பறைசாற்றுவதாக உள்ளது.

தமிழ்நாட்டுக்கு உலக அளவில் பெருமை சேர்த்த பெருந்தலைவர் காமராஜர் மேடையில் பிறர் தன்னை புகழ்வதையோ, எதிர்க்கட்சியினரை கடுமையாக தாக்கிப் பேசுவதையோ அனுமதிப்பதில்லை. அதுபோன்ற அரசியல் நாகரீகம் மீண்டும் உருவாக முதல்வரின் நடவடிக்கைகள் வழி வகுத்து இருக்கின்றன. அரசியலுக்கு வருபவர்கள் தங்கள் பணியில் அக்கறையுடன் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வரும் முதல்வர் அதற்கு எடுத்துக் காட்டாகவும் இருப்பது தமிழக அரசியலுக்கு கிடைத்த புதிய விடியல்.

தன்னை முன்னிலைப்படுத்த வேண்டாம். அரசியலை கடந்து அனைவரும் நண்பர்களே என்ற முதல்வரின் புதிய அணுகுமுறை அரசியல் நாகரீகத்தை மீண்டும் துளிர்க்க செய்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

“நாள்தோறும் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டினுடைய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் எப்படியெல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.”

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை